# தெறிப்பு



வண்ணையூரான்

சிவசுப்பிரமணியம் சிற்சபேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெறிப்பு

'வண்ணையூரான்'
சிவசுப்பிரமணியம்
சிற்சபேசன்

சசேன் பதிப்பகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| *தலைப்பு* | : | **தெறிப்பு** |
| *வகை* | : | கட்டுரைத் தொகுப்பு |
| *ஆசிரியர்* | : | **சிவசுப்பிரமணியம் சிற்சபேசன்** |
| *பதிப்பு* | : | முதல் பதிப்பு தி.வ. 2038 ஐப்பசி (அக்டோபர், 2007) |
| *அளவு* | : | டெமி (14 x 21 செ.மீ) |
| *தாள்* | : | 80 ஜி.எஸ்.எம். மேப் லித்தோ |
| *பக்கம்* | : | 216 பக்கங்கள் |
| *படிகள்* | : | 300 |
| *உரிமை* | : | ஆசிரியருக்கு |
| *விலை* | : | $10 |
| *பதிப்பாளர்* | : | **உலகத் தமிழர் பதிப்பகம்**<br>4, சௌராட்டிரா நகர், 7ஆம் தெரு,<br>சூளைமேடு, சென்னை - 600 094.<br>தொ.பேசி : + 91·44 65180155/9444111951<br>மின்னஞ்சல் : eramathi@rediffmail.com<br>utpmathi@yahoo.co.in |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் தந்து

உறவு தந்து

அன்பு தந்து

ஆற்றல் தந்து

பண்பு தந்து

பணிவு தந்து

குருவாகி

தெய்வமாகி

நிறைந்துநிற்கும்

என்

**தந்தையார் சிவசுப்பிரமணியம்**

**தாயார் சரோஜினிதேவி**

பாதாரவிந்தங்களில்

இந்நூல்

# சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெறித்த திவலைகள்

முனைவர் **ஒளவை நடராசன்**
முன்னாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம்

நிலம் பெயர்ந்தாலும் நினைவும் கனவும் பெயரா மனத்தோடு வாழ்வியற் சிந்தனைகளை இடையறாது எண்ணி எழுதும் இயல்பு சிலருக்கே வாய்த்த சீரிய கலையாகும். அந்த வகையில், இந் நூலாசிரியர் சிற்சபேசன் அவர்களின் ''தெறிப்பு'' என்னும் எழுத்தோவியம் நேர்படும் நிகழ்வுகளைக் காண்பதும் அவை பற்றிக் கருதுவதுமாக அமைந்த அலைகளாய் உள்ளது.

உலைக்களத்தில் பழுத்த இரும்பின் மீது ஓயாது விழும் சம்மட்டியினால் ஒளித் திவலைகள் மின்னல்களாகத் தெறித்து விழுவதை நான் கண்டதுண்டு. அந்த வகையில் கனலும் மனத்தின் கருத்துத் தெறிப்புகளாக இந்தக் கட்டுரைகள் நம் முன் மின்னலிடுகின்றன.

நியூசிலாந்து நாட்டில் வருமான வரித் துறையின் ஆலோசகராகவும் வானொலி - தொலைக்காட்சிப் பணியும் புரிந்து வாழும் நண்பர் சிவசுப்பிரமணியம் சிற்சபேசன் உலக நடப்புகளை உற்று நோக்கி அவ்வப்போது நிகழ்வுகள் பற்றித் துண்டுச் செய்திகளாகவும் அவற்றைத் தொடரும் தமது கருத்தோவியமாகவும் கட்டுரைகளைப் பின்னியிருக்கிறார்.

ஒரு துறை பற்றி உணர்ந்து தோய்ந்தால் போதும் என்ற நிலை மாறி ஒன்பது பத்துத் துறைகளிலேனும் பாய்ந்து பழகும் வகையில் வாழ்க்கை வானவில்லாக அமைகிறது. கற்றது கையளவு, கல்லாதது கணினியளவு என்ற புதுமொழியின்படி நாளும் புதுமை புரியும் போக்கினுக்கு ஆட்படுத்திக் கொள்ளும் ஆர்வமும் ஆற்றலும் கொண்டவராக நண்பர் சிற்சபேசன் மிளிர்வதை இத்தொகுப்பில் கண்டு மகிழ்ந்தேன்.

ஈழ வளநாட்டில் 'நற்றமிழ் நாவலர்' எனத் தமிழுலகம் தொழுது போற்றும் ஆறுமுக நாவலர் வாழ்ந்த பகுதியில் பிறந்த நூலாசிரியர் அயலகத்தில் வாழ்ந்தபடியே ஈழ மக்களையும் தமிழக மாந்தரையும் எண்ணி உருகுகின்றார்.

அரசியல் பேசும் அலைகளும் ஒப்பந்தம் என்ற பெயரில் வீசிய வலைகளும் அவல விடிவு தெரியாத நிலைகளும் மக்களைச் சூழ்ந்திருப்பதைக் கட்டுரைகளில் வரையும் ஆசிரியரின் அன்புணர்வும் அறமனமும் பண்பும் பயனுமாகத் தெறித்து விழுவதை வாழ்த்துகிறேன்.

அலைகடல் தாண்டி வாழ்ந்தாலும் அயலகத் தமிழரை நீளக் கை நீட்டி அரவணைக்கும் உலகத் தமிழர் பதிப்பக நண்பர் இரா. மதிவாணனின் நட்பும் பரிவும் இந்தச் சிற்றேட்டைப் படித்து மகிழும் வாய்ப்பளித்தது.

தமிழ் வெல்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

## லேனா தமிழ்வாணன்,

பத்திரிகையாளர், பதிப்பாளர்.

இலங்கைப் பிரச்சினையால் அயல்நாடுகளில் குடியேறிப் போராடி வளர்ந்துவரும் இலங்கைத் தமிழர்களுள் ஒருவரான திரு. சிற்சபேசன் நியூசிலாந்தில் பல ஆண்டுகளாக வளமுடன் வாழ்ந்து வருகிறார்.

இநதச் சூழ்நிலையிலும் தாய் மண்ணையும் மறக்காமல் காட்டும் ஈடுபாட்டின் அற்புதத் தொகுப்பே இந்நூல். அதே நேரத்தில் ஆஸ்திரேலியப் பழங்குடி இனமக்களும் முழு உரிமையுடன் ஆஸ்திரேலியாவில் வாழவேண்டும் என்றும் சிந்திக்கிறார். இத்துடன் நில்லாது பூகோள எல்லைகள் கடந்த ஆர்வத்தில் தமிழக அரசியல் பற்றியும் நிறையச் சிந்தித்திருக்கிறார்.

திரு. தா. கிருட்டிணன் கொலையைக் குறுநிலத் தலைவர்கள் என்ற தலைப்பில் கண்டித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்திய அரசியல் பற்றியும் தொடாமலில்லை.

வானொலி ஒரு சக்தி வாய்ந்த கருவிதான். ஆனால் காற்றில் கலந்துவிடும் இயல்பு கொண்டது. நூல் வடிவம் என்பது அப்படி அல்ல. காலம் கடந்து கல்வெட்டுப் போல் வாழ்வது.

சிற்சபேசனின் எழுத்துக்கள் நூல் வடிவில் சாஸ்வதம் பெற்றதால்தான் நம் போன்றவர்கள் படிக்கவும் இரசிக்கவும் முடிகிறது. இல்லையெனில் வட்டார எல்லைகளோடு இது நிறைவு கண்டிருக்கும்.

இது தவிர உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் உணர்வால் ஒன்றுபட்டவர்கள் என்கிற இவரின் சிந்தனையை அனைவரும் உணர இந்த வரலாற்றுப் பதிவுகள் உதவும் என்பது உறுதி.

திரு. வி. சிவசுப்பிரமணியம் என் பெருமதிப்பிற்குரியவர். சிஷெல்ஸிற்குச் சென்றிருந்த வேளை என் மீது பேரன்பு காட்டியவர். சமூக அக்கறையும் இனப்பற்றும் மிகுந்தவர். இவர் மகன் திரு. சிற்சபேசன் தொடர்ந்து மென்மேலும் பல நூல்கள் படைத்தளிக்கவும், உலகளாவிய தமிழன்பர்கள் இவற்றால் பயன் பெறவும் வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதப்புரை

**க. சிவராமலிங்கம்**
முன்னாள் பதில் அதிபர், யாழ் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

சிந்திக்கும் ஆற்றல் மனிதப் பிறவிக்கு மட்டுமே உண்டு. அதெப்படி? உயிர் வாழுகின்ற பிறவிகளும் சிந்திக்கின்றனதானே என்று கேட்கலாம். இங்குச் சிந்தனைக்கு ஒரு வரைவிலக்கணமே தரலாம். தானும் வாழ்ந்து, பிறரையும் வாழவைக்கும் எண்ணங்களின் தொகுப்பே சிந்தனை, நின்று நிலைக்கக்கூடிய சிந்தனை எனலாம்.

இப்படிச் சிந்தித்தவர்கள் - ஞானிகள், மெய்யியலார், விஞ்ஞானிகள், சமூகவாதிகள் என இப்பட்டியல் விரியலாம். சிந்தனைகள்தாம் இன்றும் மனித இனத்தை வாழ்வித்துக் கொண்டிருக்கின்றன. இவர்கள் சீரிய வாழ்வியல் சிந்தனைகளின் பெரும் பேறாகப் பிறந்த உரோம, கிரேக்க, மொசப்பத்தேனிய, எகிப்திய, சிந்துவெளி நாகரிகங்கள்தாம் - இன்று ஏடுகளில் மட்டுந்தான் வாழ்ந்தாலும் - மனிதம் ஒரு காலத்தில் வாழ்ந்துதான் இருக்கிறது என்று நினைத்து ஆறுதல் கொள்ள வைக்கின்றன.

இந்த ஞானிகள் அறிவுப் பெட்டகங்களாக, நடமாடும் பல்கலைக் கழகங்களாக வாழ்ந்து வழிகாட்டியிருக்கிறார்கள். இவர்களின் சிந்தனைகள், வாழ்வியல் நெறிகள் அத்தனையையும் உள்ளடக்கி யிருப்பதைக் காணும்போது, அறிவியல் அபார வளர்ச்சி கண்டுள்ள, இன்றும்கூட வியக்கவைக்கின்றது.

இன்று நாம் காண்பதெல்லாம் ''அதீத தனித்துறை வளர்ச்சியே'' (Extreme Specialization). தனித்துறையின் அதீத புலமை, ஏனைய துறைகளை மறக்கச்செய்கின்றதா அல்லது உதாசீனம் செய்யவைக்கி)தா என்று சாதாரண மனிதன் மயங்குகிறான்.

கல்விக்கூடங்களில் பௌதீக ஆசிரியருக்கு மொழிப்புலமை போதாமையும், மொழிப்புலமை உடையவருக்கு அறிவியல் அறிவு சூனியமாக இருப்பதும் காணப்படுகின்றது. இது ஒருவகை நோய் என்றே நான் கருதுவதோடு, கவலையும் அடைகின்றேன். முழுமையான மனிதர்களின் தேவை இன்றும் பெரிதும் தேவைப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் மருத்துவனாகலாம், இன்னுமொருவன் எந்திரியன் ஆகலாம், பிறிதொருவன் கணக்காளன் ஆகலாம். இவர்களெல்லாம் இந்த மண்ணில்தானே வாழவேண்டும். அதீத துறைப்புலமை வேண்டப்படும் அதேபோது, பரந்த அறிவும் - புலமை வேறு, அறிவு வேறு - வாழ்நெறி பற்றிய சிந்தனையும், கருத்தைத் தன் சிந்தனைத் தெளிவால் அச்சமின்றி எடுத்துச் சொல்லும் துணிவும் இன்று மிக மிக அவசியமாகிறது. ''முன்னவர்க்கு முன்னவனே முன்னின்று நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே'' என்று கூறும் கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் எமக்கு வேண்டும்.

உலகம் எங்கே போகிறது! கோள்களை வென்று கொண்டிருக் கிறோம். அதே நேரத்தில் நாம் பிறந்து அறிவுபெற்று வாழ்ந்த மண்ணை மறந்துவிடுகின்றோம். மொழியை, வாழ்வியல் விழுமியங்களைத் தொலைத்துக்கொண்டே இருக்கிறோம். அறிவியலா? ஆன்மீகமா? மனிதநேயமா? இரக்கமா? இன்சொல்லா? அன்பா? அருளா? எல்லாமே பொருள் மயங்கி நிற்கின்றனவே!

''மன்னியும் இவர் பிழையை!'' என்ற யேசுபிரான் திருவாக்கையோ,

''இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு'' என்னும் வள்ளுவன் குறளையோ,

''இடியின் பின் மழைதானே!'' (After thunder comes rain) என்ற சாக்கிரடிசின் நயத்தையோ, காந்தியடிகள் கற்பித்த எளிமை, அகிம்சை என நீளும் பண்புகளையோ எங்கோ தொலைத்துவிட்டுத் தேடிக் கொண்டிருக்கிறோம்.

இந்த மம்மல் இருட்டு மை இருட்டாகிவிடக் கூடாதே என்று ஏங்கிக்கொண்டிருக்கும் என் போன்றோர்க்கு ஒரு தெம்பு ஒளியாய் ஒலியாய் ஒரு சில இளம் சிந்தனையாளர்கள் தோன்றியுள்ளனர்.

புலம்பெயர்ந்தாலும் தாய்மண்ணின் வளம் அவாவும் பண்பும், பிறமொழிப்புலமை கைவரப்பெற்றபோதும் தாய்மொழிப்பற்று வீறுகொண்டு நிற்கும் மாண்பும், தன் துறை வேறானபோதும் மனித வாழ்வின் தூய்மையும் உயர்வும் நாடிநிற்கும் பரந்த சிறந்த நெஞ்சும் ஒருங்கே பெற்ற இவர்களின் எழுச்சியும் விழிப்பும் நாம் செய்த பெருந்தவத்துக்குக் கிடைத்த வரமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வரிசையில், ஞானப்பரம்பரையால் எனது பெயரன் சிவசுப்பிரமணியம் சிற்சபேசன் முன்னிற்பது கண்டு இறும்பூதெய்து கின்றேன். கல்வியால் பொறியியலாளன், தொழிலால் ஆள்வினையியல் விற்பன்னன், சிந்தனையால், எழுத்தால், சொல்லால் தமிழன். எங்கெங்கோ நடக்கும் மனித அவலங்களை, அழிவுகளை, ஓலங்களை நினைந்து உருகும் ஒரு தமிழ் நெஞ்சு சிற்சபேசன்.

நான் பேசிப் பழகிய எனது கல்லூரி - சென்னை கிறித்தவக் கல்லூரி - அதன் விரிவுரையாளன் ஜெமினிகணேசனை நான் மறந்துவிட்டேன். தன் சொல்லோவியத்தால் என்முன்னே நிறுத்தி விட்டானே சிற்சபேசன்.

ஐய! நீ வாழ்க, வளர்க தமிழ் என நின் தமிழ்த் தொண்டு சிறக்க தமிழ்முருகனை வேண்டிநிற்கும், உனக்கு ''அ'' தொடக்கியும் யாழ் இந்துவில் கற்பித்தும் பெருமிதம் கொண்ட க. சிவராமலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகவுரை


## உடுவை எஸ். தில்லைநடராஜா

மேலதிகச் செயலாளர், கல்வி அமைச்சு, இசுறுபாயா,
பத்தறுமுல, இலங்கை


இந்நூலாசிரியர் திருமிகு சிற்சபேசன் ஈழத்தின் புகழ்பூத்த யாழ் இந்துவின் மைந்தன். இந்துக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்த ஆசிரியர் சிவசுப்பிரமணியத்தின் மைந்தனுமாவார். அவுஸ்திரேலிய வானொலிக் காகப் பிரதிகளை எழுதியும், உரைகளை ஆற்றியும், நிகழ்ச்சிகளைத் தயாரித்தும் வருபவர். தினக்குரல் உள்ளிட்ட செய்தியேடுகளிலும் இலண்டனிலிருந்து வெளியாகும் Tamil Times இதழிலும் எழுதுபவர்.

கடந்த சில வருடங்களாக இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள் தொடர்பானதாகவும், அதையொட்டிய தகவல் திரட்டாகவும் சிற்சபேசன் எழுதிய கட்டுரைகள் காற்றலைகளூடாகப் பலரது கவனத்தை ஈர்த்தன. வானொலியில் ஒலித்தவை காற்றில் கலந்தவையாகக் காலவோட்டத்தில் நினைவை விட்டு நீங்கக்கூடுமென்பதால் அவற்றைப் பதிவாக்க விரும்பி ஒலிபரப்பானவற்றைச் செப்பம் செய்து நூலாக்கியுள்ளார்.

நாள்தோறும் நம்மைச் சுற்றியுள்ள பகுதிகளில் பல முக்கியமான நிகழ்வுகள் நடைபெற்ற வண்ணமிருக்கின்றன. அவற்றில் சில சமூக நிகழ்வுகள், சில அரசியல் நிகழ்வுகள், சில கலை இலக்கிய சினிமா என விரிந்துசெல்லும் பண்பாட்டு நிகழ்வுகள்.

முன்பெல்லாம் எமது ஊரைப்பற்றி, எமது நாட்டைப் பற்றி அறிந்திருந்தால் போதுமானதாகும். இன்று எம்மவர் ஏறக்குறைய எல்லா நாடுகளுக்கும் சென்று வாழ்வதால் எமது நாடு என்று குறுகிய வட்டத்துக்குள் எம்மை மட்டுப்படுத்தாது - எல்லா நாட்டு நடப்புகளையும் அறிந்து வைத்திருப்பது அவசியமாகின்றது.

குறிப்பிட்ட ஒருதுறை குறித்தோ அல்லது இரண்டு மூன்று துறைகள் குறித்தோ தகவல் பரிமாறுவதுடன் திருப்தியடைந்த காலமும் இருந்தது. இன்று தகவல் தொழில்நுட்பப் புரட்சியால், உலகளாவிய இணையத்தளச் செயற்பாடுகளினால், எல்லாத் துறைகளைப் பற்றியும் ஓரளவுக்காவது தெரிந்து வைத்திருந்தால்தான் சமூகத்தோடு ஒட்டி வாழக்கூடியதாகவும், சபையில் மற்றையோர் கருத்தாடல் செய்யும் போது, எம்மை யாரும் ஓரங்கட்டாது, நாமும் பங்களிப்புச் செய்யக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய நிலை உருவாகும். தெளிவும் எளிமையும் சேர்ந்த தமிழில் பல்துறைகள் தொடர்பாக எழுதப்பட்ட கட்டுரைகள் இந்நூலில் அடங்கியுள்ளன. அரசியலில் காலம் கடத்துவதற்காக இழுத்தடிப்புச் செய்யும் பேச்சுவார்த்தைகளால் பயன்கள் எதுவும் கிடைக்கப்போவ தில்லை என்பதை 'ஜேவிபி அரசிலிருந்து விலகல்' என்னும் கட்டுரையில் காணலாம்.

சமகால நிகழ்வாக ஆழிப்பேரலையின் அனர்த்தங்கள் பற்றியும் சுனாமி பற்றிய விரிவான தகவல்களைக் கொண்டதாகவும், சுவையான கதையொன்றையும் சேர்த்து உத்தரவின்றி உட்புகுந்து, கட்டுரையை எழுதியுள்ளார்.

இன்றைய உலகில் சினிமா ஒரு முக்கிய சாதனமாகிவிட்டது. ஆஸ்பத்திரிகளும் விரைவான வளர்ச்சிகளை நோக்கிக்கொண்டிருக் கின்றன. இவைபற்றித் தகவல்களை அடக்கியதே 'காலச்சக்கரத்தின் வேகமான சுழற்சி' 'சிங்காரச் சென்னை' ஆகிய கட்டுரைகள்.

'யாரோடு நோவேன்' மனித அவலங்களின் தொகுப்பாக அமைகிறது.

இலங்கையிலும், இந்தியாவிலும் வாழும் தமிழர்களைப் பற்றி எழுதும்போது, கடல் பிரித்தாலும் கடலுக்கு இருமருங்கேயும் வாழும் தமிழர்கள் உணர்வால் ஒன்றுபட்டவர்கள் என்கிறார்.

இருந்தும் தவறான அணுகுமுறையால் இந்திய இலங்கை ஒப்பந்தம், இந்திய அமைதிப்படை என ஒன்றன்பின் ஒன்றாக உருவாகிய நடவடிக்கைகள் உப்புக்கரிக்கும் கடலுக்கு இருமருங்கேயும் வாழும் தமிழ் உறவுகளில் தொய்வை ஏற்படுத்தியதாகச் சொல்லும் சிற்சபேசன் - ஆழ்ந்து சிந்திப்பதற்கான தகவல்களை ஆதாரங்களோடு தந்திருக்கின்றார்.

பல்துறைத் தகவல்களோடு யாரும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்க தாகவும் இக்கட்டுரைகள் எழுதப்பெற்றுள்ளன.

இளைஞர், நிறைய வாசிப்பவர், நுட்பமாகக் கேட்பவர், அவரது தொடரான வாசிப்பும் கேள்வி ஞானமும் மேலும் பல படைப்புகளைத் தரவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுரை

**வே. சபாநாயகம்**
விருத்தாசலம், தமிழ்நாடு

விதந்துரை எழுதியுள்ள பேராசிரியர் க. சிவராமலிங்கம் குறிப்பிட்டுள்ளதைப்போல, இன்றைய இளைஞர்களிலும் மனிதநேயமும், மனித அவலங்கள் கண்டு கசியும் உருகுநிலையும், 'யாதும் ஊரே' என்ற பரந்த தமிழ்ப்பண்பும் கொண்டு தம் அரிய சிந்தனையால், அறிவியல் திறத்தால், அரசியல் கண்ணோட்டத்தால் நம்பிக்கையூட்டும் 'சிற்சபேசன்' போன்றோர் முகிழ்த்திருப்பது பெரும் ஆறுதலையும், பரவசத்தையும் ஊட்டுகின்றது. தமிழ்ச்சாதி எங்கிருந்தாலும் அவர்கள் பற்றிக் கவலைப் படவும், அவர்களது வாழ்வின் ஏற்றத்தாழ்வின் மாற்றங்களை அவதானிக்கவும் அவருக்குச் சாத்தியப்பட்டிருப்பது பாரம்பரியக் கொடை எனலாம்.

தமிழகத்திலுள்ள எங்களுக்கு இலங்கையில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதைப் படம்படமாகச் சித்திரிக்கிறது 'தெறிப்பு'. ஒரு மனிதாபிமானியின் கவலை தோய்ந்த சமுதாய அக்கறையுடனான 'நாட்குறிப்பை'ப் படிப்பது போன்ற அனுபவம் கிட்டியது.

இலங்கையின் மாற்சரியங்களையும், குறுகிய மனமும் அடிமைப் படுத்தும் வெறியும் கொண்ட ஜேவிபி போன்ற தமிழின எதிரிகளின் இடையறாத சூழ்ச்சிகளும், இணைந்து வாழ்வதில் அக்கறை காட்டும் விக்கிரமசிங்க போன்றோரின் முயற்சிகள் சிதைவதும், தமிழகம் போலத் தேர்தல் காட்டும் ஆரோக்கியமற்ற அரசியல் நிலவரமும், வெகு அக்கறையுடன் கூர்ந்து கவனிக்கப்பட்டுக் கோபம் கொண்ட இளம் தமிழ் நெஞ்சத்தின் குமுறலாக இக்கட்டுரைகள் அமைந்துள்ளன.

இடையிடையே எங்கள் நாட்டில் ஆரோக்கியமின்றி வளர்ந்து வரும் சாதீய அரசியல், ரஜினி போன்றோரின் தேவையற்ற குழப்பம், நம்பிக்கை நட்சத்திரமாக வலம்வரும் வைகோ போன்றோர் பற்றி வெளிப்படுத்தியுள்ள யதார்த்தமான கருத்துகள் எமக்கும் உடன் பாடானவையே. கச்சத்தீவுப் பிரச்சினை பற்றி எங்களில் பலருக்குத் தெளிவற்ற விவரணங்களே உள்ளன. சிற்சபேனின் 'கச்சத்தீவு' பிரச்சினை பற்றிய கட்டுரை விரிவான, விளக்கமான 'தெறிப்பு' ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஜினி பற்றிக் கூறும்போது அவரது குழப்பத்தைத் ''தீர்மான மெடுப்பதில் தெளிவற்றவர்கள் சாதனை படைத்ததாகச் சரித்திரம் இல்லை'' என்று மதிப்பிடுவது எவ்வளவு தீர்க்கமான 'தெறிப்பான' கண்ணோட்டம்!

சுனாமியால் இலங்கையும்-குறிப்பாகத் தமிழர் வாழும் பகுதியும் அலைக்கழிக்கப்பட்ட வேதனையும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவதில் அரசியல் இலாப நோக்கும் இருப்பதைப் பார்க்கும்போது மனம் பதறுகின்றது.

இந்தியத் தேர்தல் கண்ணோட்டமும் மிக்க பொறுப்புடனும் நேர்மையுடனும் எடுத்துரைக்கப்பட்டிருப்பது எமக்கு இதம் தருவதாகும்.

தமிழ் பிறந்த தமிழ்நாட்டில் கேட்கமுடியாத இனிய சொல்லாட்சி யும் வார்த்தைப் பிரயோகமும், இனிய தமிழ்நடையும் வாசிப்பைச் சுகமாக்குகின்றன. அடிப்படையில் பொறிஞராக இருந்தும் அரசியலில் இவ்வளவு தீர்க்கமான-தெறிப்பான கண்ணோட்டம் இருப்பது இவரது மனநிறைவான எதிர்கால வளர்ச்சியைக் காட்டுகிறது.

தாய்மண்ணை விட்டுப் பரதேசத்தில் வாழ்ந்தாலும், உள்ளமும் உயிரும் ஈழத்திலேயே. 'எத்தவத்தைச் செய்தாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தில்' என்பதுபோலப்-பேச்சு, மூச்சு, எழுத்து அனைத்தும் இருக்கும் என்பதை இளம் சிந்தனையாளர் திரு. சிற்சபேசன் அவர்கள் எமக்குக் காட்டிச் சிலிர்ப்படைய வைத்திருக்கின்றார்.

வாழ்க அவரது தமிழ் நெஞ்சம்!

வளர்க அவரது ஆரோக்கியமான சிந்தனையோட்டம்!

மேலும் மேலும் தெறிக்கட்டும் அவரது தார்மீகக் கோபம் நிறைந்த வெளிப்பாடுகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

ஈழ வளநாட்டின் பாரம்பரியமிக்க பிரதேசங்களில் வண்ணார் பண்ணையும் ஒன்றாகும். ஆறுமுகநாவலர் முதல் யோகர்சுவாமிகள் ஈறான ஞானப் பரம்பரையின் முன்னோடிகள் வாழ்ந்து வளப்படுத்திய பூமி. அங்குப் பாரம்பரியங்கள், பண்பாடுகள், வாழ்வின் விழுமியங்கள் வேரூன்றித் தழைத்தன. ஒருவிடயத்தை வண்ணார்பண்ணை இன்று நினைத்தால், அதே விடயத்தை யாழ்ப்பாணம் நாளை நினைக்கு மென்றும் அதற்கு மறுநாளே இலங்கை அவ்விடயத்தை நினைக்கு மென்றும் சொல்வார்கள். அக்கூற்றிலேயுள்ள மிகைப்படுத்தல் களிடையேயும் உண்மையைத் தரிசிக்கலாம்.

வண்ணார்பண்ணையிலுள்ள அய்யனார் கோவிலடியில் வாழ்ந்து வளம்பெற்ற எனது முன்னோர்கள் சைவத் தமிழ்ப் பாரம்பரியத்தின் வழிநின்றவர்கள். சைவத்தமிழ்க் குடும்பச்சூழல், நம்முடைய வாழ்வு நமக்காக மட்டுமல்ல, நாம் வாழும் சமூகத்திற்கும் பயனுள்ளதாகவும் அமையவேண்டும் என்னும் கருத்தை இளம்பிராயத்திலேயே ஆழமாகப் பதித்தது.

கடந்த ஐந்தாண்டுகளாகக் கங்காருமண்ணில் வாழ்ந்து வளமடைந்துள்ளோம். அவுஸ்திரேலிய வானொலிகளிலும், சமூகநிகழ்வு களிலும், இலங்கையிலுள்ள நாளேடுகளிலும் பதிவாகிய கட்டுரைகளே நூலுருப்பெறுகின்றன. சென்ற இரண்டாண்டுக் காலப் பகுதியின் தெறிப்பாகவே இவற்றைக் கருதுகின்றேன். எழுத்து என்பதே ஒருவகையான நீலரத்தத்தின் வெளிப்பாடுதானே! நாம் வாழ்கின்ற சமூகத்தில் காணுகின்றனவற்றின் தெறிப்பாக ஏற்படுகின்ற அறிவுபூர்வ மானதும் ஆரோக்கியமானதுமான நெற்றிக்கண் திறப்பினும், பொங்கிப் பிரவாகிக்கின்ற சினத்தின் வெளிப்பாடுகளே இக்கட்டுரைகளாகும்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்தகுடி என்று பெருமையடைகின்றோம். செழுமையான பக்தி இலக்கியங்களைக் கொண்டிருக்கின்றோம். தொல்காப்பியம், சிலப்பதிகாரம், திருக்குறள் என்னும் பெருமைக்குரிய பாரம்பரியத்தின் சொந்தக்காரர்கள் என்கிறோம். ஆனாலும் அப்பளம்போன்று எளிதாக நொறுங்கிவிடக்கூடிய சமூகமாகவே இருக்கின்றோம். அன்பு, பண்பு, பணிவு, சகோதரத்துவம், நேசம், பெருந்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, விருந்தோம்பல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபசரிப்புப் போன்ற ஏற்றமிகு குணக்கூறுகள் நம்மிடையே அருகி வருகின்றனவோ என்னும் ஏக்கம் ஏற்படுகின்றது.

ஒவ்வொருவரும் புலம்பெயர்ந்தமைக்கான காரணங்கள் வெவ்வேறாகக் காணப்பட்டாலும், அடிப்படையில் அடையாளங்களைப் பேணிக் கொள்வதற்காகவே புலம்பெயர்வுகள் ஏற்படுகின்றன. ஆனாலும் புலம்பெயர்ந்த மண்ணில் நம்மவருடைய அடையாளங்கள் காணாமற்போகின்றனவோ என்னும் அச்சம் ஏற்படுகின்றது. இத்தகைய சிந்தனைகளின் வெளிப்பாடுகளாகவே என்னுடைய எழுத்துகள் அமைகின்றன. அத்தகைய சிந்தனைகளில் அரசியல், சமூகத் தளங்களில் பிரவகித்துள்ளவையே இந்நூலாக வெளிவருகின்றது.

தமிழ்க் கல்வியுலகின் ஒளிவிளக்காகத் திகழும் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ஔவை நடராசன் அவர்களின் 'தெறித்த திவலைகள்' எம்மை ஊக்குவித்து வெளி உலகிற்கு அறிமுகப்படுத்துவது என்னை இறும்பூதச் செய்கிறது. தமிழ்ப் பத்திரிகையாளர் உலகில் தமக்கெனத் தனியிடத்தைப் பதித்துள்ள என் குடும்ப நண்பர் திரு. லேனா தமிழ்வாணன் அவர்களின் அணிந்துரை இந்நூலுக்கு அணிகலனாக அமைந்துள்ளது. எனது அன்புக்குப் பாத்திரமான மூதாசிரியர் ஆய்வுத் திலகம் சபாநாயகம் அவர்களின் ஆய்வுரை எம்மை ஊக்குவிக்கின்றது.

எனக்கு ஏடு தொடக்கி.. சைவத் தமிழையும் மேடைப் பேச்சாற்றலையும் மெருகேற்றிய பெருமதிப்பிற்குரிய ஆசான் சிவராமலிங்கம் அவர்கள் மனமுவந்து விதப்புரை வழங்கியுள்ளமை எனது பெரும்பேறாகவே கருதுகின்றேன். யாழ் இந்துக் கல்லூரிப் பாரம்பரியத்தின் பெருமைக்குரிய உடுவை எஸ். தில்லை நடராஜா அவர்கள் உவப்புடன் வழங்கிய அறிமுகவுரை எனக்குக் கிடைத்த கௌரவமாகும்.

மிகக் குறுகிய காலத்தில் இந்நூலைச் சிறப்பாகவும் செம்மை யாகவும் தரமானதாகவும் பதிப்பித்துத் தந்த உலகத் தமிழர் பதிப்பகமும், அறிவுக் கூர்மையோடும் ஆற்றலோடும் பணியாற்றிய அதன் உரிமையாளர் உழைப்புச் செம்மல் இரா. மதிவாணன் அவர்களும் எம் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்கள்.

17/2, அய்யனார் கோவில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**சி. சிற்சபேசன்,**
நியூசிலாந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அச்சம் கலந்த ஏக்கம் | 17 |
| 2. | கனவு மெய்ப்படுமா? | 20 |
| 3. | அடிமேல் அடிவிழுகின்றது! | 23 |
| 4. | புதிய சமிக்ஞைகள் | 26 |
| 5. | புதுமைப்பெண் | 29 |
| 6. | சூரியன் வரவுக்குக் காத்திருப்பு | 32 |
| 7. | தன்னிகரற்ற தலைமை | 35 |
| 8. | புதிய சமன்பாடுகள் | 38 |
| 9. | கனியிருக்கக் காய் பறிக்கலாமா? | 41 |
| 10. | குறுநிலத் தலைவர்கள் | 44 |
| 11. | உறுதிமொழியா? உதிரிமொழியா? | 47 |
| 12. | எங்கே நிம்மதி? | 50 |
| 13. | வானம்பார்த்த பூமியின் அவலம் | 53 |
| 14. | வானத்தை வில்லாக வளைக்கலாமா? | 56 |
| 15. | கடலிலே கண்ணீர்த் துளி | 59 |
| 16. | தூரதேசத்து வெண்புறாக்கள் | 62 |
| 17. | மண்குதிரையில் ஆற்றைக் கடப்பதா? | 65 |
| 18. | சமாதான முன்னரங்கு மாறுகின்றது | 68 |
| 19. | இணைப்புத் தொடருமா? | 71 |
| 20. | நம்பிக்கை நறுக்கப்படுகின்றதா? | 74 |
| 21. | நாணயத்தைச் சுண்டலாமா? | 77 |
| 22. | யாரோடு நோகலாம்? | 80 |
| 23. | பனங்காட்டு நரிகள் | 83 |
| 24. | கொள்கைக் குன்று | 86 |
| 25. | நெடுங்காலக் கனவு | 89 |
| 26. | புதிய அரசியல் சகாப்தம் | 92 |
| 27. | தலைமை மாறுகின்றது | 95 |
| 28. | சினிமா நட்சத்திரங்கள் தலைவர்களா? | 98 |
| 29. | சூழ்நிலைக் கைதி | 101 |
| 30. | தனிப்பெரும்பான்மையா? | 104 |
| 31. | மக்கள் தீர்ப்பா? மக்களுக்குத் தீர்ப்பா? | 107 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 32. | சாதனை படைக்கலாம் | 110 |
| 33. | சபாநாயகர் தெரிவில் அமளி | 113 |
| 34. | மீண்டும் நோர்வே | 116 |
| 35. | சிறுபிள்ளை வேளாண்மை | 119 |
| 36. | ஒருதடவை சொன்னால்... | 122 |
| 37. | கிழக்கு உக்கிரமடைகின்றது | 125 |
| 38. | புதியதோர் உலகா படைக்கிறார்கள்? | 128 |
| 39. | வேலைவாய்ப்புகள் | 131 |
| 40. | யாரோடு நோவேன்? | 134 |
| 41. | மனமது செவ்வையானால்... | 137 |
| 42. | கடல் பிரித்தாலும்... | 140 |
| 43. | நீக்கமற நிறைந்துள்ள சக்தியா? | 143 |
| 44. | சளைத்தவர்களா? | 146 |
| 45. | அவுஸ்திரேலியப் பொதுத் தேர்தல் | 149 |
| 46. | பாலைவனத்தில் பசுமைப் புரட்சி | 152 |
| 47. | சிங்காரச் சென்னை | 155 |
| 48. | வேலியே பயிரை மேய்கிறது | 158 |
| 49. | காலச்சக்கரத்தின் சுழற்சி | 161 |
| 50. | சேது சமுத்திரம் | 164 |
| 51. | ஆழியின் ரௌத்திரம் | 167 |
| 52. | உத்தரவின்றி உட்புகுந்து... | 170 |
| 53. | மீன் குஞ்சுக்கு நீச்சல் பழக்குவதா? | 173 |
| 54. | மறுவாழ்வு தேடல் | 176 |
| 55. | தனித்துவமான ஆற்றல் | 179 |
| 56. | சூரியன் மேற்கிலா உதிக்கும்? | 182 |
| 57. | புதிய குத்தகைக்காரர் | 185 |
| 58. | ஜே.வி.பி.யின் பாய்ச்சல் | 188 |
| 59. | தன்னிகரற்ற தலைவரா? | 191 |
| 60. | கிள்ளுகீரையா? | 194 |
| 61. | நெற்றிக்கண் திறப்பினும்... | 197 |
| 62. | குடிவரவுக் குளறுபடிகள் | 200 |
| 63. | கன்பராக் கனவுகள் | 203 |
| 64. | கங்காரு மண்ணின் மைந்தர்கள் | 206 |
| 65. | புதிய புலங்களில் சவால் | 212 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சம் கலந்த ஏக்கம்

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகட்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு ஓராண்டு பூர்த்தியைக் குறிக்கும் வகையில்தான் கோலாகல நிகழ்வுகள் ரணில் விக்கிரமசிங்க அரசினால் பாரிய அளவுகளில் அண்மைகளில் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் அதேகாலப்பகுதியில் வடகிழக்குத் தமிழர் பிரதேசங்களில் கடையடைப்பும் ஹர்த்தாலும் அனுட்டிக்கப்பட்டன. கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. புரிந்துணர்வு உடன்படிக்கை வாயிலாகப் போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. அதன்மூலமாக அச்சமற்ற அன்றாட வாழ்வு ஏற்பட்டுள்ளது. அதுதவிர வடகிழக்குப் பிரதேசங்களில் எத்தகைய முன்னேற்றகரமான மாறுதல்களும் ஏற்படவில்லை. அதனையே வடகிழக்கில் ஏற்பட்ட எதிர்ப்பு நிகழ்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. உயர்பாதுகாப்பு வலயங்களால் மீள்குடியமர்வு தாமதமடைகின்றது. குடாநாட்டில் சுமார் 160 சதுரகிலோ மீட்டரை உள்ளடக்கிய 15 உயர்பாதுகாப்பு வலயங்கள் உள்ளன. சுமார் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். சுமார் 18 விழுக்காடு நிலப்பரப்பு உயர்பாதுகாப்பு வலயங்களால் உள்வாங்கப்பட்டிருக்கின்றது.

புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு ஓராண்டாகியும் இதுவரையில் மீள்குடியமர்வு ஏற்படவில்லை. விவசாய நிலங்கள் சூனியமாக உள்ளன. கடல்வலயக் கட்டுப்பாடுகளால் மீன்பிடித்தொழில் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றது. இவ்வாறாக உயர்பாதுகாப்பு வலயமானது இயல்புநிலை உருவாகுவதற்குத் தடையாகியுள்ளது. கடந்த ஆண்டிறுதியில் வெளியான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவினது உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான அறிக்கை பலத்த சலசலப்புகளை ஏற்படுத்தியதோடு நின்றுவிடாமல், புரிந்துணர்வு உடன்படிக்கை அதுகாறும் முகம்கொடுக்காத சிக்கலையும் உருவாக்கியது. சமாதானப் பேச்சுவார்த்தைகளை அதிர்வுக்குட்படுத்தியது. இந்திய இராணுவத்தின் முன்னாள் உயரதிகாரியான ஜெனரல் சதீஸ் நம்பியாரை ஆலோசனைக்கு அழைத்ததன்மூலமாகப் புரிந்துணர்வு உடன்படிக்கை எதிர்கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியிறுக்கத்தை இலங்கையரசு தளர்த்தியபோதிலும் உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாகத் தீர்க்கமான முடிவுகளெதுவும் ஏற்படவில்லை.

ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் பெர்லினில் ஆரம்பமாகின்ற பெப்ரவரி ஆறாம் மற்றும் ஏழாம் திகதிகளில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் ஏற்பட்ட சம்பவம், மீண்டும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. விடுதலைப் புலிகளுடைய கடற்கலன்களைச் சோதனையிடுவதற்கான கடற்படை யினரது உரிமை குறித்துப் போர்நிறுத்த உடன்படிக்கை தெளிவாக வரையறுக்காதபோதிலும், தேசத்தின் இறைமையையும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து இலங்கையின் படைகள் பாதுகாக்கவேண்டும் எனக் கூறப்பட்டுள்ள சரத்தின் அடிப்படையில், படையினரின் நடவடிக்கைகளை நியாயப்படுத்துகின்ற தன்மை காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. நெடுந்தீவு விவகாரத்தில் சுமுகமான தீர்வு ஏற்படுத்த விக்கிரமசிங்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த வேளையில், முப்படைகளின் தளபதியான சனாதிபதி குமாரதுங்கா கடற்படைக்கு வழங்கிய ஆணை, கள நிலைமைகளைத் தலைகீழாக்கியதோடு, சமாதானச் செயற்பாடுகளில் தென்னிலங்கையிலுள்ள பேதங்களை மீண்டும் வெளிப்படுத்தியது.

ஆறாவது சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகள் மார்ச்சு 16 முதல் 18ஆம் திகதிவரை டோக்கியோவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், கடற்பரப்பில் மீண்டும் ஏற்பட்டுள்ள சம்பவம் இறுக்கமான சூழ்நிலை களை ஏற்படுத்தியுள்ளது. எதிர்வரும் ஆனியில் இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் சந்திப்பும் டோக்கியோவில் நடைபெறவுள்ளது. ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளையடுத்துத் திட்டவட்டமான நடவடிக்கைகளைச் சர்வதேச சமூகம் எதிர்பார்த்திருந்தது. அத்தகைய பின்னணியிலேயே, கடந்த திங்கள் வடகிழக்குக் கடற்பரப்பில் ஏற்பட்ட சம்பவம் மிகுந்த இறுக்கத்தை உருவாக்கியுள்ளதோடு, விடுதலைப் புலிகளைக் கடுமையான நிலைப்பாட்டை நோக்கி நகர்த்துகின்றது. போர் நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகுவதாயின், பதினான்கு தினங்கட்கு முன்பாக நோர்வே அரசுக்கு அறிவுறுத்தவேண்டும் என்பதே, நேரடிப் பேச்சுவார்த்தைகட்கான அடிப்படையாக இருதரப்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

திங்கட்கிழமையேற்பட்ட கடற்பரப்புச் சம்பவம், பேச்சு வார்த்தைகளைத் தடம்புரட்டாது எனக் கண்டியில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சிப் பேரணியில் பிரதமர் விக்கிரமசிங்க நம்பிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டுள்ளார். அதே கருத்தை வெளிநாட்டு இராஜதந்திரிகளும் பிரதிபலித்துள்ளனர். இருந்தபோதிலும் விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து அத்தகைய திட்டவட்டமான நிலைப்பாடு இதுவரையில் வெளிப்படுத்தப்படவில்லை என்பது கவனத்தைப் பெறுகின்றது. உயர்பாதுகாப்பு வலயம், மீள்குடியமர்வு, கடல்வலயக் கட்டுப்பாடுகள், நெடுந்தீவு வாகரை மற்றும் இவ்வாரக் கடற் சம்பவங்கள், மானிப்பாய் இடுப்புப் பட்டி விவகாரமும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அசம்பாவிதங்கள், மட்டக்களப்பில் வரவேற்புப் பலகை விவகாரம், கடந்த மாதப் பிற்பகுதியளவில் திருகோணமலை குச்சவெளிப் பிரதேசத்தில் உருவாகிய இறுக்கம் என ஒன்றன்பின் ஒன்றான சம்பவங்கள், இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகட்கும் இடையிலான புரிந்துணர்வைக் கேள்விக்குட்படுத்தியே வருகின்றது.

சமாதான முயற்சிகட்கு சர்வதேசரீதியாகக் கிடைத்துவருகின்ற ஆதரவுகட்கு மத்தியிலும்கூடத் தென்னிலங்கையில் சமாதானத்துக்கு எதிரான குரல்கள் உரத்து ஒலிக்கத் தொடங்குகின்றன. அண்மையில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற அணிசேராநாடுகளின் உச்சிமகாநாட்டின்போது, சமாதானத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டை சனாதிபதி குமாரதுங்கா வெளிப்படுத்தியிருந்தார். ஜேவிபியுடன் உள்நாட்டில் கூட்டணியமைக்கின்றார். இத்தகைய நிலையில், ஓராண்டைப் பூர்த்தி செய்துள்ள சமாதான முயற்சிகளின் எதிர்காலம் குறித்த கேள்விகள், இன்றைய காலப்பகுதியில் அச்சம் கலந்த ஏக்கமாக உருவாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு மெய்ப்படுமா?

புரிந்துணர்வு உடன்படிக்கை வாயிலாக 2002ஆம் ஆண்டு பெப்ரவரி 23இல் போர் நிறுத்தம் ஏற்பட்டு ஒரு வருடம் பூர்த்தி அடைந்துள்ள நிலையில், பெப்ரவரி 7இல் நெடுந்தீவுக் கடற்பரப்பிலும், மார்ச்சு 10இல் கிழக்குக் கடற்பரப்பிலும் அசம்பாவிதங்கள் ஏற்பட்டுள்ளன. ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஜேர்மனியில் ஆரம்பமாவதற்கு முன்பாக நெடுந்தீவுச் சம்பவம் ஏற்பட்டது. அதன் பின்னர் ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஜப்பானில் ஆரம்பமாவதற்கு முன்பாகக் கிழக்குக் கடற்பரப்புச் சம்பவம் ஏற்பட்டது. முறுகல்நிலையைத் தோற்றுவிக்கும் முனைப்பின் வெளிப்பாடாகவே இத்தகைய சம்பவங்களைக் கருதமுடிகின்றது.

கிழக்குக் கடற்பரப்புச் சம்பவம் தொடர்பாக ஆராய்ந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, கடந்தவாரம் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது. அதன் பிரகாரம் மேற்குறிப்பிட்ட சம்பவம் 240 கடல் மைல் தொலைவில் சர்வதேசக் கடற்பரப்பில் நடைபெற்றுள்ளமை தெரியவருகின்றது. அவ்வாறான சம்பவங்கள் ஏற்படுகின்ற சூழ்நிலைகளில், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பிரசன்னமாகும் வரையில் இருதரப்பும் தமது நிலைகளைப் பேணவேண்டும் எனக் கண்காணிப்புக்குழு வரையறுக்கின்றது. ஆனால் மேற்படி கடற் சம்பவத்தின்போது, அரச சமாதானச் செயலகம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்குச் சம்பவம் தொடர்பான முதல் தகவல் தெரிவிக்கும் வேளையில், இலங்கைக் கடற்படைத் தாக்குதலை ஆரம்பித்திருக்கிறது. இவ்வாறான செயற்பாடு, கண்காணிப்புக் குழுவின் வரையறையை மீறிய செயலாகும் என்பதுடன், அசம்பாவிதம் பாரியதானதாக உருவாகுவதற்குக் காரணமாகியுள்ளதோ என்னும் அபிப்பிராயத்தையும் ஏற்படுத்துகின்றது. மேற்படி கடற்சம்பவம் விடுதலைப் புலிகள் தரப்பில் கடுமையான சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இருந்தபோதிலும் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு, ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் மார்ச்சு 16 முதல் 18 திகதிவரை டோக்கியோவில் நிறைவடைந்துள்ளது. இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் சந்திப்பு டோக்கியோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறவுள்ள நிலையில், ஏப்பிரல் 29 முதல் மே 2 வரை திட்டமிடப் பட்டுள்ள ஏழாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. சமாதானச் செயற்பாடுகளில் அறுதியான செயற்பாடு களைப் பன்னாட்டுச் சமூகம் எதிர்பார்க்கின்றது.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் இன்றைய காலங்களில் ஜப்பானும் ஈடுபடுகின்றது. அபிவிருத்திக்கான நிதியுதவி வழங்கும் நாடுகளின் வரிசையில், ஜப்பான் முதல்நிலையில் காணப்படுவதாகும். ஆனாலும் கடந்த நிதியாண்டில், ஜப்பானின் பொருளாதாரம் வீழ்ச்சி யடைந்துள்ளது. அதனால் 2001இல் 9.65 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த ஜப்பானின் நிதியுதவிக்கான ஒதுக்கீடு, 2002இல் 10 விழுக்காடு குறைவடைந்தது. 2003 இல் மேலும் 5 விழுக்காடு குறைவடையலாம் எனக் கணிக்கப்படுகின்றது. நிதியுதவி வழங்கு வதோடு சர்வதேசரீதியாகவும் தனது ஆளுமையை நிலைநிறுத்துவதில் ஜப்பான் ஆர்வம் கொண்டுள்ளது. ஜப்பானின் வெளிநாட்டுக் கொள்கையில் வெளிப்படையான மாறுதல்களை 2001ஆம் ஆண்டிற்குப் பின்னர் அவதானிக்க முடிகின்றது.

இரண்டாவது உலகயுத்தத்தின்போது ஜப்பானின் இராணுவம் மேற் கொண்ட கடுமையான நடவடிக்கைகளும் சீனா, கொரியா, இந்தோனேசியா உள்ளிட்ட தென்கிழக்காசிய நாடுகளில் ஜப்பானின் குடியேற்றக்கால நடவடிக்கைகளும் நீங்காத நினைவுகளாக உள்ளன. ஆனாலும் ஜப்பானின் இன்றைய அரசியல்யாப்பு, நாட்டினது இராணுவ நடவடிக்கைகளைத் திட்டவட்டமாக வரையறுத்துள்ளது. இருப்பினும் அபிவிருத்திக்கான நிதியுதவியோடு நிறுத்திக்கொள்ளாமல், சர்வதேச ரீதியாக ஆளுமையேற்படுத்திக் கொள்வதில் ஜப்பான் தணியாத தாகத்துடன் காணப்படுகின்றது. அந்த வகையிலேயே 1990களில் கம்போடியாவிலும், அண்மையில் ஐநாவினது அனுசரணையுடன் கிழக்கு திமோரிலும் சமாதானச் செயற்பாடுகளில் ஜப்பான் ஈடுபட்டமை கவனிக்கத்தக்கதாகும். பூரண சமாதானத்தைக் கொண்டிருக்காதா நாடொன்றுக்கு, அபிவிருத்தி நிதி வழங்குவதில்லை என்பது ஜப்பானின் கொள்கையாகும்.

இருந்தபோதிலும் இலங்கை விடயத்தில் சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படத் தொடங்குகின்ற வேளைகளிலேயே நிதியுதவி வழங்க முன்வந்திருக்கின்றது. இலங்கையில் சமாதான முயற்சிகள் ஏற்படத்தொடங்குகின்ற வேளைகளில், சமாதானச் செயற்பாடுகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுவதற்கும் ஜப்பான் ஆர்வம் காட்டுகின்றது. பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்குக் களம் அமைத்துக் கொடுத்துள்ளது. சிரேஷ்ட இராஜதந்திரியான யசூசி அகாசியை விசேட தூதுவராக நியமித்துள்ளது. இவ்வருட ஆரம்பத்தில் ஜப்பானிய வெளியுறவு மந்திரி வடகிழக்குப் பிரதேசங்கட்கு விஜயமொன்றையும் மேற்கொண்டிருந்தார். அதுவே பொருளாதார வலுமிக்க நாடொன்றிலிருந்து வடகிழக்கிற்கு வருகைதந்த உயர்நிலை அரசபிரதிநிதியொருவரின் முதலாவது விஜயமாகவும் அமைந்தது. இவ்வாறாகச் சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான ஒத்துழைப்புகளை வழங்குவதில் ஜப்பான் ஆர்வம் கொண்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

ஆனாலும் சமாதான முயற்சிகளில் ஜப்பானின் ஈடுபாடு, இந்தியாவிற்கு விசனத்தை ஏற்படுத்தலாம். இந்திய-பாக்கிஸ்தான் அணுவாயுத பரிசோதனைகட்குப் பின்னர், இந்திய-ஜப்பானிய உறவு தொய்வடைந்துள்ளது. இருந்தபோதிலும் இந்துசமுத்திரம் மற்றும் மலாக்கா கடற்பரப்புகளில், இந்திய-ஜப்பானிய கடற்படைகளிடையே ஒத்துழைப்பு ஆரம்பாகின்றமையைக் காணமுடிகின்றது. ஒருவகையில், ஜப்பானின் பூகோளரீதியான கவனம் இலங்கை பக்கம் திரும்பு கின்றமைக்கு இந்துசமுத்திரப் பிராந்தியம் முக்கியமான காரணமாகும். ஜப்பானின் ஏற்றுமதி வர்த்தகம், இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் வளர்ச்சியடைகின்றது. 2001இல் 576 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருள்களைப் பாக்கிஸ்தானுக்கும், 2 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருள்களை இந்தியாவிற்கும் ஏற்றுமதி செய்துள்ளது. ஆக தனது ஆளுமையைச் சர்வதேசரீதியாக விரிவாக்கமுனையும் ஜப்பானினது பார்வை, இலங்கையின் சமாதான முயற்சிகளூடாக இந்துசமுத்திரப் பிராந்தியத்தை இலக்கு வைக்கின்றதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமேல் அடிவிழுகின்றது!

எதிர்வரும் ஆனி 9இல் ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கான உதவிவழங்கும் நாடுகளின் சந்திப்பு, அதனைத் தொடர்ந்து ஆனி 12இல் திட்டமிடப்பட்டுள்ள சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஆகியவற்றுக்கான முஸ்தீபுகள் ஆரம்பமாகியுள்ளன. நோர்வே, ஜப்பான் ஆகியவற்றுடன் அமெரிக்காவும் உதவிவழங்கும் நாடுகளின் சந்திப்பில் கலந்து கொள்கின்றது. ஐரோப்பிய ஒன்றியமும் கலந்துகொள்வதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது. இதனிடையே ஜப்பான் சந்திப்புக்கு முன்னோடியாக வாஷிங்டனில் உதவி வழங்கும் நாடுகளின் சந்திப்பொன்று ஏற்பாடாகியுள்ளபோதிலும், அதில் கலந்துகொள்வதற்கு விடுதலைப் புலிகள் அழைக்கப்படவில்லை. இவையொருபுறமிருக்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-ஜேவிபி கூட்டணி முயற்சிகளும் முற்றுப்பெறவில்லை. இவ்விரண்டு கட்சிகளுமே இனப்பிரச்சினை விடயத்தில் முரணான நிலைப்பாடுகளைக் கொண்டு உள்ளனவாகும். அதுவே அவர்களிடையே இணக்கப்பாடு ஏற்படுவதிலும் தடையாக உள்ளது. 2000ஆம் ஆண்டில் பொதுசன ஐக்கிய முன்னணி சமர்ப்பித்த அரசியல்யாப்புத் திருத்த யோசனைகளின் அடிப்படையில், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதை ஜேவிபி எதிர்க்கின்றது.

அத்தோடு மட்டுமன்றி, இடைப்பட்ட காலத்தில் பொதுசன ஐக்கிய முன்னணி அரசுக்கு ஜேவிபி ஆதரவு வழங்கியபோது, இதுவிடயத்தில் நிபந்தனைகளையும் விதித்திருந்தது. இனப்பிரச்சினை விடயத்தில் மட்டுமன்றி, பொருளாதார நிருவாகம் உள்ளிட்ட பல்வேறு விடயங் களிலும், பொதுசன ஐக்கிய முன்னணியும் செஞ்சிந்தனை வயப்பட்ட வர்களாக அடையாளப்படுத்தப்படும் ஜேவிபியும் முரண்பாடான நிலைப்பாடுகளையே கொண்டிருக்கின்றன. இருந்தபோதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜேவிபியும், விக்கிரமசிங்க அரசைத் தோற்கடிப்பதை மட்டுமே இலட்சியமாகக் கொண்டு ஒன்றுடன் ஒன்று நெருங்கி வருகின்றன. அத்தோடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள உட்கட்சிப் பூசல்களின் பிரதிபலிப்பாகவும் கருதப்படுகின்றது. எதிர்க்கட்சித் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹிந்த ராஜபக்ஸாவை ஓரங்கட்டி, அடுத்த சனாதிபதி வேட்பாளராக அனுரா பண்டாரநாயக்காவை முன்னிலைப்படுத்தும் முயற்சியின் வெளிப்பாடாகவும் ஜேவிபியுடனான நெருக்கத்தைக் கருதமுடிகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள ஏ.எச்.எம். பௌசி போன்றவர்களே கூட, இத்தகைய கருத்தை மேலோட்டமாகவேனும் பிரதிபலிப்பதைக் காணமுடிகின்றது.

உள்நாட்டு அரசியல் யதார்த்தங்களைக் கவனத்தில் கொள்கின்ற போதிலும், ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் சந்திப்பை மையப்படுத்தியதான செயல்திட்டங்களை விக்கிரமசிங்க அரசு முன்னெடுத்து வருகின்றது, சமாதான முயற்சிகளை முன்னகர்த்துவதோடு, பொருளாதார மறுசீரமைப்பு விடயத்திலும் அரசு அதீதகவனத்தைச் செலுத்துகின்றது. கடந்த ஒரு வருடகாலத்தில் நிதித்துறையில் கடுமையான கட்டுப்பாடுகளை வரையறுத்து, அடிப்படையான சீரமைப்பை விக்கிரமசிங்க ஏற்படுத்தியுள்ளமை சர்வதேச நிதிநிறுவனங்களை ஆசுவாசப்படுத்தியுள்ளது. தனியார் மயமாக்கலைத் துரிதமாக்கும் முயற்சிகளையும் அரசு மேற்கொள்கின்றது. பொருளாதாரத் துறையில் நம்பகத்தன்மையைப் பேணி வளர்த்துக் கொண்டு ஜப்பான் சந்திப்பில் கலந்துகொள்வதற்கே அரசு விரும்புகின்றது. உதவி வழங்கும நாடுகளின் சந்திப்பு முடிவடைந்த பின்னர், சமாதான முயற்சிகளை வேகப்படுத்தும் வகையில் சர்வசன வாக்கெடுப்பொன்றை நடாத்துவதற்கு அரசு திட்டமிடுகின்றது.

சர்வசனவாக்கெடுப்பைக் கோருகின்ற அதிகாரம் சனாதிபதியிடமே உள்ளது. இன்றைய நிலவரங்களில் சுமார் 70 விழுக்காடு மக்கள் சமாதான முயற்சிகட்கு ஆதரவாக உள்ளனர். அத்தோடு சர்வதேச சமூகமும் சமாதான நடவடிக்கைகட்கு ஆதரவாக உள்ளது. இத்தகைய பின்னணியிலே, சமாதானம் தொடர்பான மக்கள் அபிப்பிராயத்தைக் கோருகின்ற சர்வசனவாக்கெடுப்பை நடாத்துவதற்குச் சனாதிபதி சம்மதிப்பார் என்னும் எதிர்பார்ப்பு விக்கிரமசிங்க தரப்பிலுள்ளது. அதுவிடயத்திலே சனாதிபதி முற்றுமுழுதான பாதகமாக விளைவுகளை ஏற்படுத்தலாம் என சனாதிபதி கருதலாம். ஆனாலும் சர்வசன வாக்கெடுப்பு நடாத்துவதற்குச் சனாதிபதி மறுக்கின்ற பட்சத்தில், அத்தககைய சூழ்நிலையில் நீதித்துறையினது நிலைப்பாடு எவ்வாறானதாக அமையும் என்பது கேள்வியாகின்றது. 19ஆவது திருத்தவிடயத்தில் நீதிமன்றத்தின் நிலைப்பாடு ஏற்படுத்திய விளைவுகள் கவனிக்கப்படவேண்டியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் வெளியாகியுள்ள தீர்ப்பொன்று, விக்கிரமசிங்க அரசுக்கு அரசியல்யாப்புத் தொடர்பில் புதிய நம்பிக்கைகளை ஏற்படுத்துகின்றது. இராணுவக் கட்டுப்பாடுகளினால் 2001 பொதுத் தேர்தல்களின்போது வாக்களிக்கும் வாய்ப்பை இழந்தவர்கள், தமது வாக்களிக்கும் உரிமையை அரசு பறித்துக்கொண்டதாக வழக்குத் தொடுத்திருந்தனர். அதனை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளமையானது, நீதித்துறை மீதான நம்பிக்கைகளை உறுதிப்படுத்துகின்றது.

நிற்க அமெரிக்காவின் ஈராக் மீதான தாக்குதலும், அதன் விளைவாக மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள சமச்சீரின்மையும், இலங்கைப் பொருளாதாரத்தில் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது. சுமார் ஒரு மில்லியன் இலங்கையர்கள் மத்திய கிழக்கில் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். அதன்மூலமாக இலங்கையின் மொத்த அன்னியச் செலாவணி வருமதியில், சுமார் ஒருபில்லியன் வரையான அமெரிக்க டொலர்கள் கிடைக்கின்றன. அன்னியச் செலாவணியில் தேயிலை ஏற்றுமதியே இரண்டாவது இடத்திலுள்ளதாகும். ஏற்றுமதி செய்யப் படுகின்ற மொத்த தேயிலையில், சுமார் 30 விழுக்காடு மத்தியகிழக்குப் பிராந்தியத்திற்கே அனுப்பப்படுகின்றது. அத்தோடு பெட்ரோலியப் பொருள்களின் விலைத்தளம்பல்கள், உல்லாசப் பயணிகளின் வருகையில் காணப்படும் தொய்வு எனத் தொடரான பாதிப்புகள் ஏற்படுகின்றன. பல நிலைகளிலும், பல திசைகளிலும் ஏற்படும் அழுத்தங்களிடையே சமாதான நடவடிக்கைகள் முடங்குகின்றனவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சமிக்ஞைகள்

கடந்த பொதுத் தேர்தல்களில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றிபெற்றுப் பாராளுமன்றப் பலத்தைப் பெற்றதைத் தொடர்ந்து உருவாகிய விக்கிரமங்க அரசு, விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டது. அதனைத் தொடர்ந்து 2002 பெப்ரவரி 23இல் போர் நிறுத்தம் உருவாகியது. அதனால் யுத்தமற்ற சூழ்நிலைகளும், அச்சமற்ற அன்றாட வாழ்வும் ஏற்பட்டது. அதுதவிர வடகிழக்குப் பிரதேசங்களில் எத்தகைய முன்னேற்றகரமான மாறுதல்களும் அதன்பின்னர் ஏற்படவில்லை. உயர்பாதுகாப்பு வலயங்கள் முதற்கொண்டு ஏற்பட்ட சேதாரங்கள் வரை, எங்கும் எதிலும் அடிப்படையான மாறுதல்கள் எதனையுமே காணமுடியவில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கை உருவாக்கப்பட்டுப் பதினைந்து மாதங்கள் கழிந்துவிட்டன.

2002 செப்டெம்பரில் தாய்லாந்தில் ஆரம்பமாகிய பேச்சு வார்த்தைகள் ஆறு சுற்றுகளை நிறைவு செய்துள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் குறுகியகாலக் கருப்பொருள் இயல்புநிலையைத் தோற்றுவிப்பதேயாகும் எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனால் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்னும் அய்யம் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக அதிகரித்து வருகின்றது. உயர் பாதுகாப்பு வலயம், மீள்குடியமர்வு என்பவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றகரமான மாறுதல்கள் ஏற்படவில்லை! பேச்சுவார்த்தைகளில் இணக்கப்பாடு காணப்பட்ட விடயங்களை அமுல்படுத்துவதில் வேகமில்லை! நெடுந்தீவு, வாகரை மற்றும் கிழக்குக் கடல்பரப்புச் சம்பவங்கள், மானிப்பாய் அசம்பாவிதங்கள், மட்டக் களப்பில் வரவேற்புப்பலகை விவகாரம், திருகோணமலை குச்சவெளிப் பிரதேச அதிர்வுகள் என ஒன்றன்பின் ஒன்றான அசம்பாவிதங்கள் சமாதானமுயற்சிகளின் நம்பகத்தன்மையை அசைக்கின்றது.

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் சந்திப்பு ஜப்பானில் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னதாக ஏப்பிரல் 14இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாஷிங்டனிலும் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது. இத்தகைய பின்னணியிலேயே, மீள்குடியமர்வில் காணப்படும் அசமந்தப்போக்குக் குறித்த அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில், டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் சந்திப்பைப் பகிஷ்கரிப்பதாகவும் சமாதானப் பேச்சுவார்த்தை களிலிருந்தும் தற்காலிகமாக விலகிக்கொள்வதாகவும் விடுதலைப் புலிகள் ஏப்பிரல் 21இல் அறிவித்துள்ளனர். ஆனையிறவு வெற்றியின் மூன்றாவது வருடம் பூர்த்தியடையும் இன்றைய காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள திட்டவட்டமான அறிவிப்பானது, எத்தகைய சமிக்ஞைகளை வழங்குகின்றன என்பது பரவலான அவதானிப்பைப் பெறுகின்றது.

நிற்க, மீள்குடியமர்வுக்கு உயர்பாதுகாப்பு வலயங்கள் தடையாக உள்ளமை பலதரப்பினராலும் கொள்கையளவிலேயாவது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இதுவிடயத்தில் ஒஸ்லோவில் நடைபெற்ற மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளின்போது அதிககவனம் செலுத்தப்பட்டது. 2002 திசம்பர் 14 இல் கூடிய பாதுகாப்பு உபகுழுவின் தீர்மானத்திற்கமைவாக, யாழ்குடா கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா சமர்ப்பித்த உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான அறிக்கை பலத்த சலசலப்புகளை ஏற்படுத்தியுள்ளது. அத்தோடு புரிந்துணர்வு உடன்படிக்கை இதுவரையில் எதிர்கொள்ளாத இறுக்கங்களையும் உருவாக்கியுள்ளது. இத்தகைய சூழ்நிலைகளிலேயே, இந்திய இராணுவத்தின் முன்னாள் உயரதிகாரியான ஜெனரல் சதீஸ் நம்பியாரை ஆலோசனைக்கு அழைத்துள்ளது. அதன்மூலமாக இன்றைய காலங்களில் ஏற்பட்டுள்ள இறுக்கங்களை அரசு தளர்த்தியுள்ளது.

வடகிழக்குப் பிரதேசங்களை உயர்பாதுகாப்பு வலயங்கள் மிகப்பெரிய அளவில் பாதிக்கின்றமை யதார்த்தமாகும். சுமார் 880 சதுரகிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட யாழ்குடாவில், சுமார் 160 சதுரகிலோ மீட்டர் நிலப்பரப்பு உயர்பாதுகாப்பு வலயங்களாக உள்ளன. அதிலே சுமார் 82 சதுரகிலோ மீட்டர் கடலோரப் பிரதேசங்களும், சுமார் 40,000 ஏக்கர் விவசாய நிலங்களும் உள்ளடங்கியுள்ளன. சுமார் 20,000 வரையிலான விவசாய குடும்பங்களும், சுமார் 8,000 வரையிலான கடற்றொழிலாளர் குடும்பங்களுமாக, சுமார் ஓர் இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 200க்கு மேற்பட்ட கல்விச்சாலைகளும், பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி கோவில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீரிமலை நகுலேஸ்வரம் உள்ளிட்ட சுமார் 300 வரையிலான வழிபாட்டுத் தலங்களும், 25 வரையிலான பெருவீதிகளும் உயர்பாதுகாப்பு வலயங்களால் விழுங்கப்பட்டுள்ளன. யாழ்குடாவின் உயிரோட்டமுடைய வர்த்தக மையங்களான யாழ்நகர், காங்கேசன் துறை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சுண்ணாகம், சாவகக்சேரி உள்ளிட்ட எந்தவொரு பிரதேசமும் இயல்பாகச் செயற்பட முடியவில்லை.

யாழ்நகரின் மத்தியில் 512ஆவது பிரிகேட் படைத்தளம் அமைந்துள்ளது. அதனால் யாழ் போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணப்பட்டினத்தின் சனசஞ்சாரமிக்க வர்த்தக, போக்குவரத்து மையம் ஆகியன உயர்பாதுகாப்பு வலயங்களில் சிக்கியுள்ளது. அதனால் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது. அதனிடையே படைத்தளத்தை மாநகரசபை அலுவலக வளாகம், சுப்பிரமணியம் பூங்கா மற்றும் சுற்றுலா விடுதி பிரதேசத்திற்கு மாற்றுவதற்குப் படைத்தரப்பு முயன்று வருகின்றது, பருத்தித் துறையிலுள்ள துறைமுகப்பகுதி, தனியார் வீடுகள், கட்டடங்கள், பாடசாலைகள் எனக் கணிசமான பகுதியை அங்கு அமைந்துள்ள 524ஆவது படைப்பிரிவு விழுங்கியுள்ளது. ஒரு சகாப்தத்திற்கு மேலாகக் காங்கேசன் துறைப் பிரதேசம் சனசஞ்சாரமற்ற இராணுவப் பிரதேசமாகியுள்ளது.

பலாலி-காங்கேசன் துறை-மயிலிட்டி பிரதேசங்களை உள்ளடக்கிய வலிகாமம் பாதுகாப்புக் கெடுபிடிகளுள் விவசாயத்துக்குரிய செம்பாட்டு மண் பூமியும், மீன்பிடிக்கு வளமான தெளிந்த கடற்பரப்புகளும் சிக்கிச் சீர்குலைகின்றன. கிழக்கிலுள்ள மட்டக்களப்பு-அம்பாறைப் பிரதேசங் களில், பல தனியார் வீடுகள்-கட்டடங்கள், பொதுக்கட்டடங்கள் என்பன படையினரிடம் அகப்பட்டுள்ளன. அம்பாறை மாவட்டத்திலிருந்து மக்கள் இடம் பெயர்வதற்கு விசேட அதிரடிப்படை முகாம்கள் காரண மாகியுள்ளன. திருகோணமலை-மூதூர் பகுதிகளிலிருந்து மக்கள் இடம் பெயர்வதற்கு இராணுவ இருப்புகள் நிர்ப்பந்திக்கின்றன. இவ்வாறாகத் தமிழர் வாழ்வு இராணுவநிலைப்பாடுகளால் பாதிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமைப்பெண்

கடந்த நூற்றாண்டில் நீதிக்கட்சியும், அதன்பின்னர்ப் பகுத்தறிவுத் தந்தை என வர்ணிக்கப்படும் ஈ.வே. இராமசாமிநாயக்கருடைய திராவிட இயக்கமும் தமிழ்நாட்டில் வலுப்பெற்றிருந்தன. பகுத்தறிவு வாதத்துடன் பிராமணிய எதிர்ப்பும் கைகோத்து வீறுகொண்டபோது, திராவிட இயக்கம் தெளிவான அடையாளத்தைப் பெற்றுக்கொண்டது. திராவிட இயக்கத்தின் மையக் கூறுகளுடன் பேரறிஞர் அண்ணாவின் திராவிட முன்னேற்றக் கழகம் பாராளுமன்ற அரசியலில் காலடி வைத்தபோது, அதுவரையில் தமிழ்நாட்டை ஆட்சிசெய்த காங்கிரசுடைய இருப்புக் கேள்விக்குட்பட்டது. அதன்பின்னர் கடந்த சுமார் மூன்றரை தசாப்தங்களாக திராவிடக் கட்சிகள் பாராளுமன்ற அரசியலில் வெற்றிகரமாகச் செயற்படுகின்றன. எத்தகைய கோட்பாடு திராவிட அரசியலின் அடிப்படையாகியதோ, அதுவே இன்று திராவிட அரசியல் பாரம்பரியத்தின் விழுமியங்களை ஆட்டம் காணவைக்கின்றது.

வெள்ளித்திரையில் மின்னிய ஜெயலலிதா ஜெயராமன், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தபோது புதிய நிலைப்பாடுகள் ஏற்பட்டன. கட்சியின் நிறுவனரான எம்.ஜி. இராமச்சந்திரனின் நம்பிக்கைக்குப் பாத்திரவாளியானார். அதனால் தில்லிப் பாராளு மன்றத்தில் அங்கத்துவம், கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் என ஒன்றன்பின் ஒன்றாகப் பதவிகள் ஜெயலலிதாவைத் தேடிச் சென்றன. ஆனால் தமிழகத்தின் ஒப்பாரும் மிக்காருமற்ற அரசியல் சக்தியாக ஜெயலலிதா வளர்ச்சியடைவார் என அன்று எவரும் கருதியிருக்க மாட்டார்கள். ஆரம்பத்திலிருந்தே ஜெயலலிதா ஜெயராமன் தமிழகத்தில் மட்டுமின்றி, அகில இந்திய அரசியல் களத்திலும் கவனிக்கும்படியான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றார். அவருடைய கடந்த ஆட்சிக்காலத்தில் ஏற்பட்டதாகக் கூறப்படும் டான்சி நிலப்பேரம், நிலக்கரி கொள்வனவு, அன்னியச் செலாவணி போன்ற ஊழல் குற்றச் சாட்டுகள் நீதிமன்றவாசல்களைச் சரமாரியாகத் தட்டியபோது, அதுவே ஜெயலலிதாவினுடைய அரசியல் அஸ்தமனமாகவும் வர்ணிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோதிலும் சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவையைப் போன்று, 2001 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல்களில் அபாரமான வெற்றியைப் பெற்றார். பொதுவாகவே ஆளும்கட்சிகள் இடைத்தேர்தல்களில் தோல்வியைச் சந்திப்பது சகஜமானதாகும். ஆனால் அதனையும் ஜெயலலிதா தவிடுபொடியாக்கினார். கடந்த இரண்டாண்டு களில் நடைபெற்ற ஐந்து சட்டமன்ற இடைத்தேர்தல்களிலும் வெற்றி பெற்றுள்ளார். 2001 வைகாசியில் ஜெயலலிதா பதவியேற்றபோது பரவலான எதிர்பார்ப்புகள் காணப்பட்டன. எடுத்தேன் கவிழ்த்தேன் என்றில்லாமல், அனைவரையும் அனுசரித்து அரவணைத்துச் செல்லும் போக்கை வளர்த்துக்கொண்டிருப்பார்! 1996 பொதுத்தேர்தல் தோல்வி களும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட ஊழல் வழக்குகளும் ஏற்படுத்திய அனுபவங்களிலிருந்து மெருகேற மேன்மையுற்றிருப்பார் என்றெல்லாம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவற்றையெல்லாம் கற்பனை கடந்த சோதியாக்குவதற்கு, ஜெயலலிதாவிற்கு அதிக நேரம் எடுக்கவில்லை என்பதோடு, சிரமமும் இருக்கவில்லை.

பதவியேற்ற ஒரு மாதத்திலேயே, 2001 ஆடி 29இல் திமுக ஆட்சியில் அமைச்சராகவிருந்த பொன்முடி கைதுசெய்யப்பட்டார். அதற்கு மறுநாள், மேம்பாலங்கள் கட்டியதில் ஊழல் ஏற்பட்டதான குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதியும், அன்றைய சென்னை மாநகரமேயராக மு.க. ஸ்டாலினும் நள்ளிரவை தாண்டிய வேளையில் கைது செய்யப்பட்டனர். அதே இரவில் காவல் துறையினரின் கடமையில் குறுக்கிட்டதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டு மத்திய அமைச்சர்களான முரசொலி மாறனும், டி.ஆர். பாலுவும் கைது செய்யப்பட்டனர்.

ஒன்பது மாதங்களின் பின்னர் 2002 மார்ச்சில் பொன்முடி, கே.என். நேரு உள்ளிட்ட முன்னாள் அமைச்சர்களின் வீடுகளில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனையிட்டது. அதனைத் தொடர்ந்து பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 2002 ஆடி 11 இல் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வை.கோபால்சாமி உள்ளிட்ட அவரது கட்சியின் ஒன்பது பிரமுகர்களும், ஆகஸ்ட் 1இல் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ நெடுமாறனும் கைது செய்யப்பட்டனர். அதன்பின்னர் வை.கோ., பழ. நெடுமாறன் ஆகியோருடைய வீடுகள் சோதனையிடப்பட்டன. இவ்வருட ஆரம்பத்தில் சட்டமன்றத்தில் அத்துமீறிப் பேசியமைக்காக, திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர் பரிதி இளம்வழுதி கைதுசெய்யப்பட்டார். 1914இல் நிறுவப்பட்ட இந்தியாவின் முதலாவது பெண்கள் கல்லூரியான சென்னை இராணி மேரிக் கல்லூரியை அகற்றி, அதேயிடத்தில் தமிழக அரசின் புதிய தலைமைச் செயலகம் நிறுவப்படப்போவதான அதிரடியான அறிவிப்பை அண்மையில் ஜெயலலிதா வெளியிட்டார். அதனையடுத்து கல்லூரி அகற்றப்படக்கூடாது என்னும் போராட்டம் ஏற்பட்டது. அதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கல்லூரிக்குச் சென்ற மு.க. ஸ்டாலின், அத்துமீறிச் செயற்பட்டதான குற்றச்சாட்டில் கடந்த 9 ஆம் திகதி நள்ளிரவில் கைதாகியுள்ளார்.

அதற்கு மறுநாள் சந்தனக்கடத்தல் வீரப்பன் விவகாரத்தில் ஈடுபட்ட நக்கீரன் ஆசிரியர் கோபால் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறாக மாற்றுக்கருத்துக் கொண்டோரைக் கசக்கிப்பிழியும் இரும்புக் கரமாக இன்று ஜெயலலிதா காணப்படுகின்றார். அமைச்சர்கள், அவரது கட்சிக்காரர்கள், அரசு அதிகாரிகள், எதிர்க்கட்சிகள், பத்திரிகையாளர்கள் என்று எவருமே அவரது கடூரமான பார்வையிலிருந்து தப்பிப்பதில்லை. இடமாற்றல் உத்தரவுகள், கைதுகள், திடீர்ச் சோதனைகள் எனத் தொடரான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. கடந்த இரண்டாண்டுக் கால ஆட்சியில் எதிர்க்கட்சியினரைக் கைது செய்வதும், திடீர்ச் சோதனைகளை மேற்கொள்வதும் வாடிக்கையாகியுள்ளது. இருந்த போதிலும் ஜெயலலிதாவுடைய அத்தகைய நடவடிக்கைகள், போதிய ஆதாரமின்மையால் பின்னர்ப் பிசுபிசுத்துப்போகின்றன. இன்று சுமார் 20 வரையிலான வழக்குகள் பத்திரிகைகள் மீது தொடுக்கப்பட்டுள்ளன. முதுபெரும் தலைவரான கலைஞர் கருணாநிதி, வை.கோ. நெடுமாறன் போன்ற கைதுகள் அதிர்வுகளை ஏற்படுத்துகின்றன. கர்மவீரர் காமராஜர், அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர். எனத் தன்னிகரில்லா முதலமைச்சர் களின் வரிசையில், இதுவரையில் தமிழகம் கண்டிராத ஆக்ரோஷமான முதலமைச்சர் ஜெயலலிதா புதுமைப்பெண்ணா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியன் வரவுக்குக் காத்திருப்பு

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் ஒருபுறம் நடைபெறுகின்றன. மறுபுறத்தில் சனாதிபதி குமாரதுங்கா-பிரதமர் விக்கிரமசிங்க முறுகல்கள் அதிகரிக்கின்றன. கடந்த பாராளுமன்றத் தேர்தல்களில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றிபெற்றுப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்று அரசினுடைய தலைமையை ஏற்றுக்கொண்டதிலிருந்து, நாட்டினதும் அரசாங்கத்தினதும் தலைமைகளிடையே சுமுகமான உறவு காணப்படவில்லை. அரசியல் யாப்பின் விதிகளின் பிரகாரம், விக்கிரமசிங்க அரசு ஒருவருடத்தைப் பூர்த்திசெய்துகொண்ட பின்னர்க் கலைக்கப்படலாம் என்னும் அச்சம் பரவலாகக் காணப்பட்டது. இருந்தபோதிலும் அரசியல் சூழ்நிலைகள் அத்தகைய அசாதாரணமான நடவடிக்கைகளைத் தடுக்கின்றன. விக்கிரமசிங்க அரசு, விடுதலைப் புலிகளுடன் தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொண்டது. அதனால் புரிந்துணர்வு உடன்படிக்கையை உருவாக்குவதும், போர்நிறுத்தத்தை ஏற்படுத்துவதும் சாத்தியமாகிறது. அதன்பின்னர்ச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியபோது, சர்வதேசரீதியாக ஏற்பட்ட மாற்றங்கள் உள்நாட்டு அரசியலையும் நெறிப்படுத்தியது.

அதனாலேயே இருவேறு கட்சிகளிடம் நாட்டினதும் அரசாங்கத்தினதும் தலைமை காணப்படுகின்றபோதிலும், பாரதூரமான சிக்கல்கள் ஏற்படவில்லை. ஆனாலும் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்துள்ள சமாதான முயற்சிகளில் ஏற்படும் தெளிவற்றபோக்கு, இக்கட்டான நிலைப்பாடுகளை உருவாக்குகின்றது. ஜேவிபியுடன் தேர்தல் உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதில், சனாதிபதி குமாரதுங்கா வினுடைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆர்வம் கொண்டுள்ளது. இனப்பிரச்சினை விடயத்தில் ஜேவிபி கொண்டுள்ள நிலைப்பாடுகளே, இவ்விரண்டு கட்சிகளும் தேர்தல் உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு முக்கியமான தடையாகக் காணப்பட்டிருக்கின்றது. அதிகாரப் பகிர்வு மற்றும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை போன்றவிடயங்களில் மட்டுமல்ல, பொதுசன ஐக்கிய முன்னணியினது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000ஆம் ஆண்டு அரசியல்யாப்புத் திருத்த யோசனைகளையும் ஜேவிபி கடுமையாக எதிர்க்கின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜேவிபியும் பொதுவானதொரு வேலைத் திட்டத்தின் அடிப்படையில் தேர்தல் உடன்பாடு காணலாமெனக் கருதப்படுகின்றது.

இதனிடையே சனாதிபதியினுடைய செயற்பாடுகள், அரசியல் யாப்பு ரீதியாக நெருக்கடிமிக்க சூழ்நிலைகளை உருவாக்கலாம் என்னும் கருத்தும் ஏற்படுகின்றது. அரசியல்யாப்பின் உறுப்புரை 44 இல் சனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சுகளை சனாதிபதி தனது நேரடி அதிகாரத்தின்கீழ் கொண்டுவரலாம் என்னும் எதிர்வு கூறல் பலகால மாகவே காணப்படுகின்றது. தற்போது அத்தகைய நடவடிக்கைகள் ஏற்படுவதற்கான திட்டவட்டமான சமிக்ஞைகள் வெளிவருகின்றன. பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் விஞ்ஞான தொழில்நுட்பத்துறை அமைச்சரின் அதிகார வரையறுக்குட்பட்டிருந்த அபிவிருத்தி லொத்தர் சபை, சனாதிபதியின் நேரடி அதிகாரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

நிற்க, ஐ.நா. அமைதிப்படையில் கட்டளைத் தளபதியாகவிருந்த முன்னாள் இந்திய இராணுவ உயரதிகாரியான ஜெனரல் சதீஸ் நம்பியார், உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக இரண்டாவது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார். ஜெனரல் நம்பியாரின் முதலாவது அறிக்கை ஜனவரி 2005 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ்வறிக்கை, யாழ்குடா கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா திசம்பர் 2004இல் சமர்ப்பித்த அறிக்கையின் சாயலைக் கொண்டிருந்ததாகப் பரவலாகக் கருதப்பட்டது. ஆனாலும் ஜெனரல் நம்பியாரின் இரண்டாவது அறிக்கை, சமாதானச் சூழலைக் கவனத்தில் கொண்டு விக்கிரமசிங்க அரசினுடைய சிந்தனைப் பாங்கிற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டிருப்பதாகக் கூறப் படுகின்றது. உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதும், குறைப்பதும் இரண்டு வெவ்வேறு கட்டங்களில் கவனிக்கப்படவேண்டுமெனக் கூறப் பட்டுள்ளது. முகமாலை, நாகர்கோவில், சாவகச்சேரியின் தென்பகுதி மற்றும் யாழ்கடலோரப் பகுதிகள் ஆகியனவற்றை முதலாவது கட்டத்தில் கவனிக்கவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பலாலி, காங்கேசன் துறை, பருத்தித்துறைப் பகுதிகள் இரண்டாவது கட்டத்தில் கவனிக்கப் படலாம் எனவும் அறிவுறுத்தப்படுகின்றது. ஆனால் உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதற்கோ குறைப்பதற்கோ இராணுவத்தின் கருத்துகளைக் கவனத்தில் கொள்வது அத்தியாவசியமானதெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அடுத்ததாகக் கடல் வலயம் தொடர்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்வதற்கு, இந்தியக் கடற்படையின் முன்னாள் உயரதிகாரியான அட்மிரல் பி.ஜே. ஜேக்கப் அழைக்கப்பட்டுள்ளமையும் கவனிக்கத் தக்கதாகும்.

இன்றைய காலங்களில் சமாதான முயற்சிகள், ஜப்பான் சந்திப்பு, ஏழாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் முக்கிய கவனத்தைப் பெறுகின்றன. ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி, நோர்வே தூதுவர் ஹன்ஸ் பிரஸ்கர், முன்னாள் தூதுவர் ஜோன் வெஸ்பர்க், சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹேம், வெளிவிவகாரத்துறையின் சிற்றமைச்சர் விதார் ஹெல்கிசான் ஆகியோர் அங்குமிங்குமாக உலாவுகின்றனர். உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் இலையுதிர்காலக் கூட்டத் தொடரில், மே 14 ஆம் 15 ஆம் திகதிகளில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் சந்திப்பு நடைபெற்றுள்ளது. எதிர்வரும் ஆனியில் நடைபெறவுள்ள ஜப்பான் சந்திப்புப் பெரிதும் கவனிப்பை ஏற்படுத்துகின்றது. அதனையடுத்துத் திட்டமிடப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறவேண்டும். உயர்பாதுகாப்பு வலயம், மீள் குடியேற்றம் என்பவற்றில் தேக்கம் காணப்படுகின்றது. தென்னிலங்கைத் தலைமைகளிடையே இடைவெளி அதிகரிக்கின்றது. இவ்வாறாக ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய முரண்தன்மையதான தன்மைகள், சமாதானம் ஏற்படுவதற்கு எத்தகைய உந்துதலை வழங்கப்போகின்றன என்பது, சூரியன் வரவுக்காகக் காத்திருக்கும் பனிபடர்ந்த தாவரங்களின் ஏக்கம் போன்றதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னிகரற்ற தலைமை

இரண்டு உலகமகாயுத்தங்களுக்குப் பிந்தைய கடந்த அரை நூற்றாண்டுக் காலப்பகுதியில், பிராந்தியப் போர்கள் நீங்கலாக உலகளாவியதான அசம்பாவிதங்களெதுவும் ஏற்படவில்லை. இருந்த போதிலும் அமெரிக்கா சோவியத்யூனியன் நிழல்யுத்தம் தொடர்ந்து நிலவியது. அதனால் உலகநாடுகளிடையே இருபெரும் அணிகள் உருவாகின. ஆனால் சோவியத்யூனியனில் கோர்பச்செவ்வின் பதவிக் காலம், புதிய அத்தியாயத்தின் ஆரம்பமாகியது. சோவியத் பாரம்பரியங் களிலிருந்து மாறுபட்ட கோர்பச்செவ், பெரஸ்டோய்காவையும் கிளாஸ்னோஸ்டையும் கைகோத்துக் கொள்ளச்செய்தார். அதனால் சோவியத்யூனியனில் கத்தியின்றி ரத்தமின்றிப் புரட்சியொன்று உருவாகியது. அதனுடைய தொடர்ச்சியாக, அமெரிக்க-சோவியத் வல்லரசுக்கோட்பாடு கலைந்தது. இருபெரும் வல்லரசுகளின் முடிவுக்குப் பின்னைய உலகத்தை அதுவரையில் யாருமே கற்பனையில்கூட நினைத்ததில்லை. சோவியத்யூனியனுடைய மறைவு, உலகரங்கில் அமெரிக்காவை ஒப்பாரும் மிக்காருமற்ற சக்தியாக அடையாளப் படுத்தியது.

அதன்பின்னர் கோலேச்சிய அமெரிக்க சனாதிபதிகள், சிலை வடிக்கும் சிற்பியின் தோரணையில், புதிய உலகைப் படைக்கும் சித்தாந்தங்களுடன் கடைவிரித்தார்கள். 1990களில் சின்னஞ்சிறு குவைத்திற்கு ஆபத்பாந்தவனாகப் பாலைவனப் புயலெனப் பெரியவர் புஷ் கிளம்பினார். அடுத்து வந்த கிளிண்டன், கென்னடிகளும் கார்ட்டர் களும் வளையவந்த டெமோக்கிரட் கட்சியின் மரபைப் பேணிக் கொண்டார். அப்பனுக்குத் தப்பாமல் பிள்ளையென, ஆப்கானிஸ்தானில் தொடங்கி ஈராக் என எங்கும் எதிலும் இன்றைய சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் சலசலப்பை ஏற்படுத்துகின்றார்.

இன்றைய சர்வதேச அரங்கில், அமெரிக்கா அதீதமான தன் முனைப்பை வெளிப்படுத்துகின்றது. அதற்குக் கிறித்துவ மேற்கிற்கும் இஸ்லாமியக் கிழக்கிற்கும் இடையேயான முரண்பாடே முக்கியமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமென வியாக்கியானம் செய்யப்படுகின்றது. அவ்வாறன்றித் தனது பொருளாதார இராணுவ நலன்களைப் பேணிவளர்த்துக் கொள்வதிலேயே, அமெரிக்காவினுடைய கவனம் என்றும் இருந்திருக் கின்றமை கவனிக்க வேண்டியதாகும். உலக வரலாற்றை அவதானிக்கும் போது, காலத்திற்குக்காலம் ஏதோ ஒரு பண்டம் பன்னாட்டு வர்த்தகத்தையும், அதன்மூலம் பொருளாதாரச் சமன்பாடுகளையும் நிர்ணயிக்கும் காரணியாக இருந்துள்ளமையைக் காணமுடிகின்றது. ஒரு காலகட்டத்தில், பணத்திலும் பலம்வாய்ந்தது என லெனினால் வர்ணிக்கப்பட்ட தானியம், உச்சாணியில் இருந்தது.

அன்றைய காலத்தில் தானிய உற்பத்தியில் அமெரிக்கா, கனடா, பிரான்சு ஆகியன தன்னிறைவு பெற்றிருந்தன. அத்தகைய செல்வாக்கினை, பசுமைப்புரட்சி தவிடு பொடியாக்கியது. பதினெட்டாம் நூற்றாண்டில் பருத்தி கொண்டிருந்த தன்னிகரல்லாத ஸ்தானத்தைத் தொழில்புரட்சி தகர்த்தது. அதன்பின்னர், உலகப் பொருளாதார-வர்த்தக சமன்பாடுகளை நிர்ணயிக்கும் சக்தியாக பெட்ரோலியம் உருவாகியது. அத்தகைய பெட்ரோலிய வளம் மத்திய கிழக்கில் அபரிமிதமாகக் கிடைக்கின்றமையாலேயே உலகின் கவனம் அங்கு நிலை கொண்டுள்ளது. இருந்தபோதிலும் பெட்ரோலிய வர்த்தகம் அமெரிக்க டொலரிலேயே நடைபெறுகின்றது. அதற்கு வரலாற்றுரீதியாக விருப்பு நாணயமாக அமெரிக்க டாலர்களை உபயோகிப்பது என்பதில் அமெரிக்க சனாதிபதி ரூஸ்வெல்டுக்கும் பெட்ரோலிய உற்பத்தியில் முன்னிலையிலுள்ள சவூதி அரேபியாவின் மன்னருக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கமுமே காரணமாகும்.

பிரிட்டன் வூட்ஸ் தீர்மானத்தின்பிரகாரம், சர்வதேச வர்த்தக அளவீடாக விளங்கிய தங்கத்திற்கு மாற்றாக, அமெரிக்க டாலர் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பெட்ரோலிய வர்த்தகத்தில் விருப்புநாணயமாக இடம் பிடித்துக் கொண்டதன் பின்னர்ப் பன்னாட்டு வர்த்தகத்திலும் அமெரிக்க டாலர் விருப்பு நாணயமாகியது. இத்தகைய நடவடிக்கைகள், அமெரிக்க பொருளாதாரத்தை வளம்படுத்தியதோடு, சர்வதேச வர்த்தகச் சமன்பாட்டில் அமெரிக்காவை முன்னிலைப்படுத்தியது, அதன்மூலமாக அமெரிக்காவின் பொருளாதார வலு வேகமாக வளர்ச்சியடைந்து, அதனுடைய நீட்சியாக இராணுவ நலன்களும் வளர்ச்சியடைந்தன.

ஆட்டைக்கடித்து... மாட்டைக்கடித்து... மனிதனிடம் வந்த கதையாக ஐரோப்பிய யூனியனதும் யூரோவினதும் வளர்ச்சி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவிற்கு விசனத்தை ஏற்படுத்த ஆரம்பித்தது. உலகிலேயே பெட்ரோலிய உற்பத்தியில் இரண்டாவது நிலையிலுள்ள ஈராக், அமெரிக்க டாலர்கட்குப் பதிலாக யூரோவில் பெட்ரோலிய வர்த்தகத்தை மேற்கொள்ள 1999இல் ஆரம்பித்தபோது, அமெரிக்கா பீதி கொண்டது. ஈராக்கைத் தொடர்ந்து, ஈரானும் வெனுசுவேலாவும் யூரோவில் பெட்ரோலிய வர்த்தகத்தை மேற்கொள்வதற்கான ஆர்வத்தை வெளிப் படுத்தின. இத்தகைய சூழ்நிலையிலேயே அமெரிக்கா சுதாகரித்துக் கொண்டது. முதலுக்கு மோசம் ஏற்பட்டுவிடுமோ என அஞ்சியது. பாரிய அழிவுகளை ஏற்படுத்தவல்ல ஆயுதங்களை ஈராக் கொண்டிருப்பதான செய்திகள் வெளியிடப்பட்டன. ஆயுதப் பரிசோதகர்கள் அனுப்பப் பட்டனர். வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டன. இறுதியில் ஈராக் தாக்கப் பட்டது. பெட்ரோலிய வர்த்தகத்தில் அமெரிக்க டாலரின் அந்தஸ்து மட்டுமல்ல, அமெரிக்காவின் தன்னிகரற்ற தலைமையும் பேணப் பட்டுள்ளது.

இவ்வாறாக அமெரிக்காவின் தன்னிகரற்ற தலைமை உறுதியடை கின்றபோதில், ஐரோப்பியயூனியன் தெளிவான சமிக்ஞைகளை வழங்கவில்லை. அண்மையில் கிரேக்கத் தலைநகர் ஏதன்சில் நடைபெற்ற ஐரோப்பிய யூனியன் மகாநாட்டில் உறுப்பு நாடுகளிடையேயான முரண்பாடுகள் மெல்லிழையாக வெளிப்பட்டன. 2004 வைகாசியில் சைபிரஸ், செக்குடியரசு, எஸ்டோனியா, ஹங்கேரி, லட்வியா, லித்துவேனியா, மால்டா, போலந்து, சுலவாக்கியா, சுலொவேனியா ஆகியன ஐரோப்பிய யூனியனில் இணைகின்றன. அதன்பின்னர் 75 மில்லியன் மக்களைக் கொண்ட மிகப்பெரிய ஒரு தேசக்கூட்டமைப்பாக ஐரோப்பிய யூனியன் அமையப்போகின்றது. ஆனாலும் ஐரோப்பிய யூனியனில் நிலவுகின்ற கருத்து வேறுபாடுகள், அமெரிக்காவின் தன்னிகரற்ற தலைமையை மறைமுகமாகவேனும் அங்கீகரிக்கின்றதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சமன்பாடுகள்

கடந்த வாரங்களில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுத்திய பாதிப்புகளை எதிர்கொண்ட விக்கிரமசிங்க அரசு, தற்போது அரசியல் நெருக்கடிகளைப் பலமுனைகளிலிருந்தும் எதிர்கொள்கின்றது. எதிர்வரும் ஆனியில் ஜப்பானில் ஆரம்பமாகின்ற இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் சந்திப்பிலும், அதனைத்தொடர்ந்து திட்டமிடப்பட்டிருந்த அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலிருந்தும் தற்காலிகமாக விலகிக்கொள்வதாக விடுதலைப்புலிகள் அறிவித்துப் பல வாரங்கள் கழிந்துவிட்டன.

வடகிழக்கு அபிவிருத்தி மற்றும் புனர்நிருமாணச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நிருவாகக் கட்டமைப்புக் குறித்து, விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து கருத்து வெளியிடப்பட்டது. அதனையடுத்து வடகிழக்கு அபிவிருத்தி மற்றும் புனர்நிருமாணத்திற்கெனச் சபை யொன்று அமைப்பது குறித்து விக்கிரமசிங்க அரசு பிரஸ்தாபித்தது, உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகள் தொடர்பான உபகுழுவின் மற்றுமொரு வடிவத்தையே அரசினுடைய புதிய யோசனைகளிலும் காணமுடிந்தது. அத்தோடு அரசியல்யாப்பு வரைமுறை நிர்ப்பந்தங்களினால், அத்தகைய ஓர் அமைப்பு சட்ட வலுவற்றதாகவே காணப்படுமெனவும் கருதப்படுகின்றது.

இன்றுள்ள சூழ்நிலைகளில் அரசியல்யாப்பில் திருத்தங்களை ஏற்படுத்தாமல், சட்டவலுவுள்ள நிருவாகக் கட்டமைப்பை நிறுவுவ தென்பது இலகுவானதல்ல. அன்றி இந்திய-இலங்கை உடன்படிக்கையில் கூறப்பட்டதைப் போன்ற இடைக்கால நிருவாகக் கட்டமைப்பை, அவசர கால விதிமுறைகளின்கீழ் சனாதிபதியால் உருவாக்கமுடியும். அவ்வாறான நிருவாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டாலுமே, அத்தகைய அமைப்பு வடகிழக்குப் புனர்நிருமாண நிதிகளைக் கையாளும் வல்லமை கொண்டதாக அமையாது. ஏனெனில் அரசியல்யாப்பின் 13ஆவது திருத்தங்களின் 111ஆவது இணைப்பு, மத்திய அரசு மற்றும் மாகாணங்களின் பொதுக்கடன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டுக்கடன், அரசாங்கநிதி, மத்திய வங்கி மற்றும் கணக்காய்வு என்பனவற்றை மத்திய அரசின் பொறுப்பாகவே வரையறுக்கின்றது.

அத்தோடு அரசியல்யாப்பின் 76ஆவது விதியின் முதலாவது பகுதியானது, இலங்கையின் நிதியை நிருவகிக்கும் பரிபூரண உரிமையையும் சட்டபூர்வமான அதிகாரத்தையும் வேறெந்த அமைப்புக்கும் பாராளுமன்றம் பங்கீடு செய்வதைத் தடைசெய்கின்றது. ஆக இன்றுள்ள அரசியல்சாசன அமைவில் இந்திய-இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம், சனாதிபதியின் அதிகாரங்களைப் பிரயோகித்து நிறுவப்படக்கூடிய அமைப்போ அல்லது மாற்று அமைப்புகளோ உரிய பலனை ஏற்படுத்தமாட்டாது என்பது பரவலாகக் கணிக்கப்படுகின்றது.

இவையொருபுறமிருக்க, சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான இடைவெளி அரசியல்சாசன நெருக்கடியை உருவாக்கலாம் எனக் கருதப்படுகின்றது. அண்மையில் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சரின் அதிகார வரையறைக்குட்பட்டிருந்த அபிவிருத்தி லொத்தர் சபை சனாதிபதியின் நேரடி அதிகாரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சுகள் சனாதிபதியின் நேரடி அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவரப்படலாம் என்னும் எதிர்வுகூறல் காலத்துக்குக் காலம் உலாவுகின்றபோதிலும், அவ்வாறாக ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தெளிவாகத் தென் படுகின்றன. 2001இல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசு அரசிலிருந்து விலகியபோது காலாவதியாகிய அவசரகாலச்சட்டம் குறித்துத் தற்போது பிரஸ்தாபிக்கப்படுகிறது.

இதனிடையே பொதுசன ஐக்கிய முன்னணியும் ஜேவிபியும் தேர்தல் உடன்பாடு ஏற்படுத்துவதில் அயராது ஈடுபடுகின்றன. இனப் பிரச்சினை விடயத்தில் எதிரும் புதிருமான நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தபோதிலும், தேர்தல்களை மட்டுமே கவனத்தில்கொண்டு இவ்விருகட்சிகளும் செயற்படுகின்றமை ஊரறிந்த இரகசியமாகும். இவ்விரண்டு கட்சிகளுடைய கூட்டணி, எத்தகைய அரசியல் வாய்ப்புகளைக் கொண்டுள்ளது எனனும் கேள்வி எழுகின்றது. கடந்த பொதுத் தேர்தல்களில் காலி, கம்பஹா, களுத்துறை, மாத்தளை, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, குருநாகல், பொலநறுவ, அனுராதபுரம் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் இவ்விரண்டு கட்சிகளும் பெற்ற வாக்குகளைக் கூட்டும்போது, ஐக்கிய தேசிய முன்னணியினுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி வாய்ப்பு கேள்விக்குட்படலாம். அத்துடன் மாத்தளை, கேகாலை மாவட்டங்களில் இரண்டு பிரதான கட்சிகளிடையேயான வாக்கு வித்தியாசம் குறைவானதாகவே காணப்பட்டது. 1978 அரசியல்யாப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட விகிதாசாரத் தேர்தல் முறையில், இதுவரையில் நான்கு பொதுத் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. அதிலே மூன்று தேர்தல்களிலே, எந்தவொரு கட்சியுமே அறுதிப்பெரும் பான்மையைப் பெறவில்லை. சிறிய கட்சிகளின் ஆதரவுடனேயே அரசு அமைக்கப்பட்டிருக்கின்றன.

அந்த வகையில் ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரசு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு, மலையக மக்கள் முன்னணி ஆகியன புதிய அரசியல் சக்தியாகியுள்ளன. இத்தகைய தேர்தல் களத்தில் பொதுசன ஐக்கிய முன்னணியும் ஜேவிபியும் இணைந்து செயற்படுவதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளலாம் எனக் கணிக்கின்றன. 1994 பொதுத் தேர்தல்களின் ஒரு ஆசனத்தை மட்டுமே பெற்றிருந்த ஜேவிபி, அதனையடுத்து நடைபெற்ற மாகாண மற்றும் உள்ளாட்சிமன்றத் தேர்தல்களில் மிகப்பெரிய முன்னேற்றங்களைப் பெற்றது. கடந்த பொதுத்தேர்தல்களில் 16 ஆசனங்களைக் கைப்பற்றிக் கொண்டுள்ளது. இதுவரையிலான காலப்பகுதிகளில், குமாரதுங்கா தரப்பு இனப் பிரச்சினை விடயத்தில் மிதவாதப் போக்கைக் கடைப்பிடித்தமைக்கு லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி போன்றவை துணைபுரிந்தன. ஆனால், ஜேவிபியுடன் கூட்டணியமைத்துக் கொள்ளும்போது, பொதுசன ஐக்கிய முன்னணியினுடைய நிலைப்பாடு களில் அதீதமான மாற்றம் ஏற்படும். அத்தோடு அதன்பின்னரான காலகட்டங்களில் அரசியல் செயற்பாடுகளை வரையறுக்கும் முக்கிய சக்தியாக ஜேவிபி உருவாகும் சாத்தியக்கூறுகளும் காணப்படுகின்றன. இலங்கையின் அரசியல் பரப்புகளில் முன்னெப்போதிலும் ஏற்பட்டிராத செயற்பாடுகட்கு வழிசமைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனியிருக்கக் காய் பறிக்கலாமா?

புரிந்துணர்வு உடன்படிக்கை, போர்நிறுத்தம் என்னும் புதிய நம்பிக்கைகளுடன் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்துள்ளன. அவ்வாறான புதிய நம்பிக்கைகள் வளம் பெற்ற வேளைகளில், வடகிழக்கிலுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை விக்கிரமசிங்க அரசு அறிவித்திருந்தது. ஆனால் அதன்பின்னர் நிலைமைகளில் மாறுதல்கள் ஏற்பட்டன. ஏப்பிரல் 21இல் வெளியாகிய விடுதலைப் புலிகளின் அறிவிப்பு, வாஷிங்டன் சந்திப்பு, ஆனி 9ஆம் 10ஆம் திகதிகளில் பரவலாக அவதானிக்கப்பட்ட ஜப்பான் சந்திப்பும் முடிவடைந்து, ஒருவகையான எதிர்மறை சலசலப்புகள் ஏற்படத் தொடங்குகின்றன.

இருந்தபோதிலும், வடகிழக்குப் பிரதேசங்களிலுள்ள 54 உள்ளூராட்சி சபைகட்குமான தேர்தல்கள் ஆனி 25இல் திட்டமிட்டவாறு நடைபெறுமென அரசு அறிவித்துள்ளது. வடகிழக்கில் இரண்டு மாநகர சபைகள், ஏழு நகரசபைகள் உள்ளிட்ட 67 உள்ளூராட்சி அமைப்புகள் உள்ளன. அவை அனைத்திற்குமான தேர்தல்கள் ஒரேசமயத்தில் 1983ஆம் ஆண்டு மே 18இல் கடைசியாக நடைபெற்றது. அச்சந்தர்ப்பத்தில், யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரச்சாரக் கூட்டத்தின்போது துப்பாக்கிப் பிரயோகம் ஏற்பட்டமையும், தேர்தல் தினத்தன்று கந்தர்மடம் வாக்களிப்பு நிலையத்தில் படைவீரர் கொல்லப்பட்டதும், அதே தினத்தன்று அவசரநிலை ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டு அசாம்ப விதங்கள் ஏற்பட்டமையும் உள்ளூராட்சித் தேர்தல் வரலாற்றில் மைற்கல் நிகழ்வுகளாகும். அன்றைய தேர்தல்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றி பெற்றது.

அதன்பின்னர் 1983 ஆடிக் கலவரங்களைத் தொடர்ந்து, ஆறாவது சட்டத்திருத்தத்தின்மீது சத்தியப்பிரமாணம் செய்யாத உள்ளூராட்சி உறுப்பினர்கள் பதவியிழந்தனர். 1987 மே மாதத்தில் அவசரகால சட்டத்தின் பிரகாரம் உள்ளூராட்சி அமைப்புகள், விசேட ஆணையாளரின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. அதன்பின்னர் ஐக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய முன்னணி அரசு, கிழக்கு மாகாணத்திலுள்ள 39 உள்ளூராட்சி சபைகட்கும் வவுனியா நகரசபைக்குமான தேர்தலை நடாத்தியது. அத்தேர்தல்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி பங்குகொள்ளவில்லை. பெரும்பாலான ஆசனங்களை புளொட் மற்றும் ரெலோ அமைப்புகளின் சுயேச்சைக் குழு பெற்றுக் கொண்டது. அவற்றினுடைய பதவிக்காலம் 1998 ஏப்பிரலில் முடிவடைந்தது. அதன்பின்னர் ஓராண்டுக் காலம் நீட்டிக்கப்பட்டது. பின்னர் விசேட அதிகாரியின் நிருவாகத்தின்கீழ் அவை கொண்டு வரப்பட்டன. யாழ் குடா நாட்டிலுள்ள 13 உள்ளூராட்சி சபைகட்கும், பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குமான தேர்தலைப் பொதுசன ஐக்கிய முன்னணி அரசு 1998 சனவரியில் நடத்தியது. 2001 திசம்பரில் பதவியேற்ற ஐக்கிய தேசிய முன்னணி அரசு, புரிந்துணர்வு ஏற்பட்டதைத் தொடர்ந்து உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு விரும்பியது.

இன்றிலிருந்து ஒரு வருடத்திற்கு முன்பாகத் தேர்தல் அறிவிக்கப் பட்டது. நியமனப் பத்திரங்கள் பெறப்பட்டன. அதன்பின்னர் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன. இருந்தபோதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள போரதீவுப்பற்று, ஏறாவூர் நகரம் மற்றும் அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆலையடிவேம்பு ஆகியனவற்றுக்கு உறுப்பினர்கள் போட்டியின்றித் தெரிவாகினர். செப்டெம்பரில் தேர்தல்களை நடத்து வதற்கு அரசு விரும்பியது. ஆனாலும் நடைபெறவில்லை. புதிய நியமனப் பத்திரங்கள் கோரப்படவேண்டுமென்னும் கருத்தை அரசு நிராகரித்தது. முதலில் தாக்கல் செய்யப்பட்ட நியமனப் பத்திரங்களின் அடிப்படையிலேயே தேர்தல்களை நடத்துவதாக அரசு அறிவித்தது. ஆனால் அதன்பின்னர்ப் புதிய நியமனப் பத்திரங்களைக் கோருவதென அரசு தீர்மானித்தது. அதற்கான சட்டமூலத்தை உள்ளூராட்சியலுவல்கள் அமைச்சர் அலுக் அலுவிஹார மே 21இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

2002இல் உருவாகிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறப் போகின்றமை பரவலான அவதானிப்பைப் பெறுகின்றது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் கட்டுப்பாட்டுப் பகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளது. வட கிழக்கிலுள்ள 16 பிரதேச சபைகள் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதியில் உள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு, வாகரை, போரதீவு, பட்டிப்பளை என்பனவும், முல்லைத்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தில் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, பாண்டியன்குளம், துணுக்காய் ஆகியனவும், மன்னார் மாவட்டத்தில் நானாட்டன், முசலி, மாந்தை மேற்குப் பிரதேச சபைகளும், வவுனியா மாவட்டத்தில் செட்டிக்குளம், நெடுங்கேணி ஆகியனவும், கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி, கரைச்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ளன. பாராளுமன்றத் தேர்தல்களின்போது விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசத்தில் கொத்தணி வாக்குச்சாவடிகள் மூலம் வாக்குப்பதிவு நடைப்பெற்றது.

ஆனால் உள்ளூராட்சித் தேர்தல்களை அவ்வாறு நடத்த முடியாது. ஏனெனில் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகட்குமான வாக்குப்பதிவு, அதன் நிருவாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலேயே நடத்தப்பட வேண்டுமென உள்ளூராட்சித் தேர்தல் விதிகள் கூறுகின்றன. ஆக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள 16 பிரதேச சபைகட்கான தேர்தல்கள் எவ்வாறு நடைபெறப்போகின்றன? சட்டம் ஒழுங்கைப் பேணுகின்ற பணி யாருடையது? புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், ஒருவருடைய கட்டுப்பாட்டுப் பகுதியில் மற்றையவர் ஆயுததாரியாக நடமாடமுடியாது என்பது விதியாகும். ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் ஆயுதம் தாங்கிய இரண்டு போலிஸார் கடமையில் ஈடுபடவேண்டுமெனத் தேர்தல் விதி கூறுகின்றது. இத்தகைய அமைவில் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிகளில் தேர்தல் எத்தகைய பாங்கில் நடைபெறப் போகின்றன? தேர்தல் சட்டவிதிகள் எவ்வாறு அமுலாக்கப்படப் போகின்றன? புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் பல உள்ளூராட்சிசபைக் கட்டடங்களிலிருந்த படையினர் வெளியேறியிருக்க வேண்டும். ஆனால் வெளியேறவில்லை. உயர்பாதுகாப்பு வலயங்களிலும் உள்ளூராட்சி சபைகள் அகப்பட்டுள்ளன. இத்தகைய பின்னணியிலே உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்துவது கனியிருக்கக் காய் பறித்தல் போன்றதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுநிலத் தலைவர்கள்

விடுதலைப் புலிகட்கு ஆதரவாகச் செயற்பட்டதான குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பிரயோகித்துப் பழ. நெடுமாறன், மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வைகோ உள்ளிட்ட பல அரசியல் தலைவர்களைத் தமிழக அரசு சிறையிலடைத்து மாதங்கள் பல உருண்டோடிவிட்டன. வைகோ, பழ. நெடுமாறன் போன்றவர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளில் பாரிய முன்னேற்றம் இல்லை என்பதுடன், பழைய வழக்குகள் சிலவும் ஆங்காங்கேயுள்ள மாவட்ட நீதிமன்றங்களில் மீண்டும் எடுக்கப்படுகின்றன. 1995 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் விடுதலைப் புலிகட்கு ஆதரவாகப் பேசியமைக்காகத் தமிழர் தேசிய இயக்கப் பொதுச்செயலாளர் சுப வீரபாண்டியனுக்கு இரண்டாண்டு கடுங்காவல் தண்டனையையும் மூவாயிரம் ரூபா தண்டத்தையும் சைதாப்பேட்டை நீதிமன்றம் விதித்தது. அதனை எதிர்த்து சென்னை 3ஆவது கூடுதல் செசன்ஸ் நீதிமன்றத்தில் மனுசெய்தபோது, சைதாப்பேட்டை நீதிமன்றத் தீர்ப்பைத் தள்ளுபடி செய்ததோடு மனுதாரரை விடுதலை செய்யுமாறும் அந்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இருப்பினும் வேறொரு பயங்கரவாதத் தடுப்புச் சட்டவழக்கில் சுப வீரபாண்டியன் சிறையில் அடைக்கப்பட்டார். மத்தியில் ஆளுகின்ற பாரதீய ஜனதா அரசு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை அறிமுகப் படுத்திய போது, வைகோவினது மறுமலர்ச்சி திமுக அன்றைய கூட்டணியரசில் பங்குகொண்டிருந்ததோடு அச்சட்டத்தையும் ஆதரித்தது. இன்று அதே சட்டத்தின் கீழ், வைகோ. குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளதோடு சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளார். இன்றைய காலங்களில் பாரதீய ஜனதா கூட்டணி அரசிலிருந்து மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமன்றி, கலைஞர் கருணாநிதியின் திமுகவும் விலகும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதானவர்கள், ஒரு வருடத்திற்குள்ளாகப் பிணையில் வெளியே வரலாம் என்பதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக அரசியலில் திராவிட இயக்கங்கள் முன்னிலைச் சக்தியாக உருப்பெற்று மூன்று சகாப்தங்கள் கழிந்துவிட்டபோதிலும், அவற்றினுடைய இன்றைய நடவடிக்கைகள் ஏமாற்றத்தையே அளிக்கின்றன. திராவிடப் பாரம்பரியத்தின் வழித்தோன்றலான அண்ணா திமுக அதன் தலைவியான முதலமைச்ச் ஜெயலலிதாவின் தலைமையில் திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளையே கேள்விக்குட் படுத்துகின்றது.

இன்னுமொருபுறத்தில் தமிழகத்தின் முதுபெரும் தலைவரான கலைஞர் மு. கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம், முன்னெப்போதுமே ஏற்பட்டிராத அளவுகளில் சர்ச்சைக்கு உட்பட்டுள்ளது. தமிழக அரசியலில் உட்கட்சி சனநாயகத்தைப் பெயரளவிலேனும் பேணிப்பாதுகாக்கும் கட்சியெனக் கருதப்படுகின்ற திமுக வாரிசு அரசியலில் சிக்கியுள்ளது. 2001லிருந்து ஆட்சி செய்கின்ற ஜெயலலிதா அரசில், தமிழக மக்கள் இன்று பெரிதும் அதிருப்தியடைந்து காணப்படுகின்றார்கள். அத்தகைய சந்தர்ப்பத்தைச் சாதகமாகக் கையாளவேண்டிய பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம், உட்கட்சிப் பூசல்களால் திணறுகின்றது. ஆடி 2 இல் திமுக பொதுச்சபை கூடியபோது, கலைஞர் கருணாநிதி மீண்டும் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதற்கு மறுதினம் கலைஞருடைய எண்பதாவது அகவை கொண்டாடப்பட்டது.

இருந்தபோதிலும் கட்சியில் மகிழ்ச்சி ஆரவாரம் காணப்பட வில்லை. கலைஞரின் மருகரும், கட்சியின் முன்னிலைத் தலைவருமான மத்திய அமைச்சர் முரசொலி மாறன் தொடர்ந்து பல மாதங்களாக அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வருகின்றார். அதேவேளையில் கலைஞரின் வழித்தோன்றல்கள் மு.க. அழகிரி, மு.க. ஸ்டாலின் ஆகியோரிடையே முரண்பாடுகள் பூதாகரமாக வெளிப்பட்டுள்ளன. கடந்த மே 20ல் கட்சியின் இராமநாதபுரம் கிழக்கு மற்றும் சிவகங்கை மாவட்டச் செயலாளரும் முன்னாள் பெருந்தெருக்கள் துறை அமைச்சரு மான 66 வயது நிரம்பிய த. கிருட்டினன் மதுரையிலே கொலை செய்யப் பட்டார். கிருட்டினன் கொலையில் சம்பந்தப்பட்டதாகக் கைதுசெய்யப் பட்ட மு.க. அழகிரி, திருச்சி மத்திய சிறைச்சாலையில் அடைக்கப் பட்டுள்ளார். அதனை ஜெயலலிதா அரசின் பழிவாங்கல் முயற்சியாகத் திராவிட முன்னேறக் கழகம் சாடியுள்ளபோதிலும், அழகிரி-ஸ்டாலின் மோதலின் ஒருவகையான வெளிப்பாடாக ஏன் கருதமுடியாது என்னும் கேள்வி பரவலாக எழுந்துவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989 தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அழகிரியினுடைய நடவடிக்கைகள் மதுரையை மையப்படுத்திய தென்தமிழகக் குறுநில அரசியலாகவும், ஸ்டாலினுடைய நடவடிக்கைகள் சென்னையை மையமாகக் கொண்ட வடதமிழகக் குறுநில அரசியலாகவும் அமைந்திருக்கின்றது. கட்சியில் எத்தகைய பொறுப்புகளையோ, ஆட்சியிலிருந்தபோது பதவிகளையோ அழகிரி கொண்டிருக்கவில்லை. தேர்தல்களிலும் போட்டியிட்டு வெற்றிபெற்ற வரல்லர் இருந்தபோதிலும் தென்தமிழகக் குறுநிலத்தில் அழகிரி யினுடைய பலம் கட்சித் தலைமைக்கே வெவ்வேறு சமயங்களில் சவாலாகியுள்ளது.

ஆனால் ஸ்டாலினைப் பொறுத்தவரை நிலைமை முற்றிலும் மாறுபட்டது. கட்சியின் கீழ்நிலைத் தொண்டனாக, அவசரகாலச் சட்டத்தின்போது சிறைவாசியாக, கட்சியின் இளைஞரணிச் செயலாளராக, சென்னை ஆயிரம்விளக்குச் சட்டமன்ற உறுப்பினராக, சிங்காரச் சென்னையின் மேயராக எனச் சங்கிலித் தொடரான வளர்ச்சி ஏற்பட்டது. அண்மையில் கட்சியின் பொதுக்குழு கூடியபோது, துணைப் பொதுச் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 1990களில் கலைஞருக்கு அடுத்த தலைவர் குறித்துப் பேசப்பட்டபோது, மாறனும் ஸ்டாலினும் முன்னிலையிலிருந்தனர். முரசொலி மாறன் வயதில் முதிர்ந்தவர். பன்னெடுங்கால அனுபவமுடைய பழுத்த அரசியல்வாதி. மாநிலத்துக்கு வெளியேயும் அறிமுகமான நடுநிலையான தலைவர். தேர்ந்த நிருவாகியென மதிக்கப்படுபவர். இருப்பினும் கீழ்மட்டங்களில் தொடர்புகளை அதிகமாகக் கொண்டிராதவர். அதுவே ஸ்டாலினின் பலமாகவும் காணப்படுகின்றது. அந்தவகையில் இளவரசரின் பட்டாபிஷேகம் குறித்த சலசலப்புகள் அவ்வப்போது எழுவது ஆச்சரியப்படத்தக்கதல்லவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுதிமொழியா? உதிரிமொழியா?

கடந்த பதினைந்து மாதங்களாக நிலவிவரும் சமாதானச் சூழ்நிலைகளினால், அச்சமற்ற வாழ்வு உருவாகியுள்ளதான பிரமை உருவாக்கப்படுகின்றது. ஆனாலும் வடகிழக்குப் பிரதேசங்களில் அச்சமற்ற வாழ்வு மட்டுமல்ல, முன்னேற்றகரமான மாறுதல்கள் எதுவுமே ஏற்படவில்லை. 2002இல் ஆரம்பமாகிய பேச்சுவார்த்தைகளில் ஆறு சுற்றுகள் பூர்த்தியடைந்துள்ளது. ஒஸ்லோவிலும், வாஷிங்டனிலும், இறுதியாக ஜப்பானிலுமாக உதவிவழங்கும் நாடுகளின் சந்திப்புகள் நடைபெற்றுள்ளன. ஜப்பானில் நடைபெற்ற உதவிவழங்கும் நாடுகளின் சந்திப்பில் கலந்துகொள்ளாததோடு, பேச்சுவார்த்தைகளிலிருந்தும் விடுதலைப்புலிகள் விலகிக்கொண்டுள்ளனர். பேச்சுவார்த்தைகளில் காணப்பட்ட இணக்கப்பாடுகளை அமுல்படுத்துவதில் காணப்பட்ட அசாதாரணமான மந்தநிலை பரவலாகக் கண்டனத்திற்கு உட்படுகின்றது. அதுவே சமாதான நடவடிக்கைகளைத் தடைப்படுத்துவதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

வடகிழக்கில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிக்குரிய நிருவாகக் கட்டமைப்பின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. இடைக்கால நிருவாகம் குறித்த கருத்து காலத்திற்குக் காலம் முன்வைக்கப்பட்டே வந்திருக்கின்றது. 1987 இல் உருவாகிய இந்திய-இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் இடைக்கால நிருவாகம் அமைக்கப் படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இடைக்கால நிருவாகத்தின் மூலமாக இனப்பிரச்சினைக்கான தீர்வு ஏற்படுத்தக்கூடிய திட்டமொன்றை அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் முன் மொழிந்திருந்தார். இடைக்கால நிருவாகத்தின் மூலமாக இனப் பிரச்சினையில் தீர்வு ஏற்படுத்தலாமென்பதை 1990களிலேயே ஐக்கிய தேசியக் கட்சி கருதியது. அதுவே ஹெல உறுமயவின் திலக் கருணரட்ண ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகுவதற்கு உந்துதலாகியது. 1999 திசம்பர் 21 இல் இடம்பெற்ற சனாதிபதி தேர்தல்களில் இடைக்கால நிருவாகம் மூலமான தீர்வு குறித்து விக்கிரமசிங்க பிரஸ்தாபித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன ஐக்கிய முன்னணியும் இடைக்கால நிருவாகம் குறித்த அணுகுமுறையை ஏற்றிருந்தது.

இடைக்கால நிருவாகம் குறித்த தனது கருத்தை, அமெரிக்க சஞ்சிகைக்கு வழங்கிய செவ்வியொன்றில் சனாதிபதி குமாரதுங்கா அழுத்தம் திருத்தமாக வெளியிட்டிருந்தார். ஐக்கிய தேசியக் கட்சியும், பொதுசன ஐக்கிய முன்னணியும் இடைக்கால நிருவாகத் திட்டத்தைத் தேர்தல் விஞ்ஞாபனங்களில் முன்வைத்திருக்கின்றன. அதன்மூலமாக ஆதாயங்களைப் பெற்றிருக்கின்றன. இடைக்கால நிருவாகம் மற்றும் சமாதானம் போன்ற விடயங்களை முன்வைத்து 2001 திசம்பர் பொதுத் தேர்தல்களின் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றிபெற்றது. இன்று ஆட்சியையும் நடத்துகின்றது. தென்னிலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளுமே, இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இடைக்கால நிருவாகம் முக்கியமானதென்பதில் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளன. இரண்டு கட்சிகளுமே இன்று ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளன. பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைவி, சர்வ வல்லமை பொருந்திய நிறைவேற்று சனாதிபதியாக உள்ளார். விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்றப் பலத்தைக் கொண்டுள்ளது. இருந்தபோதிலும், இடைக்கால நிருவாகம் குறித்து பிரஸ்தாபிக்கப்படுகிற வேளைகளில், பின்னங்கால் பிடரியைத் தொடரும் வித்தையை இவ்விரண்டு கட்சிகளும் காட்டுகின்றன.

இத்தகைய போக்கு, இன்று நேற்று ஏற்பட்டதல்ல! பாட்டன் முப்பாட்டன் காலத்திலிருந்து தலைமுறைகளைத் தாண்டிவருகின்றது. அன்றொரு காலத்தில், பிரித்தானியாவின் கவர்னர் வில்லியம் மானிங் தலைமையில் அரசியல்யாப்புச் சீர்திருத்தங்கள் ஏற்பட்ட வேளைகளில், இலங்கை மக்கள் அனைவரதும் அபிலாசைகளும் கவனத்தில் கொள்ளப் பட வேண்டுமென அழுத்தம் கொடுப்பதற்கான ஒருங்கிணைந்த அமைப்பொன்றினது தேவை உணரப்பட்டது. சேர் பொன்னம்பலம் அருணாச்சலம் Ceylon Reform League மற்றும் Ceylon Reform Association என்பவற்றை ஒன்றுபடுத்தி Ceylon National Congress ஐ நிறுவினார். மேற்குமாகாணத்தில் தமிழர் ஒருவருக்கு பிரதிநிதித்துவம் வழங்குவதற்கு ஆதரவளிப்பதாக, Ceylon Reform League தலைவர் இ.ஜே. சமரவிக்கிரமவும் Ceylon Reform Association தலைவர் ஜேம்ஸ் பீரிசும், 1918 ஆம் ஆண்டு திசம்பர் 7 இல் சேர் பொன்னம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணாச்சலத்திற்கு எழுத்து மூலமாக உறுதியளித்தனர். ஆனால் இலண்டனில் பேச்சுவார்த்தை தொடங்கியபோது உறுதிமொழி உதிரிமொழியாகியது. 1957 ஆடி 26 இல் பண்டா-செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தாகியபோது, ஐக்கிய தேசியக் கட்சியும் மகா சங்கமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒருபகுதியினரும் அதனை எதிர்த்தனர். 1965 ஆம் ஆண்டு டட்லி-செல்வா உடன்படிக்கை ஏற்பட்டு மாவட்ட சபைகட்கான திருத்த மூலம் அறிமுகப்படுத்தப்படும் வேளையில், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, லங்கா சமசமாஜ கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை எதிர்த்தன. வட்டுக்கோட்டை தீர்மானத்தின் அடிப்படையில், தனிநாட்டிற்கான தெளிவான ஆணை 1977 பொதுத் தேர்தல்களில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக்கு வழங்கப்பட்டது. இருந்த போதிலும் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் மாவட்ட அபிவிருத்தி சபையில் மீண்டுமொரு சறுக்கல் ஏற்பட்டது. உறுதிமொழிகள் உதிரிமொழியாவது, வாழையடிவாழையாக நடைபெறுகின்றது. இன்றைய அரசியல்யாப்பின், இடைக்கால நிருவாகம் சாத்தியமல்ல என்னும் கருத்து முன் வைக்கப்படுகின்றது. இரண்டு பிரதான கட்சிகளும் ஆட்சியைப் பகிர்ந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில் அரசியல்யாப்பில் திருத்தம் ஏற்படுத்தலாமல்லவா? ஆனால், இரண்டு கட்சிகளுமே புகையிரத தண்டவாளங்களாகவேயுள்ளன. தனது கட்சியின் நலனையே சனாதிபதி குமாரதுங்கா முன்னிலைப்படுத்துகின்றார். அரசியல்யாப்பு வரையறை களிற்கும், சனாதிபதியின் ஆளுமைக்குமிடையே ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள விக்கிரமசிங்க முனைகின்றார். அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியுதவிகளைப் பெறவேண்டும். அதற்குச் செம்மையான பொருளாதார நிருவாகமும், நாட்டினுடைய ஸ்திரத்தன்மையும் அவசியமானதாகும். அவை உருவாகுவதான தோற்றத்தையாவது ஏற்படுத்தவேண்டும். அந்த வகையிலே, விக்கிரமசிங்க அரசுக்கு இன்று சமாதானச் சூழல் அவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே நிம்மதி?

1990ஆம் ஆண்டில் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகிய பின்னர் 1,275 சதுரமைல் நிலப்பரப்பைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டம் கவனத்தை ஈர்க்கும் சம்பவங்களின் சாட்சியாகியது. 1983 ஆடிக்கலவரங்கட்குப் பிந்தைய காலப்பகுதியிலிருந்து படுவான்கரை பிரதேசத்தில் தமிழ் இயக்கங்கள் ..சயற்பட்டன. இருந்தபோதிலும் பொதுசன ஐக்கிய முன்னணியின் சமாதானத்திற்கான போர் ஆரம்பமான பின்னரே கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் உருவாகின. 1995 ஏப்பிரல் 19 இல் கட்டுமுறிவு முகாம் தாக்கப்பட்டது. அதனையடுத்து, வாகரை பிரதேசத்தின் கணிசமான பகுதியைப் படையினர் இழந்தனர். தொப்பிகல மையப்பகுதியில் அமைந்திருந்த தரவை முகாம் 1995 மே 27இல் தாக்கப்பட்டதையடுத்துப் படுவான்கரை பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது. அதன்பின்னர்ப் புதுக்குடியிருப்பு, வவுணதீவு, வாகனேரி உள்ளிட்ட விசேட அதிரடிப்படை முகாம்கள் தாக்கப்பட்டன. வாரடிச்சேனை, நாற்பத்தாவில், கூழாவடிஏற்றம், புலி பாய்ந்தகல் உள்ளிட்ட முகாம்கள் படையினரால் வாபஸ் பெறப்பட்டன. இவ்வாறாக 1990க்குப் பிந்தைய காலப்பகுதியில் ஏற்பட்ட போரியல் நடவடிக்கைகளினால், மட்டக்களப்பு மாவட்டத்தின் பெருமளவிலான பிரதேசம் இன்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் இன்று ஒருவகையான தெளிவின்மை காணப்படுகின்றது. ஒருபுறத்தில், தமிழ் முசுலிம்களிடையேயானதும், மறுபுறத்தில் தமிழ், முசுலிம், சிங்கள மக்களிடையேயானதுமான உராய்வுகள் ஏற்படுகின்றன. தமிழ் முசுலிம் மக்களிடையே காணிவிடயங்கள் உச்சகட்டமான உராய்வுகளை உருவாக்குகின்றது. சமச்சீரற்ற தன்மையை நிருவாக அலகுகள் உருவாக்குகின்றன. இனரீதியான அடிப்படையில், முசுலிம் கட்கான தனியான பிரதேசச் செயலகப் பிரிவுகள் கிழக்கு மாகாணத்தில் மட்டுமே உள்ளது. கட்சி வேறுபாடுகளைக் கடந்து, காலத்திற்குக்காலம் ஆட்சிப்பீடத்திலும் அதிகாரப்படிகளிலும் கோலோச்சிய வேளைகளி லெல்லாம் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முசுலிம் காங்கிரசு என்பன முசுலிம்கட்கான தனியான பிரதேசச் செயலகங்களை உருவாக்குவதில் முனைப்புடன் செயற்பட்டன. மண்முனை வடக்குப் பிரதேசத்திலிருந்து புதியதாகக் காத்தான்குடி முசுலிம் பிரிவு, மேற்கில் வாவியையும் கிழக்கில் கடலையும் எல்லைகளாகக் கொண்டு 1985இல் உருவாக்கப்பட்டது. ஏறாவூர்பற்றுப் பிரதேசத்திலிருந்து ஏறாவூர் நகரமும், கோறளைப்பற்றுப் பிரதேசத்தி லிருந்து கோறளை மேற்கும் 1994 இல் உருவாக்கப்பட்டது. கோறளைப் பற்று முசுலிம்பிரிவு, ஓட்டமாவடி முசுலிம் பிரிவு, வாகரை தமிழ்ப் பிரிவு என்பவற்றில் உள்ளடங்கியிருந்த கிராமசேவகர் பிரிவுகளிலிருந்து கோறளைமத்தி முசுலிம் பிரதேசம் 2002 இல் உருவாக்கப்பட்டது.

முசுலிம்கள் காணிப் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர் என்பது யதார்த்தமாகும். சுமார் நான்கு சதுரகிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட காத்தான்குடி பிரதேசத்தில் சுமார் 35,000 மக்களும், சுமார் 3.5 சதுரகிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்ட ஏறாவூர் நகரில் சுமார் 30,000 மக்களும், சுமர் 176 சதுரகிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட கோறளை மேற்குப் பிரதேசத்தில் சுமார் 50,000 மக்களும் உள்ளனர். ஆனாலும் பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டமையால் மட்டும், முசுலிம்களுடைய காணிப்பற்றாக்குறை தீர்க்கப்படலாமெனக் கருத முடியவில்லை. இதனிடையே கல்முனை, சம்மாந்துறை மற்றும் பொத்துவில் தொகுதிகளை உள்ளடக்கியதாக, முசுலிம்கட்கெனத் தனியானதொரு கரையோர மாவட்டம் உருவாக்கப்படல் வேண்டும் என்னும் கோரிக்கை ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரசினால் முன்வைக்கப் பட்டது. ஆக முசுலிம் மக்களுடைய விவகாரங்களில் அரசியல் கட்சி களுடைய நடவடிக்கைகள் திட்டவட்டமான பலாபலன்கள் ஏற்படுத்த வில்லை. மாறாக, அரசியல்வாதிகள் அரியணைப் படிக்கட்டுகளில் ஏறுவதற்கான ஏணிப்படிகளாகியுள்ளன.

இன்று மட்டக்களப்பு எதிர்கொள்ளும் சிக்கல்களுள் முக்கியமானது விமானநிலைய விஸ்தரிப்பாகும். அதனால் மக்களுடைய வாழ்விடங்கள் சுவீகரிக்கப்படுகின்றன. புளியந்தீவிலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் மட்டக்களப்பு விமான நிலையம் அமைந்துள்ளது. அங்கேயே விமானப் படையினது முகாமும் அமைந்துள்ளது. 1985இல் அவசரகாலச்சட்டம் அமுலில் இருந்தபோது விமானநிலையத்தைச் சுற்றியுள்ள சுமார் 500 மீட்டர் தூரக்காணிகள் விமானநிலைய விஸ்தரிப்புக்காக சுவீகரிக்கப்பட்டன. இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறையிலுள்ளபோது, விமானநிலைய விஸ்தரிப்பு என்ற போர்வையில் படைமுகாம் விருத்தி செய்யப் படுகின்றது மட்டுமன்றிப் படையினரின் தேவை கருதி தொடர்ந்தும் விஸ்தரிக்கப்படுகிறது. இதேநிலை தொடருமாயின் மற்றுமொரு பலாலி உருவாகிவிடக்கூடிய அபாயத்தைக் காணமுடிகின்றது. மட்டக்களப்பு, அம்பாறை பிரதேசங்களில் போலிஸ், இராணுவம் மற்றும் விசேட அதிரடிப் படையினர் பணியிலுள்ளனர். இருந்தபோதிலும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் அமைதி பேணப்படுவதாகக் கருத முடியவில்லை. ஆறு வருடங்களாகத் தடைப்பட்டிருந்த கொழும்பு- மட்டக்களப்பு புகையிரதசேவை, போர்நிறுத்த உடன்படிக்கையின் சரத்துக்களில் கூறப்பட்டதன் பிரகாரம் கடந்த ஏப்பிரலில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. காணிப் பிரச்சினை, கரையோர மாவட்டம், விமான நிலைய விஸ்தரிப்பு, ஸ்திரமற்ற தன்மை என ஏற்ற இறக்கங்களின் கலவையாக உள்ளபூமியில் மீன்கள் பாடுமா? மக்கள் எவ்வாறு நிம்மதியாக வாழ்வது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம் பார்த்த பூமியின் அவலம்

புரிந்துணர்வு உடன்படிக்கையேற்பட்டுப் பதினைந்து திங்கள் கழிந்துள்ளது. தாய்லாந்தில் ஆரம்பமாகி ஐரோப்பா வரை களம் கொண்ட பேச்சுவார்த்தைகள் தெளிவற்ற காலகட்டத்தினுள் லாவகமாகப் பிரவேசித்துள்ளது. சுமார் 880 சதுரகிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்ட யாழ்குடாவில், இருபது விழுக்காடான நிலப்பரப்பு உயர் பாதுகாப்பு வலயங்களாக உள்ளன. அத்தகைய உயர்பாதுகாப்பு வலயங்களே, இன்று சிக்கல்களின் ஊற்றாகி, மீள்குடியமர்வைத் தாமதப்படுத்தி, இயல்பு வாழ்க்கை அமைவதைத் தடைப்படுத்துகின்றது. 2002ஆம் ஆண்டிறுதியில் வலயம் தொடர்பான அறிக்கை பரவலான அதிர்வுகளை உருவாக்கியது. புரிந்துணர்வு உடன்படிக்கை அதுகாறும் சந்திக்காத சிக்கல்களையும் ஏற்படுத்தியது. உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான இறுக்கத்தைத் தளர்த்துவதற்காக விக்கிரமசிங்க அரசு, இந்திய இராணுவத்தின் முன்னாள் உயரதிகாரியான ஜெனரல் சதீஸ் நம்பியாரை இறக்குமதியாக்கியது. ஆனாலும் ஜெனரல் சதீஸ் நம்பியாருடைய அறிக்கை அரசு எதிர்பார்த்த திசையில் அமைய வில்லை. அதனை உறுதி செய்வதாகவே அரசினுடைய நடவடிக்கை களும் அமைந்தன.

அதன் பின்னர் ஜெனரல் சதீஸ் நம்பியார் உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான இரண்டாவது அறிக்கையையும் சமர்ப்பித்தார். அதன் பின்னர்ப் பலவாரங்கள் உருண்டோடிவிட்ட நிலையிலும் திட்டவட்ட மான செயற்பாடுகள் எதுவும் ஏற்படவில்லை. உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான விடயங்களில் தெளிவற்ற தன்மை தொடர்கின்றது. குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயங்கட்கு வெளியே 156 முகாம்கள் அமைந்துள்ளதாகவும், அவற்றில் எழுபது வரையான முகாம்களை அகற்றுவதற்குத் தீர்மானமாகியிருப்பதாகவும், தனியார் மற்றும் அரசுடைமையான பொதுக்கட்டடங்களிலிருந்தும் படையினர் விலக்கிக் கொள்ளப்படப் போவதாகவும், பாதுகாப்பு அமைச்சகத்தை மேற்கோள் காட்டிச் செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால் அதற்கு முரணானதாகவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைமுகாம்களை அகற்றுவதற்குப் பதிலாகப் புதிய முகாம்கள் நிறுவப்படுவதற்கான முயற்சிகளையே காணமுடிகின்றது. அதுமட்டுமன்றிப் புதிய முகாம்கள் அமைக்கும் நடவடிக்கைகள் துரிதமடைகின்ன. யாழ் நகரத்திலுள்ள 512ஆவது பிரிகேட் தளத்தையும், 51ஆவது டிவிசன் தலைமையகத்தையும் யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதிக்கு மாற்றுவதற்கான முனைப்புக் காட்டப்படுகின்றது. துரைய்யா விளையாட்டரங்கு, யாழ் மத்திய கல்லூரி, பொது நூலகம் உள்ளிட்ட சனசஞ்சாரமிக்க பகுதியில் படைமுகாம் அமைக்கப்படுவது, பொது மக்களுடைய இயல்பு வாழ்க்கையைப் பாதிப்பதாகவே அமையும். அத்தோடு மல்லாகத்திலுள்ள பழைய நீதிமன்றவளவிலும், புத்தூர் நவக்கிரி பகுதியிலும் வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூர் வளாகத்திலும் படைமுகாம் அமைக்கப்படுவதற்கான முனைப்பு காட்டப்படுகின்றது. புதிய படைமுகாம்கள் அமைக்கப்படுவதற்கு எதிராகப் பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்களையும், மறியல் போராட்டங்களையும் மேற்கொண்டுள்ளனர்.

புதிய முகாம்கள் அமைக்கப்படுவதோடு புதிய சோதனைச் சாவடிகள், திடீர்ச் சுற்றி வளைப்பு, தேடுதல்கள் என்பனவும் வெவ்வேறு அளவுகளில் மீண்டும் அறிமுகப்படுத்தப்படுகின்றது. யாழ்குடாவில் குற்றவியல் சட்டத்தைப் படையினர் பிரயோகிக்கும் சூழ்நிலைகளும் காணப்படுகின்றன. புரிந்துணர்வு உடன்படிக்கை வாயிலாகத் தளர்த்தப் பட்டிருந்த பாதுகாப்புக் கெடுபிடிகளை மீண்டும் அமுல்படுத்து வதற்குரிய ஒருமாற்று வழியாகவே, மேற்படி சட்டத்தைப் பிரயோகிக்கும் பாங்கைக் கருதவேண்டியுள்ளது. அத்தோடு குற்றவியல் சட்டத்தின்கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைகள், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகார வரையறைக்கு உட்படாது என்பதாக அமைச்சர் பீரிஸ் வெளியிட்டுள்ள கருத்தும் கவனத்தைப் பெறுகின்றது.

இங்கே அடிப்படையாகக் கவனிக்கப்படவேண்டிய விடயம், குற்றவியல் சட்டத்தின்கீழ் செயல்வடிவம் பெறுகின்ற புதிய சோதனைச் சாவடிகள், திடீர்ச் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் என்பன போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுடன் சம்பந்தப்படாதவையெனக் கூறப் படுவதாகும். குற்றவியல் சட்டமென்னும் கோதாவில், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினுடைய செயற்படு வல்லமையை மட்டுப் படுத்தும் முயற்சியாகவும் இதனைக் கருதலாம். ஆக குடாநாட்டில் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குற்றவியல் சட்டத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழானதாக வரையறுக்கப்படுவதாயின், அடிப்படையான மாறுதல் ஒன்று ஏற்படுத்தப்படுவதாகவே கொள்ளவேண்டும். ஏனெனில் குற்றவியல் சட்டத்தின்கீழ் போலிசாரே நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால் இராணுவத்தினரோ அல்லது விசேட அதிரடிப் படையினரோ அத்தகைய சட்டவரையறையில் செயலாற்றுவதற்கான பூர்வாங்கமான அதிகாரம் அவர்கட்கு வழங்கப்பட்டுள்ளதா என்னும் கேள்வியும் எழுகின்றது.

அரசு சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் வேளையில் பாதுகாப்புப் படையினரின் கூர்மையான பார்வையில் நெடுந்தீவு சிக்கியுள்ளது. இன்று நேற்றல்ல போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலப்பகுதிகளூடாகவும் கேந்திர முக்கியத்துவமுடைய பிரதேசமாகவே நெடுந்தீவு காணப்பட்டிருக்கின்றது. இரண்டாம்கட்ட ஈழப்போர் 1990இல் ஆரம்பமாகிய பின்னரே, தீவுப்பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு அரசப் படைகள் முனைந்து செயற்பட்டன. நெடுந்தீவு, நயினாதீவு என்பவற்றோடு புங்குடுதீவு, ஊர் காவல்துறை, மண்டைத்தீவு ஆகியனவும் படையினரின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டன. புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டதைத் தொடர்ந்து சிறிதுகால இடைவெளிக்குப் பின்னர், நெடுந்தீவில் படையினருடைய கவனம் மீண்டும் திரும்பியிருக்கின்றது.

இவ்வாறாக உயர்பாதுகாப்பு வலயம், மீள்குடியமர்வு, புதிய படைமுகாம்கள், புதிய சோதனைச் சாவடிகள் திடீர்ச் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் எனத் தொடரான நடவடிக்கைகள் வானம்பார்த்த பூமியின் இயல்பு வாழ்க்கையைத் தொடர்ந்து அச்சுறுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானத்தை வில்லாக வளைக்கலாமா?

ஐக்கிய நாடுகளின் திட்டவட்டமான தீர்மானமின்றி, ஈராக் தாக்குதல்கள் தொடுக்கப்படக்கூடாது என்பதில் பிரித்தானியப் பொதுசன அபிப்பிராயம் தெளிவு கொண்டிருந்தது. ஆளும் லேபர்கட்சியிலேகூட அத்தகைய நிலைப்பாடு காணப்பட்டது. இருந்தபோதிலும் பிளேயர் அரசு, தாக்குதல் நடவடிக்கைகளில் அமெரிக்காவுடன் தோளோடு தோள் சேர்ந்து செயற்பட்டது. ஈராக் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதனை நியாயப்படுத்தும் நடவடிக்கைகள் வேகமடைந்தன. பாரிய அழிவுகளை ஏற்படுத்தவல்ல ஆயுதங்களை, 48 மணிநேர அவகாசத்தில் இயக்கும் வல்லமையை ஈராக் கொண்டிருந்ததாக பிரதமர் பிளேயர் பாராளுமன்றத்தில் முழங்கினார். அதனை உறுதிப்படுத்துவதென உளவறிக்கைகள் வெளியிடப்பட்டன. ஐக்கிய நாடுகள் மன்றத்தில் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் ஆற்றிய விசேட உரையின்போது அதனைத் தெளிவுபடுத்தினார். இருந்தபோதிலும் ஈராக் தாக்குதலை உடனடியாக ஆரம்பிப்பதற்கான ஆணையை ஐக்கிய நாடுகள் வழங்கவில்லை. அந்நிலையில் பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலியாவின் அனுசரணையுடன், ஈராக் தாக்குதல்களைக் கடந்த மார்ச்சு 20 இல் அமெரிக்கா ஆரம்பித்தது.

ஈராக் விடயத்தில் பிளேயர் அரசினுடைய நிலைப்பாட்டை எதிர்த்துப் பாராளுமன்றத்தின் அரசக் குழுநிலைத் தலைவரும் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சருமான ரோபின் குக், உள்துறை அமைச்சகத்தின் இரண்டாம் நிலை அமைச்சரான ஜோன் டென்ஹம், சுகாதாரத் துறைச் சிற்றமைச்சரான ஹண்ட் ஆகியோர் இராஜினாமா செய்தனர். பன்னாட்டு அபிவிருத்தி மற்றும் உதவி வழங்கல் துறை அமைச்சரான கிளேயர் ஷோட் அரசின் நிலைப்பாட்டை வெளிப்படையாகச் சாடினார். ஆனாலும் ஈராக் தாக்குதலில் பிரித்தானியப் படைகள் பங்கு கொள்வதைப் பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டது.

இன்று ஈராக் தாக்குதல்கள் முடிவடைந்துள்ளன. ஆனாலும், எந்தவொரு விடயம் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்படுவதற்குக் காரணமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டப்பட்டதோ, அதுவே பிரித்தானிய-அமெரிக்க அரியணைகளை இன்று அல்லல்படுத்துகின்றது. தாக்குதல்கள் முடிவடைந்து மாதங்கள் பல உருண்டோடிவிட்ட நிலையிலும், பாரிய அழிவுகளை ஏற்படுத்தவல்ல ஆயுதங்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. அதுமட்டுமன்றி அவை கண்டுபிடிக்கப்படாமலேயே போகலாம் என அமெரிக்கப் பாதுகாப்பு மந்திரி டொனால்ட் ரம்ஸ்பீல்ட் கூறியுள்ளமையும் கவனிக்கத்தக்கதாகும். ஈராக் தாக்குதல்களை ஆரம்பிப்பதற்கான ஆதாரங்களைக் கொண்டிருந்த அமெரிக்காவினதும் பிரித்தானியாவினதும் உளவறிக்கைகள் குறித்த சந்தேகங்களும் இன்று எழுகின்றன. ஆப்பிரிக்க நாடொன்றிலிருந்து அணுவாயுத அபிவிருத்திக்காக யூரேனியம் கொள்வனவு செய்வதற்கு ஈராக் முயன்றதாக, பிரித்தானிய உளவுத்துறை வெளியிட்ட தகவல் இன்று மீளாய்வுக்கு உட்பட்டுள்ளது. அத்தோடு பாரிய அழிவுகளை ஏற்படுத்தவல்ல ஆயுதங்களை, 48 மணிநேர அவகாசத்தில் இயக்கும் வல்லமையை ஈராக் கொண்டிருப்பதாக பிளேயர் முழங்கியமை கேள்விக்குட்பட்டுள்ளது.

ஈராக் தாக்குதல்களை முன்னெடுப்பதற்கு பிளேயர் அரசு பயன்படுத்திய உளவறிக்கைகள் குறித்து, வெளி விவகாரப் பாதுகாப்பு அமைச்சகங்கள் மீதான பாராளுமன்ற உபகுழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளன. உளவுத் தகவல்களின் அடிப்படையில் பிளேயர் அரசு எடுத்த தீர்மானங்கள் குறித்து அய்யங்கள் எழுப்பப்படுகின்றன. அஃது அரசினுடைய நம்பகத் தன்மையைப் பாதிப்பதாகவே அமைகின்றது. இதனிடையே குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவு செய்யத்தக்க வகையில், பிளேயர் அரசு உளவுத் தகவல்களைத் திரிபுபடுத்தி உபயோகித்ததாக பிபிசி நிறுவனம் செய்தி வெளியிட்டது. அச்செய்திக்கு அரசினுடைய உயரதிகாரி ஒருவரே ஆதாரமென்றும் பிபிசி கூறியது. ஆனால் அதிகாரியினுடைய அடையாளத்தை வெளியிட மறுத்தது. பிபிசிக்கு அவ்வாறு தகவல் வழங்கியவர், 1991 முதல் 1998 வரையான காலப்பகுதியில் ஈராக்கில் ஆயுதப்பரிசோதகராகக் கடமையாற்றிய கலாநிதி டேவிட் கெலி என்பதாகச் செய்தி கசிந்தது. அதனை உறுதிசெய்ய பிபிசி மறுத்தது. அதேகாலப்பகுதியில் வெளி விவகார அமைச்சகம் மீதான பாராளுமன்ற உபகுழு விசாரணையில் கலாநிதி டேவிட் கெலி சாட்சியமளித்தார். இவ்வாறாக ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய முக்கியமான செயற்பாடுகள் குறுகிய காலப்பகுதியில் முன்னரங்கில் நர்த்தனமாடின, உளவுத்துறை அறிக்கைகள், அதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளேயர் அரசு உபயோகித்த பாங்கு, பிபிசியின் சாடல் என்ற வரிசையில் கலாநிதி டேவிட் கெலி தற்கொலை செய்துகொண்டுள்ளமை கவனத்தை ஈர்க்கும் சம்பவமாகியது.

இவ்வாறாக, ஈராக் விவகாரம், பிரித்தானிய அரசியல் பரப்புகளில் பாரிய அதிர்வுகளை ஏற்படுத்தி வருவதோடு, ஆறு வருடங்களின் முன்னர் நம்பிக்கை நட்சத்திரமாக உதயமாகிய பிரதமர் பிளேயருடைய நம்பகத்தன்மையையும் அசைக்கின்றது. இருப்பினும் அட்லாண்டிக்கிற்கு மறுபக்கத்திலிருந்து, பிளேயருக்குக் கிடைக்கின்ற ஆதரவிற்குப் பஞ்சமில்லை. சேர்ச்சில், அட்லே, தட்சர் என்ற வரிசையில் அமெரிக்கப் பேராயத்தின் கூட்டமர்வில் உரை நிகழ்த்தும் நான்காவது பிரித்தானிய பிரதமர் என்னும் கௌரவத்தை பிளேயர் அண்மையில் பெற்றுள்ளார். பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் அஸ்தமனத்திற்குப் பின்னர், அமெரிக்கா சார்ந்த கொள்கைகளை வகுப்பதில் பிரித்தானியா ஆர்வமுடன் காணப் படுகின்றது. அமெரிக்காவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையிலான பாலமாகவும் செயற்படவிரும்புகின்றது. ஆனாலும் இன்றைய காலகட்டங்களில் பிளேயர், தனது கட்சியினரிடமிருந்து மட்டுமன்றிப் பொதுமக்களிடமிருந்தும் அந்நியமடைந்து வருகின்றமையான தோற்றம் ஏற்படுகின்றது. அன்று பொதுசன அபிப்பிராயம், ஆளும் லேபர் கட்சி, அதிகாரவர்க்கம் என எங்கெங்கும் மின்னிய முகச்சுளிப்பை மீறி, ஈராக் தாக்குதல்கள் குறித்த அபிப்பிராயத்தைக் கட்டியெழுப்ப பிளேயர் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டார். இன்று வெற்றிவாகை சூடிக்கொண்டுவிட்ட நிலையில், தாக்குதலுக்கான நியாயத்தை மட்டுமல்லாமல் தன்னுடைய நம்பகத் தன்மையை நிலைநிறுத்தவும் வானத்தை வில்லாக வளைப்பதற்கு முயன்று வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலிலே கண்ணீர்த் துளி

ஆழ்கடலில் அமைந்திருக்கும் கச்சத்தீவு கவனத்தை ஈர்க்கும் ஒரு சக்தியாகக் காலங்காலமாகவே காணப்படுகின்றது. அரசியலில் அதிர்வுகளை ஏற்படுத்துகின்றது. பாக்கு நீரிணைக்கு இருமருங்கேயும் வாழும் தமிழ் மீனவர்களின் இருப்பை அச்சுறுத்துவதாகவும் அமைந்து விடுகின்றது. இராமேஸ்வரத்தின் வடகிழக்காக சுமார் 13 கிலோ மீட்டர் தொலைவிலுமாக, நெடுந்தீவின் தென்மேற்காக சுமார் 16 கிலோ மீட்டர் தொலைவிலுமாகக் கச்சத்தீவு அமைந்துள்ளது. நெடுந்தீவு, பாலைத்தீவு, காரைத் தீவு, நயினாதீவு, புங்குடு தீவு, கக்கடாதீவு என்பவற்றுடன் கச்சத்தீவு உள்ளடக்கப்பட்டு சப்த தீவுகள் என அழைக்கப்படுகின்றது. கச்சத்தீவு சுமார் 1.5 கிலோ மீட்டர் நீளமும், 350 மீட்டர் அகலமும் கொண்டதாகும். சுமார் 285 ஏக்கர் நிலப்பரப்பை கொண்டுள்ள தீவின் கரையோரங்களில் உயரம் குறைந்த பாறைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. காலத்திற்குக் காலம் வெவ்வேறு தரப்பினரின் ஆட்சிக்கு உட்பட்ட கச்சத்தீவைக் கடைசியாக இராமநாதபுரம் இராசாவான சேதுபதி மன்னர் ஆட்சிபுரிந்தார். சுதந்திர இந்தியாவில் ஜமீன் ஒழிப்புச்சட்டம் 1949 இல் அறிமுகமாகியபோது, கச்சத்தீவு இந்தியக் குடியரசில் இணைக்கப்பட்டு, இராமேஸ்வரம் ஜில்லாவின் ஒரு பகுதியாக வரையறுக்கப்பட்டது.

கச்சத்தீவைச் சுற்றியுள்ள கடற்பரப்புகளில் ஜாதிமுத்துகள், சங்குகள் என்பனவற்றோடு மீன்வளமும் அதிகமாகக் காணப்படுகின்றது. அங்குப் புனித அந்தோணியார் ஆலயமும் அமைந்துள்ளது. 1939 இல் அமைக்கப்பட்ட வழிபாட்டிற்கான இடம், 1951இல் நெடுந்தீவில் வாழ்ந்த அந்தோணிப்பிள்ளை என்பவரால் உரியமுறையில் ஸ்தாபிக்கப் பட்டது என்பது வாய்வழியாகச் சொல்லப்படுகின்ற பூர்வீக வரலாறாகும். ஆலயத்தில் புனித அந்தோணியார், புனித செபஸ்தியர் சுரூபமும், வெளிப்புறத்தில் புனிதச் சிலுவையும் கடற்பயணக் காவல் அன்னையின் உருவமும் காணப்படுகின்றது. தீவின் நான்கு முனைகளிலும், புனித அந்தோணியாரின் சொரூபத்துடனான தூண்கள் உள்ளன. வருடந் தோறும் பங்குனி மாதம் முதலாவது வாரத்தில் மூன்று தினங்கட்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித அந்தோணியார் திருவிழா கோலாகலமாக நடைபெறும். திருவிழாவில் கலந்து கொள்வதற்கு இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்து பக்தர்கள் பெருந்திரளாகச் செல்வார்கள்.

சமுத்திரத்திற்கு இருமருங்கேயும் வாழும் தமிழ் மீனவர்களின் பாவனைக்கு உட்பட்ட பிரதேசமாகவே கச்சத்தீவு காலங்காலமாக விளங்கி வந்திருக்கின்றது. அங்குத் தமிழ் மீனவர்கள் அடையாள சிக்கலில் அகப்பட்டுக் கொள்ளாமல் வாழ்ந்து வளமடைந்தனர். இளைப்பாறுவதற்கும், வலைகளை உலர்த்துவதற்கும் எனத் தமது தொழில் தேவைகளைக் கச்சத்தீவில் பூர்த்தி செய்து கொண்டதுடன், அப்பிரதேசங்களில் கிடைத்த அறுவடையைச் சச்சரவுகளுடனும் பகிர்ந்துகொண்டனர்.

உப்புக்கரிக்கும் கடல் பிரித்தாலும், கடலுக்கு இருமருங்கேயும் வாழ்ந்த தமிழர்கள் உறவாடியது கச்சத்தீவில் மட்டுமல்ல! போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் யாழ்ப்பாணத்தை ஆண்ட வேளைகளில், தமிழையும் சமயத்தையும் பேணிப் பாதுகாப்பதற்காக நல்லைநகர் ஆறுமுக நாவலர் கடல்தாண்டி சிதம்பரத்திற்குச் சென்றார். தமிழையும் சமயத்தையும் வளர்ப்பதற்காக மீன்பாடும் தேன் நாட்டிலிருந்து யாழ்நூல் வித்தகர் கடல்தாண்டி தமிழகம் சென்றார். தமிழ்நாட்டு கல்வியியலாளர்கள் யாழ்ப்பாணத்துக் கல்விச்சாலைகளில் கல்வி வேள்விக்காகக் கடல்கடந்து வந்தார்கள். சமயக் கிரியைகளை மேற்கொள்ளும் வேதவிற்பன்னர்கள் வேதாரண்யத்திலிருந்து வந்தார்கள். யாழ்ப்பாணத்திற்கும், தமிழ்நாட்டின் கிழக்கு கரையோரத்திலுள்ள வேதாரண்யம், தனுஷ்கோடி, தூத்துக்குடி போன்றவற்றுக்குமிடையே இடைவிடாத தொடர்புகள் நிலவின.

ஆனால், அரசுகள் எல்லைக்கோடுகளை வகுத்துக்கொண்டபோது பிரிவுகள் ஏற்பட்டன. அதன்பின்னர்ப் பாக்குநீரிணையில் சுமார் 400 கிலோ மீட்டர் நீளமான கடல் எல்லையைக் கொண்டுள்ள இருநாடுகளிடையே கடற்பரப்புகளை மையப்படுத்திச் சர்ச்சைகள் உருவாகின. அதனால் தில்லியிலும் கொழும்பிலும் அன்றி, அப்பிரதேசத்தில் வாழும் தமிழர்களே அல்லல்பட்டனர். கச்சத்தீவு விடயத்தில் சில விட்டுக்கொடுப்புகளை ஏற்படுத்திப் பண்டாரநாயக்கா அரசினுடைய ஆதரவை இந்திய அரசு பெற்றுக்கொண்டது. அயலுறவு மேம்பாடு என்னும் வெளித்தோரணையுடன், பல நூறு மைல் தொலைவில் தில்லியிலும் கொழும்பிலும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாரம் அதுகாறும் இந்திய இறைமைக்கு உட்பட்டிருந்த கச்சத்தீவு, 1974ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் இலங்கையின் இறைமைக்கு உட்பட்ட பிரதேசமாகியது. இரண்டு அரசுகளுமே அப்பிரதேச மக்களின் அபிப்பிராயங்களைக் கவனத்தில் கொள்ளவில்லை. இலங்கைக்குக் கச்சத்தீவு கையளிக்கப்பட்டமை, இந்திய-இலங்கை அரசுகட்கு உடனடி நிவாரணங்களை வழங்கும் அட்சய பாத்திரமாகியது. இந்திராகாந்தியினுடையதும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவினதும் அரசுகளிடையே நல்லெண்ணத்தை வளம்படுத்தியது. தென்னிலங்கையில் காணப்பட்ட இந்திய எதிர்ப்பில் சுற்றுத்தளர்வை ஏற்படுத்தியது. 1971இல் ஏற்பட்ட ஜேவிபி எழுச்சியினால் தளர்வடைந்திருந்த இலங்கை அரசிற்கு உத்வேகத்தை வழங்கியது. அதேயாண்டு வைகாசித் திங்களில், அணுவாயுதப் பரிசோதனைகளினால் சர்வதேச எதிர்ப்புகளை இந்தியா சந்தித்தபோது இலங்கையினது ஆதரவுக் குரல் இதமளித்தது. அன்றைய காலப்பகுதியில் ஐக்கிய நாடுகளின் சுழற்சித் தலைமையை இலங்கை கொண்டிருந்தது. அங்கே இந்திய எதிர்ப்புக் குரல்கள் ஓங்கி ஒலிக்காமல் கவனித்து, உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே-இடுக்கண் களைவதாம் நட்பு என்பதை இலங்கை பறைசாற்றியது. கச்சத்தீவு விவகாரத்தைத் தொடர்ந்து 1976ஆம் ஆண்டில் இருநாடுகளிடையான கடல் எல்லைகள் நிருணயம் செய்யப்பட்டன. அதன்பின்னர் இன்றுவரை கடலுக்கு இருமருங்கிலுமுள்ள தமிழ் மீனவர்கள் எதிர்கொள்ளும் அவலங்கள் வார்த்தைகளில் அகப்படாதவையாகும். தமிழ் மீனவர்களினது அவலங்கள் ஓய்வதற்காக ஆழிசூழ் கச்சத்தீவு அன்னையவள் கண்ணீருடன் காத்திருக்கின்றாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூரதேசத்து வெண்புறாக்கள்

இன்றைய காலங்களில் பொருளாதார மீளநிர்மாணிப்பம் குறித்த கருத்தாடல்கள் அரசமட்டத்தில் பரவலாகக் காணப்படுகின்றது. ஆனாலும், கடந்த சகாப்தங்களில் ஏற்பட்ட பாரிய அழிவுகளிலிருந்து மீண்டுவருவதென்பது இலகுவானதல்ல! சர்வதேச நிதிநிறுவனங்களும் அக்கருத்தையே வெளிப்படுத்துகின்றன. அண்மைக் காலங்களில் வெளியாகின்ற பொருளாதாரம், நிதி நிலைகுறித்த ஆய்வுகள் பொருளாதார வீழ்ச்சியையே கோடிட்டுக் காட்டுகின்றன. அன்றொரு காலத்தில் தென்கிழக்காசியாவில் வியத்தகு வளர்ச்சியைப் பேணிப் பொருளாதார சுபீட்சத்திற்குப் பாதை தீட்டியபோதிலும், இன்று பல ஆண்டுகள் பொருளாதார ரீதியாகப் பின்தள்ளப்பட்ட நிலையையே இலங்கையில் காணமுடிகின்றது.

1980களுடன் ஒப்பிடுகையில், புதிய நூற்றாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி பாரிய வீழ்ச்சி கண்டிருக்கின்றது. தனிநபர் வருமானம் சுமார் ஏழு விழுக்காடு வீழ்ச்சியடைந்திருக்கின்றது. வடகிழக்குத் தமிழர் தாயகப் பரப்புகளிலுள்ள நிலைப்பாடுகள் கவலை யளிப்பனவாகவே காணப்படுகின்றன. நாட்டின் பிறபகுதிகளில் அண்ணளவாக ஆறு விழுக்காடு வளர்ச்சி பெற்ற பொருளாதாரம், வடகிழக்கில் அதேயளவுகளால் வீழ்ச்சியடைந்துள்ளது. 1982இல் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 1.5 விழுக்காடாக இருந்த பாதுகாப்புச் செலவீனம், 2000ஆம் ஆண்டில் சுமார் ஐந்து விழுக்காடு அதிகரித்துள்ளது. அடிப்படைக் கல்வி மற்றும் சுகாதாரச் சேவைகள் அனைவருக்கும் கிடைப்பதற்கான வழிமுறைகள் காணப்படுகின்றன.

ஆனாலும் சேவைகள் வழங்கப்படுவதில் ஏற்படும் தாமதங்களும், சேவையினுடையதரங்களில் ஏற்படுத்தப்படுகின்ற சமரசங்களும், உள்ளார்ந்த நோக்கங்கள் நிறைவுசெய்யப்படுவதைத் தடைப்படுத்து கின்றன. கடந்த இரண்டு சகாப்தங்களில் சிசு இறப்பு வீதம் அதிகரித்துள்ளது. சுகாதாரத் திணைக்களத் தகவல்களின் பிரகாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்மாவட்டத்தில் 1981ஆம் ஆண்டில் 10,000இல் ஒன்றாக இருந்த சிசு இறப்பு, தற்போது மூன்றாக உயர்ந்துள்ளது. மன்னாரில் மூன்றிலிருந்து பத்தாகவும், மட்டக்களப்பில் ஒன்றிலிருந்து ஆறாகவும், திருமலையில் ஒன்றிலிருந்து ஐந்தாகவும், வவுனியாவில் ஒன்றிலிருந்து மூன்றாகவும் அதிகரித்திருக்கின்றது. மருத்துவச் சேவைகளில் பெரும் பற்றாக்குறை காணப்படுகின்றது. உதாரணமாக நாட்டின் பிறபகுதிகளில் இரண்டாயிரம் பேருக்கு ஒரு வைத்தியர் என்னும் அளவு உள்ளது. ஆனால் வடகிழக்கில் 25,000 பேருக்கு ஒரு வைத்தியர் என்னும் நிலையே காணப்படுகின்றது.

சமாதான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற போதிலும், குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்படவில்லை. சனாதிபதி-பிரதமர் உறவு இரயில் தண்டவாளமாகத் தொடர்கின்றது. 2005இல் நடைபெறவேண்டிய சனாதிபதி தேர்தல்கட்கு முன்பாக, அரசியலமைப்பில் திருத்தங்களை ஏற்படுத்தவேண்டிய சூழ்நிலையில் சனாதிபதி குமாரதுங்கா உள்ளார். தற்போதுள்ள அரசியல்யாப்பின் பிரகாரம், சனாதிபதி குமாரதுங்கா மீண்டுமொருமுறை சனாதிபதி தேர்தல்களில் போட்டியிடமுடியாது. ஆனால் அத்தகைய விதிமுறைகளை மாற்றுவதற்கு அரசியலமைப்பில் திருத்தம் ஏற்படுத்த வேண்டும். அதற்குப் பாராளுமன்றத்தில் இரண்டில் மூன்று பங்கு ஆதரவு வோண்டும். இன்றுள்ள நிலையில் எந்தக் கட்சிக்கும் அத்தகைய பலம் கிடையாது. ஆனால், மீண்டும் பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றாலும்கூட, அத்தகைய பலத்தை எந்தவொரு கட்சியும் தனித்துப் பெறமுடியுமா என்பது அய்யப்பாடேயாகும். ஆக இன்றுள்ள அரசியலில் மாற்றம் ஏற்படுத்துவது எளிதானதல்ல! விக்கிரமசிங்க அரசு இடைக்கால நிரவாகம் குறித்த திட்ட முன்வரைவினை விடுதலைப்புலிகட்கு அனுப்பியுள்ளது.

பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட பொதுசன ஐக்கிய முன்னணி-ஜேவிபி கூட்டணி முயற்சிகள் குமாரதுங்காவிற்கு அடுத்த தலைவர் யார் என்பதில், அனுரா பண்டாரநாயக்காவிற்கும் மஹிந்த ராஜபக்ஷாவிற்கு மிடையே கடுமையான போட்டி நிலவுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னிலைத் தலைவர்களுள் ஒருவரான அமைச்சர் கரு ஜயசூரியாவைக் கவர்ந்திழுத்துத் தேசிய அரசு அமைக்கும் முயற்சியிலும் சனாதிபதி குமாரதுங்கா தரப்பு கவனம் செலுத்தியது. ஆனால் அமைச்சர் ஜயசூரியா தன்னுடைய நிலைப்பாட்டைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிரங்கப்படுத்தியபோது, தேசிய அரசுக் கனவு கலைந்தது. மாகாண சபைகட்கான தேர்தல்களும் நடைபெறவுள்ளன.

சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் அதேவேளையில், சர்வதேச அபிப்பிராயத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியிலும் விக்கிரமசிங்க அரசு ஈடுபட்டுள்ளது. பிரதமருடைய சீனா, இந்தியா விஜயங்கள் அதனையே புலப்படுத்துகின்றன. வாஷிங்டனில் சந்திப்பில் இந்தியா பங்குகொண்டபோதிலும், இலங்கை விடயத்தில் நேரடியாக ஈடுபடுவதை 1980களின் பின்னர் இந்தியா தவிர்க்கின்றது. ஆனாலும் சமாதான முயற்சிகளை அவதானிக்கின்றது. இந்து சமுத்திரத்தில் தூரதேசத்து வெண்புறாக்கள் பறந்து திரிவது இந்தியாவிற்கு உவப்பளிக்கும் விடயமல்ல! சர்வதேச இராஜதந்திரிகள் தில்லி தர்பாரிலும் உலாவுகின்றனர். அதன்மூலம் இந்தியாவுடைய அபிலாஷை களைக் கவனத்தில் கொள்வதான தோற்றத்தை ஏற்படுத்த முனைகின்றனர். இந்தியாவை அனுசரித்துச் செல்லும் போக்கையே இலங்கை வெளிப்படுத்துகின்றது. இந்திய வெளிவிவகார மந்திரி யஸ்வந்த சின்ஹாவின் கொழும்பு வருகையும், இலங்கைத் தமிழர் விடயத்தில் மென்போக்குடையவராக அடையாளப்படுத்தப்படும் இந்தியப் பாதுகாப்பு மந்திரி ஜோர்ஜ் பெர்னாண்டசின் அறிவிக்கப்பட்டுள்ள விஜயமும் ஒருவகையான நெகிழ்வின் கூறுகளாகக் கருதலாம். திருமலை எண்ணெய்க் குதங்கள், சேதுசமுத்திரம், பாக்குநீரிணையில் பாலம் எனப் பொருளாதாரவிடயங்கள் இருநாடுகளிடையேயான தொடர்புகளை அவசியமாக்குகின்றன. இத்தகையதான அமைவுகளில் இலங்கை விடயங்களில் இந்தியா கூர்மையான பார்வையை செலுத்த முனைகின்றதோ என்ற கருத்து எழுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்குதிரையில் ஆற்றைக் கடப்பதா?

சாம்பலிலிருந்து உயிர்த்தெழுகின்ற பீனிக்ஸ் பறவைபோன்று, ஜெயலலிதா தமிழகத்தில் ஆட்சியமைத்து இரண்டு வருடங்கள் உருண்டோடிவிட்டன. தென்னகத்திலேயே அதிகளவுகளிலான ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கி, நீதிமன்றங்களில் ஏற்றப்பட்ட முதலாவது பெண் அரசியல்வாதி ஜெயலலிதாவாகும். ஊழல் வழக்குகளில் சிக்குண்டதாலேயே கடந்த தேர்தல்களில் ஜெயலலிதா போட்டியிட வில்லை. ஆனாலும் சட்டமன்றத் தேர்தல்களின்போது தனது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அமோகமான வெற்றிகளை ஈட்டினார். ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுத் தேர்தலில் போட்டியிட இயலாத ஒருவர் முதலமைச்சராகலாமா என்னும் சர்ச்சைப் புயலுக்குக் காரணியானார். ஆனாலும் முதலமைச்சரானார். ஊழல் தொடர்பான வழக்கு அவர் மீது தொடுக்கப்பட்ட நிலையில், அத்தகைய ஊழல் வழக்குகளை நடத்தும் அரசின் தலைமைப் பொறுப்பையும் ஏற்றார். ஆக வாதியாகவும், பிரதிவாதியாகவும் ஒருவரே என்னும் விசித்திர நிலையை உருவாக்கினார். அதன்பின்னர் ஏற்பட்ட இடைத் தேர்தல்களில் வெற்றிவாகை சூடினார்.

ஒப்பாரும் மிக்காருமற்ற தலைவியாகத் தமிழகத்தில் ஜெயலலிதா உருவாகி வருகின்றமையைக் காணமுடிகின்றது. இதுவரையில் தமிழகம் கண்டிராத கொடூரமான ஆட்சியை ஜெயலலிதா ஏற்படுத்தியுள்ளார். மாற்றுக் கருத்துக் கொண்டவர்களைக் கசக்கிப்பிழியும் சித்தாந்தத்தின் நாற்று மேடையாக ஜெயலலிதாவின் அரசு காணப்படுகின்றது. தனது கட்சிக்காரர்களை மட்டுமல்ல, பிறகட்சிக்காரர்கள், அரசு ஊழியர்கள், நெசவாளர்கள், காவிரிப்படுகை விவசாயிகள் என அவரது கடூரமான பார்வையில் சிக்கியவர்களின் பட்டியல் நீளமானது. அவர் ஆட்சியேற்று இரண்டு மாதங்களில் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கலைஞர் கருணாநிதி, மு.க. ஸ்டாலின் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். மத்திய அமைச்சர்கள் முரசொலி மாறன், டி.ஆர். பாலு ஆகியோர் தாக்கப்பட்டனர். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் வை.கோ., பழ. நெடுமாறன் போன்றவர்கள் சிறையிலிடப்பட்டனர். மு.க. ஸ்டாலினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கு வைத்து, ஒருநபர் ஒரு பதவி சட்டம் உருவாக்கப்பட்டது. தேசிய அளவில் இந்துவாதக் கட்சியாக அடையாளப்படுத்தப்படும் பாரதீய ஜனதாவே தயங்குகின்ற மதமாற்றத் தடைச்சட்டத்தை அறிமுகப் படுத்தினார். நெசவுத் தொழிலின் இருப்பைக் கேள்விக்குட்படுத்தினார். காவிரி நதிநீர் பங்கீட்டு விடயத்தில் தடாலடியான நடவடிக்கைகளை முன்னெடுத்தார். நீதிகேட்டு மதுரையைத் தீக்கிரையாக்கிய கண்ணகி சிலை, சகுனசாத்திரங்களின் அடிப்படையில் சென்னை மெரீனா கடற்கரையிலிருந்து இரவோடிரவாக அப்புறப்படுத்தப்பட்டது. இந்தியாவின் முதலாவது பெண்கள் கல்லூரி என்னும் பெருமையுடைய சென்னை ராணி மேரிக் கல்லூரியை அகற்றுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்து வதற்கான பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட சீரணி இயக்கத்திற்கு மதிப்பளிப்பதாகச் சென்னை மெரீனா கடற்கரையில் திகழ்ந்த சீரணியரங்கம், அண்ணாவின் நாமத்தைச் சூடிக்கொண்டிருக்கும் ஆளும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசினால் தகர்க்கப்பட்டுள்ளது. மெரீனா கடற்கரையில் அமைந்திருக்கும் அண்ணா மற்றும் எம்.ஜி.ஆர். சமாதிகளும் அப்புறப்படுத்தப்படலாம் என்ற வதந்திகள் உள்ளன.

சலுகைகள் இடைநிறுத்தப்பட்டதை ஆட்சேபிக்கும் வகையில், சுமார் ஒரு மில்லியன் அரசு ஊழியர்கள் ஆடி 2இல் வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தனர். அதற்கு இரண்டு தினங்கட்கு முன்பாகவே தொழிற்சங்க முக்கியஸ்தர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது. ஆனாலும் அறிவிக்கப்பட்ட தினத்தில் 90 விழுக்காடு வரையிலான அரச ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அரசு இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட ஊழியர்களைக் கைது செய்தது. இரண்டு இலட்சம் வரையானவர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டதாக உறுதிசெய்யப்படாத தகவுகள் தெரிவிக்கின்றன. கடுமையான அணுகுமுறைகள் உபயோகித்து வேலை நிறுத்தத்தை முறியடிக்கும் முயற்சிகள் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. அத்தியாவசிய சேவைகள் பாதுகாப்பு சட்டத்தினைப் பிரயோகித்தது. அதிலே சில காட்டமான திருத்தங்களையும் அறிமுகப்படுத்தியது. அவற்றிற்கு முகம் கொடுக்க திணறிய அரச ஊழியர்கள் நீதிமன்றத்தை நாடினார்கள். வேலை நீக்கப்பட்டவர்களை வேலையில் சேர்த்துகொள்ளவும், கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கவும் நீதிமன்றம் இடைக்காலத் தீர்ப்பை வழங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயமான கோரிக்கைகளை முன்வைத்துப் பதினைந்துநாள் முன்னறிவித்தலுடன் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்யலாம் எனச் சர்வதேசத் தொழிலாளர் சட்டங்கள் கூறுகின்றன. ஆனாலும் ஆகஸ்டு முதல் வாரத்தில் இந்திய நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. போராட்டத்தில் ஈடுபடுவதும் வேலைநிறுத்தம் செய்வதும் அடிப்படையான உரிமை அல்ல என்பதனையும், அன்றி வேலைநிறுத்தத்தில் ஈடுபடின் விசாரணையையும் விளைவுகளையும் சந்திக்க வேண்டுமெனவும் நீதிமன்றத்தின் தீர்ப்புக் கூறியுள்ளது. இஃது ஊழியர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகவே கருதப் படுகின்றது. கடந்த மூன்று சகாப்தங்கட்கு மேலாக, இந்திய நீதித்துறை வேலைநிறுத்த விடயத்தில் கடுமையான போக்கையே கடைப்பிடித்து வந்திருக்கின்றது.

இவ்வாறாகத் தமிழகத்தில் அரச ஊழியர்கள் முதற்கொண்டு விவசாயிகள், நெசவாளர்கள் என பல தரப்பினரும் பாதிப்புக்களை எதிர்கொள்கின்ற வேளையிலும், நாடாளுமன்றத் தேர்தல்களைக் கருத்தில்கொண்டு ஜெயலலிதா அரசு மீது தீர்க்கமான அழுத்தங்களை மத்தியில் ஆளுகின்ற பாரதீய ஜனதா அரசு ஏற்படுத்தவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பாரதீய ஜனதாவிற்குமிடையே தேர்தல் உடன்பாடுகள் ஏற்படலாமென ஊகங்கள் வெளியாகின்றன. பதின்மூன்று நாட்களில் அரியணையிலிருந்து அகன்ற நினைவுகள், அகன்று விட்டதனால் மண்குதிரையில் ஆற்றைக் கடந்துவிடலாம் எனப் பாரதீய ஜனதா கணக்குப் போடுகின்றதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான முன்னரங்கு மாறுகின்றது

புரிந்துணர்வு உடன்படிக்கையேற்பட்டுப் பல மாதங்கள் கழிந்துவிட்ட போதிலும் மீள்குடியமர்வு தொடர்ந்து தாமதமடைகின்றது. மீள்குடியமர்விற்கு உயர்பாதுகாப்பு வலயங்கள் தடையாக உள்ளதாகக் கூறப்பட்டது. உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக யாழ்குடா கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா சமர்ப்பித்த அறிக்கை சலசலப்புகளை உருவாக்கியது. அதன்பின்னர் உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாகப் பன்னாட்டு இராணுவ வல்லுநர்களுடைய ஆலோசனைகளும் பெறப்பட்டன. இருந்தபோதிலும் மாற்றங்கள் தெளிவாக ஏற்படவில்லை. ஒருபுறத்தில், வவுனியாவின் கொக்குவெளி கிராமத்தில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்காக உயர்பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டிருக்கின்றன.

அங்குக் குடியமர்வைத் துரிதப்படுத்துவதன் பொருட்டு மிதிவெடிகள், கண்ணிவெடிகள் என்பன வேகமாக அகற்றப்பட்டுள்ளன. சாலைகள் புனரமைக்கப்பட்டிருக்கின்றன. அத்தோடு தமிழர் தாயகப் பரப்பின் எல்லையோரங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றும் நடவடிக்கைகளும் துரிதமாக நடைபெறுகின்றன. அந்தவகையில் திருகோணமலைப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள குடியேற்றங்கள் அதீதகவனத்தைப் பெறுகின்றன. திரியாய் கிராமத்தில் குடியேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆண்டான்குளம் கிராமத்தில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்குரிய அரசாங்கக்காணி, கந்தளாய் சீனித் தொழிற்சாலை அமைந்துள்ள காணி உள்ளிட்ட பலவற்றில் பெரும் பான்மையின மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். சீனித்தொடுவாய் சித்திவிநாயகர் ஆலய பிரதேசத்தில் குடியேற்றங்கள் உருவாகியுள்ளன. கடந்த பெப்ரவரியில் பெர்லினில் நடைபெற்ற ஆறாவது சுற்றுப் பேச்சு வார்த்தைகளின்போது, குடியேற்றத் திட்டங்கள் நிறுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. ஆனாலும் மணலாறு பிரதேசத்தில் ஆரம்பமாகிய குடியேற்றக் கனவுகள் தொடர்கின்றன.

அண்மையில் திருகோணமலை குரங்குப்பாஞ்சானில் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்ட பயிற்சி முகாம் குறித்த சர்ச்சை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல்-இராணுவப் பரப்புகளின் மையத்திற்குக் கொண்டுவரப்பட்டது. குரங்குப்பாஞ்சான் காட்டுப்பகுதியிலுள்ள மணியரசன் குளம் பகுதியில் அமைக்கப்பட்ட முகாம், போர்நிறுத்த உடன்படிக்கைக்கு முரணானதென ஆடிமாத ஆரம்பத்தில் படைத்தரப்புக் குற்றஞ்சாட்டியது. ஆனால், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் சமர்ப்பித்த தமது கட்டுப் பாட்டுப் பிரதேசங்கள் குறித்த வரைபடங்களில், குரங்கு பாஞ்சான் அடையாளப்படுத்தப்பட்டிருந்ததாக விடுதலைப்புலிகள் குறிப்பிட்டு உள்ளனர். ஒரு தரப்பினர் தமது கட்டுப்பாட்டுப் பகுதியென வரையறுத்துக்கொண்ட பிரதேசத்தில், அவர்கள் முகாம் நிறுவுவதைப் புரிந்துணர்வு உடன்படிக்கை கட்டுப்படுத்தவில்லை. ஆனாலும் புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் புறம்பாகப் படையினர் கோபால புரத்தில் முகாம் அமைத்திருப்பதை விடுதலைப்புலிகள் சுட்டிக்காட்டி யுள்ளனர். குரங்கு பாஞ்சான் விவகாரம் முன்னிலைக்கு வந்திருப்பது கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் தெளிவாக வரையறுக்கப்படாமையைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

இத்தகைய சர்ச்சைகளின் ஆரம்பம் குரங்கு பாஞ்சான் என்று கொள்வதற்கில்லை. திருகோணமலை பிரதேசத்தில் திரியாய்-கும்புறுப்பிட்டி மற்றும் வில்கம் விகாரக் காட்டுப்பகுதிகளில் இத்தகைய சம்பவங்கள் ஏற்கெனவே இடம்பெற்றுள்ளன. திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை பிரதேசங்களில் இராணுவத்தினரினதும் விடுதலைப் புலிகளினதும் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இராணுவத்தினரினதும் விடுதலைப் புலிகளினதும் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் தெளிவாக வரையறுக்கப்படுவதில் தொடர்ந்து தாமதங்கள் ஏற்படுகின்றன. இருதரப்பினரிடையேயும் நிரந்தர தளப்பிரதேசங்களாகக் குறிக்கப்பட்ட பகுதிகளே விளங்குகின்றமையும் தாமதத்திற்குரிய காரணியாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. ஒருவரினது கட்டுப்பாட்டிலும் இல்லாமல், இருதரப்பினராலும் அவ்வப்போது உபயோகப்படுத்தப் படும் காட்டுப்பகுதிகளே சர்ச்சைகளின் களமாகின்றது. கிழக்குக் கடற்பரப்பில் புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கடல்பரப்பு விடயங்கள் உக்கிர நிலைக்கு வந்தன. திரியாய்-கும்புறுப்பிட்டி, விலகம் விகார என்ற வரிசையில் குரங்கு பாஞ்சான் விவகாரம் கேள்விகளை எழுப்புகின்றது.

படைத்தரப்பை மறுசீரமைக்கும் முயற்சியிலும் அரசு முனைந்து செயல்படுகின்றது. படைத்தரப்பை மறுசீரமைக்கும் பணிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகமடைந்திருக்கின்றது. அதுதொடர்பாக வெளிநாட்டு இராணுவ வல்லுநர்களின் ஆலோசனைகளும் பெறப்பட்டிருக்கின்றன. உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான விடயங்களில் பிரஸ்தாபிக்கப்பட்ட பிரித்தானிய இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் மைக்கேல் ரோஸினுடைய ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளதாகக் கூறப் படுகின்றது. பாதுகாப்பு அமைச்சரின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ, திறைச்சேரிச் செயலாளர் சரிதா ரத்வத்த, முன்னாள் இராணுவத் தளபதி லெப் ஜெனரல் டென்னிஸ் பெரோ, முன்னாள் இராணுவத் தலைமை அதிகாரியும் இன்றைய வடகிழக்கு மாகாண ஆளுநருமான மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்தனா ஆகியோரை உள்ளடக்கிய பாதுகாப்பு மறுசீரமைப்பு ஆணைக் குழுவின் சிபாரிசுகளின் பிரகாரம், முப்படையினரது போர்ப்பலத்தை அதிகரிக்க அரசு முனைந்து செயற்படுகின்றது.

அரசியல் தலைமைக்கும் இராணுவத் தலைமைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கான வழிமுறைகளை மேற்படி ஆணைக்குழு பரிந்துரை செய்திருக்கின்றது. போர்ப்பலத்தை கட்டி யெழுப்பும் வகையில் தேசியப் பாதுகாப்புச் சபை உள்ளிட்ட கட்டமைப்புகளும், அதனையொட்டிய கட்டளைப் பீடங்களும் நிறுவப்படவேண்டியதன் தேவை வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கும் பட்சத்தில், அரசியல் இலக்குகளை எய்துவதற்கு இராணுவச் செயற்பாடுகளை ஒருமுகப் படுத்தலாம் என விதந்துரைக்கப்பட்டிருக்கின்றது. புரிந்துணர்வு உடன் படிக்கையேற்பட்டு ஆறுசுற்றுப் பேச்சுவார்த்தைகளும் முடிவடைந்த நிலையில், சர்வதேச உந்துதல்களிடையே மட்டுமன்றித் தென்னிலங்கை தளம்பல்களிடையேயும் சமாதான முன்னரங்கில் மாறுதல்கள் ஏற்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பு தொடருமா?

2002 பெப்ரவரியில் ஏற்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை யுத்தமற்ற சூழலை ஏற்படுத்தியது. அதனையடுத்து ஆரம்பமாகிய பேச்சுவார்த்தைகள் சமாதான நடவடிக்கைகளை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தவில்லை. அச்சமற்ற அன்றாட வாழ்வு என்பதனைத் தவிர தீர்க்கமான மாறுதல்கள் ஏற்படுவதில் தாமதங்கள் காணப்படுகின்றன. மக்கள் தமது சொந்த இடங்கட்கு த்திரும்புவதை உயர்பாதுகாப்பு வலயங்கள் தடைப்படுத்துகின்றன. மீள்குடியமர்வில் ஏற்பட்ட தடங்கல்கள் இயல்புநிலை தோன்றுவதைக் கேள்விக்கு உட்படுத்து கின்றன. நெடுந்தீவு, வாகரை, கிழக்குக் கடற்பரப்பு சம்பவங்கள், மானிப்பாய், மட்டக்களப்பு, குச்சவெளி சம்பவங்கள் புதிய பரிமாணங்களை ஏற்படுத்துகின்றன.

ஒஸ்லோவிலும், அதன்பின்னர் வாஷிங்டனிலும் உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடிச் சந்திப்புகள் நடைபெற்ற காலப்பகுதிகளில் சமாதான முன்னரங்கிலும் அதிர்வுகள் ஏற்பட்டன. பேச்சுவார்த்தை களிலிருந்து விடுதலைப்புலிகள் விலகிக்கொண்டனர். அதன்பின்னர் நடைபெற்ற உதவிவழங்கும் நாடுகளின் சந்திப்பிலும் விடுதலைப்புலிகள் கலந்துகொள்ளவில்லை. தமிழர் பிரதேசங்களில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளைத் தொடர்வதற்குரிய கட்டமைப்பு இல்லாமை சுட்டிக்காட்டப்பட்டது. அத்தகைய ஓர் அமைப்பின் அவசியமும் தொடர்ந்து வலியுறுத்தப்படுகின்றது. சமாதானச் செயற்பாடுகள் முன்னகர்த்தப்பட வேண்டியதன் அவசியத்தைச் சர்வதேச சமூகம் வலியுறுத்துகின்றது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் ஏதுவான சர்வதேச நிதியுதவிகள் சமாதானத்துடன் பின்னிப் பிணைந்ததாகவே வழங்கப்படுமென்பதை சர்வதேச சமூகம் தொடர்ந்து வலியுறுத்துகின்றது.

இத்தகைய அமைவிலேயே வடகிழக்கிற்கான இடைக்கால நிருவாகக் கட்டமைப்புத் தொடர்பான திட்டவரைவொன்றை, விக்கிரமசிங்க அரசு கடந்த ஆடி 17இல் விடுதலைப் புலிகட்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பியது. அரசினுடைய திட்ட முன்வரைவை ஆவணி 23 லிருந்து 26ஆம் திகதி வரையில் பாரிசில் கூடிய விடுதலைப் புலிகள் அலசி ஆராய்ந்துள்ளனர். மீண்டும் அயர்லாந்தில் ஐப்பசி மாதத்தில் சந்திப்பொன்று நிகழலாம் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன. பாரிச சந்திப்புக் குறித்த தெளிவான தகவல்கள் பூர்வாங்கமாக வெளியிடப் படவில்லை. ஆனாலும் வட்டுக்கோட்டைத் தீர்மானம், திம்புக் கோட்பாடுகள், தாயகம், சுய நிர்ணயம், தேசியம் ஆகியன உள்ளடக்கப் பட்டதாகவே விடுதலைப்புலிகளின் யோசனைகள் அமையும் என்பதான எதிர்பார்ப்புக் காணப்படுகின்றது.

இன்றுள்ள வடகிழக்கு மாகாண சபையினுடைய இணைப்புத் தொடர்பாக எதிர்வரும் கார்த்திகை 17ஆம் திகதிக்கு முன்பாக சனாதிபதி தீர்மானிக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் வாயிலாகவே மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. அவ்வாறு உருவாக்கப்படுகின்ற மாகாண சபைகளில் ஒன்றுடன் மற்றொன்றை இணைக்கும் அதிகாரம் சனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அவ்வாறு சனாதிபதியால் மேற்கொள்ளப்படும் இணைப்பு, பின்னர் சர்வசனவாக்கெடுப்பில் உறுதி செய்யப்படவேண்டும். மேற்படி விதிமுறையின் பிரகாரம் ஜே.ஆர். ஜெயவர்தனாவால் வடகிழக்கு மாகாணம் இணைக்கப்பட்டது. அதற்கான சர்வசன வாக்கெடுப்பு, கடந்த பதினைந்து வருடங்களாக வர்த்தமானி அறிவிப்பு வாயிலாகத் தொடர்ந்து பதவியேற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரேமதாசா, டி.பி. விஜயதுங்கா ஆகியோரும், அதனையடுத்துப் பதவியேற்ற பொதுசன ஐக்கிய முன்னணியின் குமாரதுங்காவும் சர்வசனவாக்கெடுப்பை வர்த்தமானி அறிவிப்பு வாயிலாகவே இதுவரையில் ஒத்திவைத்துள்ளனர். கடைசியாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு, வெகுவிரைவில் காலாவதி யாகவுள்ளது. அதன்பின்னர் மீண்டுமொரு ஒத்திவைப்பை, வர்த்தமானி அறிவிப்பாக சனாதிபதி குமாரதுங்கா வெளியிடாமல், விக்கிரமசிங்க அரசுக்குச் சிக்கலை உருவாக்கலாம் என்ற ஊகங்களும் காணப் படுகின்றன. அவ்வாறான நிலைப்பாட்டை சனாதிபதி குமாரதுங்கா எடுக்கும் பட்சத்தில், வடகிழக்கு இணைப்புக் குறித்த சர்வசன வாக்கெடுப்பை நடாத்தவேண்டிய சூழ்நிலை உருவாகலாம்.

2005இல் சனாதிபதி தேர்தல்கள் நடைபெறவேண்டிய நிலையில், தென்னிலங்கை அரசியல்களம் முனைப்படைந்தே வருகின்றது. அதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பாக மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற வேண்டும். வடமேற்கு மாகாணத் தேர்தல்கள் 2003 சனவரிக்கு முன்பாக நடத்தப்படவேண்டும். இன்று அரசியல் கட்சிகளினது செயற்பாடுகள் வேகம் பெற்றுள்ளன. கடந்த புரட்டாசியில், இலங்கை அரசியலில் ஐம்பத்தியிரண்டு வருடங்களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பூர்த்தி செய்துள்ளது. இன்று பொதுசன ஐக்கிய முன்னணி, தேர்தல்களை மட்டும் கவனத்தில்கொண்டு விக்கிரமசிங்க அரசினுடைய பொருளாதாரக் கொள்கைகளையும் செயற்பாடுகளையும் கேள்விக்குட்படுத்துகின்றது. ஜேவிபியுடன் தேர்தல் கூட்டணி அமைத்துக் கொள்வதற்கு எட்டு மாதங்களாக முயற்சிக்கின்றது.

முக்கிய அமைச்சுப் பொறுப்புகளை கோருகின்ற நிபந்தனையை, ஜேவிபி முன்வைத்தமை பொதுசன ஐக்கிய முன்னணியைச் சீண்டி யுள்ளன. அத்தோடு இனப்பிரச்சினை விடயத்திலும் இரண்டு கட்சி களிடையே அடிப்படையான மாறுபாடுகளும் காணப்படுகின்றன. ஒற்றையாட்சி முறையிலான அரசியலமைப்பில் இருந்து விலகி, அதிகாரப்பரவலாக்கல் ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதைப் பொதுசன ஐக்கிய முன்னணி கொள்கையளவிலேயாவது ஏற்றுக்கொண்டிருக் கின்றது. ஆனால் ஜேவிபிக்கு அது ஏற்புடையது அல்ல! காலியிலிருந்து ஆவணி 25இல் புறப்பட்டு, 116 கிலோ மீட்டர் நடந்து கொழும்பில் சமாதானச் செயற்பாடுகட்கு எதிரான பேரணியை ஜேவிபி நடத்தியுள்ளது. இத்தகைய சூழ்நிலைகளில், சமாதானச் செயற்பாடுகளின் வேகமும் திசையும் அதீதகவனத்தையே பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை நறுக்கப்படுகின்றதா?

சமாதான முயற்சிகள் மீளவும் ஆரம்பிக்கக்கூடிய சமிக்ஞைகள் தென்படுவதற்குத் தொடங்கியிருந்தன. சமாதான நடவடிக்கைகளின் அறுவடையாகப் பொருளாதாரம் பன்முகப்பட்ட வளர்முக திசையில் அசைந்து 5.5 விழுக்காடு வளர்ச்சியடைந்தது. பங்குச்சந்தை ஏற்றமடைந்தது, கட்டுமான விஸ்தாரணங்களை மேற்கொள்வதற்கான பல பில்லியன் டாலர் சர்வதேச நிதியுதவிகள் கிடைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்பட்டன. பிரதமர் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு அமெரிக்காவில் இருந்தார். அத்தகைய பின்னணியில், நவம்பர் 4இல் சனாதிபதி குமாரதுங்கா அதிரடியான அரசியல்யாப்புச் சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். அதனால் பரந்துபட்ட அதிர்வுகளையும் ஏற்படுத்தியுள்ளார்.

அவசரகாலநிலை அறிமுகப்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. பாராளுமன்றம் பதினைந்து தினங்கட்கு, அதாவது நவம்பர் 19ஆம் திகதிவரை இயங்காத நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டது. பாதுகாப்பு அமைச்சர் திலக் மரப்பாண, உள்விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க, செய்தித்தொடர்பால் அமைச்சர் இம்தாஸ் பாக்கீர்-மக்கார் ஆகியோர் அமைச்சுப் பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப் பட்டனர். ஆட்சியில் மாற்றம் ஏற்பட்டுவிட்டதான தோற்றத்தை ஏற்படக் கூடியவகையில் தலைநகர் கொழும்பில் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. முன்னாள் போலீஸ் உயரதிகாரி சிறில் ஹேரத் பாதுகாப்புத்துறைச் செயலாளராகவும், ஹரீம் பீரிஸ் ரூபவாஹினி தலைவராகவும், நியூட்டன் குணரட் ஐரிஎன் தலைவராகவும், ஹட்சன் சமரசிங்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டனர். சட்டம்-ஒழுங்கைப் பேணும் தோரணையில் படையினர் வீதிக்குக் கொண்டுவரப்பட்டனர். தீவின் பல பகுதிகளிலும் அச்சம் கலந்த சூழ்நிலை உருவாகியது. வடகிழக்கிலும் அன்றாட வாழ்வு அச்சுறுத்தலுக்கு உட்பட்டது. குடாநாட்டில் ஆங்காங்கே அடையாள அட்டைகள் சோதனையிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2005 இல் பதவிக் காலத்தை நிறைவுசெய்யும் சனாதிபதி குமாரதுங்கா, தன்னுடையதும் தன்னுடைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போக்கைக் கடந்த வாரங்களில் தெளிவாக அவதானிக்க முடிகின்றது. பொதுசன ஐக்கிய முன்னணியும் ஜேவிபியும் கூட்டணி அமைத்துக்கொள்வதற்கு எடுக்கும் முயற்சிகள் இரயில் தண்டவாள மாகவே காணப்படுகின்றது. ஆனாலும் ஜேவிபியுடன் கூட்டணி யமைப்பதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள ஒரு சாரார் விடாக் கண்டராகக் காணப்படுகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களைக் கவர்ந்திழுத்துத் தேசிய அரசு அமைக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், பொதுசன ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியல் உறுப்பினர் புத்திர சிகாமணியைக் கவ்வியிழுத்து, விக்கிரமசிங்க அரசினுடைய பாராளு மன்றப் பலத்துக்கு பங்கம் விளைவிக்கும் முயற்சிகட்கு ஆப்பு வைக்கப் பட்டது.

தலைமை நீதிபதியைப் பதவி நீக்கம் செய்யும் முயற்சி ஊசலாடிக் கொண்டிருக்கும் வேளையில், சனாதிபதியைப் பதவிநீக்கம் செய்யும் பிரேரணை குறித்த சலசலப்புகள் உருவாகின்றன. இத்தகைய அரசியல் தகிடுதத்தங்களுக்கு மத்தியிலே அவசரகாலநிலை அறிமுகப்படுத்து வதற்கும், பாராளுமன்றத்தை இயங்காத நிலையில் வைப்பதற்கும், அமைச்சர்கள் விலக்குவதற்கும், சனாதிபதியினுடைய அதிகாரங்கள் குறித்த கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன. பொதுப் பாதுகாப்பு மற்றும் அவசரகாலச் சட்டவிதிகளின் முதலாவது பகுதியின்கீழ் முற்று முழுதான அவசரகாலச் சட்டத்தை சனாதிபதி பிரகடனப்படுத்தும் பட்சத்தில், அதற்கான ஒப்புதலைப் பதினான்கு தினங்களிடையே பாராளுமன்றத்தில் பெற்றாக வேண்டும். அதிலிருந்து தவறுகின்ற பட்சத்தில் அவசரகாலச்சட்டம் காலவதியாகிவிடும். நிற்க, கடந்த வாரத்தில் பிரகடனப்படுத்தப்பட்டது.

முற்றுமுழுதான அவசரகாலச்சட்டம் அல்ல! பொதுப் பாதுகாப்புச் சட்டத்திலுள்ள நாற்பதாவது அத்தியாயத்தின் பத்தாவது சாசனத்தின்கீழ், நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் சட்டம்-ஒழுங்கைப் பேணுவதற்குப் படையினரைப் பயன்படுத்துவதற்கு ஏதுவான பிரகடனமே மேற் கொள்ளப்பட்டுள்ளதாகும். இத்தகைய பிரகடனம் பத்துத் தினங்களிற்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும். ஆனால் பாராளுமன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கீகாரத்தைப் பெறவேண்டும் என்பதாக அரசியல் யாப்பில் கூறப்படவில்லை. இருந்தபோதிலும் மேற்கூறிய பிரகடனத்தை, பிரேரணையொன்றின் மூலமாகவே பாராளுமன்றம் ரத்துச்செய்ய முடியும். ஆக நவம்பர் நான்காம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டது. அவசரகாலச்சட்டம் அல்ல என்பதுவும், பொதுப் பாதுகாப்பு சட்டத்தின் சரத்துகள் மட்டுமே என்பதுவும் கடந்த வார இறுதியிலேயே தெளிவாகியது. ஆனால் இடைப்பட்ட சில நாள்களில் ஏற்பட்ட சலசலப்புகள், அரசியல் பரப்புகளில் புதிய கோணங்களை வெளிப்படுத்தியுள்ளது.

சனாதிபதியினுடைய நடவடிக்கைகளினால், ஐக்கிய தேசிய முன்னணி அரசினுடைய செல்வாக்கு ஏற்றமடைந்துள்ளது. 130 வரையிலான பாராளுமன்ற உறுப்பினர்கள் விக்கிரமசிங்க அரசை ஆதரிக்கும் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர். 225 உறுப்பினர் பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணியையும், எதிரணியில் பொதுசன ஐக்கிய முன்னணி 77ஐயும், ஜேவிபி 16ஐயும், ஈபிடிபி 2 ஐயும், புளொட் ஒரு ஆசனத்தையுமாக மொத்தம் 96ஐக் கொண்டுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 15 ஆசனங்களைக் கொண்டுள்ளது. பாராளுமன்றச் சமன்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தி அரசைமக்கும் முயற்சியிலும் பொதுசன ஐக்கிய முன்னணி கவனம் செலுத்துகின்றது. இதனிடையே பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகளை விக்கிரமசிங்க அரசு எடுக்கின்றது. நவம்பர் நான்கிலிருந்து சனாதிபதி முன்னெடுத்த அதிரடி நடவடிக்கைகள், அரசியல்யாப்பின் அடிப்படை களைக் கேள்விக்குட்படுத்தியுள்ளதோடு சனாதிபதியின் நம்பகத் தன்மையையும் அசைத்துள்ளது. சனாதிபதி-பிரதமர் முறுகல்கள் அரச அமைப்பிலுள்ள நம்பிக்கைகளை நறுக்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணயத்தைச் சுண்டலாமா?

1990களில் இலங்கை அரசியலில் ஒரு சக்தியாக உருவாகிய சனாதிபதி குமாரதுங்கா, ஆரம்பகாலங்களில் சமாதானத் தேவதையாக வர்ணிக்கப்பட்டவர். இன்று தமது இரண்டாவது பதவிக்காலத்தை நிறைவு செய்யும் தருணத்தில், தம்முடைய அரசியல் வாழ்விற்காக வானத்தை வில்லாக வளைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு உள்ளார். இன்று தேர்தல்கள் ஏற்பட்டாலும்கூட, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்து ஆட்சியமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் அரிதாகவே காணப்படுகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியைக் கைப்பற்குவதற்கு இரண்டு உபாயங்களைத் திட்டமிடுகின்றது. ஒன்று, ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களைக் கவர்ந்திழுப்பது அல்லது, செஞ்சிந்தனையாளர்களாக அடையாளப்படுகின்ற ஜேவிபியுடன் தேர்தல் உடன்பாடு ஏற்படுத்திக் கொள்வதாகும். இன்றைய பாராளுமன்றத்தில் 12 ஆசனங்களைக் கொண்டுள்ள முசுலிம் காங்கிரசுடனோ, 2 ஆசனங்களைக் கொண்டுள்ள மலையக மக்கள் முன்னணியுடனோ சுமுகமான உறவுநிலையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கொண்டிருக்கவில்லை. அது தவிர சென்ற தேர்தல்களில் ஒன்பது விழுக்காடு வாக்குகளைப் பெற்று மூன்றாவது நிலையிலிருக்கும் ஜேவிபியுடன் கூட்டணி அமைத்துக்கொள்வதையே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள ஒரு சாரார் விரும்புகின்றனர். சென்ற தேர்தல்களில் ஐக்கிய தேசிய முன்னணி 45 விழுக்காடு வாக்குகளையும், பொதுசன ஐக்கிய முன்னணி 37 விழுக்காடு வாக்குகளையும் பெற்றிருந்தது.

ஆக பொதுசன ஐக்கிய முன்னணியும் ஜேவிபியும் கூட்டணி அமைத்துக்கொள்ளும்போது அரசமைக்கும் வாய்ப்பை இலகுவாக ஏற்படுத்திக் கொள்ளலாம். அத்தகைய கூட்டணி 2005 இல் நடைபெறவுள்ள சனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளருக்குச் சாதகமானதாக அமையுமெனவும் கருதப்படுகின்றது. ஆனால், சித்தாந்த ரீதியாகவும், இனப்பிரச்சினை விடயத்திலும் ஜேவிபியுடன் கூட்டணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமைத்துக் கொள்வது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இக்கட்டான சூழ்நிலைகளை ஏற்படுத்துமென, சனாதிபதி குமாரதுங்கா உட்பட கட்சியிலுள்ள ஒருசாரார் அஞ்சுகின்றனர். இதனிடையே எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்சாவிற்கும் அனுரா பண்டாரநாயக்காவிற்கு மான தலைமைத்துவப் போட்டி முறுகல் நிலையைத் தொடுகின்றது. இவ்வாறாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்றுமில்லாதவாறு பல முனைகளிலிருந்தும் அழுத்தங்கட்கு உட்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் விக்கிரமசிங்காவிற்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் குமாரதுங்காவிற்குமிடையேயான உராய்வுகள், 2001 மார்கழியில் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியமைத்த காலந்தொட்டே வெளிப்படையாகக் காணப்படுகின்றன. அரசியல் மற்றும் அரசாட்சி என்னும் இருவேறுபட்ட நிலைகளிலும், விக்கிரமசிங்கா-குமாரசிங்கா இழுபறி தொடருகின்றபோதிலும், அவை முறிவடைகின்ற கட்டத்தை எட்டவில்லையென்பதாகவே கருதமுடிகின்றது. 2002இல் விக்கிரமசிங்க அரசு ஒரு வருடத்தைப் பூர்த்திசெய்யும் தறுவாயில் சனாதிபதி தனது அதிகாரங்களைப் பிரயோகித்துப் பாராளுமன்றத்தைக் கலைத்து இடைத் தேர்தல்களைக் கோரலாம் அல்லது அரசமைக்க முயற்சிக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

அத்தகைய சூழ்நிலைகள் தெளிவாக ஏற்படவில்லை என்ற போதிலும், அவ்வாறான நிலை உருவாகாமல் ஐக்கிய தேசிய முன்னணி செயற்பாடுகளை முடுக்கிவிட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாகவே சனாதிபதியைப் பதவியிறக்கும் முயற்சிகள் முன்னனெடுக்கப்படுவதான முனைப்புகள் அவ்வப்போது வெளிப்படுத்தப்பட்டன. ஆனாலும் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. நிறைவேற்று அதிகாரமிக்க சனாதிபதியாக குமாரதுங்கா விளங்குகின்றபோதிலும், அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்றப் பலத்தைக் கொண்டிருக்கவில்லை. அதனால் நிறைவேற்று அதிகார சனாதிபதி யினுடைய செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப் படுகின்றது. மக்களுடைய ஆணையையும், சமாதானச் செயற்பாடுகளின் அடிப்படையில் சர்வதேச ஆதரவையும் விக்கிரமசிங்க அரசு கொண்டிருக்கின்றது. ஆனாலும் சனாதிபதியினுடைய அதிகார வரையறைக்கு உட்பட்டே செயற்பட வேண்டியுள்ளது.

சென்ற நவம்பர் நான்காம் திகதி சனாதிபதி குமாரதுங்கா மேற்கொண்ட நடவடிக்கைகள், தெளிவற்ற புறச்சூழ்நிலைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கியுள்ளது. 2002இல் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு அதன்விளைவாக யுத்தமற்ற சூழ்நிலைகளும், செப்டெம்பர் 2002இல் தாய்லாந்தில் ஆரம்பமாகிய பேச்சுவார்த்தைகள் சித்திரை 2003இல் ஆறு சுற்றுகளை நிறைவுசெய்து, கார்த்திகை 2003இல் இடைக்கால நிருவாக அதிகாரசபை தொடர்பான யோசனைகளை விடுதலைப் புலிகள் முன்வைத்த வேளையில் தென்னிலங்கை அரசியல் மாற்றங்கள் சமாதானச் செயற்பாடுகளை அச்சுறுத்தலுக்கு உட்படுத்தியுள்ளது. பாதுகாப்பு அமைச்சு பொறுப்பைத் தன் வசம் வைத்திருக்கும் பட்சத்தில், சனாதிபதியே சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும் என்னும் நிலைப்பாட்டை பிரதமர் விக்கிரமசிங்கா வெளிப்படுத்தினார்.

ஆனால் சமாதான முயற்சிகளை பிரதமரே மேற்கொள்ள வேண்டுமென சனாதிபதி அறிவித்தார். தென்னிலங்கை அரசியல் நிலைப்பாடுகளில் தெளிவேற்படுகின்றவரையில் சமாதானச் செயற்பாடு களிலிருந்து தற்காலிகமாக விலகிக் கொள்வதாக நவம்பர் 14இல் நோர்வே அறிவித்தது. இன்றுவரையில் பாதுகாப்பு, உள்விவகாரம், செய்தி தொடர்பால் அமைச்சுகள் சனாதிபதியின் பொறுப்பிலேயே உள்ளன. சனாதிபதி-பிரதமரிடையே இணக்கப்பாடு காண்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒருபுறத்தில் வானுயர்ந்த அதிகாரங்களைக் கொண்டுள்ள சனாதிபதி குமாரதுங்கா! மறுபுறத்தில் அத்தகைய அதிகாரங்களைப் பிரயோகிக்கும் வல்லமையை வரையறுக்கும் பாராளுமன்ற பலத்தைக் கொண்டுள்ள பிரதமர் விக்கிரமசிங்கா! இவர்களிடையே பலசாலியைத் தீர்மானிக்க நாணயத்தைச் சுண்டிப்பார்ப்பதா... இல்லை 2005 வரையில் காத்திருப்பதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரோடு நோகலாம்?

கடந்த அரை நூற்றாண்டுகளாகப் பதவி வகித்த ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இனப்பிரச்சினையை அரசியலாக்கின. செஞ்சிந்தனைக்குட்பட்ட கட்சிகளின் நிலைப்பாடுகள் அதிகார வெள்ளத்தில் அமிழ்ந்து போயின. 1978 அரசியலமைப்பு உருவாக்கிய விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைமை அரசியல் பரப்புகளில் மாற்றங்களை ஏற்படுத்தியது. பழைய கட்சிகளே பொதுசன ஐக்கிய முன்னணியாகவும் ஐக்கிய தேசிய முன்னணியாகவும் அவதாரம் எடுத்தன. தமிழருடைய வரலாற்றில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் முக்கியமான நிகழ்வாகும். 1976ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 14ஆம் நாள் வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது மகாநாட்டின்போது, தமிழர்களுஸடைய அபிலாஷைகளை வெளிப்படுத்தும் திட்டவட்டமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்பின்னர் 1977 இல் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் வட்டுக்கோட்டை தீர்மானத்தினடிப்படையிலேயே தமிழர் விடுதலைக்கூட்டணி போட்டியிட்டது. அன்றைய தேர்தல்களில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குக் கிடைத்த தேர்தல் முடிவுகள், தமிழ்மக்கள் வழங்கிய தீர்க்கமான ஆணையாகவே கருதப்படவேண்டும்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், தந்தை செல்வாவின் தமிழரசு பாசறையின் அமரர் எம்எச்எம் அஷ்ராப் உருவாக்கிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் புதிய சக்திகளாக உருப்பெற்றன. ஆனால் இன்று தம்முடைய தலையில் மண்ணை வாரிக்கொட்ட முற்படுகின்றன. மூன்று சகாப்தங்கட்கு முன்னர்ப் புரட்சிகரமாகப் புறப்பட்ட ஜேவிபி, இன்று தென்னிலங்கை அரசியலில் மூன்றாவது சக்தியாகி அரசை நிருணயிக்கும் வல்லமையைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றது.

ஒரு சகாப்தத்தின் முன்பு பொதுசன ஐக்கிய முன்னணியைத் தலைமையேற்றுக்கொண்டதோடு ஆட்சியையும் கைப்பற்றிக்கொண்ட குமாரதுங்கா, ஆரம்பங்களில் இனப்பிரச்சினை விடயத்தில் பரவலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைப்பாடுகளின் தரிசனத்தைக் கொண்டிருந்தார். ஆனால் காலவோட்டத்தில் கொடூரமான அடக்குமுறைகளைக் கையாண்டதோடு, ஆனையிறவு உள்ளிட்ட பாரிய இழப்புகளையும் சந்தித்தார்.

சுமார் நான்கு சாகப்தங்கட்கு முன்னர்க் கண்டியிலிருந்து பாதயாத்திரை புறப்பட்டவர்களின் வாரிசுகள், 2001 திசம்பரில் ஐக்கிய தேசிய முன்னணியாகி விக்கிரமசிங்க தலைமையில் பதவியேற்றபோது புதிய நிலைப்பாடுகளை வரித்துக்கொண்டனர். ஆனாலும் அப்பன் வைத்த வலையில் பிள்ளை சிக்குவது போன்று, 1978 அரசியலமைப் பின் நுண்ணிய வளைகளினுள் சிக்கிக்கொண்டனர். சனாதிபதியும் பிரதமரும் வெவ்வேறு கட்சியினராகியபோது, அரசியல் செயற்பாடுகள் வேடிக்கையாகியது. 1990களில் ஆரம்பமாகிய நோர்வேயினது சமாதான முயற்சிகள் விறுவிறுப்படைந்தபோது புரிந்துணர்வு உடன் படிக்கையேற்பட்டது. வடகிழக்கிற்கான தரைவழிப் போக்குவரத்து ஆரம்பமாகியது.

செப்டெம்பர் 16 முதல் 18 வரையில் தாய்லாந்தில் நடைபெற்ற முதல் சுற்றுப்பேச்சுவார்த்தைகளில், மிதிவெடி அழிப்பு மற்றும் மீள் குடியேற்றம் தொடர்பான தீர்மானங்கள் ஏற்பட்டன. அக்டோபர் 31 முதல் நவம்பர் 3 வரை தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டாவது சுற்றுப்பேச்சுவார்த்தைகளின்போது உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான உபகுழு, உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு உபகுழு என்பவை அமைக்கப்பட்டதோடு, தமிழ்-முஸ்லிம் உறவை வளர்க்கும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன. திசம்பர் 2 முதல் 5 வரை ஒஸ்லோவில் நடைபெற்ற மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ஒஸ்லோ தீர்மானம் வெளியிடப்பட்டது. உயர்பாதுகாப்பு வலயங்கள் மீள்குடியமர்வைத் தடைப்படுத்தியது. குடாநாட்டில் சுமார் 160 சதுரகிலோ மீட்டரை உள்ளடக்கிய 15 உயர்பாதுகாப்பு வலயங்கள், சுமார் 18 விழுக்காடு நிலப்பரப்பை உள்ளகப்படுத்தி, சுமார் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களை இடம்பெயர நிர்ப்பந்தித்தது.

2002ஆம் ஆண்டு திசம்பரில் வெளியாகிய மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவினது உயர்பாதுகாப்புவலயம் தொடர்பான அறிக்கை பலத்த சலசலப்புகளை உருவாக்கியது. 2003 சனவரி 6 முதல் 9 வரை தாய்லாந்தில் நடைபெற்ற நான்காவது சுற்றுப்பேச்சுவார்த்தைகளில் உயர்பாதுகாப்பு வலயங்கட்கு வெளியே மீள்குடியேற்றங்களைத் துரிதப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துவதற்கான இணக்கம் காணப்பட்டது. பெப்ரவரி ஆறாம் ஏழாம் திகதிகளில் நெடுந்தீவு கடற்பரப்பில் ஏற்பட்ட சம்பவம் அதிர்வுகளை ஏற்படுத்தியது. பெப்ரவரி 7 முதல் 10 வரை பேர்லினில் ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளும், மார்ச் 18இல் ஜப்பானில் ஆறாவது சுற்று பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றன. 2002 திசம்பரில் ஒஸ்லோவிலும், அதன்பின்னர் 2003 எப்பிரலில் வாஷிங்டனிலும் இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடிச் சந்திப்புகள் நடைபெற்றன. 2003 ஏப்பிரல் 21இல் பேச்சுவார்த்தைகளிலிருந்து தற்காலிகமாக விலகிக் கொள்வதாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர். அத்துடன் 2003 ஆடியில் டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கான உதவிவழங்கும் நாடுகளின் சந்திப்பிலும் கலந்துகொள்ளவில்லை.

2003 நவம்பர் 1இல் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பானத் திட்ட வரைவுகளை விடுதலைப் புலிகள் சமர்ப்பித்தனர். நவம்பர் 4இல் சனாதிபதி குமாரதுங்கா மேற்கொண்ட அரசியல்யாப்பு சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் இலங்கை அரசியல் பரப்புகளில் அதிர்வுகளை ஏற்படுத்தியது. அதனையடுத்த சமாதானச் செயற்பாடு களிலிருந்து நோர்வே தற்காலிகமாக விலகிக்கொண்டது. 2005இல் நிறைவுபெறுவதாகக் கருதப்படுகின்ற சனாதிபதியினுடைய பதவிக்காலம் குறித்த சர்ச்சைகளும் எழுந்துள்ளன. இத்தகைய நிலைப்பாடுகளுடன் 2003 விடைபெற்றுக்கொள்ள... மலர்ந்துள்ள 2004 யாவர்க்கும் நிறைவானதாக அமையவேண்டுமென உலகம்யாவையும் தாம்உள ஆக்கலும் நிலைபெறுத்தலும், நீக்கலும், நீங்கலா அலகிலா விளையாட்டுடைய சக்தியிடம் வேண்டுவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனங்காட்டு நரிகள்

ஒருகாலகட்டத்தில் இந்திய அரசியலில் பெரிதும் அவதானிக்கப் பட்ட கருநாடக மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் இராமகிருஷ்ண ஹெக்டே தமது 77ஆவது வயதில் சனவரி 13இல் திகதி காலமாகி யுள்ளார். ஜெயபிரகாஷ் நாராயணனின் இயக்கத்திலும், ஜனதா கட்சியிலும், அதன்பின்னர் ஜனதா தளத்திலுமாக அரசியல் ஈடுபாடுகளைக் கொண்டிருந்தவர். கருநாடக மாநிலத்தில் திறமையான நிருவாகத்தை வழங்கியவர். அரசியலில் மேன்மைக்காக உழைத்தவர். அகிலஇந்திய அளவில் பேசப்பட்டவர். தென்னிந்தியாவிலிருந்து பிரதமராக வரக்கூடியவர் என விதந்துரைக்கப்பட்டவர். ஆனாலும் தென்னிந்தியர்களான நரசிம்மராவ்களும் தேவேகௌடாக்களும் பிரதமராகியபோதும், ஹெக்டே இறுதிவரை மத்திய அமைச்சராகவேனும் ஆகவில்லை. அன்னாருடைய மறைவு மேன்மையான அரசியலுக்கு ஏற்பட்ட இழப்பாகும்.

அண்மையில் வடமாநிலங்களில் ஏற்பட்ட தேர்தல் முடிவுகளின் பின்னணியில் இந்திய அரசியலில் புதிய கணக்கீடுகள் ஏற்படுகின்றன. நாடாளுமன்றத் தேர்தல்கள் நெருங்கி வருகின்ற வேளையில் அரசியல் கட்சிகள் கூட்டணியமைக்கும் ஆர்வத்தை அதீதமாக வெளிப்படுத்து கின்றன. தமிழ்நாட்டில் திராவிடக் கட்சிகளின் ஆட்சி 1960 களில் ஏற்பட்டது. அதனையடுத்துக் கடந்த நான்கு சகாப்தங்களாக தேசியக் கட்சிகள் தமிழ்நாட்டில் தனித்துத் தேர்தல்களைச் சந்திப்பதைத் தவிர்த்தே வந்திருக்கின்றன. இந்திரா காந்தி முதல் இடைப்பட்ட காலத்தில் உருவாகிய வி.பி. சிங், தேவேகௌடா, ஐ.கே.குஜ்ரால் அரசுகள் உள்ளிட்ட, இன்று ஆளுகின்ற பாரதீய ஜனதா வரை அனைத்துக் கட்சிகளுமே திராவிடக் கட்சிகளின் ஆதரவுடனேயே தமது அடையாளங்களைத் தமிழ்நாட்டில் நிலைநிறுத்தியிருக்கின்றன. முன்னரொருதடவை பாரதீய ஜனதா ஆட்சியமைப்பதற்கு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கடலைக் கடப்பதற்குக் கிடைத்த மண் குதிரையாகியது. ஆனாலும் இன்றும் பாரதீய ஜனதா ஜெயலலிதாவுடன் கூட்டணி ஏற்படுத்திக்கொள்ள விரும்புகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரையில் பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியரசில் திராவிட முன்னேற்றக் கழகம், வைகோவின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியன பங்கு கொண்டன. ஆனாலுமே இறுக்கமான சூழ்நிலைகட்கு முகம்கொடுத்த சந்தர்ப்பங்களிலெல்லாம் பாரதீய ஜனதா தோழமையை வெளிப்படுத்த வில்லை என்பது இரண்டு கழகங்களினதும் நெருடலாகும். 2001இல் தமிழ்நாட்டில் ஜெயலலிதா பதவியேற்றுக் கொண்டதன் பின்னர் ஒன்றன்பின் ஒன்றான எதிர்மறையான சம்பவங்கள் ஏற்பட்டன. ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கலைஞர் கருணாநிதி, அவர்தம் மகன் மு.க. ஸ்டாலின் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். சட்டம்-ஒழுங்கு தொடர்பான குற்றச்சாட்டில் மத்திய அமைச்சர்களான முரசொலி மாறன், டி.ஆர். பாலு ஆகியோர் கைது செய்யப்பட்டனர். 2002 இல் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் வை.கோ. கைதுசெய்யப்பட்டு இன்றுவரை விடுதலையாகவில்லை. 2003 இல் மு.க. ஸ்டாலின் மீண்டும் கைது செய்யப்பட்டார். இத்தகைய அரசியல் கைதுகள் கலைஞர் கருணாநிதி, வை.கோ. ஆகியோரின் பாரதீய ஜனதாவுடனான உறவில் விரிசல்களை ஏற்படுத்தத் துணைபோகின்றன.

இந்துவாதக் கட்சியாக அடையாளப்படுத்தப்படுகின்ற பாரதீய ஜனதாவே தயங்குகின்ற மதமாற்றத்தடைச்சட்டம் உள்ளிட்ட செயற்பாடுகள் மூலமாக ஜெயலலிதா அரசு புதிய சமன்பாடுகளை ஏற்படுத்துகின்றது. கடந்த ஆட்சிக்காலத்தில் ஏற்பட்டதாகக் கூறப்படும் எண்ணற்ற ஊழல் குற்றச்சாட்டுகள் நீதிமன்ற வாசல்களைத் தட்டிய போதும் ஜெயலலிதா தீர்க்கமான சக்தியாக உருப்பெற்று வீறுநடை போடுகின்றார். இன்றைய காலங்களில் ஜெயலலிதா பாரதீய ஜனதாவுடனும், திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசுடனும் கூட்டணி யமைக்க விரும்புகின்றன. மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட்க் கட்சிகள் ஆகியன காங்கிரசு அல்லது பாரதீய ஜனதா அணியில் இணைந்துகொள்ள முயற்சிக்கின்றன. உப்பிட்ட தமிழ் மண்ணை எப்போதும் மறவேன் என்று கூறி... கடந்த சில வருடங்களாகவே அரசியலுக்கு இதோ வருகின்றார்... அதோ வருகின்றார்... என எதிர்பார்ப்புகளை உருவாக்குவது போன்ற பல தும்பத்துமான நிலைப்பாடுகளே தமிழகத் தேர்தல் பரப்புகளில் காணப்படுகின்றன.

என்றும்போலவே, இலங்கை அரசியலிலும் தெளிவற்ற தன்மைகளே காணப்படுகின்றன. கடந்த நூற்றாண்டின் மையப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளில் தென் அமெரிக்காவில் உருவாகிய சேகுவாரா சிந்தனைகளின் வெளிப்பாடான ஆயுதப்புரட்சி சித்தாந்தங்களில் ஈர்க்கப் பட்ட ஜேவிபி 1971இல் ரோகண விஜயவீர தலைமையில் ஆயுதப் புரட்சியை ஏற்படுத்த முயன்றது. அன்றைய அரசின் கடூரமான யுக்திகளால் ஜேவிபியின் நடவடிக்கைகள் முடக்கப்பட்டன. பின்னர் ஜெயவர்த்தனா அரசின் காலகட்டங்களில் ஜேவிபிக்குப் புனர்வாழ்வு கிடைத்தது. மாத்தறை, அம்பலாங்கொட போன்ற ஜேவிபியினது ஆதரவுப்பகுதிகளிலேயே வெற்றியீட்டத் திணறியவர்கள் 1978 இன் விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமையின்கீழ் கிடுகிடுவென வளர்ச்சியடைந்தனர். முதலில் ஜே.ஆர். உதவினார். அதன்பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆபத்பாந்தவனாகியது. இன்று பாராளு மன்றத்தில் 16 ஆசனங்களைப் பெற்றுள்ளது. அத்தோடு தென்னிலங்கை அரசியலில் வலுவான சக்தியாகவும் உருப்பெற்று வருகின்றது. இத்தகைய பின்னணியிலேயே கடந்த பத்து மாதங்களாக நடைபெறுகின்ற ஜேவிபி-ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டணி பேச்சு வார்த்தைகள் கவனத்தைப் பெறுகின்றது. 1970களில் ஜேவிபியின் பரமவைரி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி! ஜேவிபியின் அரசியல் மறுவாழ்விற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஏணியாகியது!

விஜய் குமாரதுங்கா கொலை விவகார சர்ச்சைகளும் கவனப் பரப்பிற்கு வருகின்றது. கடந்த மூன்று சகாப்தங்களில் ஜேவிபியினுடைய செயற்பாடுகளின் பின்னணியில் இன்றையகால நடவடிக்கைகள், நாளையபொழுது குறித்த அச்சங்கள் பனங்காட்டு நரிகளையுமே அசத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்கைக் குன்று

ஆட்சியதிகாரம் என்பது ஒவ்வாத சித்தாந்தங்களை உடையவர் களையும் இணைக்கின்ற பாலமாகும். 1970களில் பண்டாரநாயக்கா ஆட்சியில் இடதுசாரிகள் பங்குகொண்டார்கள். அன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரிகளும் கூட்டணி ஏற்படுத்திக் கொண்டமையை முரண்பட்ட சித்தாந்தங்களின் சங்கமம் என்று முற்றிலுமாகக் கொள்வதற்கில்லை. ஆனால் இன்றைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலை அப்படியல்ல! இன்று சர்வதேச அரங்கில் அதீதமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அன்றொரு காலத்தில் வலதுசாரியாக அடையாளப்பட்ட முதலாளித்துவ சித்தாந்தமும், இடதுசாரியாக அடையாளப்பட்ட ஒடுக்கப்பட்ட கீழ்த்தட்டு மக்கள், தொழிலாளர் நலன்சார்ந்த சித்தாந்தமும் சந்தித்திருக்கின்றன. இத்தகைய நிலை ஏற்படுவதற்கு அமெரிக்க-சோவியத் துருவத் தன்மைகள் மருவியமையும், அதனையடுத்து ஏற்பட்ட தாராளமயமாக்கல், சர்வதேசமயப்படுத்தல் என்பனவும் கணிசமாகப் பங்களித்துள்ளன. அத்தகைய மாற்றங்களின் ஒருவகையான பிரதிபலிப்பாகவே ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றிடையேயும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவர்களிடையேயான வேறுபாடுகள் குறைந்துள்ளன. அத்தோடு விகிதாசாரப்பிரதிநிதித்துவத் தேர்தல்கள் இலங்கை அரசியலைப் பெரிதும் மாற்றியமைத்துள்ளது. அதனாலன்றோ பொதுசன ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசிய முன்னணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசியலரங்கில் காணப்படுகின்றன.

தென்னிலங்கை அரசியலில் ஜேவிபி அச்சம்கலந்த அவதானிப்பையே தொடர்ந்து ஏற்படுத்துகின்றது. பொருளாதாரம், இனப்பிரச்சினை உட்பட்ட பலவிடங்களிலும் ஜேவிபி கடும்போக்கான நிலைப்பாடுகளையே கொண்டிருக்கின்றது. ஆயுதப் புரட்சியில் தோல்வி யுற்றவர்கள், பண்டாரநாயக்கா அரசின் கடூரமான அணுகுமுறைகளால் பாதிக்கப்பட்டவர்கள். ஒருகால கட்டத்தில் தேர்தல் அரசியலில் திணறியவர்கள். ஜெயவர்தனா ஆட்சியில் அரசியல் புனர்வாழ்வு பெற்றவர்கள். விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறையினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுகூலமடைந்தவர்கள். குமாரதுங்கா அரசுக்குத் தற்காலிக ஊன்று கோலாகியவர்கள். இன்று 16 பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக் கொண்டுள்ளதோடு, தென்னிலங்கை அரசியலில் வலுவான சக்தியாகவும் உருப்பெறுகின்றனர். சமாதான முயற்சிகளுக்கு எதிரான குரல்கள் தென்னிலங்கையில் வலுவடைந்து வருகின்ற வேளையில் ஜேவிபியுடனான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொடர்புகள் கவனிப்பைப் பெறுகின்றன. சனவரி 10இல் பொதுசன ஐக்கிய முன்னணியும் ஜேவிபியும் கூட்டாகக் கொழும்பில் நடத்திய பேரணி, அவ்விரண்டு கட்சிகளிடையேயான நெருக்கங்களை அடையாளம் காட்டுகின்றன.

2000 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல்களில் ஐக்கிய தேசிய முன்னணி பெற்ற வாக்குகளிலும் அதிகமான வாக்குகளைப் பொதுசன ஐக்கிய முன்னணியும் ஜேவிபியும் பெற்றிருந்தன. அந்தவகையில் ஐக்கிய தேசிய முன்னணியைத் தோற்கடிப்பதற்காக மட்டுமே பொதுசன ஐக்கிய முன்னணியும் ஜேவிபியும் ஒன்றுகூடுகின்றன. ஆனால் அன்றைய காலப்பகுதியில் சிறுபான்மைச் சமூகங்களின் ஆதரவு பொதுசன ஐக்கிய முன்னணிக்குக் கிடைத்தது. அத்தகைய ஆதரவு இன்றுள்ளதா என்பதுவும் கேள்வியாகின்றது. இருந்தபோதிலும் பொதுசன ஐக்கிய முன்னணியும் ஜேவிபியும் ஒரே சின்னத்தில் போட்டியிடுகின்ற பட்சத்தில், அஃது ஐக்கிய தேசிய முன்னணிக்குச் சவாலாக அமையும் என்று கருதவும் இடமுண்டு.

இன்றைய காலங்களின் முக்கிய நிகழ்வாகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-ஜேவிபி கூட்டணி கருதப்படுகின்றது. ஜேவிபியுடன் கூட்டணி யமைத்துள்ள போதிலும், ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் தொடர் பாடல்களைப் பேணிக்கொள்வதில் சனாதிபதி குமாரதுங்கா ஆர்வத்தைக் கொண்டுள்ளார். கடந்த நவம்பரில் உருவாகிய சனாதிபதி-பிரதமர் சச்சரவுகளைத் தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட மலிக் சமரவீர, மனோ டிட்வெல சந்திப்புகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாகாணசபைத் தேர்தல்களுக்கு முன்பாகப் பாராளுமன்றத்திற்கான இடைத்தேர்தலை ஏற்படுத்த வேண்டும் என ஜேவிபி கருதுகின்றது. அனைத்து மாகாணங்களிற்கான தேர்தலையும் ஒரே தினத்தில் நடத்திவிட வேண்டுமென விக்கிரமசிங்க அரசு விரும்புகின்றது. அதற்கு சனாதிபதியும் உடன்பட்டுள்ளார். அதன்பிரகாரம் மாகாண சபைத் தேர்தல்கள் எதிர்வரும் சித்திரைப் பிற்பகுதியில் நடைபெறலாம் எனக் கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேவிபியுடனான கூட்டணியில் சனாதிபதி குமாரதுங்கா அதீதநாட்டம் கொண்டிருக்கவில்லை என்பதாகவும், அனுரா பண்டார நாயக்கா மங்கள சமரவீர வகையறாக்கள் ஏற்படுத்திய அழுத்தமே கூட்டணியேற்பட்டதற்கான காரணமெனவும் வியாக்கியானம் செய்யப் படுகின்றது. ஜேவிபியுடனான கூட்டணியைக்காட்டி விக்கிரமசிங்க தரப்புடனான பேரங்களை நடத்தலாமென சனாதிபதியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனான கூட்டணி மூலம் சுமார் 30 வரையிலான பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றிக் கொள்ளலாமென ஜேவிபியும், வெண்ணெய் திரளும்போது தாழியை உடைப்பதா என்னும் ஏக்கத்துடன் விக்கிரமசிங்கவும் உள்ளனர். இதனிடையே பொருளாதாரத்தை வளர்முகத்திசையில் திருப்பி சர்வதேச நிதியுதவிகளைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியமும் காணப்படுகின்றது.

இந்தியாவிலும் பொதுத் தேர்தல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் கூட்டணிகள் ஏற்பட்டுள்ளன. தொகுதிப் பங்கீடுகளும் நடைபெறுகின்றன. திராவிட முன்னேற்றக் கழகமும் காங்கிரசும் கூட்டணியமைத்துள்ளன. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் சுமார் 550 நாள்களிற்கு மேலாக வைகோ சிறை வைக்கப்பட்டுள்ளார். ஈழத்தமிழர்களுடைய விடுதலைப் போராட்டத்திற்குத் திட்டவட்டமான ஆதரவை நெடுங்காலமாகவே வழங்குபவர். 1980 களிலிருந்தே இந்தியப் பாராளுமன்றத்தில் ஈழத்தமிழர் அவலங்களை வெளிப் படுத்துபவர். தில்லி தார்பாரிலிருந்தாலென்ன, சிறைச்சாலை சீமெந்து தரையிலிருந்தாலென்ன, கொள்கையையும் கூடவே வைத்துக்கொள்ளும் அரசியல்வாதியாக வைகோ மிளிர்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுங்காலக் கனவு

கடந்த சனவரி 20இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜேவிபியும் ஒன்றிணைந்து ஐக்கிய மக்கள் முன்னணியை உருவாக்கியதைத் தொடர்ந்து அரசியல்களம் விறுவிறுப்படைந்துள்ளது. தினேஷ் குணவர்தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணியும், பெஃரியல் அஷ்ராபினது தேசிய ஐக்கிய முன்னணியும் புதிய அணியில் இணைந்திருக்கின்றன. 2000ஆம் ஆண்டில் சுமார் ஐந்துவார காலத்திற்குப் பொதுசன ஐக்கிய முன்னணி அரசிற்கு ஜேவிபி ஊன்றுகோலாகியது. இன்று ஆட்சியைக் கைப்பற்றும் இலக்குடன் இரண்டு கட்சிகளும் பூர்வாங்கமாக இணைந்துள்ளன. கூட்டணியமைப்பதற்கான பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கே 10 மாதங்கட்கு மேலாகவே எடுத்துக் கொண்ட இரண்டு கட்சிகளுமே, குறுகியகால ஆதாயங்களைக் கருத்தில் கொண்டே செயற்படுகின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களை ஜேவிபி கவர்ந்துகொள்வதற்கான ஆரம்பமாகவே இப்புதிய கூட்டணியைக் கருதமுடிகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவுத்தளத்தை ஊடுருவும் ஜேவிபியின் நெடுங்காலக் கனவு மெய்ப்படுவதற்கான காலம் கனிகின்றதா என்னும் கேள்வி ஏற்படுகின்றது.

பாராளுமன்றத் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டுமென்னும் நிலைப்பாட்டையே ஜேவிபி கொண்டிருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணியமைத்தபோது, அதனை முன்நிபந்தனையாகவே தெரிவித்திருந்தது. ஆனாலும் பாராளுமன்றத்தைக் கலைப்பதில் சனாதிபதி குமாரதுங்காவிற்கு ஆர்வமிருக்கவில்லை. அதுமட்டுமல்லாமல், விக்கிரமசிங்க அரசின் விருப்பத்திற்கமைவாக அனைத்து மாகாணசபைகளிற்குமான தேர்தலை ஒரே தினத்தில் நடத்துவதற்கான ஒப்புதலை வழங்கினார். சனாதிபதி-பிரதமர் உறவை மேம்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. விக்கிரமசிங்க அரசைக் கலைப்பதில்லை என்பதை எழுத்துமூலமான உறுதிமொழியாகவே சனாதிபதி குமாரதுங்கா வழங்கியிருந்தார். ஆனாலும் அரசியலரங்கு துரிதமாக மாற்றமடைந்தது. ஜேவிபியுடன் மலர்ந்த உறவும், அதன்மூலம் கிடைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்வேகமும் உட்கட்சியழுத்தங்களும் சனாதிபதியினுடைய நடவடிக்கை களை நிருணயித்தன. பொதுசன ஐக்கிய முன்னணியின் லஷ்மன் கதிர்காமரும் டி.எம். ஜயரட்னாவும் ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சரவையில் சேர்க்கப்பட்டனர். அதன்பின்னர் விக்கிரமசிங்க அரசு கலைக்கப்பட்டது. மேலும் மூன்றாண்டு பதவிக்காலத்தைக் கொண்டிருந்த 225 உறுப்பினர்களடங்கிய 12ஆவது பாராளுமன்றம், பெப்ரவரி 7ஆம் திகதி நள்ளிரவுடன் கலைக்கப்பட்டது.

சென்ற நான்கு வருடத்தில் மூன்றாவது பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. வேட்பு மனுக்கள் பெப்ரவரி 17ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை தாக்கல் செய்யப்படவுள்ளன. வாக்குப் பதிவு ஏப்பிரல் 2 இல் நடைபெறவுள்ளது. ஆட்சி அமைப்பதற்குத் தேவையான 113 ஆசனங்களை விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமையில் எந்தவொரு கட்சியும் தனித்துப் பெற்றுக்கொள்வது எளிதல்ல! ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைக்கும் பட்சத்தில் சமாதானம் எத்தகைய திசையில் நகரும் என்பது இன்றிருக்கக்கூடிய அச்சமாகும். 2001இல் வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரத்தை வளர்முகதிசையில் திருப்பி, சமாதான நடவடிக்கைகளை ஆரம்பித்த ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியேற்படும் பட்சத்தில் சனாதிபதி-பிரதமர் முறுகலும் கைகோத்துக் கொள்ளும் வாய்ப்புள்ளது.

கடந்த 16 ஆண்டுகளாக நடைமுறையிலுள்ள ஏழு மாகாண சபைகளில், வடமேல் மாகாண சபை பெப்ரவரி 9லும், ஏனைய ஆறு மாகாண சபைகள் அடுத்த வைகாசியிலும் பதவிக் காலத்தைப் பூர்த்தி செய்கின்றன. மாகாண சபைத் தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவதற்கான சட்டமசோதாவொன்று பெப்ரவரி 9இல் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்படத் திட்டமிட்டிருந்தது. ஆரம்பத்தில் மாகாண சபை அமைப்பை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்த்தது. தேர்தல்களைப் பகிஷ்கரித்தது. அதன்பின்னர் குமாரதுங்கா மேல் மாகாண முதலமைச்சரானார். இன்று மத்திய மாகாணம் தவிர்ந்த ஆறு சபைகளும் பொதுசன மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களால் பரவலான தெளிவின்மை காணப்படுகின்றது. சனாதிபதியின் பதவிக்காலம் குறித்த சர்ச்சையுள்ளது. இதனிடையே காபந்து அரசின் அமைச்சர்களின் எண்ணிக்கையைப் பதினைந்தாகக் குறைக்கும்படி சனாதிபதி கோரியுள்ளார்.

வாஜ்பாய் தலைமையில் 301 உறுப்பினர்களின் ஆதரவுடன் 1999இல் பதவியேற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணியரசின் பாராளு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றபலம், தி.மு.க., மறுமலர்ச்சி தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சி உள்ளிட்ட 5 கட்சிகள் வெளியேறியபோது 277 ஆகக் குறைந்திருந்தது. அதன்பின்னர்ப் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடைந்து பொதுத் தேர்தல்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. 40 பாராளுமன்றத் தொகுதிகளைக் கொண்ட தமிழ்நாட்டில் கூட்டணிகள் மாறுகின்றன. சுமார் இரு சகாப்தங்களின் பின்னர்த் தி.மு.க. காங்கிரசுடன் கூட்டணி யமைத்துள்ளது. வை.கோ., பாட்டாளி மக்கள் கட்சி, கம்யூனிஸ்டு கட்சியின் மூன்று பிரிவுகள், முசுலிம் லீக் ஆகியன கலைஞருடன் கைகோத்துள்ளன. தமிழக அரசியலில் வைகோவும் இராமதாசும் ஆட்சியை நிருணயிக்கும் சக்தியாகக் காணப்படுகின்றனர். அவர்களுடைய ஆதரவின்றி முன்னைய சட்டமன்றத் தேர்தல்களில் தி.மு.க.வும், பாராளுமன்றத் தேர்தல்களில் அண்ணா தி.மு.க.வும் தோல்வியைத் தழுவின. விடுதலைச் சிறுத்தைகளின் திருமாவளவனும், புதிய தமிழகம் கிருஷ்ணசாமியும் தனித்துவிடப்பட்டுள்ளனர். தேர்தல்களம் விறுவிறுப்படையும் வேளையில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வேலையிழந்த சுமார் 900 ஊழியர்களை அரசு பணியில் சேர்த்துள்ளது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட வை.கோ.வும் 2002 இல் கைது செய்யப்பட்ட 70 வயது நிரம்பிய பழ. நெடுமாறனும் பிணையில் விடுதலையாகியுள்ளனர். இவ்வாறாக தேர்தல்களை மையப்படுத்தியதாக அரசியல் சுழல்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியல் சகாப்தம்

இந்திய அரசியலில் தனது ஆதரவைத் தக்கவைத்துக் கொள்வதற்குக் காங்கிரசு கட்சி கடந்த இரு சகாப்தங்களாகவே திணறுகின்றது. 1990 களில் அமைந்த நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரசு ஆட்சி, காங்கிரசு கட்சியில் மட்டுமின்றிப் பரவலான அரசியல் பரப்புகளிலும் அதீதமான மாற்றங்களை ஏற்படுத்தியது. இந்தியாவில் கூட்டணியரசுக் கோட்பாடு காலூன்றியது. காங்கிரசு கட்சியினுடைய தலைமைப் பொறுப்பைச் சோனியா காந்தி ஏற்றார். புதிய தலைமை வேகத்தை ஏற்படுத்தி நம்பிக்கைகளை மலரவைத்தது. ஆனாலும் தேர்தல்களில் திடகாத்திரமான வெற்றிகள் கிடைக்கவில்லை. காந்தி குடும்பத்தினது தலைமையினால் வெற்றிகளைக் குவித்துவிடலா மென்னும் எதிர்பார்ப்பு தவிடுபொடியாகியது. சோனியா காந்திக்கு எதிரான குரல்கள் வலுப்பெற்றன. இத்தாலியர் ஒருவர் இந்தியாவின் தலைமை அமைச்சராகலாமா? என்னும் கேள்வி ஓங்கியொலிக்க ஆரம்பித்தது. காங்கிரசு கட்சியின் இரண்டாம் நிலை தலைவர்களான மகாராஷ்டிரத்தின் சரத் பவார், உத்திர பிரதேசத்தின் என்.டி. திவாரி, முன்னாள் சபாநாயகர் பி.ஏ. சங்மா போன்றவர்கள் ஒன்று திரண்டனர். அதன்பின்னர் சோனியாவுக்கு எதிரான பிரச்சாரங்கள் வேகமடைந்தன. தேசியவாத காங்கிரசு கட்சி உருவாகியதோடு மத்தியப் பிரதேசத்தில் ஆட்சியையும் கைப்பற்றிக் கொண்டது. அதுவே காங்கிரசின் கட்சியிலுள்ள சோனியா காந்தியின் ஆதரவுத்தளத்தின் ஆணிவேர்களை அசைத்தது.

வி.பி. சிங், ஐ.கே. குஜ்ரால், தேவேகௌடா அரசுகள் மட்டுமல்லாமல், பிரதான கட்சியாக அதுவரையில் கருதப்பட்ட காங்கிரசு கட்சியும், 1980 களிலிருந்து பாராளுமன்ற அரசியலில் வளர்ச்சியடைந்த பாரதீய ஜனதாவும் கூட்டணியரசு கோட்பாடுகளை வரித்துக்கொண்டன. கடந்த ஐந்தாண்டுகளாகப் பாரதீய ஜனதாவுடைய கூட்டணியரசே நடைபெற்றது. 1998இல் முதல் தடவையாக பாரதீய ஜனதா அரசு அமைந்தபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் குறுகிய காலத்திலேயே காங்கிரசுடன் கூட்டணியமைத்துக் கொண்டது. 1999 இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதீய ஜனதா அரசு கவிழ்வதற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் காரணமாகியது.

இன்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் பாரதீய ஜனதாவும் அடுத்த தேர்தல்களை இலக்குவைத்துக் கூட்டணி சேர விரும்புகின்றன. மகாராஷ்டிரத்தில் தீவிர இந்துவாத கட்சியான சிவசேனாவுடனும், ஒரிஸ்ஸாவில் பட்னாயக்காவின் ஜனதா தளத்துடனும், பீகாரில் ஜனதா தளத்தின் மாநிலப் பிரிவுடனும், பாதுகாப்பு மந்திரி ஜோர்ஜ் பெர்னாண்டசின் சமாஜவாதிக் கட்சியுடனும் பாரதீய ஜனதா கூட்டணி அமைத்துள்ளது. சுமார் 20 வருடங்களின் பின்னர்த் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் காங்கிரசு கூட்டணியமைத்துள்ளது. அத்தோடு பீகாரில் ராம்விலாஸ் பஸ்வானின் லோக் ஜனசக்தியுடனும், மகாராஷ்டிரத்தில் சரத் பவாரின் தேசியவாத காங்கிரஸ் கட்சியுடனும் கூட்டணியமைத்துள்ளது. இரண்டு பெரிய கட்சிகளுமே உத்திரப்பிரதேசத்தில் முன்னாள் முதல்வர் மாயாவதி தலைமையிலான பகுஜன் சமாஜ் கட்சியுடன் கூட்டணியேற்படுத்த பிரயத்தனங்களை மேற்கொண்டுவருகின்றன.

திராவிட முன்னேற்றக் கழகம் 2001 ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தல்களில் தலித் அமைப்புகளான விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம் ஆகியவற்றுடனும், இந்துவாதக் கட்சியாக அடையாளப் படுகின்ற பாரதீய ஜனதாவுடனும் கூட்டணியமைத்திருந்தது. ஆனால் இன்று சாதிக்கட்சிகளுடனும் மதச்சார்புடையவர்களுடனும் கூட்டணியமைப்பதில்லை என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளது. மூன்று வருடங்கட்கு முன்னர்ப் புனிதர்களாகக் கருதப்பட்ட இவ்விரண்டு சாதிக்கட்சிகளும் இந்துவாதிகளும், இன்று புனிதத்தன்மையை இழந்து விட்டனவா என்னும் கேள்வி எழாமலில்லை. ஆனாலும் வட தமிழ் நாட்டில் அதிகமாக வாழ்கின்ற வன்னியர் சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் பாட்டாளி மக்கள் கட்சியுடன் கூட்டணி ஏற்படுத்திக் கொண்டுள்ளது. அத்தோடு தென் தமிழகத்தில் அதிகமாக வாழும் தேவர் சமூகத்தினுடைய ஆதரவைக் கவனத்தில் கொண்டே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நடவடிக்கைகள் அமைக்கப்படுகின்றன. தென்தமிழகத்திலுள்ள பதினொரு தொகுதிகளில் இராமநாதபுரம், திருச்செந்தூர் ஆகிய இரண்டு தொகுதிகளிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிடுகின்றது. தேவர் சமூகத்தின் ஆதரவு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடைத்துள்ளதாகவும் பரவலாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படுகின்றது. ஆக திமுகவின் நடவடிக்கையிலுள்ள சந்தர்ப்பவாதத்தை வெள்ளிடைமலையாகக் காணமுடிகின்றது.

சுமார் ஒன்றரையாண்டுகளின் பின்னர் விடுதலையாகியுள்ள வை.கோ. இன்று பெரிதும் கவனிக்கப்படுகின்றனர். பாரதீய ஜனதா கூட்டணியரசில் பங்காளியாக இருந்த கட்சியின் தலைவர்! பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது ஆதரித்தவர். அதேசட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டவர். அரசியல் காரணங்களுக்காக அதிககாலம் சிறையிலிடப்பட்ட அரசியல் தலைவர், நீதிமன்றத்துக்கும் சிறைச்சாலைக்கும் பந்தாடப்பட்ட மக்கள் தலைவர். நீதிமன்றத்தில் அனல்பறக்க முழங்கியவர்! ஆனால் தொண்டர்களைத் தெருவில் இறக்கிப் பரபரப்பு அரசியல் செய்யாத தலைவர்! மத்திய அரசுக்கு வழங்கிய ஆதரவை இக்கட்டான சூழ்நிலைகளிலேயும் தவறாகப் பயன்படுத்தாதவர்! ஆதரவை வாபஸ் பெற்றுக்கொள்வதாக அச்சுறுத்தாதவர்! பல்லாண்டுகளாகவே இந்தியப் பாராளுமன்றத்தில் ஓங்கியொலிக்கும் தமிழ்க்குரலின் சொந்தக்காரர்! தில்லித் தர்பாரில் தமிழ் உணர்வுகளையும் ஈழத்தமிழரின் அவலங்களையும் தீர்க்கமாக வெளிப்படுத்துபவர்! திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்து, மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகமாகப் பரிணமித்து, அரசியல் மேன்மைக்குச் செயல்வடிவம் கொடுக்கும் கண்ணியமான அரசியல்வாதி! தமிழக அரசியலில் நம்பிக்கைகளை ஏற்படுத்தும் அரசியல் தலைவர்! புதியதோர் அரசியல் சகாப்தமாக வை.கோ. மலர்ச்சியடைவது கண்கூடாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமை மாறுகின்றது

புரிந்துணர்வு உடன்படிக்கையும் போர்நிறுத்தமும் ஏற்பட்டு இரண்டாண்டுகள் கழிந்துவிட்ட நிலையிலும், எத்தகைய ஆரோக்கிய மான மாற்றங்களும் ஏற்படவில்லை. அரசியல் களமும் தெளிவடைய வில்லை என்பதல்ல, மென்மேலும் குழப்பமடைகின்றது. பெப்ரவரி 7 இல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. ஏப்பிரல் 2 இல் நடைபெறவுள்ள 13ஆவது பாராளுமன்றத்திற்கான தேர்தல்கள் திடமற்ற நிலைப்பாடு களின் களமாகின்றது.

இருபத்திரண்டு மாவட்டங்களிலுள்ள சுமார் பன்னிரண்டு மில்லியன் வாக்காளர்கள் தேர்தல்களில் வாக்களிக்கத் தகுதியுடையவர் களாகக் காணப்படுகின்றனர். 196 உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் மற்றும் நேரடி வாக்குப் பதிவு வாயிலாகவும், 29 உறுப்பினர்கள் நாடளாவிய ரீதியாகக் கட்சிகள் பெறக்கூடிய வாக்குகளின் அடிப்படையிலுமாகத் தெரிவாகவுள்ளனர். வேட்புமனு தாக்கல் பெப்ரவரி 23இல் முடிவடைந்துள்ளது. 225 பாராளுமன்ற ஆசனங்கட்கு, 24 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலிருந்தும், 192 சுயேச்சைக் குழுக்களிலிருந்தும், 6,024 வேட்பாளர்கள் போட்டி யிடுகின்றனர். 2000 இல் சுமார் 5,477 வேட்பாளர்களும், 2001ஆம் ஆண்டில் 4,943 வேட்பாளர்களும் போட்டியிட்டனர். அந்த வகையில் மிக அதிகப்படியான வேட்பாளர்கள் இம்முறை போட்டியிடுகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-ஜேவிபியின் புதிய அவதாரமான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, அதவுல்லாவின் அஷ்ராப் காங்கிரசு, ஈழமக்கள் விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலைக் கழகம் ஆகியன அணி திரண்டுள்ளன. புதிதாக ஜாதிக ஹெல உறுமயவும் களமிறங்கியுள்ளது. அதன்சார்பில் பௌத்தகுருமார் தேர்தல்களில் போட்டியிடவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. அதனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-ஜேவிபி வெற்றி வாய்ப்புகள் பாதிக்கப்படலாம் எனவும் கணிக்கப்படுகின்றது. ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுப்பட்டியலில் இணைந்து நுவரெலிய மாவட்டத்தில் மூன்று அபேட்சகர்களைக் களமிறக்குகின்றது. அதுதவிர பதுளை, கண்டி, மாத்தளை, கொழும்பு, இரத்தினபுரி ஆகிய இடங்களில் தலா ஒரு அபேட்சகரையும் களமிறக்குகின்றது. முன்னாள் அமைச்சர் காமினி திசநாயக்காவின் புதல்வர் நவீன் திசநாயக்கர் நுவரெலிய மாவட்டத்தில் போட்டியிடாமை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்குச் சாதகமானதாகவே கருதப்படுகின்றது. மனோ கணேசன் தலைமையிலான மேற்கு மாகாண மக்கள் முன்னணி, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுப் பட்டியலில் போட்டியிடுகின்றது.

ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரசு வடகிழக்கிற்கு வெளியே ஐக்கிய தேசிய முன்னணியுடன் கூட்டுச்சேருகின்றபோதிலும், வடகிழக்குப் பிரதேசங்களில் தனித்துப் போட்டியிடுகின்றது. சுமார் 22 ஆண்டுகட்கு முன்பாக அமரர் அஷ்ராப் உருவாக்கிய ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரச இன்று முக்கியமான கால கட்டங்களில் காணப்படுகின்றது. ராவுப் ஹக்கீம் தலைமையில் ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரசும், பெஃரியல் அஷ்ராப் தலைமையில் எம்.எச். சேகு இசாடின், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா ஆகியோரை உள்ளடக்கிய தேசிய ஐக்கிய முன்னணியும், ஏ.எல்.எம். அதவுல்லா தலைமையிலான அஷ்ராப் காங்கிரசுமாக மூன்றணிகள் தேர்தல்களில் கலந்துகொள்கின்றன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இதுவரையில் கலந்துகொண்ட நான்கு தேர்தல்களில் 1994, 2000 மற்றும் 2001 இல் தேசியக் கட்சிகளுடன் இணைந்தே போட்டியிட்டது.

முதலாவதாக 1989 இல் நான்கு ஆசனங்களைப் பெற்றது. அதன்பின்னர்ப் பொதுசன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து 1994இல் 7 உறுப்பினர்களையும், 2000இல் 11 உறுப்பினர்களையும் பெற்றது. 2001இல் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து 12 ஆசனங்களைக் கைப்பற்றியது. இம்முறை பெஃரியல் அஷ்ராப், அதவுல்லா அணிகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிடுகின்றன. ராவுப் ஹக்கீம் தலைமையிலான அணி ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடுகின்றது. அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களாக சமீயூர் நூர் முகம்மது ஷாஜினி வன்னியிலும், ஷாகுல் ஹமீட் திருகோணமலையிலும் போட்டியிடுகின்றனர். ஆக வடகிழக்கில் மும்முனைப் போட்டி உருப்பெற்றுள்ள நிலையில் கடந்த இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகாப்தங்களாக ஒருமித்து ஒலித்த முசுலிம்குரல் வரலாற்றுப் பதிவாகிவிடுமோ என்ற கருத்து எழாமலில்லை.

இந்தியத் தேர்தல்கள் எப்பிரல் அல்லது மே மாதங்களில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஜெயலலிதாவினுடைய பிறந்த தினமான பெப்ரவரி 24 இல் அண்ணா திமுக வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 39 தொகுதிகளும், பாண்டிச்சேரியின் 1 தொகுதியுமாகச் சேர்த்து மொத்தமுள்ள 40 தொகுதிகளில் பாரதீய ஜனதா 6லும், காங்கிரசு 10லும், திமுக 15லும், அண்ணா திமுக 33லும், மறுமலர்ச்சி திமுக 4லும், பாட்டாளி மக்கள் கட்சி 6லும் போட்டியிடுகின்றன. சுமார் 14 தொகுதிகளில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையே நேரடியான போட்டி ஏற்படலாமென ஊகிக்கப்படுகின்றது. மத்தியில் அமையக்கூடிய காங்கிரசு அரசுக்கு ஆதரவு வழங்கினாலும்கூடத் தன்னுடைய கட்சி ஆட்சியில் பங்கேற்காது என வை.கோ. அறிவித்துள்ளார். அத்தோடு எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல்களில் வை.கோ. போட்டியிடவில்லை என்பதும் கவனிக்கத்தக்கதாகும். திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய கட்சியின் தென்மண்டல மகாநாட்டில் பதினோர் ஆண்டு இடை வெளியின் பின்னர் வை.கோ. கலந்துகொண்டபோது உற்சாகமான வரவேற்பைப் பெற்றிருக்கின்றார். எத்தகைய ஊகங்களும் கணிப்புகளும் உந்துதலை ஏற்படுத்தி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் உருவாகக் காரணமாகியதோ... எத்தகைய நிலைப்பாடு ஏற்படக்கூடாது எனக் கோபாலபுரத்தில் கருதப்பட்டதோ... இன்று அது நடைபெறு கின்றது! திராவிடப் பாரம்பரியத்தின் அடுத்த தலைவராக வை.கோ. வீறுகொள்கின்றார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா நட்சத்திரங்கள் தலைவர்களா?

இலங்கையில் சனாதிபதி ஆட்சிமுறையை மாற்றவேண்டுமென்பதில் இரண்டு பெரிய கட்சிகளுமே ஆர்வம் கொண்டுள்ளன. ஆனால், எப்போது மாற்றுவதென்பதிலேயே வேறுபாடுகள் காணப்படுகின்றன. இரண்டு தரப்புமே சனாதிபதி தேர்தல்களில் வெற்றிபெறும்போது பதவியைக் காப்பாற்றவும் தோல்வியடைகின்றபோது ஒழித்துக்கட்டவும் விரும்புகின்றன. ஆரம்பங்களில் சனாதிபதி பதவியை ஆறு மாதங்களில் ஒழிப்பதாகக் குமாரதுங்கா சூளுரைத்தார். அதன்பின்னர் இரண்டாவது தடவையும் சனாதிபதி தேர்தல்களில் வெற்றி பெற்றார். தற்பொழுது தொடர்ந்து பதவி வகிக்கமுடியாத நிலையில், சனாதிபதி ஆட்சிமுறையை மாற்றுவதற்கு விரும்புகின்றார்.

பொதுத்தேர்தல் பிரச்சாரங்களை ஐக்கிய தேசிய முன்னணி கண்டியிலிருந்தும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அனுராத புரத்திலிருந்தும் ஆரம்பித்துள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய பிரச்சாரம் திருமலையில் ஆரம்பமாகியுள்ளது. யாழ்ப்பாணத்தில் மாவை சேனாதிராஜா, வன்னியில் செல்வம் அடைக்கலநாதன், திருமலையில் இரா. சம்பந்தன், அம்பாறையில் சந்திரநேரு, மட்டக்களப்பில் ஜோசப் பரராஜசிங்கம் தலைமையில் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வரதன் அணி, ஈழ மாணவர் புரட்சிகர அமைப்பின் சங்கர்ராஜி அணி ஆகியவற்றுடன் இணைந்து ஈழமக்கள் சனநாயக கட்சி வடகிழக்கிலும் கொழும்பு மாவட்டத்திலும் போட்டியிடுகின்றது. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் வன்னியிலும் மட்டக்களப்பிலும் போட்டியிடுகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆனந்தசங்கரி குழு சுயேச்சையாக யாழ் மாவட்டத்தில் போட்டியிடுகின்றது. ஐக்கிய தேசிய முன்னணியும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் குடாநாட்டில் போட்டியிடவில்லை. ஆனால் மக்கள் ருகுணுக் கட்சி, ஜாதிக ஹெல உறுமய, சுவராஜ்ய கட்சி ஆகியன அங்குப் போட்டியிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடகிழக்கின் ஐந்து தேர்தல் மாவட்டங்களிலுள்ள 32 ஆசனங்கட்கு, 989 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். யாழ் மாவட்டத்தில் ஒன்பது ஆசனங்கட்கு 120 வேட்பாளர்களும், திருகோணமலையில் ஐந்து ஆசனங்கட்கு 112 வேட்பாளர்களும், மட்டக்களப்பில் ஐந்து ஆசனங்கட்கு 176 வேட்பாளர்களும், வன்னியில் ஆறு ஆசனங்கட்கு 171 வேட்பாளர்களும் அம்பாறை மாவட்டத்தில் ஏழு ஆசனங்கட்கு 410 வேட்பாளர்களும், களமிறங்கியுள்ளனர். ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரசு மூன்று பிரிவுகளாகிப் போட்டியிடுகின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பிலும் முசுலிம் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அதனால் முசுலிம் வாக்குகள் பிரியக்கூடிய சாத்தியக்கூறுகளும் காணப்படுகின்றன.

அண்மைக் காலங்களாக ரஜனிகாந்த் அரசியல்பிரவேசம் குறித்த ஊகங்கள் உயிர்த்தெழுகின்றன. வெள்ளித்திரையில் மின்னுவோர் அரசியலிலும் ஜொலிக்கலாம் என்னும் நம்பிக்கை காணப்படுகின்றது. அரசியலில் நிலைபெறுவதற்கு வெற்றிகரமான சினிமா பின்னணி மட்டும் போதுமானதா? என்னும் கேள்வி எழுகின்றது. அண்ணா முதல் கலைஞர் ஈறாக திராவிட இயக்கத்தில் பலரும் ஏதோ ஒரு கால கட்டத்தில், ஏதோ ஒருவிதத்தில் சினிமாவுடன் சம்பந்தப்பட்டிருக் கின்றார்கள். திருவாரூர் முத்துவேல் கருணாநிதி என்னும் திரைப்பட வசனகர்த்தாவோ, மருதூர் கோபாலபிள்ளை இராமச்சந்திரன் என்னும் நடிகரோ, ஜெயலலிதா ஜெயராமன் என்னும் நடிகையோ அரசியலில் அழுத்தமான வெற்றிகளை ஈட்டியமையால் திரைப்படத்துறையைச் சேர்ந்தவர்களெல்லாம் அரசியலில் வெற்றியீட்டலாம் என்று கருத முடியாது. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் முதல் எம்.ஜி.ஆரின் அரசியல் வாரிசுகளாகப் பிரகடனப்படுத்தப்பட்ட ராமராஜன், பாக்கியராஜ், திராவிட முன்னேற்றக் கழகத்தில் முன்னிலைப்படுத்தப்பட டி. ராஜேந்தர் என சினிமாவிலிருந்து அரசியலுக்குத்தாவி அடையாளம் இழந்தவர் களின் பட்டியல் நீளமானது.

மருதநாட்டு இளவரசி, மந்திரிகுமாரி, மர்மயோகி, சர்வாதிகாரி போன்ற வெற்றிப்படங்களை எம்.ஜி.ஆர் வழங்கிய வேளையில், 1952 இல் வெளிவந்த பராசக்தி சிவாஜி கணேசனை முதல்நிலைக்கு ஏற்றியது. அதனால் எம்.ஜி.ஆருடைய படவாய்ப்புகள் குறைந்தன. திராவிட முன்னேற்றக் கழக மகாநாடுகளில் நாடகம் நடத்துவதற்காகவும் பேசுவதற்காகவும் எம்.ஜி.ஆர். அழைக்கப்பட்டார். அத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பங்களில் எம்.ஜி.ஆர். பொதுமக்களுடன் இயல்பாய்ப் பழகினார். மக்கள் ஆதரவை லாவகமாக வளர்த்துக்கொள்ள ஆரம்பித்தார். அதன்பின்னர் வெளிவந்த மலைக்கள்ளன், குலேபகவல்லி, மதுரை வீரன், தாய்க்குப் பின் தாரம் போன்ற எம்.ஜி.ஆரின் படங்கள் வெற்றி பெற்றன. அதனைத் தொடர்ந்து எம்.ஜி.ஆருடைய அரசியல் பிரவேசமும் தீவிரமாகியது. தன்னைப்பற்றிய அபிப்பிராயத்தைப் பேணிக்கொள்வதில் எம்.ஜி.ஆம். அதீத அக்கறை செலுத்தினார். தன்னை நம்பியவர்களைக் கைதூக்கினார். தனது ரசிகர்கள் பாதிக்கப்படும்போது வெகுண்டெழுந்தார். 1972இல் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்த வேளையிலும் சமரசம் செய்வதற்கு விரும்பினார்.

ஆனால் தனது ஆதரவாளரான முசிறிப்புத்தன் கடுமையாகத் தாக்கப்பட்டபோது கொதித்தெழுந்தார். தெளிவாகத் திட்டமிட்டார். தீர்க்கமான முடிவுகளை எடுத்தார். அரசியலில் வலுவான சக்தியாக உருவாக்கினார். ஆனால் ரஜனி விடயத்தில் அத்தகைய பண்புகளைக் காணமுடியவில்லை. பாட்டாளி மக்கள் கட்சி-ரஜனிகாந்த் ரசிகர் உரசல், காவிரிப் பிரச்சினை போன்றவை அவதானிப்பைப் பெற்றன. ஆனாலும் திட்டவட்டமான செயற்பாடுகளைக் காணமுடியவில்லை. இந்நிலையில் தமிழக அரசியலில் ரஜனிகாந்த் ஒரு அறுதியான சக்தியாக உருப் பெறுவாரா? என்பது நிகழ்காலத்தில் தொக்கி நிற்கும் கேள்வியாகும். தமிழகத் தேர்தல்களுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளது. வேட்பாளர் பட்டியல் வெளியாகியுள்ளது. ஆனாலும் தொகுதிப் பங்கீடு கட்சிகளிடையே உரசல்களை ஏற்படுத்துகின்றது. பாட்டாளி மக்கள் கட்சி-ரஜனிகாந்த் உராய்வுகளும் தொடர்கின்றது. திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணியில் கலைஞர் முதன்மைப் பிரச்சாரகராக விளங்குகின்ற போதிலும் வை.கோ. நட்சத்திரப் பிரச்சாரகராகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழ்நிலைக் கைதி

தமிழகத்தில் ரஜனிகாந்த் அரசியல் பிரவேசம் குறித்த பரபரப்புச் செய்திகள் தொடர்ந்தும் அவதானிப்பைப் பெறுகின்றது. 1996 தேர்தல்களில் வெளிப்படையாக அரசியலில் செயற்படக்கூடிய வாய்ப்பு ரஜனிக்குக் கிடைத்தது. இருந்தபோதிலும் கருப்பைய மூப்பனாரின் தமிழ் மாநிலக் காங்கிரசு, திமுக கூட்டணியின் சார்பாக மறைமுகமாகச் செயற்பட்டது. அதேவேளையில் ஜெயலலிதாவுக்கு எதிரான நிலைப் பாடுகளை வெளிப்படையாகவும் ஏற்படுத்திக் கொண்டார். ஜெயலலிதாவிற்கு வாக்களித்தால் தமிழ்நாட்டை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது என்று சொன்னார். இன்று பாட்டாளி மக்கள் கட்சியுடன் பகை! அண்ணா திமுகவுடன் பகை! பாட்டாளி மக்கள் கட்சியுடன் கூட்டணி ஏற்படுத்திக்கோண்டிருக்கும் திமுகவுடனும் சேர முடியாது. ஜெயலலிதாவுடன் கூட்டணியமைத்துள்ள பாரதீய ஜனதாவுடனும் சேரமுடியாது. ரஜனியின் நடவடிக்கைகளில் எங்கே பயணம்? எது பாதை? என்னும் திகில் தெரிகின்றது. தீர்மானமெடுப்பதில் தெளிவற்றவர்கள். சாதனை படைத்ததாகச் சரித்திரம் இல்லை! ரஜனியினுடைய இராமதாஸ் எதிர்ப்பு, ஜெயலலிதா ஆதரவாக மாறினாலும் ஆச்சரியம் கொள்வதற்கில்லை. பாட்டாளி மக்கள் கட்சி போட்டியிடும் ஆறு தொகுதிகளில் ரஜனி ரசிகர்கள் எதிர்ப்பிரச்சாரத்தில் ஈடுபடுவார்கள் என்னும் ஊகங்கள் உலாவுகின்றன. நெல்லுக்குப் பாய்ச்சிய தண்ணீர் புல்லுக்குப் பாய்ந்த கதையாக, மேற்படி தொகுதி களில் பாட்டாளி மக்கள் கட்சிக்கு எதிரான ரஜனியின் பிரச்சாரம், அதிமுக-பாரதீய ஜனதா கூட்டணிக்குச் சார்பாக அமைந்துவிடலாம் என்பது திமுக கூட்டணிக்குத் திகிலை ஏற்படுத்துகின்றது. ரஜனி முழுமையாக அரசியலில் ஈடுபடவோ அல்லது எந்தவொரு கட்சியிலும் முழுமையாக இணைந்தோ செயற்படமாட்டார் என்னும் அபிப்பிராயமும் காணப்படுகின்றது.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல்களில் எந்தவொரு கட்சியுமே தனித்து ஆட்சியமைக்கும் வாய்ப்பு அரிதாகவே காணப் படுகின்றது. 1978இல் உருவாக்கப்பட்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் முறைமையின்கீழ் இதுவரையில் நடைபெற்ற தேர்தல்களில், 1989 இல் மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சி 51 விழுக்காடு வாக்குகளைப் பெற்றது. அன்றைய சந்தர்ப்பத்தில் மட்டுமே 25 அங்கத்தவர்களின் தனிப்பெரும்பான்மையுடனான அரசு அமைந்தது. 1994 இல் ஐக்கிய தேசியக் கட்சியினுடைய பதினேழு வருடகால ஆட்சியில் மக்கள் சலிப்படைந்திருந்த வேளையில்கூடப் பொதுசன ஐக்கிய முன்னணி தனிப்பெரும்பான்மையைப் பெறவில்லை. பின்னர் 2001 இல் பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியில் நம்பிக்கையிழந்து யுத்தமேகங்கள் சூழ்ந்திருந்த வேளையிலும்கூட, ஐக்கிய தேசிய முன்னணி தனிப் பெரும்பான்மையைப் பெறவில்லை. இரண்டு சந்தர்ப்பங்களிலுமே, பொதுசன ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசிய முன்னணியும் சிறுபான்மை மக்களுடைய ஆதரவைப் பரவலாகப் பெற்றிருந்தன! இருந்தபோதிலும்கூட இரண்டு அணிகளுமே தனிப்பெரும் பான்மையைப் பெறவில்லை. அந்தவகையிலே இனிவருங் காலங்களில் எந்தவொரு அரசுமே தனிப்பெரும்பான்மையுடன் அமைவதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் அருகிலேயே காணப்படுகின்றன.

2001 சனத்தொகை கணிப்பீடுகளில் பிரகாரம் மொத்தசனத் தொகையில் 76.7 வீதமானோர் சிங்கள-பௌத்தர்களாகவும், 8.5 வீதமானோர் இசுலாமியர்களாகவும், 7.9 வீதமானோர் இந்துக்களாகவும், 6.9 வீதமானோர் கிறிஸ்தவர்களாகவும் காணப்பட்டனர். அதிலே 81 வீதமானோர் சிங்களவர்களாகவும், 18 வீதமானோர் தமிழ் பேசுவோர் களாகவும் காணப்படுகின்றனர். இன்றுள்ள சூழ்நிலைகளில் சிங்கள-பௌத்த வாக்குகள் மூன்றாகப் பிரிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் தென் படுகின்றன. ஆட்சி அமைப்பதற்கு 113 அங்கத்தவர்களை ஒரு கட்சி பெறவேண்டும். கடந்த பாராளுமன்றத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜேவிபியும் 93 அங்கத்தவர்களைப் பெற்றிருந்தது. எதிர்வரும் தேர்தல்களில் இரண்டு கட்சிகளும் 105 ஆசனங்களைப் பெறலாம் எனக் கருதுகின்றன. அப்படியாயினும் ஆட்சியமைப்பதற்கு மேலும் எட்டு அங்கத்தவர்கள் தேவைப்படுவார்கள்! 48.9 வீதமான வாக்குகளைப் பெற்றபோதிலும், பொதுசன ஐக்கிய முன்னணிக்கு 105 அங்கத்தவர் களே 1994 இல் கிடைத்தனர். அன்றைய சந்தர்ப்பத்தில் 1.8 வீதமான வாக்குகளைப் பெற்ற ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரசின் ஏழு அங்கத்தவர்களும், மலையக மக்கள் முன்னணியின் ஒற்றை அங்கத்தவரும் ஆதரவு வழங்கியபோதே ஆட்சியமைந்தது. ஆனால் இன்றைய நிலை முற்றிலும் மாறுபட்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரசும் ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்திருக்கின்றன. ஆனாலும் சனாதிபதி குமாரதுங்காவுடைய ஆட்சிக்கு ஆதரவு வழங்கத் துணியலாம்! ஆனால் குமாரதுங்காவுடைய அணி ஆட்சியமைக்கும் பட்சத்தில், ஆட்சிமுறையும் விகிதாசாரமுறையும் மாறுதலுக்கு உட்படலாம். இன்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் முசுலிம் காங்கிரசும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலேயே ஆட்சியை நிருணயிக்கும் சக்தியாகப் பவனி வருகின்றன. ஆக அவர்களுடைய பலத்தையே கேள்விக்குட்படுத்துவதற்கு அமைச்சர்கள் தொண்டமானும் ஹக்கீமும் ஆதரவு வழங்குவார்களா என்பது அய்யமாகும்.

ஆரம்பத்தில் சமாதானத்தில் ஆர்வமுடன் காணப்பட்ட குமாரதுங்கா, பின்னர்ச் சமாதானத்திற்கான போர்முரசு முழங்கினார். 2001 இல் விக்கிரமசிங்க அரசு ஏற்பட்டதிலிருந்து எதனை சாதிக்க முயன்றாரோ? அவை எட்டாக்கனியாகின்றன. அரசைக் குழப்பினார். பாராளுமன்றத்தைக் கலைத்தார். உட்கட்சிப் பூசல்களைச் சந்திக்கின்றார். ஜாதிக ஹெல உறுமய மற்றும் பௌத்தகுருமாரின் நடவடிக்கைகட்கு முகம் கொடுக்கின்றார். ஜேவிபி வளர்வதற்கு வாய்ப்பு உருவாக்கு கின்றார். ஐக்கிய சுதந்திர முன்னணி அரசு அமைந்தாலுமேகூட, அதனுடைய கடிவாளம் யாரிடம் இருக்கப்போகின்றது என்பது ஊரறிந்த இரகசியம். ஒருவகையில் சூழ்நிலையின் கைதியாகிப் பட்டினத்துப் பிள்ளையின் தத்துவத்தை நினைவுக்குக் கொண்டு வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிப்பெரும்பான்மையா?

இலங்கைப் பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல் வாக்குப்பதிவு நாளை நடைபெறுகின்றது. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை, நுவரெலியா, இரத்தினபுரி, கண்டி, பதுளை, மொனராகலை, அநுராதபுரம், புத்தளம், குருணாகல், மாத்தளை, கேகாலை, பொலன்னறுவை ஆகிய பதினேழு மாவட்டங்களிலிருந்து 165 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். வடகிழக்கிலுள்ள யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய ஐந்து மாவட்டங்களிலிருந்து 31 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப் படுவார்கள். இலங்கையிலுள்ள 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து மொத்தமாக 196 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நாடளாவிய ரீதியாகக் கட்சிகள் பெறக்கூடிய வாக்குகளின் அடிப்படையில் மீதமுள்ள 29 ஆசனங்கள் தேசியப்பட்டியல் மூலமாகப் பகிர்ந்தளிக்கப்படுவதாகும். எந்தவொரு கட்சியும் தனிப்பெரும் பான்மையைப் பெறுகின்ற வாய்ப்புக் குறைவாகவே காணப்படுகின்றது.

1994லிருந்து அரசாண்ட பொதுசன ஐக்கிய முன்னணி மட்டுமல்ல, 2001லிருந்து ஆட்சிபுரிந்த ஐக்கிய தேசிய முன்னணிகூடப் பிற கட்சிகளில் ஆதரவுடனேயே பாராளுமன்றப் பலத்தைப் பெற்றிருந்தது. இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது ஜேவிபியுடனும், ஐக்கிய தேசியக் கட்சியானது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு, ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரசு ஆகியவற்றுடனும் கூட்டணியமைத்துள்ளனு. மலையகத் தமிழர்களும், இசுலாமியர்களும் அதிகமாக வாழும் நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, புத்தளம், குருணாகல மற்றும் தமிழர்கள் செறிந்து வாழும் கொழும்பு ஆகிய 7 மாவட்டங்களையும் ஐக்கிய தேசிய முன்னணி கைப்பற்றுவதற்குத் தொண்டமான்-ஹக்கீம்-சந்திரசேகரன் அணி பெரிதும் துணை புரியலாம். அங்கிருந்து 81 ஆசனங்களையும், வடகிழக்கிலிருந்து 7 மொத்தமாக 102 ஆசனங்களை விக்கிரமசிங்க தரப்புப் பெறக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, அநுராதபுரம், பொலன்னறுவை, மொனராகலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களை மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி கைப்பற்றலாம். அதன்மூலமாக 85 ஆசனங்களையும், தேசியப் பட்டியல் மூலமாக 13 ஆசனங்களையும் பெற்று, மொத்தமாக 98 ஆசனங்கள் குமாரதுங்கா தரப்பு பெறக்கூடிய வாய்ப்புக்கள் தென்படுகின்றன.

இருந்தபோதிலும் ஆட்சியமைப்பதற்குத் தேவையான 113 அங்கத்தவர்கள் இரண்டு அணிகளுக்குமே கிடைக்கும் வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன.

ஜாதிக ஹெல உறுமய ஒரு சில ஆசனங்களைக் கைப்பற்றலாம். தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பெரும்பாலான ஆசனங்களை வடகிழக்கில் கைப்பற்றிக்கொள்ளும் வாய்ப்புக் காணப்படுகின்றது. 1977 பொதுத் தேர்தல்கள் தமிழர் தரப்பை எதிர்க்கட்சி அந்தஸ்திற்கு உயர்த்தியது. 27 வருடங்களின் பின்னர்த் தமிழர்தரப்பு அரசை நிருணயிக்கும் சக்தியாக உருப்பெறும் சாத்தியக்கூறுகள் காணப் படுகின்றன. விக்கிரமசிங்க-குமாரசிங்கா அணிகள் அரசமைப்பதற்கு வேண்டிய பலம் கிடைக்காத வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிருணய சக்தியாக உருவாகலாம். ஆனால் விக்கிரமசிங்க தரப்பு களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, அனுராதபுரம் ஆகிய தேர்தல் மாவட்டங்களில் ஆங்காங்கே சில ஆசனங்களைக் கைப்பற்றி அரசமைப்பதற்குத் தேவையான 113 அங்கத்தவர் எண்ணிக்கையைப் பெற்றுக் கொள்ளலாம் என்னும் ஆர்வத்தன்மையினதாகக் கணிப்புகளும் நிலவுகின்றன. ஆனால் அதற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளதாகவே கருதமுடிகின்றது.

பொதுத்தேர்தல்களின் பின்னர் அரசமைப்புச் சபையை கூட்டப் போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-ஜேவிபி கூட்டணி கூறுகின்றது. பொதுவாக இராணுவ ஆட்சியிலிருந்து சனநாயக ஆட்சிக்கு மாறுகின்ற சந்தர்ப்பங்களிலோ, வெளிநாட்டு ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலையாகும் போதோ, அத்தகைய பிறிதொரு சூழலிலேயே அரசமைப்புச் சபை கூட்டப்படுகின்றது. ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-ஜேவிபி கூட்டணியோ, அரசியல்யாப்பை திருத்துவதற்குரிய மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைப் பாராளுமன்றத்தில் பெற்றுக்கொள்ளப் இயலாத சூழ்நிலையிலேயே அரசமைப்புச் சபையைக் கூடுகின்ற கருத்தமைவுக்கு உட்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு முன்னரும் இலங்கையில் அரசமைப்புச் சபை கூட்டப் பட்டிருக்கின்றது. ஆனால் அன்றைய சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் முற்றிலும் மாறுபட்டதாகும். 1970 இல் அரசமைப்புச் சபை கூட்டப்பட்டபோது, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜகட்சி, கம்யூனிஸ்டு கட்சி ஆகியன இணைந்த ஐக்கிய முன்னணி அரசு 157 அங்கத்தவர் கொண்ட பாராளுமன்றத்தில் 122 உறுப்பினர்களின் ஆதரவைக் கொண்டிருந்தது. எதிர்க்கட்சி தரப்பில் ஐக்கிய தேசியக் கட்சி 17 அங்கத்தவர்களையும், தமிழரசுக் கட்சியும் 13 அங்கத்தவர்களையும் கொண்டிருந்தன. ஆக அன்றைய சந்தர்ப்பத்தில் மூன்றில் இரண்டு பங்கு பாராளுமன்றப் பலத்தைக் கொண்டிருந்த அரசு அரசியல் காரணங்களிற் காகவே அரசமைப்புச் சபையைக் கூட்டியது. ஆனால் இன்றைய நிலை அப்படியல்ல! ஆக, தற்போதுள்ள அரசியல் சூழ்நிலைகளில் அரசமைப்புச் சபை கூட்டப்படுமாயின், அதுவே புதிய சர்ச்சைகளின் ஆரம்பமாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் தீர்ப்பா? மக்களுக்குத் தீர்ப்பா?

கடந்த வெள்ளிக்கிழமை எப்பிரல் 2ஆம் திகதி நடைபெற்ற 13ஆவது பாராளுமன்றத்திற்கான தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன. ஐக்கிய சுதந்திர முன்னணி 45.6 வீதமான வாக்குகளைப் பெற்று 92 ஆசனங்களையும், தேசியப் பட்டியல் மூலமாக 13 ஆசனங்களையுமாக மொத்தம் 105 ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி 37.8 வீதமான வாக்குகளைப் பெற்று 71 ஆசனங்களையும் தேசியப் பட்டியல் மூலமாக 11 ஆசனங்களையுமாக மொத்தம் 82 ஆசனங்களைப் பெற்றுள்ளது. இரண்டு கட்சிகளுமே ஆட்சி அமைப்பதற்கு வேண்டிய 113 ஆசனங்களைப் பெறவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்றாவது சக்தியாக உருப் பெற்றுள்ளது. 1977 பொதுத் தேர்தல்களில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன்வைத்துப் போட்டியிட்ட தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி 18 ஆசனங்களைப் பெற்றது. இன்று மாவட்ட ரீதியாக 20 ஆசனங்களையும், தேசியப் பட்டியல் மூலமாக 2 ஆசனங்களையுமாக மொத்தம் 22 அங்கத்தவர்களைப் பெற்றுள்ளது.

ஜாதீக ஹெல உறுமய 9 ஆசனங்களையும், வடகிழக்கில் தனித்துப் போட்டியிட்ட ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரசு 5 ஆசனங்களையும், மலையக மக்கள் முன்னணியும் ஈழமக்கள் சனநாயக கட்சியும் தலா ஒரு ஆசனத்தை பெற்றுள்ளன.

பெரும்பாலான ஆசனங்களைப் பெற்றுள்ள ஐக்கிய சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளர் குறித்த மிகக் கடுமையான போட்டிகள் திரைமறைவில் நடைபெற்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவரான மஹிந்த ராஜபக்ஸ முன்னிலையிலிருந்தபோதும், அனுரா பண்டாராநாயக்காவும் லஷ்மன் கதிர்காமரும் பிரதமராக நியமிக்கப்பட வேண்டுமென்பதை வெவ்வேறு குழுக்கள் வலியுறுத்தின. இறுதியில் மஹிந்த ராஜபக்ஸ வெற்றிபெற்றுச் செவ்வாயன்று பிரதமராகப் பதவியேற்றுள்ளார். ஏப்பிரலில் 22இல் பாராளுமன்றம் கூடும்போது பிரதமர் ராஜபக்ஸ தனது பாராளுமன்றப் பலத்தை நிரூபித்தாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய தேசிய முன்னணி 14 மாவட்டங்களில் தோல்வி யடைந்துள்ளது. மொத்தமாக 39 வேட்பாளர்களைக் களமிறக்கிய ஜேவிபி 36 ஆசனங்களையும் ஐந்து போனஸ் ஆசனங்களையும் பெற்றுப் பாராளுமன்றப் பலத்தை 41 ஆக உயர்த்தியுள்ளது. கொழும்பு, கம்பஹா, காலி, களுத்துறை, குருணாகல, பதுளை, மாத்தளை, அனுராதபுரம், கேகாலை ஆகிய மாவட்டங்களில் அதிகப்படியான விருப்பு வாக்குகளை ஜேவிபி பெற்றுள்ளது. அரசியல் பரப்புகளில் புதிய நிலைப்பாடுகளை ஜாதீக ஹெல உறுமய ஏற்படுத்தலாம் எனக் கருதப்படுகின்றது. தென்னிலங்கை அரசியல் வரலாற்றில் பௌத்தமத குருமார் அரசியல்களத்தில் செயற்பட்டபோதிலும், இதுவே முதல் தடவையாகப் பாரியளவுகளில் பாராளுமன்ற அங்கத்துவம் பெற்றுள்ளனர்.

இனப்பிரச்சினை, மதமாற்றத் தடைச்சட்டம், அன்னிய எதிர்ப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களிலும் தீவிர நிலைப்பாட்டைக் கொண்டு உள்ளதோடு பத்து அம்ச திட்டமொன்றையும் ஜாதீக ஹெல உறுமய வெளியிட்டுள்ளது. ஜாதீக ஹெல உறுமயவின் கொள்கைகளும் செயல்திட்டங்களுமொருபுறமிருக்க, ஜாதீக ஹெல உறுமயவின் ஆதரவைப் பெறுவதற்கு பிரதமர் ராஜபக்ஸ முனையலாம் என்னும் கருத்தும் காணப்படுகின்றது. ஆனால் ஜாதீக ஹெல உறுமயவிலே விக்கிரமசிங்கவுக்குச் சார்பான நிலைப்பாட்டைத் தர்மலோக, சுமங்கலா, ரத்தன்னா போன்ற தேரோக்கள் கொண்டுள்ளனர். மறுபுறத்தில் மேடானன்டா, ஷோபிதா போன்ற தேரோக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணிக்கு ஆதரவாகக் காணப்படுகின்றனர். இதனால் ஜாதீக ஹெல உறுமயவில் மிகப்பெரிய அபிப்பிராயபேதங்கள் ஏற்படுவதான ஊகங்களும் உலாவுகின்றன.

ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து தேர்தல்களை எதிர்கொண்டு 8 ஆசனங்களைப் பெற்றுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு, 5 ஆசனங்களைப் பெற்றுள்ள ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரசு ஆகியன அரியணையின் ஓரங்களில் அமர்ந்து கொள்ளும் வாய்ப்புகளும் தென்படுகின்றன. ஆனால் ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரசின் ஆதரவைப் பெறுவதில் பெஃரியல் அஷ்ராப்-அதவுல்லா அணிகள் பிரதமர் ராஜபக்ஸவிற்குச் சிக்கல்களை ஏற்படுத்தலாம்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது 1971லும் 1987 லும் ஆயுதக்கிளர்ச்சியை ஏற்படுத்தி, 2001 பொதுத்தேர்தல்களில் 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்ற ஜேவிபிக்கு, தற்போதைய பொதுத்தேர்தல்கள் 41 அங்கத்தவர்களைப் பெற்றுக் கொடுத்திருக்கினறது. கடந்த பொதுத் தேர்தல்களில் காணாமல் போயிருந்த சிஹல உறுமயவின் மறுஅவதாரமான ஜாதீக ஹெல உறுமயவிற்கு 9 அங்கத்தவர்களைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றது. பௌத்த குருமார்களை நேரடியாக அரசியலில் களமிறக்கியிருக்கின்றது. ஒருகால கட்டத்தில் யுத்தங்களை உருவாக்குவதில் ஐக்கிய தேசியக் கட்சி முன்னின்றது. பலவருடங்களாகத் தொடர்ந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதில் அண்மைக்காலத்தில் முன்னின்று பங்களித்திருக்கின்றது. சமாதானச் சூழலை உருவாக்குவதற்காகத் துளியளவேனும் முயற்சிகளை மேற்கொண்ட விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி தோல்வியடைந்திருக்கின்றது. அதேவேளையில் ஸ்திரமான ஆட்சியை வழங்கிய ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைத்த குமாரதுங்காவின் தரப்பு, திட்டவட்டமான வெற்றிகளைப் பெறவில்லை. ஆகக்குறைந்தது அரசமைப்பதற்குரிய பாராளுமன்றப் பலத்தையேனும் பெறவில்லை.

2004 பொதுத் தேர்தல்கள் தென்னிலங்கை அரசியலைத் தெளிவற்றதாக்கியுள்ளதோடு சமாதானத்தையும் அசைக்க முனைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை படைக்கலாம்

இந்தியத் தேர்தல்களம் விறுவிறுப்படைகின்றது. பாட்டாளி மக்கள் கட்சி போட்டியிடும் ஆறு தொகுதிகளில், ரஜனி எதிர்ப்பிரச்சாரம் மேற்கொள்ளலாமெனக் கருதப்படுகின்றது. கன்னடியரான ரஜனி, தமிழ்த் திரைப்படத்துறையில் பிரவேசித்துத் தமிழகத்தில் மட்டுமன்றித் தமிழ் பேசும் மக்களின் அபிமானத்திற்கு உரியவரானார். திரைப்படங் களூடாகக் கிடைத்த செல்வாக்கை, எம்ஜிஆர் பாணியில் வாக்குகளாக்கு கின்ற மனப்பாங்கின் விழுமியமாகவே ரஜனி நடவடிக்கைகளைக் கருத முடிகின்றது. கடந்த ஜெயலலிதா ஆட்சியில், இயக்குநர் மணிரத்தினம் இல்லத்தில் குண்டு வெடிப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து, ஜெயலலிதா அரசுக்கு எதிராக ரஜனி குரல் கொடுத்தார். அதுவே ரஜனி-ஜெயலலிதா உராய்வுகள் தெளிவாக வெளிச்சத்திற்கு வந்த சந்தர்ப்பமாகக் கருதலாம். அன்றிலிருந்து ரஜனி-ஜெயலலிதா உராய்வுகள் வளர்ந்திருக்கின்றன. ஜெயலலிதாவின் கட்சியினர், ரஜனி கொடும்பாவியை எரித்தனர். அதன்பின்னர் ஜெயலலிதா அரசிற்கு எதிராகத் தேர்தல் காலங்களில் ரஜனி செயற்பட்டார். ரஜனிக்கு எதிராகத் தமிழ்த் திரையுலகின் முன்னணி நட்சத்திரங்களில் ஒருவரான மனோரமா களமிறக்கப்பட்டார். 1996 தேர்தல்களில் கருப்பையா மூப்பனாரின் தமிழ் மாநிலக் காங்கிரசு-திராவிட முன்னேற்றக் கழக கூட்டணியின் பக்கம் ரஜனி சாய்ந்தார். இருந்தபோதிலும் ரஜனியினது நடவடிக்கைகள் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் அமையவில்லை.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களித்தால் தமிழகத்தை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது என்று கூறினார். கோவையில் குண்டு வெடிப்புகள் ஏற்பட்டபோது பாரதீய ஜனதாவைச் சாடினார். காவிரி நதி நீர்ப் பங்கீடு தொடர்பாகத் திரைப்படத் துறையினர் நெய்வேலியில் போராட்டம் நடத்தியபோது, அதனை எதிர்த்தார். அதனால் ஜெயலலிதா அரசு நெய்வேலி போராட்டத்தை உசுப்பியது. பாரதிராஜா தலைமையில் நெய்வேலியில் மாபெரும் போராட்டம் நடத்தப்பட்டது. நெய்வேலிப் போராட்டத்தின் பின்னணியில் ஜெயலலிதா அரசு செயற்பட்டமையை ரஜனி சூசகமாகச் சாடினார். அதன்பின்னர்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னை மெரீனா கடற்கரையில் ரஜனி உண்ணாவிரதமிருந்து ''உப்பிட்ட தமிழ் மண்ணை ஒருபோதும் மறவேன்'' என்பதை நிலைநிறுத்த வேண்டியதாகியது. மற்றுமொரு புறத்தில் பாபா திரைப்படம் வெளியானதைத் தொடர்ந்து பாமகவுடனான உராய்வுகளும் ஏற்பட்டன. இன்று ரஜனியினுடைய நடவடிக்கைகள் மிகவும் கவனிக்கப்படுகின்றன.

இந்தியப் பாராளுமன்றத் தேர்தல்கள் 28 மாநிலங்களிலும் 7 துணைநிலை மாநிலங்களிலும் நான்கு கட்டங்களாக நடைபெறுகின்றது. முதலாவது கட்ட வாக்களிப்பு ஏப்பிரல் 20 இல் நடைபெற்றது. அடுத்த மூன்று கட்டங்களும் முறையே ஏப்பிரல் 26, மே 5ஆம் மற்றும் 10ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. பாரதீய ஜனதாவும் காங்கிரசும் பிராந்தியக் கட்சிகளுடனும் கூட்டணி அமைத்துத் தேர்தல்களைச் சந்திக்கின்றன. ஆளுமைமிக்க பிரதமரான வாஜ்பாய் அவர்களை முன்னிறுத்தியே பாரதீய ஜனதா பிரச்சாரங்களை மேற்கொள்கின்றது. ஆனால் காங்கிரசில் பிரதமர் வேட்பாளர் யார் என்பதில் தெளிவில்லை.

1980களுக்குப் பின்னர்க் காங்கிரசில் ஆளுமைமிக்க இரண்டாம் நிலைத் தலைவர்கள் அரிதாகியுள்ளனர். என்.டி. திவாரி, சரத்பவார் போன்றவர்களைத் தனிக்கட்சி நிலைப்பாடு தகர்த்தது. மாதவராவ் சிந்தியா, இராஜேஷ் பைலட் போன்றவர்கள் அகால மரணமடைந் தார்கள். சிதம்பரம், பிரியதர்ஷன் தாஸ்முன்ஷி போன்றவர்கள் உட்கட்சிப் பூசல்களால் காணாமல் போனார்கள். இன்று காந்தி குடும்ப வாரிசுகள் அரசியலில் நுழைய முற்படுகின்றனர். தனிக்கட்சியாட்சி என்பது வரலாறாகிக் கூட்டணியாட்சித் தத்துவம் காலூன்றியுள்ளது. இத்தகைய காலகட்டங்களில் வாரிசு அடையாளத்துடன் பாராளுமன்ற ஆசனத்தை வெல்லலாம், ஆனால் அரியாசனத்தைக் கைப்பற்றுவது சுலபமல்ல!

இந்தியப் பாராளுமன்றத்தில் 545 உறுப்பினர்கள் உள்ளனர். அதிலே கேரளத்திலிருந்து 28 உறுப்பினர்களும், கருநாடக மாநிலத்தில் இருந்து 29 உறுப்பினர்களும், தமிழகத்திலிருந்து 39 உறுப்பினர்களும், ஆந்திராவிலிருந்து 42 உறுப்பினர்களும், பாண்டிச்சேரியிலிருந்து ஒற்றை உறுப்பினருமாகத் தென்னிந்தியாவிலிருந்து மொத்தம் 139 அங்கத்தவர்கள் தெரிவாகின்றனர். ஆந்திராவில் பாராளுமன்றத்திற்கும் சட்டசபைக்குமான தேர்தல்கள் நடைபெறுகின்றது. தெலுங்குத் திரை யுலகில் கொடிகட்டிப் பறந்த என்.டி. இராமராவின் மருகரான சந்திரபாபு நாயுடு, கடந்த ஒன்பதாண்டுகளாக ஆட்சிசெய்கின்றார். சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருவாகியாக அடையாளப்படுத்தப்படும் நாயுடு தில்லித் தர்பாரிலும் ஆதிக்கம் செலுத்தியிருக்கின்றார். நாயுடுவுடன் பாரதீய ஜனதாவும், தெலுங்கானா கட்சி மற்றும் இடதுசாரிகளுடனும் காங்கிரசும் கூட்டணியமைத்துள்ளன. கேரளத்தில் காங்கிரசு தலைமையிலான ஐக்கிய சனநாயக அணியும் இடது சனநாயக அணியும் களத்திலுள்ளன. கருநாடகத்திலும் பாராளுமன்றத்திற்கும் சட்டசபைக்குமான தேர்தல்கள் ஒரேவேளையில் நடைபெறுகின்றது. இராமகிருஷ்ண ஹெக்டே போன்றவர்களால் 1980களில் ஆரம்பித்த ஜனதாதளப் பரிசோதனைகள் எத்தகைய மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை.

தமிழ்நாட்டில் வாக்குப்பதிவு மே 10இல் நடைபெறவுள்ளது. அண்ணா திமுக 33 தொகுதிகளிலும், பாரதீய ஜனதா ஆறு தொகுதிகளிலும் கூட்டணியமைத்துப் போட்டியிடுகின்றன. 81 வயது நிரம்பிய கலைஞருடைய தலைமையில் திமுக 15 தொகுதிகளிலும், காங்கிரஸ் 10 தொகுதிகளிலும், பாமக 6 தொகுதிகளிலும், வைகோவின் மதிமுக 4 தொகுதிகளிலும், கம்யூனிஸ்டு கட்சியின் இரண்டு பிரிவுகளும் தலா இரண்டு இடங்களிலும் முசுலிம் லீக் ஒரு இடத்திலும் போட்டி யிடுகின்றன. திருமாவளவன், கிருஷ்ணசாமி மற்றும் கண்ணப்பன் ஆகியோர் மூன்றாவது அணியாகியுள்ளனர். ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து ஆந்திராவிலும் கருர்நாடகத்திலும் மாநிலத் தேர்தல்களில் காங்கிரசு ஏறுமுகம் காணுகின்ற வேளையில், பாராளுமன்றத் தேர்தல்களில் பாரதீயஜனதா அதிக ஆசனங்களைக் கைப்பற்றலாம். கலைஞருடைய கூட்டணி தமிழகத்தில் சாதனை படைக்கலாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாநாயகர் தெரிவில் அமளி

மூன்றுவாரங்களுக்கு முன்பு பதவியேற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு தொடர்ந்து இடர்ப்பாடுகளையே எதிர்கொண்டு வருகின்றது. ஆட்சியில் பங்காளியாகவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜேவிபிக்குமிடையிலான பேதங்கள் இன்று நேற்றல்ல... தேர்தலுக்கு முன்பிருந்தே காணப்படுகின்றது. தேர்தல் முடிவுகள் வெளியாகியபோது அரசமைப்பதில் முறுகல்கள் ஆரம்பமாகின. பிரதமர் வேட்பாளர் குறித்த சர்ச்சைகள் ஏற்பட்டன. சனாதிபதி குமாரதுங்காவும் ஜேவிபியும் என்றுமில்லாதவாறு கருத்தொருமித்த வேளையில் மஹிந்த இராஜபக்ஸ பிரதமராக்கப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன்பின்னர் அமைச்சரவை நியமனத்தில் இணக்கமின்மை உருவாகியது. அதனால் ஏப்பிரல் 10இல் அமைச்சரவை பதவியேற்ற போது ஜேவிபி பங்குகொள்ளவில்லை. அமைச்சுப் பொறுப்புகளைப் பங்கீடு செய்துகொள்வதில் ஏற்பட்ட அதிருப்தி அம்பலமாகியது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஏற்படுத்தியிருந்த உடன்பாட்டின் பிரகாரம் மகாவலி அபிவிருத்தி அமைச்சு தமக்கு வழங்கப்பட வேண்டுமென ஜேவிபி கோரியது. ஆனால் சனாதிபதி குமாரதுங்கா அமைச்சரவையை அமைத்தபோது, மகாவலி அபிவிருத்தி அமைச்சை ஆற்றுப்படுக்கை அபிவிருத்தி எனப் பெயர்மாற்றி, அதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவை அமைச்சராக நியமித்தார். மகாவலி அமைச்சு வழங்கப்படாத சூழ்நிலையில், அமைச்சரவையில் தாம் சேர்ந்துகொள்ளப்போவதில்லை என ஜேவிபி தெரிவித்தது.

பாதுகாப்பு, நிதி அமைச்சுகள் போன்று மகாவலி அபிவிருத்தி அமைச்சும் செல்வாக்கு மிக்கதாகும். மகாவலி அதிகார சபையே நாட்டிலுள்ள பல அடர்ந்த வனங்களையும் நிருவாகம் செய்கின்றன. அத்துடன் பாதுகாப்புத் தளபாடங்களை மகாவலி அமைச்சு கையாள் கின்றது. பாதுகாப்பு அமைச்சுக்கு வெளியே பாதுகாப்புத் தளபாடங் களைக் கையாளுகின்ற அதிகாரம் மகாவலி அமைச்சிடம் மட்டுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றது என்பதும் கவனிக்கத்தக்கதாகும். அதுமட்டுமன்றி இராணுவத்தினரால் பயிற்றுவிக்கப்பட்ட பந்தோபஸ்து ஆளணியும் மகாவலி அமைச்சின் கட்டுப்பாட்டிலுள்ளது. அத்துடன் கிராமப்புறங்களில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்கின்ற வல்லமையும் மகாவலி அமைச்சிடம் காணப்படுகின்றது. அந்தவகையில் மக்கள் செல்வாக்கை வளர்த்துக்கொள்ள விரும்புகின்ற ஜேவிபியும், பாராளுமன்றத்தில் 57 அங்கத்தவர்களை மட்டுமே கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மகாவலி அமைச்சைத் தமதாக்கிக் கொள்வதற்கு விரும்புவதொன்றும் ஆச்சரியப்படத்தக்கதல்லவே!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பதவியேற்றுச் சுமார் மூன்று வாரங்களின் பின்னர் மகாவலி அமைச்சு விடயத்தில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜேவிபி உடன்பாடு ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

பொதுத் தேர்தலைகளையடுத்த சென்ற வியாழன் பாராளுமன்றம் பூர்வாங்கமாகக் கூடியபோது சபாநாயகர் தெரிவில் அமளிதுமளி ஏற்பட்டது. ஆளும் கட்சி சார்பில் டி.ஈ.டபிள்யு குணசேகராவும் எதிர்க்கட்சிகளின் சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் டபிள்யு.ஜே.எம். லொக்குபண்டாராவும் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டனர். பத்து மில்லியன் வாக்காளர்களால் தெரிவு செய்யப்பட்ட 225 அங்கத்தவர்கள் தம்மிடையேயிருந்து ஒருவரைச் சபாநாயகராகத் தெரிவு செய்வதற்குச் சுமார் பதினொரு மணித்தியாலங்கள் எடுத்துக் கொண்டனர்! ஒன்றல்ல... இரண்டல்ல... நான்கு தடவைகள் வாக்குச் சீட்டுப் பெற்றனர்! மூன்று தடவைகள் வாக்களித்தனர்! முதலாவது வாக்குப் பதிவில் எட்டுப் பிரயோகிக்கப்படாத வாக்குகளுடன், ஒருவாக்குச் செல்லுபடியாகாததாக அறிவிக்கப்பட்ட நிலையில் இரண்டு வேட்பாளர்களுமே தலா 108 வாக்குகளைப் பெற்றனர். இரண்டாவது வாக்குப்பதிவில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரொருவர் தம்முடைய பதியப்பட்ட வாக்குச்சீட்டைப் பகிரங்கப்படுத்தியபோது, இரகசிய வாக்கெடுப்புக் கேள்விக்குட்பட்டதாக அரசதரப்பு அதீதமாகக் கூச்சலிட்டது. மூன்றாவதாக நடைபெற்ற வாக்கெடுப்பில் எதிர்க்கட்சிகளின் வேட்பாளர் டபிள்யு.ஜே.யும். லொக்குபண்டாரா ஒருவாக்கு வித்தியாசத்தில் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தியப் பாராளுமன்றத் தேர்தல்களில் வாக்குப் பதிவுகளில் இரண்டு கட்டங்கள் பூர்த்தியாகியுள்ளநிலையில், பாரதீய ஜனதா ஆட்சி அமைப்பதற்குரிய பெரும்பான்மையைப் பெறுவதற்குத் திணறக்கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தியக்கூறுகள் அதிகமாகிவருவதை அவதானிக்க முடிகின்றது. பம்பாய்ப் பங்குச்சந்தையும் வீழ்ச்சியடைவதான சமிக்ஞைகளைக் காணமுடிகின்றது. அதனால் பொருளாதார இறங்குமுகம் கண்ணசைக்கக்கூடிய வாய்ப்புகள் ஏற்படலாம்.

ஆந்திராவிலும், கருநாடகத்திலும் காங்கிரசு ஆட்சி அமைக்கலாம்! ஒரிஸ்ஸாவில் நவீன் பட்னாயக்காவின் ஆட்சி தொடரலாம்! தமிழ்நாட்டில் ரஜனி சமாச்சாரம் தொடர்ந்து தெளிவின்மையை ஏற்படுத்தி வருகின்ற போதிலும் கலைஞர் தலைமையிலான அணி அதிகப்படியான பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றும் என்னும் நிலைப்பாடே காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் நோர்வே

புரிந்துணர்வு உடன்படிக்கையேற்பட்டுப் போர்நிறுத்தம் ஏற்பட்டபோது போர்ச்சூழலில் அன்றாட அவலங்கட்கு முகம் கொடுத்தவர்களின் வாழ்வில் ஒருவாறான நம்பிக்கை துளிர்விடத் தொடங்கியது. இரண்டு வருடங்கட்கு மேல் உருண்டோடி விட்டநிலையில், முன்னர் ஏற்பட்டிராத வகையில் சமாதானம் குறித்த நம்பிக்கைகள் இன்று கேள்விக்கு உட்படுகின்றது.

தென்னிலங்கை அரசியல் சென்ற பல மாதங்களாகவே பரிசோதனைக் களமாகி வருகின்றது. குமாரதுங்கா-விக்கிரமசிங்க முறுகல், அமைச்சுப் பொறுப்புகளைக் கையகப்படுத்தல், பாராளு மன்றத்தைக் கலைத்தல், ஏப்பிரலில் பொதுத் தேர்தல்களை அறிவித்தல், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜேவிபியும் ஆட்சியமைத்தல் என ஒன்றன்பின் ஒன்றான சம்பவங்கள் நடந்தேறியுள்ளன. நாட்டின் இறையாண்மையைப் பேணுவதான கோதாவில் 2003 நவம்பரில் விக்கிரமசிங்க அரசின் மூன்று அமைச்சுகளை சனாதிபதி பொறுப் பேற்றார். அதன்பின்னர் 2004 பெப்ரவரி 7 இல் விக்கிரமசிங்க அரசைக் கலைத்தார். ஏப்பிரல் 2இல் தேர்தல்கள் ஏற்பட்டு இன்று ஐக்கிய சுதந்திர முன்னணி ஆட்சியில் அமர்ந்துள்ளது. இத்தகைய பின்னணியிலேயே சமாதான நடவடிக்கைள் மேற்கொள்ளப்படுவதான தோற்றம் இன்று உருவாக்கப்படுகின்றது. சனாதிபதி குமாரதுங்காவுடையதோ ஜேவிபியினுடையதோ நிலைப்பாடுகளில் அடிப்படையான மாற்றம் ஏற்பட்டிருப்பதாகக் கருதுவதற்கில்லை. மாறாக, சமகால அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்து கொள்வதற்காகவே சமாதானம் குறித்துப் பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

ஐக்கிய முன்னணி அரசு புறத்தோற்ற அளவிலேயேனும் சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளது. அன்றொரு காலத்தில் சமாதான முயற்சிகளில் நோர்வேயை சனாதிபதி குமாரதுங்கா ஈடுபடுத்தியமைக்கும், இன்று நோர்வேயை ஈடுபடுத்த விரும்புகின்றமைக்கும் பாரிய வேறுபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் காணமுடிகின்றது. 2001 திசம்பர் 5 இல் ஐக்கிய தேசிய முன்னணி பதவியேற்றுப் புரிந்துணர்வு உடன்படிக்கையை ஏற்படுத்திய போது, சமாதான முயற்சிகள் வேகம் பெற்றன. நோர்வேயினுடைய ஈடுபாடு அதிகரித்தது. அத்தகைய வேளையில் நோர்வேயினுடைய ஈடுபாட்டிற்கு எதிரான நிலைப்பாட்டை சனாதிபதி குமாரதுங்கா எடுத்துக்கொண்டார். நோர்வேக்கு அழுத்தங்களை ஏற்படுத்தினார்! சமாதான முன்னரங்கில் செயற்பட்ட எரிக் சொல்ஹேமினுடைய நம்பகத் தன்மையைக் கேள்விக்கு உட்படுத்தினார்! ஆனால் அவற்றையெல்லாம் சனாதிபதி குமாரதுங்கா இன்று புறந்தள்ளியுள்ளார்! 2003 நவம்பரில் சமாதான செயற்பாடுகளிலிருந்து தற்காலிகமாக விலகிக்கொண்டதாக நோர்வேயை மீண்டும் அழைத்துள்ளார்.

ஆனால் சமாதான நடவடிக்கைகளில் நோர்வே பங்குகொள் வதையும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதையும் ஜேவிபி முற்றாக நிராகரித்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, எம்இபி ஆகியவற்றுடன் ஒன்றுகூடி மாபெரும் எதிர்ப்புப் பேரணியையும் பொதுக்கூட்டத்தையும் நவம்பர் 7இல் நடத்தியுள்ளது! 2003 அக்டோபர் 30இல் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை திட்டவரைவை விடுதலைப் புலிகள் முன்வைத்தபோது, ஜேவிபி அதனை முற்றிலுமாக நிராகரித்தது. ஐக்கிய தேசிய முன்னணி அரசும் அதனை நிராகரிக்க வேண்டுமெனத் தொடர்ந்தும் கோருகின்றது. இந்நிலையில் சமாதான நடவடிக்கைகள் எவ்வாறு அமையப்போகின்றன என்பது புதிரல்ல!

பாராளுமன்றப் பலத்தைக் கொண்டிருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசு எத்தகைய நோக்கத்திற்காகக் கலைக்கப்பட்டதோ, அஃது நிறைவேறாமலேயே போகக்கூடிய சாத்தியக்கூறுகள் ஒன்றன்பின் ஒன்றாக அதிகரிக்கின்றன. 2004 ஏப்பிரலில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் 113 அங்கத்தவர்களைப் பெற்றுவிடலாம் என்பது குமாரதுங்காவின் கனவாகியது. ஏப்பிரல் 22 இல் தமது வேட்பாளரையே சபாநாயகராக்கிவிடவேண்டும் என்னும் நினைப்புப் பிழைப்பையே கேள்விக்குட்படுத்தியது. அரசமைப்புச்சபை வாயிலாகச் சனாதிபதி ஆட்சி முறையை மாற்றுவதற்கான வாய்ப்புகளும் அசைக்கப் பட்டுள்ளது. இன்று பாராளுமன்றப் பலத்தை உறுதிசெய்து கொள்ள வேண்டிய அவசியம் குமாரதுங்காவிற்கு ஏற்பட்டுள்ளது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு ஆதரவு கிடைக்கலாம் என்பதான சலசலப்புகள் ஏற்படத் தொடங்கிப் பலநாள்கள் கழிந்துவிட்டன. ஆனாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டவட்டமான முடிவுகள் ஏற்படவில்லை. கொள்கையளவிலன்றிக் கொடுக்கல் வாங்கல்களிலேயே முரண்பாடுகள் காணப்படுவதாகவே கருதமுடிகின்றது. இதேபோன்றே ஜேவிபியுடனான பேச்சுவார்த்தைகளும் பல முழுநிலவுகளைக் கண்டது நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

அமைச்சரவை நியமனத்தில் சனாதிபதி குமாரதுங்காவிற்கும் ஜேவிபிக்கும் ஏற்பட்ட பிணக்குகள் தற்காலிகமாகவேனும் தீர்க்கப் பட்டுள்ளது. மகாவலி அபிவிருத்தி அதிகார சபையிலுள்ள விவசாயம் சம்பந்தப்பட்ட பிரிவுகள் காணி அமைச்சிடமும், நீர்ப்பாசனம் தொடர் பானவை ஆற்றுப்படுக்கை அபிவிருத்தி அமைச்சிடமும் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளன. காணி-நீர்ப்பாசனம், கலாச்சாரம், மீன்பிடி, கிராமியத் தொழில் வளர்ச்சி ஆகிய நான்கு துறைகளிற்கான அமைச்சு மற்றும் பிரதி உமைச்சுப் பொறுப்புகளை ஜேவிபி ஏற்றுக்கொண்டுள்ளது. கூட்டணி யரசுகளில் எந்தவோர் அமைச்சுப்பொறுப்பும் பூரணமாக ஒரு கட்சியிடமே கையளிக்கப்படுவது மரபல்லவாகும். அது ஒருவகையில் ஆரோக்கியமற்றதுமாகும்! ஆனால் ஜேவிபி ஏற்றுள்ள அமைச்சுப் பொறுப்புகளில் அமைச்சர் மற்றும் துணை அமைச்சர்களாக ஜேவிபியினரே நியமிக்கப்பட்டுள்ளனர். கடந்த தேர்தல்களில் ஐக்கிய சுதந்திர முன்னணி பெற்ற வாக்குகளில் ஐம்பது வீதத்திற்கு மேலானவை ஜேவிபிக்குக் கிடைத்தவையாகும். இன்று அரசின் முக்கிய பங்காளியாக ஜேவிபி வலம் வருகின்றது. இத்தகைய தன்மையில் சமாதான நடவடிக்கைகள் முதல் அரசாட்சி வரை அனைத்திலுமே ஆளுமைமிக்க அழுத்தங்களைப் பிரயோகிக்கவல்லவர் யார் என்பது ஊரறிந்த இரகசியமாகும். பாராளுமன்றத்தில் சாதாரண பலத்தையேனும் கொண்டிராத குமாரதுங்கா அரசினுடைய நடவடிக்கைகள் நம்பிக்கை களைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக இன்று தெளிவின்மையை வலுவடையச் செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபிள்ளை வேளாண்மை

தென்னிலங்கை அரசியலில் மீண்டும் சலசலப்பு ஆரம்பித்துள்ளது. அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளருமான மைத்திரபால சிறிசேனா பாராளுமன்ற அவை முதல்வராக நியமிக்கப் பட்டுள்ளார். ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரசு அரசிற்கு ஆதரவளிப்பதற்கான இரண்டு நிபந்தனைகளை முன்வைத்துள்ளது. ஏப்பிரல் 22 இல் ஏற்பட்டது போலன்றி, மே 18 இல் பாராளுமன்றம் கூடியபோது ஒருவகையான அமைதி நிலவியது. துணை சபாநாயகர் மற்றும் கமிட்டிகளின் துணைத் தலைவர் பதவிகளை ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் பகிர்ந்துகொண்டன. ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரசு உறுப்பினர் ஹசேன் பைலா அரசு தரப்புக்குத் தாவியபோது திரைமறைவு நகர்வுகள் வெளிச்சத்திற்கு வந்தன. ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரசின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கட்சித்தலைவர் ராஹூப் ஹக்கீம் மீது ஏற்படுத்தப்பட்ட அழுத்தங்களின் கோலங்கள் அதிர்வுகளை ஏற்படுத்தின. ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரசின் ரிச்சாட் பதீயூதீன், நஜீப், மஜீத், ஏ. இனமுல்லா, ஹசேன் பைலா ஆகியோர் மீது கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளது. அதனால் கட்சியில் முறுகல்களும் குழப்பங்களும் ஏற்பட்டுள்ளன.

சமாதானச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதான தோற்றத்தை உருவாக்கிட இலங்கையரசு தொடர்ந்து முற்படுகின்றது. அரசின் சமாதானச் செயலகத்தின் பொறுப்பாளராக முன்னாள் இராஜதந்திரி ஜயந்த தனபாலா நியமிக்கப்பட்டுள்ளார். அன்று புரிந்துணர்வு உடன் படிக்கை ஏற்பட்டு சமாதான நடவடிக்கைகள் ஆரம்பமாகியமைக்கும், இன்றுள்ள சூழ்நிலைகட்கும் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இன்றைய ஆட்சியாளர்களான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜேவிபியும் இனப்பிரச்சினை விடயத்தில் எதிரும் புதிருமான நிலைப்பாடுகளையே கொண்டிருக்கின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னைய அவதாரமான பொதுசன ஐக்கிய முன்னணி, இனப்பிரச்சினைக்கான தீர்வை மையப்படுத்தி 2000 ஆம் ஆண்டில் முன்வைத்த அரசியல் சாசன திட்டவரைவை ஜேவிபி என்றுமே ஏற்றுக்கொண்டதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமன்றி அத்தகைய தீர்வுத்திட்டத்தின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதையும் ஜேவிபி எதிர்க்கின்றது. அன்றொரு தடவை பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு ஜேவிபி ஆபத்பாந்தவனாகியபோதிலும், தீர்வுத்திட்ட விடயத்தில் நிபந்தனைகளை விதித்திருந்தது. இன்றும் அதேநிலையே காணப்படுகின்றது. ஜேவிபியினுடைய நிலைப்பாடுகளுக்கு மத்தியில் சமாதானச் செயற்பாடுகளை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பது பரவலாக எழுந்துவரும் அய்யப்பாடாகும். தவிர இதுவரையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு சமாதான நடவடிக்கைகளை மேற்கொண்ட போது, அதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜேவிபியும் எதிர்த்திருக் கின்றன. நாடு துண்டாடப்படுவதாக கோஷம் எழுப்பப்பட்டது. நாட்டின் இறையாண்மையும் பாதுகாப்பும் அச்சுறுத்தலுக்கு உட்படுவதாகக் கூச்சலிடப்பட்டது.

சமாதான முன்னரங்கில் முறுகல் நிலையைத் தோற்றவிக்கத்தக்க உந்துதல்கள் உருவாக்கப்பட்டன. ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஜேர்மனியில் ஆரம்பமாவதற்கு முன்பாக நெடுந்தீவுக் கடற்பரப்பிலும், ஆறாவது சுற்றுப்பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன்பாகக் கிழக்குக் கடற்பரப்பிலும் அசம்பாவிதங்கள் ஏற்பட்டன. அதேதினத்தில் சமாதான முயற்சிகட்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பேரணி ஒன்றைப் பொதுசன ஐக்கிய முன்னணியும் ஜேவிபியும் கூட்டாகச் சேர்ந்து தலைநகரில் நடத்தின. சமாதான முன்னரங்கில் அதீதமான அழுத்தங்களை ஏற்படுத்திய விடயங்களில் உயர்பாதுகாப்பு வலயம் குறிப்பிடத்தக்கதாகும்.

குடாநாட்டில் சுமார் 160 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பு உயர்பாதுகாப்பு வலயங்களால் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. அதில் சுமார் 82 சதுரகிலோ மீட்டர் கடலோரப் பிரதேசங்கள், சுமார் 40,000 ஏக்கர் விவசாய நிலங்கள், கல்விச்சாலைகள், வழிபாட்டுத் தலங்கள், பெருவீதிகள் என்பனவும் உள்ளடங்கியுள்ளன. அதனால் சுமார் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இது விடயங்களில் நிறைவேற்று அதிகார சனாதிபதி தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. நெடுந்தீவு, வாகரை, மானிப்பாய், மட்டக்களப்பு, குரங்கு பாஞ்சான், திரியாய்-கும்பிறுப்பிட்டி, வில்கம் விகார என ஒன்றன்பின் ஒன்றான சம்பவங்கள் வாயிலாக சமாதானத்திற்கு ஊறுவிளைவிக்கத்தக்க செயற்பாடுகள் ஏற்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைக் கட்டுப்படுத்தவில்லை. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் முன்வைக்கப்பட்டபோது அமைச்சுகள் பறிக்கப்பட்டது! அதன்பின்னர் அரசு கலைக்கப்பட்டது! இன்று காட்சிகள் மட்டுமல்ல, கட்சிகளும் மாறியுள்ளன. ஆனால் இதுகாறும் புரிந்துணர்வு உடன்படிக்கை, போர்நிறுத்தம், பேச்சுவார்த்தைகள், நோர்வேயினுடைய பங்களிப்பு உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் வெளியிடப்பட்ட எதிர்மறையான கருத்துகள் யாவும் அரசியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவேயாகும் என்பது சம்பந்தப்பட்டவர்களாலேயே அழுத்தம் திருத்தமாக வெளிக்கொணரப்படுகின்றது. நிற்க, மழைக் காலத்து இரவுப் பொழுதெல்லாம் இடையறாது கூச்சலிட்டு விடியலை எதிர்கொள்ளும் வாய்ப்பை இழக்கும் பிராணியொன்றின் நினைவு ஏனோ மனத்திரையில் அசைகின்றது.

அதிகார பீடங்களில் வீற்றிருப்பவர்களுக்கு உள்ளூர்ச் சறுக்கல்கள் திருப்தியளிப்பதில்லைப் போலும்! அதனாலன்றோ சர்வதேச அளவில் சறுக்கல் தேடும் வேட்கை! பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் தேர்வின்போது சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது என்பது பிரகடனப்படுத்தப்பட்டது. அதனை உறுதி செய்வதற்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ஐ.நா.வின் அடுத்த செயலாளர் நாயகத்திற்கான போட்டி ஆரம்பமாகியுள்ளது. புதிய செயலாளர் நாயகம் ஆசிய-பசிபிக் பிராந்தியத்திலிருந்து தெரிவு செய்யப்படக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. பதவியைப் பல நாடுகள் குறி வைக்கின்றன. இலங்கையின் முன்னாள் அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ, இராஜதந்திரி ஜயந்த தனபாலா ஆகியோருடைய பெயர்களும் பிரஸ்தாபிக்கப்படுகின்றது. கரும்பு தின்னக் கைக்கூலியா வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருதடவை சொன்னால்...

பாராளுமன்றத் தேர்தல்கள் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஆட்சியமைப்பதில் அல்லோலகல்லோலம் ஏற்பட்டது. சபாநாயகர் தேர்தல்கள் அமளிதுமளியாகியது. பாராளுமன்ற உறுப்பினர்கள் கடத்தப் பட்டார்கள். வயம்பா மாகாண சபைத் தேர்தல்களும் முடிவடைந்து உள்ளன. மேல் மாகாணம், தென் மாகாணம், சப்ராகமுவ, ஊவா, மத்திய மாகாணம், வடமத்திய மாகாணம் ஆகிய ஆறு மாகாண சபை களுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இந்நிலையில் பாராளுமன்றப் பலத்தை உறுதிசெய்வதற்கான முயற்சிகள் முடுக்கிவிடப்படுகின்றன. ராவூப் ஹக்கீம் மீது பாலியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. மே 18 இல் பாராளுமன்றம் கூடியபோது ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரசின் ஹசேன் பைலா அரசதரப்பில் சேர்ந்தார். இவ்வாறாகச் சிறுபான்மைக் கட்சிகளைப் பிளவுபடுத்தும் முயற்சிகளைக் காணமுடிகின்றது.

சிலவாரங்களுக்கு முன்பாக அவை முதல்வர் நியமனம் குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டது. அப்போது மரபுகளையும் மீறி எதிர்க்கட்சிகளின் வேட்பாளர் ஒருவரே அப்பதவிக்கு நியமிக்கப்படவேண்டும் என்னும் கருத்து ஐக்கிய தேசிய முன்னணி தரப்பிலிருந்து சொல்லப்பட்டது. ஆனால் அதன்பின்னர் அரசிற்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்கு மிடையே இணக்கப்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. அதனால் அவை முதல்வர் நியமனம் சுமுகமாக நடைபெற்றுள்ளது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு அரசுடன் நெருங்குகின்றது. அதே சமயத்தில் விக்கிரமசிங்கா தரப்பிலும் நெகிழ்வுத் தன்மை காணப்படுகின்றது. பிலிப் குணவர்த்தனேவின் மைந்தரும், அமைச்சர் தினேஷ் குணவர்த்தனேவின் சகோதரருமான ஐக்கிய சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் கீதாஞ்சனா குணரத்னே துணைசபாநாயகரானார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் முருகன் சச்சிதானந்தன் கமிட்டிகளின் துணைத் தலைவரானார். இத்தகைய செயற்பாடுகள் மூலமாக ஆதாயங்களைப் பகிர்ந்துகொள்வதில் அரசியல்வாதிகளிடையே காணப்படும் ஒற்றுமையைக் காணமுடிகின்றது. மலையகத்தில் யானை-சேவல் கூட்டு அனுகூலமானது. ஆனாலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்கும் வரையிலாவது ஆட்சியில் பங்குகொண்டு அரியணையின் கதகதப்பை அனுபவிப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விரும்புகின்றது. சச்சிதானந்தனின் நியமனம் அதற்கான அச்சாரமாகவே கருதலாம்.

இந்தியத் தேர்தல் முடிவுகள் வெளியாகி ஒரு வாரம் பூர்த்தியடைந்துள்ளது. புதிய பிரதமராகப் பொருளாதார வல்லுநர் கலாநிதி மன்மோகன்சிங்கு பதவியேற்கின்றார். பாரதீய ஜனதா மீண்டும் வெற்றி பெறலாம் என்னும் பரவலான எதிர்பார்ப்புக்களையும் மீறி, காங்கிரசு ஆட்சியமைப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளது. பாரதீய ஜனதா 138 ஆசனங்களையும், காங்கிரசு 148 ஆசனங்களையுமே தனித்துப் பெற்றுள்ளன. அதனால் இரண்டு கட்சிகளுமே ஆட்சி யமைக்கும் வல்லமையைத் தனித்துப் பெறவில்லை. 1989லிருந்து தனியொரு கட்சியின் ஆட்சி என்பது எட்டாக்கனியாகியுள்ளது. ஜார்கண்ட் முக்தி மோட்சாவினுடைய ஆதரவுடனேயே 1991இல் ஏற்பட்ட பி.வி. நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரசு அரசு நிலைத்தது. வி.பி. சிங்கு, குஜ்ரால், தேவகௌடா, வாஜ்பாய் அரசுகளும் தனித்து ஆட்சி அமைக்கவில்லை. இன்றும் அதேநிலை தொடருகின்றது. மூன்றாவது அணிக்கோட்பாடு 1980களில் உருவாகியது. அதுவரையில் காங்கிரசுடன் கூட்டணியமைத்துத் தேர்தல்களைச் சந்தித்த கட்சிகள் மூன்றாவது அணியாகின. அதனால் சுமார் 44 வருடங்கள் ஆட்சிசெய்த காங்கிரசின் இருப்பு அசைக்கப்பட்டது. மூன்றாவது அணியின் முயற்சிகளினால், 1990களில் வி.பி. சிங்கு, குஜ்ரால், தேவகௌடா அரசுகள் அமைந்தன. மத்திய ஆட்சியை நிருணயம் செய்யும் வல்லமையை மாநிலக் கட்சிகள் பெற்றன. ஆந்திராவின் சந்திரபாபு நாயுடுவும், தமிழகத்தின் கலைஞர், ஜெயலலிதாவும், கருநாடக மாநிலத்தின் தேவகௌடாவும் அகில இந்திய அளவில் புதிய அடையாளங்களை ஏற்படுத்தினார்கள்.

மூன்றாவது அணிக்கோட்பாடு இன்று ஒரு முழுச்சுற்றைப் பூர்த்திசெய்துள்ளது. மூன்றாவது அணியிலுள்ள சுர்ஜீத்சிங்கு, ஜோதிபாசு முதல் லல்லு பிரசாத் யாதவ், கலைஞர் கருணாநிதி, சரத்பவார் ஈறானவர்கள் காங்கிரசு அணியில் சங்கமித்திருக்கின்றனர். அதனால் கடந்த இரண்டு சகாப்தங்களில் காணப்பட்ட சிக்கல்கள் அரசமைப்பதில் குறைவாகக் காணப்படுகின்றன.

திமுக, மறுமலர்ச்சி திமுக, பாட்டாளி மக்கள் கட்சி, லல்லுபிரசாத் யாதவின் ராஷ்டிரிய ஜனதா தளம், சரத்பவாரின் தேசியவாத காங்கிரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சி, தெலுங்கானா கட்சி, ஜார்கண்ட் முக்தி மோட்சா ஆகியவற்றுடன் இணைந்து காங்கிரசு 219 ஆசனங்களைப் பெற்றுள்ளது. சிவசேனா, பிஜு ஜனதாதளம், அகாலிதளம், ஐக்கிய ஜனதாதளம், தெலுங்கு தேசம், திருணாமுல் காங்கிரசு ஆகியவற்றுடன் இணைந்து பாரதீய ஜனதா 186 ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஆனாலும் ஆட்சியமைப்பதற்கு வேண்டிய 272 ஆசனங்கள் இரண்டு அணிகட்குமே கிடைக்கவில்லை. இடது சாரிகளினது ஆதரவுடன் காங்கிரசு அணி அரசமைக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. தமிழகத்தில் கலைஞருடைய கூட்டணி, புதுச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளது. அதிலே 16 இடங்களைத் திமுகவும், 10 இடங்களைக் காங்கிரசும், 6 இடங்களைப் பாட்டாளி மக்கள் கட்சியும், 4 இடங்களை மறுமலர்ச்சித் திமுகவும், 4 இடங்களை இடதுசாரிகளும் பெற்றுள்ளன. தற்போதைய தேர்தல் முடிவுகள் அடுத்த சட்டமன்றத் தேர்தல்களில் தாக்கங்களை ஏற்படுத்தலாம்.

சுமார் ஒரு சகாப்தமாகத் தமிழக அரசியல்வாதிகளுக்குப் பீதி ஏற்படுத்தியவர். பாட்டாளி மக்கள் கட்சியைத் தேர்தல்களில் தோற் கடிப்பதற்காகப் புறப்பட்டவர். ஜெயலலிதாவை ஆதரித்தால் தமிழக மக்களை ஆண்டவனாலும் காப்பாற்றமுடியாது என்று சொல்லியவர், இன்று அண்ணா திமுக-பாரதீய ஜனதா அணியை ஆதரிப்பவர் ஒன்றல்ல! இரண்டல்ல! ஆறு தொகுதிகளிலே சொல்லப்பட்டுள்ள தீர்ப்பை, அவரது பாணியிலே சொல்வதானால் அறுநூறு இடங்களிலே வழங்கப்பட்ட தீர்ப்பாக எடுத்துக் கொள்வாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு உக்கிரமடைகின்றது

இலங்கையில் ஆட்சிப்பீடமேறுபவர்கள் தமக்குச் சாதகமான வகையில் நிறுவனமயமான மாற்றங்களை ஏற்படுத்துவதென்பது காலங்காலமாகவே நடைபெறுவனவாகும். அதற்கு அரசியல்யாப்பும் விதிவிலக்கல்ல! சென்ற 56 ஆண்டுகளில் இதுவரையில் இரண்டு தடவைகள் அரசியல்யாப்பு மாற்றப்பட்டிருக்கின்றது. 1970 இல் பதவியேற்ற ஐக்கிய முன்னணி அரசு, 1946 இல் உருவாக்கப்பட்ட சோல்பரியாப்பை மாற்றியது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியில் 1972 அரசியல்யாப்பு உருவாக்கப்பட்டபோதே, அதற்கடுத்த அரசியல் யாப்பை உருவாக்கும் சிந்தனை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்டு விட்டது. 1977 இல் அறுதிப்பெரும்பான்மையுடன் ஐக்கிய தேசியக் கட்சி பதவியேற்றபோது 1978 அரசியல்யாப்பு உருவாக்கப்பட்டது. அதிலே நிறைவேற்று அதிகார சனாதிபதி ஆட்சிமுறை, விகிதாசாரப் பிரதி நிதித்துவம் என்னும் அடிப்படையான மாற்றங்கள் உருவாக்கப்பட்டன. அதன்பின்னர்க் குமாரதுங்கா அரசு, 2000 ஆம் ஆண்டில் மற்றுமோர் அரசியல்யாப்பை உருவாக்க முயற்சித்தது. ஆளப்படுபவர்கள் குறித்த பிரக்ஞையின்றி, ஆள்வோருடைய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதான மாற்றங்கள் காலத்திற்குக் காலம் அரசியல்யாப்பில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

பொதுவாக ஆட்சிமுறைகளில் அதீதமான மாற்றங்கள் ஏற்படுகின்ற சூழ்நிலையிலேயே, சட்ட ஆட்சியை ஏற்படுத்துவதற்காக அரசியல்யாப்பு உருவாக்கப்படுவது வழக்கமாகும். உலகின் மிகப்பெரிய சனநாயக நாடான இந்தியாவின் அரசியல்யாப்பு 57 ஆண்டுகட்கு முன்னர் உருவாக்கப்பட்டது. பிரித்தானியாவில் அரசியல்யாப்பு எழுத்துருவில் இல்லாதபோதிலும் மரபாகவே பேணப்படுகின்றது. ஆனால் இலங்கையில் ஒவ்வொரு கட்சி பதவியேற்கும்போதும் கல்வி முறை, அரசியல்யாப்பு போன்ற அடிப்படையான விடயங்களையே மாற்றியமைக்கும் பாங்கு காணப்படுகின்றது. அரசியல்யாப்பு என்பது சட்டங்கள் அனைத்திற்கும் மூலாதாரமானதாகும். அதிலிருந்தே ஒரு நாட்டின் அனைத்துச் சட்டங்களுமே சட்டவலுவைப் பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள்பவரினது அதிகாரங்கள், ஆளப்படுவோரின் உரிமைகள் என அனைத்துமே அரசியல் சாசனத்திலிருந்து ஊட்டம் பெறுகின்றன. அரசியல்யாப்பானது திருத்தங்களுக்கோ, மாற்றங்களுக்கோ உட்படலாகாது என்பதல்ல! அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான வழிவகைகள் அரசியல்யாப்பிலேயே வகுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவுடன் திருத்தங்களையோ, மாற்றங்களையோ மேற்கொள்ளலாம் என இலங்கை அரசியல்யாப்பின் 82 ஆவது அதிகாரம் கூறுகின்றது, அவ்வாறே 2001இல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுச் சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன.

1970இல் லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸ்டு கட்சி ஆகியவற்றுடன் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி புதிய அரசியல்யாப்பை உருவாக்கியது. அன்று எந்த அமைப்பினுடைய அடிப்படைச் செயற்பாடுகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வரிந்து கட்டிக்கொண்டு எதிர்த்ததோ இன்று அதே அமைப்புடன் இணைந்து புதிய அரசியல்யாப்பைப் படைக்க முனைகின்றது. 1970 மார்ச்சில் நடைபெற்ற தேர்தல்களில் புதிய அரசியல்யாப்பை வரையவும், அதனை அங்கீகரித்துச் செயற்படுத்தவும், அரசியலமைப்புச் சபையாக இயங்கவும் மக்களின் ஆணை கோரப்பட்டது. 151 அங்கத்துவர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் 116 இடங்களை ஆளும் கட்சி பெற்றுக் கொண்டது. அதனால் அறுதிப்பெரும்பான்மையுடனான அரசு அமைந்தது. 1972 மே 22 இல் புதிய அரசியல்யாப்பு சமர்ப்பிக்கப் பட்டபோது. 119 வாக்குகள் சார்பாகவும் 16 வாக்குகள் எதிராகவும் கிடைத்தன. ஆனால் இன்று நிலைமை அப்படியல்ல! ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியரசு சாதாரணப் பெரும்பான்மையையேனும் கொண்டிருக்கவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு மற்றும் ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரசு ஆகியன அரசியல்யாப்பு மாற்றம் குறித்த அரசினுடைய அணுகுமுறையை ஆதரிக்கவில்லை. இருந்தபோதிலும் புதிய அரசியல்யாப்பு உருவாக்கும் முனைப்புக் காணப்படுகின்றது. தென்னிலங்கைக் கட்சிகள் ஒன்றிணைந்து அரசியல்யாப்பு மாற்றங்களை உருவாக்குமாயின், அதுவே தமிழ்த் தேசியத்திற்கு வழங்கப்படும் அங்கீகாரமாக அமையும்.

கிழக்கிலங்கையில் ஏற்படும் சம்பவங்கள் அச்சத்தையும் பீதியையுமே உருவாக்குகின்றன. கடந்த மார்ச்சு 23 ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருச்செல்வம் துப்பாக்கிச் சூட்டிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்காகிக் காயமடைந்தார். அதனைத் தொடர்ந்து வன்முறைச் சம்பவங்களும் உயிர்ச்சேதங்களும் தொடர்ச்சியாக ஏற்படுகின்றன. அண்மையிலேற்பட்ட படுகொலைகள் அந்த வகையில் முக்கிய கவனத்தைப் பெறுகின்றன. மே 24 ஆம் திகதி மாலை 4.30 மணியளவில் கிழக்குப் பல்கலைக் கழகப் பொருளியல் துறைத் தலைவர் தம்பையா மட்டக்களப்பில் கொலை செய்யப்பட்டார். அதிலிருந்து ஒரு வாரத்தின் பின்னர் மே 31ஆம் திகதி காலை 9.30 மணியளவில் சிரேஷ்ட பத்திரிகையாளர் ஜி. நடேசன் சனசஞ்சாரம் மிக்க மட்டு நகரப் பகுதியில் கொலை செய்யப்பட்டார். இவ்விரண்டு சம்பவங்களுமே இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில், அதுவும் சமாதானம் நிலவுவதாகக் கருதப்படுகின்ற காலப்பகுதியில் நடைபெற்றுள்ளது.

பத்திரிகையாளர்கள் அழுத்தங்கட்கு உட்படுவதென்பது இயல்பானதாகும்! ஆனால் அஃது உயிர்களைக் காவுகொள்ளத்தக்க வகையில் அமைந்து விடுகின்றமை அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது. முன்னர் 2000 ஆம் ஆண்டின் யாழ்ப்பாணத்தில் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டார். இன்று கிழக்கிலங்கையில் நடேசன் படுகொலைசெய்யப்பட்டுள்ளனர். ஆனால் நிமலராஜன் கொலை செய்யப்பட்ட காலகட்டம், நடேசன் கொலை செய்யப்பட்டிருக்கும் இன்றைய காலகட்டத்திலிருந்து மாறுபட்டதாகும். கடந்த சில வாரங்களில் பத்திரிகையாளர் சிவராம் இல்லம் கொழுப்பில் சோதனையிடப்பட்டு அச்சுறுத்தப்பட்டுள்ளார். பத்திரிகையாளர்கள் கல்வியாளர்கள் எனச் சமூகத்தின் கருத்துகளைப் பிரதிபலிப்பவர்கள் இலக்கு வைக்கப்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது. நிராயுத பாணிகள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்கள் கொலைகள் என்பன ஒட்டுமொத்த சமூகத்தின் அடிப்படை இருப்புக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலாகவே கருதமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியதோர் உலகா படைக்கிறார்கள்?

கடந்த ஏப்பிரலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பதவியேற்றதன் பின்னர் இதுவரையில் நான்கு தடவைகள் பாராளு மன்றம் கூடியுள்ளது. ஒவ்வொரு தடவையும் பாராளுமன்றம் கூடுகின்ற போதும் ஏதோ ஒருவகையிலான சர்ச்சை உருவாகியுள்ளது. கடைசியாக ஆடி 8 இல் பாராளுமன்றம் கூடியபோது ஜாதீக ஹெல உறுமயவின் புதிய பாராளுமன்ற உறுப்பினர் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொள்வது தொடர்பில் வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டுக் கைகலப்பில் முடிவடைந்தது. பாராளுமன்றக் கூட்டத்தைச் சம்பிரதாயப்படுத்துகின்ற கோல் அரசு தரப்பினால் அகற்றப்பட்டதையடுத்து, சுமார் நான்கு மணித்தியாலங்கள் சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன. ஆளும் தரப்பினரே இத்தகைய சம்பவங்கட்குச் சூத்திரதாரிகளென எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 114 அங்கத்தவர்கள் ஒன்றுசேர்ந்து குற்றம் சுமத்தியுள்ளனர். ஆறு கட்சிகளைச் சார்ந்த 114 அங்கத்தவர்கள் ஒன்று சேர்ந்திருப்பது பாராளுமன்றப்பலம் எதிரணியில் உள்ளமையையே காட்டுகின்றது. ஆனாலும் அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் எதிரணியினர் ஈடுபடுவார்கள் என்பதாகக் கருதமுடியவில்லை.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு அரசுக்கு ஆதரவளிக்கலாமென உலாவிய செய்திகள் ஓய்ந்துள்ளது. ஆனால் நித்திய கண்டம்... பூரண ஆயுசு எனவுள்ள இன்றைய அரசுக்குப் பத்து அங்கத்தவர்களைக் கொண்ட ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரசு ஆதரவளிக்கலாமென ஊகங்கள் காணப்படுகின்றன. அண்மையில் ராவூப் ஹக்கீம் மீது பாலியல் குற்றச் சாட்டுகளை அரசதரப்பு ஏற்படுத்த முயன்றமை மறக்கப்பட்டுள்ளது. அரசியல்யாப்பின் திருத்தங்களை ஏற்படுத்துவதில்லை என்றும், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முசுலிம்கள் தனித்தரப்பாக ஏற்றுக் கொள்வதாகவும் உறுதியளிக்கும் பட்சத்தில் முசுலிம் காங்கிரசு அரசுக்கு ஆதரவளிக்கத் தயாராகியுள்ளதாகவே கருதமுடிகின்றது. முன்னாள் பிரதமர் விக்கிரமநாயக்க அமைச்சரவையில் சேர்க்கப்பட்டுள்ளதோடு பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் சபாநாயகர் தேர்தலில் தோல்வியுற்ற டி.ஈ.டபிள்யு. குணசேகரா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலமைப்பு விவகார அமைச்சராகியுள்ளார். அமெரிக்காவிலுள்ள ஜோர்ஜியா மாநிலத்தில் ஜி8 என அழைக்கப்படும் பொருளாதார வலுமிக்க நாடுகளின் உச்சி மகாநாடு இம்மாத் 8,9 மற்றும் 10 ஆம் திகதிகளில் நடைபெற்றுள்ளது.

சுமார் மூன்று சகாப்தங்கட்கு முன்னர் பெட்ரோலியச் சந்தையில் காணப்பட்ட அதீதமான தளம்பல்களும் பன்னாட்டளவிலான பொருளாதார வீழ்ச்சியும் வளர்ச்சியடைந்த நாடுகள் சிலவற்றை அதிர்ச்சிக்கு உட்படுத்தியது. அத்தகைய பின்னணியியே பொருளாதார நலன்கள் குறித்த அமெரிக்க, ஐரோப்பிய, ஜப்பானிய அதிகாரிகள் மட்டத்திலான சந்திப்புகள் 1973 இல் ஆரம்பமாகின. அதன்பின்னர் 1975 இல் அத்தகைய சந்திப்புகளில் அந்நாட்டுத் தலைவர்களும் பங்கு கொண்டனர். அமெரிக்கா, பிரான்சு, ஜேர்மனி, பிரித்தானியா, இத்தாலி. ஜப்பான் ஆகிய ஆறு நாடுகளுடன் ஆரம்பமான இக்குழுவில், 1976 இல் கனடாவும் 1998 இல் ரஷ்யாவும் இணைந்து கொண்டன. ஒவ்வொரு வருடமும் இச்சந்திப்பு வெவ்வேறு உறுப்பு நாடொன்றில் நடைபெறுகின்றது. தற்போதைய உச்சி மகாநாடு அமெரிக்காவின் ஜோர்ஜியா மாநிலத்திலுள்ள ஐந்து மைல் நீளமும் இரண்டு மைல் அகலமும் கொண்ட இயற்கையெழில் கொஞ்சும் சீ ஐலண்டில் நடைபெற்றுள்ளது. இதற்கு முன்னர் அமெரிக்காவின் போர்டோ ரிக்கோவில் 1976லும், விர்ஜீனியாவில் 1983லும், டெக்ஸாசில் 1990லும், கொலராடோவில் 1997 லும் ஜி8 மகாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன.

ஜி8 நாடுகளினுடைய கொள்கைகளிற்குப் பரவலான எதிர்ப்பு உள்ளது. அதிலும் குறிப்பாகச் சர்வதேச மயமாக்கல் கொள்கை சர்ச்சைக்கு உட்பட்டதாகும். அதனால் உச்சிமகாநாடுகளின்போது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஏற்படுவது வழமையாகும். அத்தகைய ஆர்ப்பாட்டங்களில் 2001இல் இத்தாலியில் ஏற்பட்டவை வீரியம் மிக்கவையாகக் காணப்பட்டன. அதனால் இம்முறை பாதுகாப்பில் அதி விசேடமான கவனம் செலுத்தப்படுகின்றது. மகாநாடு நடைபெறு மிடத்திலிருந்து 100 கிலோமீட்டர் தொலைவிலேயே ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஜி8 நாடுகள் கொள்கைகளை வகுக்கலாம்! திட்டங்களைத் தீட்டலாம்! அபிவிருத்தி இலக்குகளை நிருணயிக்கலாம்! ஆனால் அதன்படி ஒழுகுமாறு யாரையும் நிர்ப்பந்திக்க இயலாதென்பது நியதியாகும். இருந்தபோதிலும் நடைமுறையில் ஜி8 நாடுகளின் திட்டங்களைப் பிறநாடுகள் முற்றுமுழுதாக நிராகரிக்கமுடியாதென்பது யதார்த்தமாகும். ஏனெனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜி8 அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஒப்பாரும்மிக்காருமற்ற பொருளாதாரம் மற்றும் அரசியல் சார்ந்த ஆளுமைகளைக் கொண்டிருக்கின்றன. அத்துடன் ஐ.நா., உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புகளிலும் ஜி8 நாடுகள் அபரீதமான செல்வாக்கைக் கொண்டுள்ளன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் குறித்த பார்வை, சர்வதேசப் பாதுகாப்பு, மத்திய கிழக்கு சமாதான முயற்சிகள் ஆகியவற்றுடன் நோய்த்தடுப்பு முயற்சிகள், அபிவிருத்தித் திட்டங்கள், வளரும் நாடுகளின் கடன் சுமை என்பன ஜி8 உச்சிமகாநாடுகளில் முக்கியமாகப் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

ஜி8ல் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளிடையேயும் பலவிதமான விடயங்களிலும் பூரணமான இணக்கப்பாடுள்ளதாகக் கொள்வதற்கில்லை. ஈராக் யுத்தம், கியட்டோ உடன்படிக்கை என்பவற்றில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. ஜோர்ஜியா உச்சிமகா நாட்டின்போது பன்னாட்டளவிலான பொருளாதார-வர்த்தக வளர்ச்சி, சர்வதேசப் பொருளாதாரத்தை வலுவாக்கல், சமாதானம், வளரும் நாடுகளில் சனநாயகம் உள்ளிட்ட விடயங்களில் செயல்திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் உலகின் பொருளாதார வளர்ச்சி குன்றிய 27 நாடுகளின் கடன்சுமையைக் குறைப்பது, ஈராக்கினுடைய 120 பில்லியன் டாலர் கடன்சுமையில் கணிசமான பங்கைக் குறைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வது, உயிர்க்கொல்லி நோயான எச்.ஜி.விக்கான தடுப்பு மருந்து, விமானப் பாதுகாப்புகளை மேம்படுத்துவது, அணுவாயு தொழில்நுட்பத்தைக் கட்டுப்படுத்துவது என்பனவாகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. புதியதோர் உலகு செய்யப் புறப்பட்டவர்களின் அடுத்த சந்திப்பு பிரித்தானியாவில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்புகள்

சமாதான முயற்சிகள் நடைபெறுவதான தோற்றத்தை ஏற்படுத்த முனைந்த காலகட்டங்களிலேயே, சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய செயற்பாடுகளும் தென்னிலங்கையில் இடம் பெற்றிருக்கின்றன. அண்மைக்கால சம்பவங்கள் அதனை அழுத்தம் திருத்தமாக வெளிப்படுத்துகின்றன. விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதி கருணாவுடன் இணைந்து செயற்பட்ட பெண் போராளிகள், தென்னிலங்கையில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த நிலைகளிலிருந்து தப்பியபோது, ஏப்பிரல் 12ஆம் திகதிக்குப் பின்னர் ஏற்பட்ட திரை மறைவு விடயங்கள் வெளியாகியுள்ளன. அலிசாஹிர் மௌலானா வினதும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடையதுமான ஒன்றன்பின் ஒன்றான நடவடிக்கைகள் வேற்றுமையிலும் ஒற்றுமை காணும் தென்னிலங்கையை அடையாளம் காட்டுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு அமைப்பாளராக அலிசாஹிர் மௌலானா விளங்கியவர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்டபிரமுகரான அலாவி மௌலானாவின் உறவினர்.

2001 இல் ஐக்கிய தேசியக் கட்சி பதவியேற்றபோது, கிழக்கு மாகாணத்தில் தமிழ்-முசுலிம் உறவுகளை வளர்க்கின்ற பணியை அலிசாஹிர் மௌலானா ஏற்றுக்கொண்டவர். அதன்மூலமாக விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகளுடன் நேரடியான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டவர். அதுதவிர அரசியலுக்கு அப்பால், தனிப்பட்ட ரீதியிலும் கருணாவுடன் தொடர்புகொண்டவர். இருவருமே நண்பர்கள் மட்டுமல்லர், இருவரினது மனைவியாரும் உறவுக்காரர்கள். அந்த வகையில் அரசியலுக்கு அப்பாற்பட்டதாகவேகூட கருணாவிற்கு உதவியிருக்கலாம். அது மனிதாபிமான நடவடிக்கையையும் வியாக்கியானம் செய்யப்படலாம். ஆனால் கிழக்கிலிருந்து கருணா குழுத் தலைநகருக்குப் பயணித்தபோது, எத்தகைய இராணுவ இடையூறும் ஏற்படவில்லை என்பது கவனத்தை ஈர்க்கின்றது. ஒன்று கருணா விடயத்தில் இராணுவத்திற்குப் பங்கிருக்க வேண்டும் அல்லது இராணுவம் தனது பந்தோபஸ்து கடமையில் அஜாக்கிரதையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருக்கவேண்டும். கருணா விடயத்தில் பச்சை நீலக்கட்சிகளினதும் இராணுவத்தினதும் சொல்லுக்கும் செயலுக்குமிடையில், மலைக்கும் மடுவுக்குமிடையேயான தொடர்பையே அவதானிக்க முடிகின்றது.

தென்னிலங்கை அரசியல் தெளிவற்றதாகக் காணப்படுவதோடு சீரடைவதற்கான சமிக்ஞைகளும் தென்படவில்லை. பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்று ஒரு சில மாதங்களிலேயே மாகாண சபைத் தேர்தல்களும் நடைபெறுகின்றன. அதனால்போலும் தேர்தல் கால விறுவிறுப்புகள் அதிகமாகக் காணப்படவில்லை. ஆனாலும் மலையகத் தமிழர்கள் செறிந்துவாழும் மூன்று மாகாணங்களின் தேர்தல்கள் கவனத்தைப் பெறுகின்றன. கடந்த பொதுத்தேர்தல்களின்போது மலையகத்தில் வாக்களித்தவர் எண்ணிக்கை குறைவாகவும், செல்லு படியாகாத வாக்குகளின் எண்ணிக்கை அதிகமாகவும் காணப்பட்டன. அஃது வாக்காளர்களிடம் ஏற்பட்டிருந்த சலிப்பை வெளிப்படுத்திய தாகவே கொள்ளலாம். ஒருவகையில் அதன்மூலமாக மக்களுடைய மனோபாவங்களை அறிந்துகொள்ள முடிகின்றது.

அடிப்படைச் சுகாதார வசதியின்மை, வேலைவாய்ப்பின்மை என்பதோடு மேல் கொத்மலை, ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி போன்ற விவகாரங்களும் மலையகமக்களைப் பாதிக்கின்றன. 1980களின் பிற்பகுதியிலிருந்து மலையகத்தில் குறைவடைந்து காணப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் அண்மைக்காலங்களாக மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. கந்தப்பளை, இங்கிரிய, இரத்தினபுரி பகுதிகளில் வன்முறைச் சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. 1977க்கு முன்னர் மலையகத்திலிருந்து நியமனப் பிரதிநிதிகளே பாராளுமன்றம் சென்றனர். ஆனால் சென்ற பின்னர் மலையகக் கட்சிகள் ஆட்சியில் தொடர்ந்து ஏதோ ஒருவகையில் பங்குகொள்கின்றன. இருந்தபோதிலும் பேரினவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அந்த வகையில் மலையக மக்களின் ஏமாற்றங்களும் துன்பங்களும் மாகாணசபைத் தேர்தல்களின்போது வாக்குச் சாவடிகளில் வெளிப்படலாம்!

ஆளும்தரப்பினருடைய பாராளுமன்றப் பலம் அதிகரிக்கப் படுவதற்கான சாத்தியக்கூறுகள் தெளிவாகக் காணப்படவில்லை. 8 ஆசனங்களைக் கொண்டுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் 5 ஆசனங்களைக் கொண்டுள்ள ஸ்ரீலங்கா முசலிம் காங்கிரசும் ஐக்கிய தேசிய முன்னணியுடன் பொதுத்தேர்தல்களைச் சந்தித்திருந்தன. இன்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு ஆதரவளிப்பதில் நாட்டத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்துகின்றன. ஆளும்தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகவே கருதமுடிகின்றது. மாகாண சபைத் தேர்தல்கள் முடிவடைந்தபின்னர், கூட்டணி தொடர்பான தெளிவான நிலைப்பாடுகள் ஏற்படலாம். சனாதிபதி குமாரதுங்கா முன் வைக்கின்ற அரசியல்யாப்புத் திருத்தங்கள் சிறுபான்மைக்கட்சிகளுக்கு ஏற்கமுடியாதவையாகக் காணப்படுகின்றன. எந்தவொரு கட்சியும் அறுதிப்பெரும்பான்மை பெறுவதை விகிதாசாரப் பிரதிநிதித்துவம் தடுக்கின்றது. ஆக விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் மாற்றங்கள் ஏற்படுத்தவே தென்னிலங்கை விரும்புகின்றது. ஆனால் விகிதாசாரப் பிரதிநிதித்துவச் சிறுபான்மைக் கட்சிகளின் பாராளுமன்ற வாழ்வின் அடிப்படையாகும். ஆகத் தன்னுடைய கையாலேயே கண்ணைக் குத்துவதற்குச் சிறுபான்மைக் கட்சிகள் உடன்படக்கூடிய வாய்ப்புகள் குறைவாகவேயுள்ளன. ஆனால் அரசியல்யாப்பிலும், விகிதாசாரப் பிரதிநிதித்துவதிலும் மாற்றங்களை ஏற்படுத்தாவிட்டால் சிறுபான்மைக் கட்சிகள் அரசுக்கு ஆதரவளிக்கலாம்.

மாகாணசபைத் தேர்தல்கள் மலையகத்தில் கவனிப்பைப் பெறுகின்றன. 1977க்குப் பிந்தைய காலப்பகுதியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தே தேர்தல்களைச் சந்தித்து வந்திருக்கின்றது. இன்றும் அத்தகைய நிலையே தொடர்கின்றது. ஜனநாயகத் தோட்டத் தொழிலாளர் சங்கம், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் மேல்மாகாண மக்கள் முன்னணியும் தனித்துப் போட்டியிடுகின்றன. இனப்பிரச்சினைத் தீர்வாக இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாணசபைகள், தென்னிலங்கையில் வேலைவாய்ப்புகளையல்லவா பெருக்குகின்றது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரோடு நோவேன்?

அகதிகள் உருவாகின்றார்களா? அல்லது உருவாக்கப்படுகின்றார்களா? எங்கு மனிதர்களுடைய அடிப்படை இருப்பு நிராகரிக்கப்படுகின்றதோ, அங்கு அகதிகள் உருவாக்கப்படுகின்றார்கள். அதிகள் பாதுகாப்புடனும் கௌரவத்துடனும் வாழ்வைக் கட்டியெழுப்பத்தக்க வாய்ப்பை ஏற்படுத்திட ஐநாவின் அகதிகளுக்கான ஆணையம் பங்காற்றுகின்றது. 1950களில் சுமார் இரண்டு மில்லியன்களாக இருந்த அகதிகளின் எண்ணிக்கை, 1980களில் 10 மில்லியனாகவும், 1990களில் 17 மில்லியனாகவும், 2000 ஆம் ஆண்டில் 21 மில்லியனாகவும் உயர்ந்து, 2003 இல் 20.6 மில்லியனாகக் குறைவடைந்துள்ளது.

18 அடி நீளமான மீன்பிடிப் படகில் அடைக்கலம் தேடும் 20 தமிழர்கள் இருந்தனர். உயிரைப் பணயம் வைத்துப் பாக்கு நீரிணையைக் கடக்கத் துணிந்தவர்களுக்கு நீச்சல் தெரிந்திருக்கவில்லை! இரவுநேர ரோந்துப் படகு தாக்கியபோது துடித்தார்கள். தனது 3 வயது பாலகியுடன் பயணித்த 23 வயது நிரம்பிய பெண்ணொருத்தி கடலில் தூக்கி வீசப்பட்டாள். மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் தேடிச்சென்ற 18 ஈழத்தமிழர்களுடைய உருக்குலைந்த உடல்கள், குளிரூட்டப்பட்ட கொள்கலன் ஒன்றில் கிழக்கு ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தியா-பாகிஸ்தான் அகதிகளின் தொடரணி வரலாறு காணாத அளவுகளில் 57 மைல்களுக்கு நீண்டிருந்தது. இத்துணை கொடிய பயணங்கள் ஏன்? எதற்காக? எப்படி? ஏற்படுகின்றது. அறநனைந்தவனுக்குக் கூதலென்ன குளிரென்ன என்னும் விரக்தி கலந்த வீறாப்புடனேயே இத்தகைய கொடிய பயணங்கள் ஏற்படுகின்றன.

பல நூற்றாண்டுகட்கு முன்பாகவே இறைமைந்தன் யேசுபிரான் அகதியாக்கப்பட்டார். மெக்காவிலிருந்து புறப்பட்ட முகம்மது நபிகள், மெதீனாவில் அகதியாகத் தஞ்சம் புகுந்தார். 1680 ஆம் ஆண்டில் பிரான்சின் மன்னரான 14ஆவது லூயிஸின் ஆட்சியில் குறிப்பிட்ட சமூகமொன்று இங்கிலாந்தில் தஞ்சம் புகுந்தது. 1914லிருந்து 1918 வரையிலான காலப்பகுதியில் ஏற்பட்ட இரண்டாம் உலகயுத்தம் என்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவிலான அகதிகளை ஐரோப்பாவில் உருவாக்கியது. 1930களிலிருந்து யூதர்கள் அகதிகளாக்கப்பட்டனர். 1917 இல் ரஷ்யப்புரட்சி ஏற்பட்டதிலிருந்து, 1921இல் சிவில் யுத்தம் முடிவடையும் வரையிலான காலப்பகுதியில் சுமார் 1.5 மில்லியன் மக்கள் ரஷ்யாவில் அகதிகளாக்கப்பட்டனர். 1936 முதல் 1939 வரையிலான காலப் பகுதியில் சுமார் 2 இலட்சம் அகதிகள் ஸ்பெயினிலிருந்து வெளியேறி னார்கள். 1947இல் 14 மில்லியன் வரையிலானவர்கள் இந்திய-பாகிஸ்தானில் அகதிகளாக்கப்பட்டனர். ஜப்பானுடனான யுத்தம், கம்யூனிசப் புரட்சி, பட்டினி காரணமாகக் காலத்திற்குக் காலம் சீனாவிலிருந்து அகதிகள் வெளியேறினார்கள். 1948 லிருந்து பாலஸ் தீனர்கள் அகதிகளாகவுள்ளனர். பாலஸ்தீனர்கட்கு அடுத்தபடியாக அகதி களாக்கப்பட்டுப் பல வருடங்களாக அல்லற்பட்டவர்கள் வியட்நாமி யர்கள், 1970களில் பங்களதேஷில் அகதிகள் உருவாக்கப்பட்டனர். ஆப்கானிஸ்தான், ஈராக், ஆப்பிரிக்கா நாடுகள் என்ற வரிசையில் ஈழத் தமிழரும் சேர்ந்து கொண்டனர்.

1948ற்கு பின்னர் இலங்கையில் தமிழ் மக்கள் மீதான வன்முறைகள் காலத்திற்குக் காலம் ஏற்பட்டன. ஆரம்பங்களில் தமது தாயகப் பிரதேசங்களில் தமிழர்கள் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர். 1980களிலிருந்து இந்தியா, கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைகின்றனர். உலகிலுள்ள ஒவ்வொரு 115 நபரிலும், ஒருவர் அகதியாக உள்ளார். 29 வளர்ச்சியடைந்த நாடுகள் உள்ளிட்ட 71 நாடுகள் அகதிகளை ஏற்கின்றது. ஆனால் அதிக எண்ணிக்கையிலான அகதிகளை வளர்ச்சியடையும் நாடுகளே ஏற்றுக்கொள்கின்றன. 2000 ஆம் ஆண்டில் தலா ஒரு மில்லியன் வரையான ஆப்கான் அகதிகளைப் பாகிஸ்தானும் ஈரானும் தனித்தனியே ஏற்றன. 1970களில் பங்களதேஷ் அகதிகளையும், 1980 களில் ஈழத்தமிழ் அகதிகளையும் இந்தியா ஏற்றுக் கொண்டது. பிரித்தானியாவில் 550 நபர்களில் ஒருவர் அகதியாகவும், அவுஸ்திரேலியாவில் 1,583 நபர்களில் ஒருவர் அகதியாகவும் உள்ளனர். 1980களிலிருந்து வருடமொன்றுக்கு 20,000 அகதிகளை ஏற்ற அவுஸ்திரேலியாவில், தற்போது வருடமொன்றுக்கு 12,000 அகதிகள் ஏற்கப்படுகின்றனர். இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய காலப் பகுதியில் சுமார் ஆறு இலட்சம் அகதிகளை அவுஸ்திரேலியா ஏற்றிருக்கின்றது. புதிய புலங்களின் பொருளாதாரச் சமூக மேம்பாட்டிற்கு அகதிகளும் பங்களிப்புச் செய்ய வல்லவர்கள் என்பது இன்றுவரை அங்கீகாரம் வேண்டிநிற்கும் ஒரு கோட்பாடாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மானிடன் வாழ்ந்த வரைக்கும் - இந்த*
*வையத்திலே அவன் செய்தவரைக்கும்*
*மானிடத் தன்மைக்கு வேறாய் - ஒரு*
*வல்லமை கேட்டிருந்தால் அதைக்கூறாய்!*

புகழ்பெற்ற விஞ்ஞானி எயின்ஸ்டன், பார்புகழும் தலாய் லாமா முதல் அமெரிக்காவின் இராஜாங்க மந்திரிகளான ஹென்றி கிஸிங்கர் மற்றும் மடலேன் அல்பிரைட் வரை அகதியாகத் தஞ்சம் புகுந்து வியத்தகு பங்களிப்புகளை வழங்கியவர்களின் பட்டியல் நீளமானது. லூயிஸ் மன்னன் காலத்தில் பிரான்சிலிருந்து அகதியாக வெளியேறிய சமூகம் வாயிலாக நுட்பமான கண்ணாடிக் கைத்தொழிலைப் பிரித்தானியா பெற்றது. 1970களில் உகண்டாவிலிருந்து அகதியாக வெளியேறிய இந்தியர்களின் விடாமுயற்சியுடைய தொழில் முனைவோர் பிரித்தானியாவுக்குக் கிடைத்தனர்.

*எல்லார்க்கும் நல்லின்பம்*
*எல்லார்க்கும் செல்வங்கள்*
*எட்டும் விளைந்ததென்று*
*உயிர்காப்பது பொது உடைமை*
*உயிர் போக்குதல் பெரு மடமை*
*உயர்வான இக்கருத்தை*
*உணர்வதுதான் அறிவுடைமை!*

யாரொடு நோவேன் யார்க்கெடுத்துரைப்பேன் என நிர்க்கதியாகிய மனிதன் அடைக்கலம் தேடுபவருக்கு அடைக்கலம் அளிப்பதிலிருந்து தவறலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமது செவ்வையானால்...

பல்லாண்டுகளாக நடைபெற்ற யுத்தத்தை முடிவுக்குக் கொணர்ந்து சமாதான நடவடிக்கைகளை மேற்கொண்ட விக்கிரமசிங்கதரப்பு ஒன்றன் பின் ஒன்றான தோல்விகளைத் தழுவியுள்ளது. இனப்பிரச்சினை விடயத்தில் தென்னிலங்கையில் காணப்படுகின்ற மனோபாவங் களையும், பேரினவாதச் சிந்தனைகளையுமே விக்கிரமசிங்க தரப்பின் தோல்விகள் வெளிப்படுத்துகின்றன. 2001 தேர்தலில் வெற்றியீட்டிய விக்கிரமசிங்க தரப்பு, அதனையடுத்து நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களிலும் வெற்றியீட்டியது. ஆனால் அதன்பின்னர் இனப் பிரச்சினைவிடயத்தில் மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின. அன்றைய காலங்களிலேயே புரிந்துணர்வு உடன்படிக்கையினால் ஏற்பட்ட மாற்றங்கள் வெளிப்பார்வைக்குத் தென்படத் தொடங்கியது. போரற்ற சூழலின் தாக்கங்கள் பரவலாக வெளிப்பட்டது. சமாதான நடவடிக்கைகளில் வேகம் ஏற்பட்டது. சர்வதேச நாடுகளின் பார்வை கூர்மையடைந்தது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதனையடுத்த காலப்பகுதியில் எதிர்மறையான செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பமாகின. உயர்பாதுகாப்பு வலயம், மீள்குடியமர்வு, கிழக்கில் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் குறித்த வரையறைகளில் காணப்பட்ட தெளிவின்மை, கடல்வலயக் கட்டுப்பாடுகள், நெடுந்தீவு, வாகரை அசம்பாவிதங்கள், திரியாய்-கும்புறுப்பிட்டி, வில்கம் விகார, குரங்குப் பாஞ்சான் எனத் தொடரான அச்சுறுத்தல்கள் எனக் கோவையாகச் சம்பவங்கள் ஏற்பட்டன. இருந்தபோதிலும் சமர் தவிர்க்கப்பட்டது. இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தப்படவேண்டும் என்பதான கருத்தோட்டம் காணப்பட்டது. குடாநாட்டிற்கான தரைவழிப் போக்குவரத்து ஏற்படுத்தப்பட்டது. சர்வதேச சமூகத்தின் ஆதரவு தக்கவைத்துக் கொள்ளப்பட்டது. உதவி வழங்கும் நாடுகளின் சந்திப்பு நடைபெற்றது. மீள்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கான சமிக்ஞைகள் தென்பட்டன. சமாதான முன்னெடுப்புகளின் அறுவடையாகப் பொருளாதாரம் பன்முகப்பட்ட வளர்முகத் திசையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைந்து 5.5 விழுக்காடு வளர்ச்சி கண்டது. பங்குச் சந்தை ஏற்றம் அடைந்தது. ஆனால் அவையனைத்தையும் சனாதிபதி குமாரதுங்காவின் நடவடிக்கைகள் முறியடித்தன.

இலங்கை அரசியலில் 1994இல் தீர்க்கமான அவதானிப்பைப் பெற்றிருந்த சனாதிபதி குமாரதுங்காவினுடைய நடவடிக்கைகள் சமாதானச் சூழலை மட்டுமல்ல. நாட்டின் ஸ்திரத்தன்மையையும் அவ்வப்போது அச்சுறுத்தியது. இன்று நேற்றல்ல. காலங்காலமாகவே இனப்பிரச்சினை விடயத்தில் முரணான நிலைப்பாட்டையே இருபெரும் கட்சிகளும் எடுத்து வந்துள்ளன. பண்டா-செல்வா ஒப்பந்தத்திலிருந்து மாவட்ட சபைகள் வரை தொடரான சறுக்கல்கள். தனிச்சிங்களச்சட்டம் உருவாக்கப்பட்ட காலந்தொட்டுப் பருவகாலங்களிலும் சீரான வகையில் தமிழருக்கு எதிரான கலவரங்கள் நடைபெற்றுள்ளன. சமாதானச் செயற்பாடுகளில் தெளிவின்மையைக் கொண்டிருப்பதே இன்றைய அரசின் கொள்கையாகவுள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்கின்றது. அதனால் போர்நிறுத்தம் பேணப்படுகின்றது. ஆனாலும் நம்பிக்கைகள் அச்சுறுத்தப்படுகின்றன என்பது நிதர்சனம்.

சென்ற வாரத்தில் ஆறு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் முடிவடைந்துள்ளன. பாராளுமன்றத்தில் சாதாரணப் பெரும்பான்மையை யேனும் பெற்றுக்கொள்ளுவதற்குத் திணறுகின்ற குமாரதுங்கா அணியிடம், மாகாண சபைகளின் நிருவாகம் கையளிக்கப் பட்டிருக்கின்றது. தென்னிலங்கையில் ஜேவிபி வேகமாக வளர்கின்றது. அதனையே மாகாண சபைத் தேர்தல் முடிவுகளும் உறுதி செய்கின்றன. அன்று பாராளுமன்றத் தேர்தல்களில் ஜேவிபி கணிசமான வெற்றி பெற்றது. இன்று மாகாணசபைத் தேர்தல்களில் அபாரமான வெற்றி பெற்றுள்ளது. ஜேவிபியிலிருந்து தேர்தல்களில் போட்டியிட்ட 73 வேட்பாளர்களில், இருவர் மட்டுமே தோல்வியடைந்துள்ளனர். ஒருவகையில் சொல்வதானால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவுத் தளத்தை ஜேவிபி ஊடுருவ ஆரம்பித்துள்ளது. அன்றொரு காலத்தில் ஜேவிபியினுடைய வளர்ச்சியைத் தடுப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டது. இன்று பொய்க்கால் குதிரையாகித் தன்னுடைய அஸ்தமனத்தையும், ஜேவிபியின் எழுச்சியையும் சமகாலத்தில் எதிர்கொள்கின்றது. வினை விதைத்தவன், வினையறுப்பான்! தினை விதைத்தவன், தினையறுப்பான்! என்பது காட்சியாக விரிவதைக் காணமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதான நடவடிக்கைகளில் நோர்வேயினதும் சர்வதேச நாடுகளினதும் திட்டவட்டமான பங்களிப்பு அதிகரித்து வருகின்றது. ஆனாலும் நோர்வே, இந்தியா, பிரித்தானியா, அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின் முயற்சிகள் தீர்வு ஏற்படுவதற்கான திட்டவட்ட மான உந்துதலாக அமையவில்லை. சர்வதேச சமூகத்தினது அணுகு முறை, சமன்செய்து சீர்தூக்கி ஏற்படுத்தப்படுவதாகவும் கருதமுடிய வில்லை. இலங்கையரசுடனும் தமிழர் தரப்புடனும் கொண்டுள்ள அணுகு முறைகளில் வேறுபாடுகளைக் காணமுடிகின்றது. பண்டாரிகளும், தீக்ஷிற்றுகளும், ஆர்மிட்டேசுகளும், சொல்ஹேம்களும் அலசப்படுகின்ற போது சர்வதேச இராஜதந்திரிகளின் செயற்படுபாங்குகள் புலனாகின்றன. சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆறுசுற்றுகளை நிறைவுசெய்தபோதிலும், பேச்சுவார்த்தைகளில் காணப்பட்ட இணக்கப்பாடுகளை அமுல்படுத்து வதில் அசாதாரணமான மந்தநிலை காணப்பட்டது. உயர்பாதுகாப்பு வலயங்கள், மீள்குடியமர்வு என்னும் அடிப்படையான விடயங்களிலே யேனும் முன்னேற்றகரமான செயற்பாடுகள் ஏற்படவில்லை. சமாதானச் செயற்பாடுகட்கு உசாத்துணையளிப்பதாகக் கூறுகின்ற சர்வதேச சமூகம் உயர்பாதுகாப்பு வலயம் மற்றும் மீள்நிர்மாணம் குறித்த விடயங்களில் போதிய அழுத்தங்களை வழங்கவில்லை. மாறாகப் புரிந்துணர்வு உடன்படிக்கை பேணப்பட்டு யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்பதை மட்டும் மந்திரமாகச் செபிக்கின்றது. மனமது செவ்வையானால் மந்திரம் செபிக்க வேண்டியதில்லை என்பதை யாராவது எடுத்துச் சொல்லமாட்டார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் பிரித்தாலும்...

இடைக்கால நிருவாகக் கட்டமைப்புத் தொடர்பான திட்டவரை யொன்றை விக்கிரமசிங்க அரசு 2003 ஆம் ஆண்டு ஆடி 17 இல் விடுதலைப்புலிகட்கு அனுப்பியது. அதனையடுத்து இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்த திட்டவரைவொன்றை விடுதலைப் புலிகள் அக்டோபர் 31இல் வெளியிட்டனர். அது தொடர்பான திட்டவட்டமான கருத்துகள் எதனையும் இலங்கை அரசு பிரஸ்தாபிக்க வில்லை. அதற்குப் பின்னர்த் தென்னிலங்கையில் அதிரடியான மாற்றங்கள் ஏற்பட்டன. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை திட்ட வரைவினை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடுமையாக விமர்சித்தது. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை திட்டவரைவின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறாதென ஜேவிபி அறிவித்தது. ஆனால் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை திட்டவரைவின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கப்போவதாக சனாதிபதி குமாரதுங்கா தெரிவித்துள்ளார். சட்டி சுட்டதடா! கை விட்டதடா! என்ற கோதாவில் ஐக்கிய தேசியக் கட்சியினுடைய நிலைப்பாடு காணப்படுகின்றது.

சமாதான நடவடிக்கைகளில் தென்னிலங்கையிலுள்ள அபிப்பிராய பேதங்கள் தெளிவாகத் தென்படுகின்றன. அதனைச் சர்வதேச சமூகம் கவனத்திலும் கொள்ளவில்லை. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை திட்டவரைவின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதற்குரிய அழுத்தங்களையும் ஏற்படுத்தவுமில்லை! மாறாக அரைத்த மாவையே அரைக்கின்றது. புரிந்துணர்வு உடன் படிக்கையைத் தொடரவேண்டும், யுத்தநிறுத்தத்தைப் பேணவேண்டும் என்று மட்டும் கூறுகின்றது. திட்டவட்டமான நடவடிக்கைகளை மேற் கொள்ளக்கூடிய ஆற்றல் குமாரதுங்கா அரசிடம் காணப்படுகின்றதா என்பதுவும் அய்யப்பாடாகும்.

இலங்கை விடயத்திலான இந்தியாவின் கவனம் இன்றைய காலங்களில் கூர்மையடைகின்றது. இந்திய வெளியுறவுத் துறையின் முன்னாள் சிற்றமைச்சருடைய யாழ்விஜயம் முதல் பிரதமர் மஹிந்த ராஜ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்ஸாவுடைய இந்திய விஜயம் ஈறானவை அத்தகைய கோணத்திலேயே அவதானிப்பைப் பெறுகின்றன. இந்தியாவின் நிலைப்பாடுகளும், அதனால் இலங்கையில் ஏற்படும் தாக்கங்களும் காலத்திற்குக்காலம் தெளிவாக வெளிப்பட்டிருக்கின்றன. இந்திய-இலங்கை அரசுகளிடையே ஏற்பட்ட உடன்படிக்கைகளினால் மலையகத் தமிழர் வாழ்வு அதிரடியான மாறுதலுக்கு உட்பட்டது. அன்று சர்வதேசரீதியாக நிலவிய பனிப்போர், அணிசேராக்கொள்கை, இந்திய-சோவியத் நல்லுறவு என பலதும்பத்துமான நிலைப்பாடுகளிடையே, இந்துசமுத்திரத்தில் தனது பிராந்திய மேலாண்மையை உறுதிப்படுத்துவதற்கு இந்தியா விரும்பியது. அயலில் சீனாவுடனும் பாக்கிஸ்தானுடனும் தீராத பகை, கிழக்குப் பாகிஸ்தானை 1970களில் பங்களாதேஷ் ஆக்கியபோதிலும், இந்தியச் சார்புத்தன்மையினைப் பங்களதேஷ் முழுமையாக உள்வாங்கிக் கொள்ளவில்லை. இந்திய மேலாண்மையை நேபாளம், பூட்டான், மாலத்தீவுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

இலங்கையில் 1971இல் ஜேவிபி கலகம் ஏற்பட்டபோது இந்தியா தோள் கொடுத்தது. 1974 இல் கச்சதீவுகளை இலங்கைக்குத் தரைவார்த்துக் கொடுத்தது. அத்தகைய நடவடிக்கைகள் மூலமாக அன்றையகாலங்களில் இலங்கையைத் தனது நேசவலைக்குள் இந்தியா உள்வாங்கிக்கொண்டது. ஆனாலும் 1970களின் பிற்பகுதிகளில் இலங்கையில் ஏற்பட்ட ஆட்சிமாற்றமும், அதனையடுத்த காலப் பகுதியில் இலங்கையரசு வரித்துக்கொண்ட அமெரிக்கச் சார்புத் தன்மையும், தில்லி தர்பாரில் அதிர்வுகளை ஏற்படுத்தியது. அதேகாலப் பகுதியில் தமிழர் போராட்டத்தின் வடிவங்களும் மாற்றமடைந்தன. 1983 கலவரங்களும், அதனால் ஏற்பட்ட தமிழ் அகதிகளின் வருகையும் இந்தியாவின் கவனத்தைச் சீண்டியது.

இந்திரா காந்தியினுடைய மறைவுக்குப் பின்னர், இந்தியாவின் அணுகுமுறை அதிரடியான மாறுதலுக்குட்பட்டது. 1980களின் பின்னரைப்பகுதியிலிருந்து 1990களின் ஆரம்பங்கள் வரையிலான கால கட்டங்களில் ஏற்பட்ட அணுகுமுறை குறித்து வாதப்பிரதிவாதங்கள் காணப்படுகின்றன. இந்திய-இலங்கை ஒப்பந்தம், இந்திய அமைதிப் படை என ஒன்றன்பின் ஒன்றாக உருவாகிய நடவடிக்கைகள் உப்புக் கரிக்கும் கடலுக்கு இருமருங்கேயும் வாழ்ந்த தமிழ் உறவுகளில் தொய்வை ஏற்படுத்தின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக அரசியலில் இன உணர்வுகள் மேலோங்கியதாகவே காணப்பட்ட போதிலும், உள்ளூர் அரசியல் யதார்த்தங்களுக்கு உட்பட்டதாகவே செயற்பாடுகள் அமைந்தன. பூமிப்பந்தெங்கும் வாழும் தமிழர்களுடன் உறவுகாண விழையும் திமுக ஆட்சியில் இருந்த காலகட்டங்களிலேயே, இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. மூன்று சகாப்தங்கட்கு முன்னர் இலங்கைத் தமிழர்கள் சென்னையிலிருந்து நாடு கடத்தப்பட்டமை, 1990 களில் மருந்துப்பொருள் கடத்தியதான குற்றச்சாட்டின்பேரில் இலங்கைத் தமிழர்கள் சென்னையில் சிறையிலிடப்பட்டமை போன்றவை திமுக ஆட்சியிலேயே ஏற்பட்டுள்ளன. இன்றும்கூடப் பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன், சென்னை விமானநிலையத்திலிருந்து திருப்பி அனுப்பப் பட்டுள்ளார். இலங்கைத் தமிழர் விடயத்தில் கரிசனையான போக்கைக் கடைப்பிடிக்கும் தமிழகக் கட்சிகளின் ஆதரவுடனேயே இன்றுள்ள காங்கிரசு தலைமையிலான அரசு அமைந்துள்ளது. அதனால் இந்தியா வினுடைய அணுகுமுறைகளில் மாறுபாடுகள் ஏற்படலாம் என்னும் எதிர்பார்ப்பு பரவலாகக் காணப்படுகின்றது. அத்தகைய எதிர்பார்ப்பு மிகைப்படுத்தப்பட்ட ஒன்றாகவே கருதமுடிகின்றது. ஏனெனில், பூகோள அரசியல் நிலைப்பாடுகட்கும் உள்ளூர் யதார்தங்கட்கும் உட்பட்டதாகவே ஒரு நாட்டின் கொள்கைகளும் நடவடிக்கைகளும் அமைக்கப்படுகின்றன. அதற்கு இந்தியாவும் விதிவிலக்கல்ல! இன்று ஆட்சியிலிருப்பவர்கள் நாளை இருப்பதில்லை! அதனால் எந்தக்கட்சி ஆட்சியிலிருந்தாலும் இந்தியக் கொள்கைகளில் அடிப்படையான மாறுபாடுகள் ஏற்படும் என்று கருதுவதற்கில்லை. ஆனால் 400 கிலோ மீட்டர் நீளமான கடல் பிரித்தாலும், கடலுக்கு இருமருங்கேயும் வாழும் தமிழர்கள் உணர்வால் ஒன்றுபட்டவர்கள் என்பது என்றென்றும் மாறாது. மாறவும் முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீக்கமற நிறைந்துள்ள சக்தியா?

தென்னிலங்கை அரசியலில் முன்னெப்போதிலுமே காணப்படாத தெளிவின்மை காணப்படுகின்றது. முன்னர் சனாதிபதி குமாரதுங்கா இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் கவனஞ்செலுத்திய கால கட்டங்களில், ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பை வழங்கவில்லை. அதன்பின்னர் விக்கிரமசிங்க அரசு புரிந்துணர்வு உடன்படிக்கையை உருவாக்கி, சமாதானச் செயற்பாடுகளை எற்படுத்த முயன்றபோது சனாதிபதி குமாரதுங்கா ஒத்துழைக்கவில்லை. தற்போது இரண்டு தரப்பினருமே இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் யதார்த்தங்களைத் தரிசிக்க முயற்சிக்கின்ற வேளையில், ஜேவிபி கடும்போக்கை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுகின்ற பட்சத்தில் குமாரதுங்கா அரசிலிருந்து விலகிக் கொள்வதாக ஜேவிபி எச்சரித்துள்ளது. ஆனாலும் ஜேவிபி-ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறவு தொடர்கின்றது. இரண்டு கட்சிக்குமே, மற்றைய கட்சியினுடைய ஊன்றுகோல் இன்றைய காலத்தில் தேவையாகவுள்ளது, விடுதலைப் புலிகள் மீதான எதிர்ப்பு! ஆட்சியில் பங்காளியாக இருந்துகொண்டே, அரசின் கொள்கைகளை விமர்சிக்கும் தன்மை! என்பவற்றால் ஜேவிபி வேகமாக வளர்கின்றது. இன்று இனப்பிரச்சினை விடயத்தில் சர்வதேச அழுத்தங்களும், அதன்மூலமாக உருவாகின்ற பொருளாதார யதார்த்தங்களும் வெள்ளிடை மலையாகக் காணப் படுகின்றன. அதனாலேயே ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இனப்பிரச்சினை விடயத்தில் ஒருவகையான மென் போக்கைக் கடைப்பிடிப்பதில் ஆர்வமுடன் காணப்படுகின்றன. இருந்த போதிலும் ஜேவிபி கொண்டுள்ள கடும்போக்கான நிலைப்பாட்டினால் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் திணறுகின்றன. அத்துடன் ஜாதீக ஹெல உறுமய கட்சி கொண்டுள்ள நிலைப்பாடுகளும் சமாதான நடவடிக்கைகட்கு ஏற்றதான சூழ்நிலைகளை நிராகரிக்கின்றன. விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரசபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படக்கூடாது எனத் திட்டவட்டமாகக் கூறுகின்றது. குமாரதுங்கா அரசு நிலைப்பதற்கு ஜேவிபியின் 39 பாராளுமன்ற அங்கத்தவர்களின் ஆதரவு அவசியமானதாகும். ஆரம்பத்திலிருந்தே ஜேவிபி-ஹலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி குறித்த சந்தேகங்கள் காணப்பட்டன. இனப்பிரச்சினை விடயத்தில் இரண்டு கட்சிகளுமே முரணான நிலைப்பாடுகளைக் கொண்டவையாகும். அதுவும் கூட்டணி ஏற்படுவதை ஆரம்பங்களில் தாமதப்படுத்தியது. ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உருவாகிய பின்னர் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்த எதிர்ப்பே ஜேவிபியின் முக்கிய கோஷமாகியது. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்த யோசனைகளை 2003இல் விடுதலைப் புலிகள் முன்வைத்தபோது, அதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடுமையாக எதிர்த்தது. இன்று காணப்படுகின்ற அரசியல் யதார்த்தங்களை குமாரதுங்கா அரசு உணர்ந்து கொள்ளுகின்ற போதிலும் ஜேவிபியினுடைய எதிர்ப்பை மீறிச் செயற்பட இயலாத சூழ்நிலையிலுள்ளது. அதனாலன்றோ நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மாறுபட்ட நிலைப்பாடுகளை அரசு வெளிப்படுத்துகின்றது.

கிழக்கில் ஏற்பட்டுவரும் சம்பவங்கள் சமாதானத்திற்கு அச்சுறுத்தலை உருவாக்குகின்றன. புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டதன் பின்னர்க் காணப்பட்ட சூழ்நிலைகளிலிருந்து வேகமான மாறுபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. கடந்த ஐந்து மாதங்களாக ஒன்றன்பின் ஒன்றாக வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. முதலில் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருச்செல்வம் துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்கானார், அதன்பின்னர்க் கிழக்குப் பல்கலைக் கழகப் பொருளியல்துறைத் தலைவர் தம்பையா கொலை செய்யப் பட்டார். அதிலிருந்து ஒரு வாரத்தில் பத்திரிகையாளர் நடேசன் கொலை செய்யப்பட்டார். ஆடி 5 ஆம் திகதி இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள அரசடி சந்தியடியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தாக்கப்பட்டார். இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் ஏற்படுகின்ற வன்முறைச் சம்பவங்களை யடுத்து, இராணுவத்தின் அனுசரணையுடன் செயற்படுவதாகக் கருதப்படும் ஆயுததாரிகள் பக்கம் பார்வை திரும்புகின்றது. அத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னணியிலேயே கடந்த மாத ஆரம்பத்தில் தமிழ் ஆயுததாரிகள் ஹிங்குரகொட விஹாரையில் கைது செய்யப்பட்டனர். கிழக்கில் ஏற்பட்டுவரும் அச்சுறுத்தல்களை நீக்குவதும், யுத்தநிறுத்த உடன் படிக்கையைப் பேணிக்கொள்வதுமே இன்றிருக்கக்கூடிய மிகப்பெரிய சவாலாகக் கருதமுடிகின்றது.

இடைக்கால நிருவாகம் குறித்துப் பேசுகின்ற அதேவேளையில் அடிப்படை விடயங்களும் பேசப்படவேண்டும் என்னும் நிலைப் பாட்டை சனாதிபதி குமாரதுங்கா கொண்டிருந்தார். ஆனாலும் இன்று சனாதிபதி குமாரதுங்கா புதிய யோசனைகளை முன்வைப்பதுடன் பேச்சுவார்த்தைக்கு வருக என அறைகூவல் விடுகின்றார். பன்னாட்டு நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் அரசுக்கு உள்ளது. குமாரதுங்காவின் பதவிக்காலம் முடிவடைவதற்குள் அரசியல் யாப்புத் திருத்தங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியமும் உள்ளது. இருந்தபோதிலும் பேரினவாதச் சிந்தனைகள் மட்டும் நீக்கமற நிறைந்து நிற்கின்றது. பல்லாண்டுகளாகத் தொடரும் இனப்பாகுபாடுகள் தீர்க்கப் படாத நிலையில், மதப்பாகுபாடுகள் உருவாகும் சாத்தியக்கூறுகளும் காணப்படுகின்றன. எட்டு மாதங்களின் பின்னர் மீண்டும் ஒரு தேர்தல் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. இன்றுள்ள சூழ்நிலைகளில் போர்நிறுத்த உடன்படிக்கை குறுகியகாலத்தில் அச்சுறுத்தலுக்கு உட்படும் என்பதாகக் கருதமுடியவில்லை. அதே வேளையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பமாகலாம் என்பதாகவும் கொள்வதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சளைத்தவர்களா?

இன்றைய காலகட்டங்களில் சமாதான நடவடிக்கைகள் முடக்க மடைகின்றன. இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்துத் தெளிவான நிலைப் பாட்டை குமாரதுங்கா அரசு கொண்டிருக்கவில்லை. அரசின் பெரும் பான்மை பாராளுமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை. இதனிடையே சனாதிபதி ஆட்சிமுறையை மாற்றவேண்டிய அவசியம், முன்னெப் போதிலுமே காணப்படாத வகையில் குமாரதுங்காவிற்கு ஏற்பட்டுள்ளது. அவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்துவதற்குப் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு வேண்டும். அதன்பின்னர் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும். ஆனால் குமாரதுங்கா அரசு சாதாரண பாராளுமன்றப் பெரும்பான்மையையேனும் கொண்டிருக்க வில்லை. ஆகையால் குறுக்கு வழிமுறைகளே தேடப்படுகின்றன.

கட்டுப்படுத்தாத சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்தி, அதிலே பெறக்கூடிய வெற்றியினடிப்படையில் அரசியல்யாப்பு திருத்தங்களை நிறைவேற்றலாம் என்னும் கணிப்பும காணப்படுகின்றது. அதனிடையே தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை அத்தியாவசியம் என்னும் புதிய விதியொன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கான திருத்த மசோதாவென்று பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது. அஃது நிறைவேற்றப்படுமாயின், அடுத்த சில மாதங்களில் நடைபெறக்கூடிய சர்வசன வாக்கெடுப்பின் போது சிறுபான்மையினத்திலிருந்து வாக்களிக்கும் தகுதியைப் பலர் இழக்கலாம். அரசியல்யாப்பிலும், விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையிலுள்ள சில கூறுகளையும் மாற்றுவதற்குத் தேவையான ஆதரவைச் சிறுபான்மையினங்களிடையே பெறுவது இலகுவானதல்ல! அந்த வகையிலேயே வாக்களிப்பதற்கு அடையாள அட்டையை அத்தியாவசியமாக்குவதன் மூலமாக, சர்வசன வாக்கெடுப்பொன்றில் சிறுபான்மையினத்தவர் பங்குபற்றுவதைக் குறைக்கலாம் என குமாரதுங்கா தரப்பு கருதுகின்றது. அவ்வாறான நடவடிக்கை மூலமாக, சர்வசன வாக்கெடுப்பிலே கிடைக்கக்கூடிய எதிர்ப்பு வாக்குகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைக்கலாம். அதன்மூலமாக வெற்றி வாய்ப்பைப் பெருக்கிக் கொள்ளலாம் என்பதாகவே திட்டமிடப்படுகின்றது.

குமாரதுங்கா அரசு என்றும்போலவே முரண்பாடுகளின் மொத்த உருவமாகக் காட்சியளிக்கின்றது. குறுகியகாலத் தேர்தல் ஆதாயங்களை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட ஜேவிபி-ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி நித்தியகண்டம் பூரண ஆயுசு என்பதாகவே கழிக்கின்றது. ஒருபுறத்தில் ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஜேவிபிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையில் கொள்கை ரீதியிலான முரண் பாடுகள் காணப்படுகின்றன. இன்னுமொருபுறத்தில், சனாதிபதிக்கும் ஜேவிபி அமைச்சர்கட்கும் இடையே நிருவாகரீதியான முறுகல்கள் ஏற்படுகின்றன. சமாதான நடவடிக்கைகள் பொருளாதாரக் கொள்கைகள் உள்ளிட்ட முக்கியமான விடயங்களிலேயேனும் தெளிவானதும் திட்ட வட்டமானதுமான கொள்கைகளின்றி, ஆட்சியைக் கைப்பற்றுவதை மட்டும் இலக்காகக் கொண்டு உருவாகிய கூட்டணி, இன்று ஆட்சிப் பீடத்தில் திணறுகின்றது.

இடைக்கால நிருவாக அதிகாரசபை யோசனைகளின் அடிப் படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கலாம் என்னும் நிலைப் பாட்டை சனாதிபதி குமாரதுங்கா எடுத்தபோது, ஜேவிபி அதனைத் தீவிரமாக நிராகரித்தது. அத்துடன் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான பிரச்சாரங்களையும் ஆரம்பித்துள்ளது. அன்றும் இன்றும், கொள்கையளவில் ஜேவிபி தெளிவாக உள்ளது. இனப்பிரச்சினை, சமாதான நடவடிக்கைகள், இடைக்கால நிருவாகம் என அனைத்து விடயங்களிலும் திட்டவட்டமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. விடுதலைப் புலிகளின் இடைக்கால நிருவாக அதிகாரசபை யோசனைகட்குச் சமாந்திரமாக, அரசதரப்பு மாற்று யோசனைகளை முன் வைப்பதாகக் கூறியபோது, தாம் அங்கம்வகிக்கும் அரசு அத்தகைய யோசனைகள் எதனையுமே தயாரிக்கவில்லையென ஜேவிபி திட்டவட்ட மாகத் தெரிவித்து, சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டிற்கு அமைவாக, பெட்ரோலியத் துறையில் மாற்றங்களை ஏற்படுத்த குமாரதுங்கா அரசு விழைந்தபோது, அதனை ஜேவிபி எதிர்த்தது. மானியங்களைக் குறைப்பது தொடர்பாக நிதியமைச்சு பிரஸ்தாபித்தபோது, அதனையும் ஜேவிபி எதிர்த்தது. ஆக அங்கிங் கெனாதபடி எங்கும் எதிலும் ஜேவிபியின் எதிர்ப்பு பிரச்சாரத்தையே காணமுடிகின்றது. ஜேவிபிக்க சளைத்தவர்களல்ல என்பதை நிரூபிப்பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரதுங்கா தரப்பும் பின்னிற்பதில்லை. ஜேவிபி அமைச்சரினால் ஒழுங்குசெய்யப்பட்ட நீர்ப்பாசனத்திட்ட அங்குரார்ப்பண விழா வொன்றில் கலந்து கொள்வதை சனாதிபதி இறுதிநேரத்தில் இரத்து செய்தார். அத்துடன் நின்றுவிடாமல் அவ்விழாவிற்கு முன்பாக மற்றுமொரு நீர்ப்பாசனத் திட்டத்தையும் ஆரம்பித்துவைத்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப் பொறுப்பிலிருந்து சனாதிபதி தடாலடியாக விலகிக்கொண்டார். ஆனாலும் சனாதிபதியின் நடவடிக்கைகள் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்துகின்றன. அதனாலேயே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதாயங்களைப் பெறுவதற்குப் பதிலாக ஜேவிபி ஏற்றமடைந்திருக்கின்றது. இன்று வாழ்க்கைச்செலவு உயர்வைக் கண்டித்து அரசுக்கு எதிரான போராட்டங்களை ஜேவிபி முன்னெடுக்கின்றது.

இனப்பிரச்சினை அணுகுமுறைகளில் நம்பகத்தன்மையை அரசு இழக்கின்றது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவதற்கான சாத்தியங்கள் குறைகின்றன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு கூழுக்கும் மீசைக்கும் ஆசைப்படுகின்றது. பொதுத்தேர்தல் நடைபெற்று ஒருவருடம் பூர்த்தியாவதற்குள் மற்றுமொரு தேர்தலை ஏற்படுத்துவதும் இலகுவானதல்ல! ஜேவிபியின் அழுத்தங்கள் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக அதிகரிக்கின்றன. சமாதான நடவடிக்கைள் தேக்கமடைந்துள்ளன. சர்வதேச நிதியுதவிகள் கானல்நீராகின்றன. இனி வருங்காலத்தில் கூட்டணிகள் மாறலாம். ஆட்சி மாற்றம் மட்டுமன்றி, தேர்தல்கள் ஏற்படுவதற்கான காலமும் வெகு தொலைவில் இல்லையோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியப் பொதுத் தேர்தல்

பொதுத் தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறுகின்ற தினம் வேகமாக நெருங்கிவருகின்றது. கட்சிகளின் தேர்தல் பிரச்சாரமும் சுறுசுறுப்படைந்து காணப்படுகின்றது. இதோ வருகின்றது! அதோ வருகின்றது! எனப் பல வாரங்களாக யூகங்களுக்கு உட்பட்டு வந்த தேர்தல் திகதி-ஒலிம்பிக்ஸ் நிறைவடைந்த வேளையில் அறிவிக்கப்பட்டது. அண்மைக்கால வரலாற்றில் பிரச்சாரத்துக்கு அதிக வாரங்களைக் கொண்டதாகவே தற்போதைய தேர்தல்கள் அமைந்துள்ளன. 1996 இல் ஆட்சிப்பீடமேறிய இன்றைய பிரதமர் ஜோன் ஹவாட், சேர் ரொபட் மென்ஸிஸ் போன்ற தனித்துவமான தலைவராக லிபரல் கட்சியில் கணிக்கப்படுகின்ற காலப்பகுதியில் ஏற்பட்டுள்ள தேர்தல் இதுவாகும். மூன்று தடவைகள் தோல்வியை ஆரத்தழுவி, கட்சியின் தலைவரை இரண்டு தடவைகள் மாற்றித் துடிப்புமிக்க இளையவரான மார்க்லேதம் அவர்களைத் தலைமைப்பீடத்தில் அமர்த்தி, லேபர் கட்சி சந்திக்கும் தேர்தலும் இதுவாகும்.

தேர்தல் பிரச்சாரங்களில் சராசரியான யுக்திகள் கையாளப் படுகின்றன. வாக்கு வேட்டைகள் தீவிரப்படுகின்றன. கட்சித் தலைவர்கள் காலையில் வானொலிகளில் பேசத் தொடங்குகின்றார்கள். மாலை தொலைக்காட்சிச் செய்திகளை இலக்குவைத்து, முற்பகல் வேளையில் கொள்கை அறிவிப்புகளையும் புதிய திட்டங்களையும் வெளியிடு கின்றார்கள். அவற்றிற்குப் பொருத்தமான வகையில், கல்வி சம்பந்த மான கொள்கையெனில் பாடசாலைகளிலும், சுகாதாரம் சம்பந்தமான தெனில் மருத்துவமனைகளிலும் கட்சித் தலைவர்கள் பிரசன்னமாகிச் செய்தி சேகரிப்பதில் தணியாத தாகத்துடன் காணப்படும் ஊடக வியலாளர்களைத் திருப்திப்படுத்துகின்றனர். அதன்மூலமாக வாக்காளர் களைக் கவரமுனைகின்றனர். பிரச்சாரப்பணிகள் வேகமாக முன்னெடுக்கப்படுகின்றன.

சென்ற பொதுத்தேர்தல்களின்போது ரம்பா கப்பல் விவகாரம் பரபரப்பை ஏற்படுத்தியதோடு, அகதிகள் விடயத்தில் ஹவாட் அரசின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடும்போக்கையும் வெளிப்படுத்தியது. தற்போது ரம்பா விவகாரம் உயிர்த்தெழுந்திருக்கின்றது. அரசினுடைய நம்பகத் தன்மையை அசைக்கின்றது. ரம்பா கப்பல் விவகாரத்தில், அரசினுடைய செயற்பாட்டின் நியாயங்களும் நியாயமின்மைகளும் ஒருபுறமிருக்க, உண்மை நசுக்கப்பட்டதா என்பது, ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமல்லவா? என்னும் நினைப்பை ஏற்படுத்துகின்றது. அத்தகைய ஒரு அய்யப்பாட்டையே, ஈராக் யுத்தமும் உருவாக்கியிருக்கின்றது. பாரிய அழிவுகளைத் தரவல்ல ஆயுதங்களை ஈராக் கொண்டிருப்பதாக, அமெரிக்காவும் கூட்டாளிகளும் படையெடுத்து, சதாம் ஹுசேன் ஆட்சியைத் தகர்த்தபோது, உண்மை பாரிய அழிவுகளுக்கு உட்பட்டது. அதனையே அமெரிக்க, பிரித்தானிய உயர்மட்ட விசாரணைக் குழுக்களும் உறுதிசெய்துள்ளன. ஆக, ரம்பாவும், ஈராக்கும் கைகோத்து ஹவாட்டினுடைய நம்பகத்தன்மையை அசைக்க முற்படுகின்றன.

1980களில் லேபர் கட்சி முன்னெடுத்த கொள்கைத் திட்டங்கள் திட்டவட்டமாக முன்னெடுக்கப்படவில்லை. இன்று தனது நம்பகத் தன்மையை நிலைநிறுத்துவதற்காக லேபர்கட்சி பகீரதப்பிரயாயத் தனங்களை மேற்கொள்கின்றது. ஆனால், ஹவாட் தலைமையிலான அணி, தன்னுடைய எட்டுவருட காலப் பொருளாதார நிருவாக வல்லமையை முன்னிறுத்துகின்றது. அமெரிக்காவுடனான உறவுகளில் அதீதமான ஏற்ற இறக்கங்களை லேபர் கட்சி சந்தித்தது. அதன்போது கட்சியின் முன்னாள் தலைவர் கிம் பீஸ்லியை முன்னிறுத்தி அச்சூழ்நிலைகளைச் சமாளித்துக் கொண்டது. இருப்பினும் அரச உயர்மட்டத்தில் போதிய அனுபவமின்மையும், தடாலடியான கடந்தகால செயற்பாடுகளும் லேபர் கட்சியின் இன்றைய தலைவர் லேதத்தைத் துரத்துகின்றன. ஆனாலும், கண்டனக் கணைகளை எதிர்கொள்ளும் பாங்கும், பீஸ்லி, கிரீன் உள்ளிட்ட கட்சியின் வெவ்வேறு தலைவர்கள், குழுக்கள், தொழிற்சங்கங்கள் எனப் பலரையும் அரவணைத்துச் செல்லும் போக்கும், சிட்னி புறநகர்ப் பகுதியிலிருந்து புறப்பட்டு, நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்க விளையும் லேதத்தை நன்றாகவே அடையாளம் காட்டுகின்றன.

ஜோன் ஹவாட்டும், மார்க் லேதமும் கலந்துகொண்ட தொலைக் காட்சி நிகழ்ச்சியானது அவர்களிருவரது கொள்கைகளையும் கோட்பாடு களையும் புதிய கோணங்களில் வெளிப்படுத்தியுள்ளது. ஈராக் விடயத்திலும், பன்னாட்டுப் பயங்கரவாதம் குறித்தும் ஹவாட் வெளிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துகின்ற கருத்துகளிலும் அதிகமான இயல்புத்தன்மையை, லேதத்தினுடைய பிராந்தியப் பாதுகாப்புக் கொள்கையில் காண முடிகின்றது. அத்துடன் அவுஸ்திரேலியாவின் தனித்துவத்தைத் தக்க வைத்துக் கொள்ளவேண்டும் என்பதில் லேதத்தின் துடிப்புமிக்க நிலைப் பாடு, பரந்துபட்ட பொதுசன அபிப்பிராயத்தின் பிரதிபலிப்பாகவே காண முடிகின்றது. தேர்தல் பிரச்சாரங்களின் விறுவிறுப்பிற்கு ஈடுகொடுத்துப் பல கருத்துக் கணிப்புகளும் வெளியிடப்படுகின்றன.

இரண்டு பெரிய கட்சிகளின் பிரச்சாரத்திற்கு ஈடானதாக அமையா விடினும், டேமோக்கிரட்ஸ் கட்சியினதும், கிறீன்ஸ் கட்சியினதும் பிரச்சாரம் சுறுசுறுப்பாகவே காணப்படுகின்றது. அன்றொரு காலத்தில் பரபரப்பாகவிருந்த வன்நேஷன் கட்சி சோர்வுற்றுள்ள போதிலும், போலின் ஹான்சன் அரசியலில் பரபரப்பையே ஏற்படுத்துகின்றார். ஹவாட் வெற்றியடைகின்ற பட்சத்தில், தனது பதவிக் காலத்தை முழுமையாகப் பூர்த்திசெய்வாரா என்ற கேள்வியை லேதம் எழுப்புகின்றார்! அதற்கு ஹவாட்டினுடைய பதில்கள் நம்பிக்கைக்கு உரமளிப்பதாகவில்லை. அனுபவமின்மை! பொருளாதார நிருவாகத்தில கொண்டிருக்கக்கூடிய வல்லமை என லேதம் குறித்த சந்தேகங்களை ஹவாட் எழுப்புகின்றார். அதற்கான லேதத்தின் பதில்கள் அவதானிப்பை ஏற்படுத்துகின்றன. அடுத்து வருகின்ற வாரங்கள் தேர்தல் முடிவுகளின் முன்கட்டியமாக அமையும்! சுருங்கச் சொல்வதெனில், சமத்துவமான அரசியல் பரப்பில், பாரம்பரிய நிலைப்பாடுகளைத் தகர்த்து, மையத் தன்மையதான கொள்கைகளை வரித்துக்கொள்ளும், இடதுசார் தன்மையதான லேபர் கட்சியும், வலதுசார் தன்மையதான லிபரல்-நேஷனல் அணியும் எவ்வாறான தீர்ப்பைப் பெறுவார்கள் என்பதை இரண்டு வாரங்களில் தெரிந்து கொள்ளலாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலைவனத்தில் பசுமைப் புரட்சி

சமாதானச் செயற்பாடுகளில் காணப்படும் தேக்க நிலை, பன்னாட்டு நிதியுதவிகள் கிடைப்பதிலுள்ள தாமதங்கள், பொருளா தாரத்தில் ஏற்படும் தளர்வுகள் என எங்கும் எதிலும் சிக்கல்கள் காணப் படுகின்றன. இருந்தபோதிலும், ஆட்சியதிகாரம் குறித்த முஸ்தீபுகள் மட்டும் தென்னிலங்கையில் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி வளர்கின்றன. பொதுத்தேர்தல்கள் முடிவுற்று ஐந்து மாதங்களின் பின்னரேயே பாராளுமன்றத்தில் சாதாரணப் பெரும் பான்மையையேனும் குமாரதுங்கா அரசு பெற்றிருக்கின்றது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு வழங்கியுள்ள நிபந்தனையற்ற ஆதரவு மூலமாகப் பாராளுமன்றத்தில் அரசு உறுதியடைந்துள்ளது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்துப் பேசுவதற்குக்கூட மறுத்துவருகின்ற குமாரதுங்கா அரசுக்கு ஆறுமுகன் தொண்டமானின் அனுக்கிரகத்தில் இடைக்கால அரசியல் வாழ்வு கிடைத்திருக்கின்றது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு ஆட்சிப்படிக்கட்டுகளில் அமர்ந்துகொள்வது இன்று நேற்று ஆரம்பமாகியதல்ல! கடந்த இரண்டரை சகாப்தங்களாகவே நடைபெறுகின்றது. முதலில் ஐக்கிய தேசியக் கட்சியுடனும், பின்னர்ப் பொதுசன ஐக்கிய முன்னணியுடனும், அதன்பின்னர் ஐக்கிய தேசிய முன்னணியுடனும் சேர்ந்துகொண்டிருக் கின்றது. ஆனாலும் இம்முறை ஒரு வித்தியாசத்தைக் காணமுடிகின்றது! இதுகாலம் வரையில் மலையகத் தமிழருடைய நலன்களுக்காக ஆட்சியில் பங்குகொண்டதாகக் கூறியுள்ளார்கள்.

ஆனால் தற்போது இனப்பிரச்சினையில் தீர்வு ஏற்படுத்து வதற்காகவே ஆட்சியில் பங்குகொள்வதாகக் கூறுகின்றனர். அப்படியாயின் அதனை ஐந்து மாதங்கட்கு முன்னரேயல்லவா செய்திருக்க வேண்டும்! இனப்பிரச்சினை கடந்த ஐந்து மாதங்களில் ஏற்பட்டதல்லவே! ஐம்பது ஆண்டுகட்கு மேலாகத் தொடர்கின்ற தல்லவா? இதுநாள் வரையில் குமாரதுங்கா அரசுடன் சேர்ந்து கொள்ளாமைக்கு, மாகாண சபைத் தேர்தல்களே காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத் தமிழர்கள் யானைச் சின்னத்தில் வாக்களிப்பதற்கே பழக்கப் பட்டிருக்கின்றார்கள்! அந்த வகையில் மாகாண சபை தேர்தல்களை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தே சந்திக்கவேண்டிய அவசியம் காணப்பட்டது. தற்போது அறுவடை முடிந்துவிட்டது. பட்சி பறந்து விட்டது. 39 அங்கத்தவர்களைக் கொண்ட ஜேவிபியின் எதிர்வினையால் அல்லாடுகின்ற சமாதான நடவடிக்கைகள், 8 அங்கத்தவர்களைக் கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் ஆதரவில் வலுவடையும் என்பது பாலைவனத்தில் பசுமைப்புரட்சி போன்றதல்லவா?

இந்தியத் தேர்தல்களின் பின்னர் உருவாகிய காங்கிரசு தலைமையிலான அரசு வலுவடைகின்றது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் மத்திய அமைச்சர்கள், ஜெயலலிதா அரசுக்குச் சவால் விடுவதான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். வைகோ மீண்டுமொரு நடைப்பயணத்தை நிறைவு செய்துள்ளார். 1994 ஆடியில் அன்றைய அண்ணா திமுக அரசினுடைய மக்கள் விரோதக் கொள்கைகளைக் கண்டித்துக் கன்னியாகுமரியிலிருந்து நடைப் பயணத்தை மேற்கொண்டார். தற்போது திருநெல்வேலியில் ஆரம்பித்து, 3,000 வரையிலான தொண்டர்களுடன், 15 மாவட்டங்களுடாக, 42 நாள்களில், 1,025 கிலோ மீட்டர்கள் நடந்து பேரறிஞர் அண்ணா பிறந்த தினமாகிய செப்டெம்பர் 15 இல் சென்னையில் நடைப்பயணத்தைப் பூர்த்திசெய்துள்ளார். அறுபதாவது அகவையைப் பூர்த்திசெய்யும் வைகோ, வாரிசு அரசியலை எதிர்த்துத் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து 1993 இல் பிரிந்தவர்.

கடந்த தேர்தல்களின் திமுக கூட்டணியிலிருந்துகொண்டே அபரிமிதமான வெற்றிகளைப் பெற்றவர், திராவிட இயக்கங்களிடையே மட்டுமன்றித் தமிழகத்தின் தனித்துவமான தலைவர்களுள் ஒருவராகவும் வளர்கின்றனவர். கலைஞர் கருணாநிதி, முதல்வர் ஜெயலலிதா என்ற வரிசையில் தமிழகமெங்கும் பரந்துபட்ட செல்வாக்கைக் கொண்டுள்ளவர். வைகோவினுடைய வளர்ச்சியைத் தடுப்பதில் பல முனைகளிலும் முனைப்புக் காணப்படுகின்றது. சென்னையில் ஸ்டாலினையும், தில்லியில் மாறனையும் முன்னிலைப்படுத்தும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வைகோவினுடைய வளர்ச்சி நெருடலையே ஏற்படுத்துகின்றது. அத்துடன், ஜெயலலிதாவின் அரசியலிற்கும் வைகோ சவாலாகவுள்ளார். அதனால்போலும் சுமார் 19 மாதங்கள் வரையில் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின்கீழ் சிறை வைக்கப்பட்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய நடைப்பயணத்தைப் பூர்த்திசெய்யும் வேளையிலும் கைது செய்யப்பட்டு, சுமார் ஆறு மணித்தியாலங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அன்றிலிருந்து இன்றுவரை ஈழத்தமிழர் விடயத்தில் தெளிவாகக் குரல்கொடுத்துவரும் வைகோ, தமிழகத்தின் தனித்துவமான சக்தியாக உருப்பெறுகிறார்.

தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்துகின்ற செயற்பாடுகளும் ஆரம்பமாகியுள்ளன. அண்மையில் நடைபெற்ற தமிழ்ப் பாதுகாப்பு இயக்க மகாநாடு அதற்கு முன்கட்டியமாகியது. தமிழகமெங்கும் பரந்து வாழும் தலித்துகளுடன் அடையாளப்படுகின்ற விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பும், வடதமிழ்நாட்டில் செறிந்துவாழும் வன்னியர் சமூகத்தை அரசியல்ரீதியாக அடையாளப்படுத்துகின்ற பாட்டாளி மக்கள் கட்சியும் ஒன்றுகூடுகின்றன. இதுநாள் வரையில் இவ்விரண்டு கட்சிகளுமே மோதல் போக்கையே கடைப்பிடித்திருக்கின்றமையும் கவனிக்கத் தக்கதாகும். ஜாதீய அடிப்படையிலான ஒரு கூட்டணியை உருவாக்கும் முனைப்பையும் காணமுடிகின்றது. சட்டசபைத் தேர்தல்களை இலக்கு வைக்கும் அரசியல் நகர்வுகள் ஆரம்பமாகியுள்ளன. வைகோவின் நடைப்பயணம் மக்கள் கவனத்தை ஈர்த்திருக்கின்றது, காவிச்சட்டைக் காரர்களுடன் கூட்டுவைத்துக் கொண்டுள்ளபோதிலும் தில்லியுடன் குழைவதற்குத் தமிழகத்தின் ஆட்சியாளர்கள் தயாராகின்றனர்! கறுப்புச் சட்டைக்காரர்கள் விழிப்பாகவுள்ளனர். மத்திய அரசில் கொண்டிருக்கும் செல்வாக்கின் தடாலடியான பிரதிபலிப்புகளை மாநிலத்தில் ஏற்படுத்து கின்றனர்! மாவட்டங்கள் தோறும் மகாநாடுகளை நடத்தித் தொண்டர் களைத் தயார்ப்படுத்துகின்னறர்! சேதுசமுத்திரத் திட்டம் முதல் காவேரியில் தண்ணீர் திறந்துவிட்டது வரை அனைத்திற்கும் உரிமை கொண்டாடுவதில் கடுமையான போட்டி நிலவுகின்றது. சுருங்கச் சொல்வதெனில், தமிழகத்தில் தேர்தல் பரப்பரப்புகள் ஆரம்பமாவதற் கான காலம் வெகுதொலைவில் இல்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்காரச் சென்னை

தென்னிந்தியாவின் கேந்திர முக்கியத்துவம் மிக்க நகரங்களில் சென்னையும் ஒன்றாகும். அன்றொரு காலத்தில் தென்னிந்தியாவின் அரசியல்-நிருவாக மையமாகவும் சென்னை விளங்கியது. இந்தியா சுதந்திரமடைந்தபோது மொழிவாரி மாநிலங்கள் உருவாகியது. அதனைத் தொடர்ந்து சென்னையினுடைய முக்கியத்துவத்தில் தளர்வுகள் ஏற்பட்டன. இருந்தபோதிலும் அரசியல்ரீதியாக ஏற்பட்ட திராவிட இயக்கத்தின் வளர்ச்சியும், ஹிந்தித் திணிப்பு எதிர்ப்பும், தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கையும் தமிழ்நாடு குறித்த கவனிப்பைத் தக்கவைத்துக் கொண்டது. அத்துடன் பொருளாதார ரீதியாகவும், தனித்துவமான பங்களிப்புகளை ஏற்படுத்திக் கவனிப்பைப் பெறத்தொடங்கியது. அந்தவகையில் திரைப்படத் துறையின் பங்களிப்புக் குறிப்பிடத்தக்கதாகும்.

சிங்காரச் சென்னையின் புறநகர்ப்பகுதியான கோடம்பாக்கத்தின் சுற்றுப்புறங்களில் செழித்து வளரும் திரைப்படத்துறை, தமிழகத்தின் பெருமைக்கு ஏற்றமளிக்கும் துறைகளுள் முக்கியமானதாகும். ஏவிஎம், ஜெமினி, வாகினி உள்ளிட்ட ஸ்டுடியோக்களில் கிடைக்கும், சர்வதேசத்தரங்கட்கு இணையான ஒலி, ஒளிப்பதிவுச் சேவைகள் சென்னையைச் சினிமாக்காரர்களின் சொர்க்கமாக்குகின்றது. அனேகளவிலான தென்னிந்திய மொழித் திரைப்படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள் என்பன சென்னையிலேயே தயாரிக்கப்படுகின்றன. அதன்மூலமாகப் பொருளாதாரம் ஏற்றமடைகின்றது.

அகில இந்திய அளவிலான விருதுகளைத் தமிழ்த் திரையுலகம் பெற்றுப் பல வருடங்கள் கழிந்துவிட்ட நிலையில், இந்தியாவின் சிறந்த நடிகருக்கான விருதை இவ்வாண்டு பிதாமகன் படத்தில் வெட்டியான் சித்தனாக நடித்த விக்கிரம் பெற்றுள்ளார். சிறந்த நடிகருக்கான தேர்வின் இறுதிச்சுற்றில் விக்கிரமுடன், நடிகர்கள் கமல்ஹாசனும் ஹர்த்திக் ரோஷனும் போட்டியிலிருந்தனர். 1980களின் பிற்பகுதியிலிருந்து புறப்பட்ட புதிய நடிகர் பட்டாளத்தில், தனித்துவமான குணாதிசயங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் கொண்ட நடிகராக விக்கிரம் அடையாளப்படுகின்றார். 1989இல் ஸ்ரீதர் இயக்கத்தில் தந்துவிட்டேன் என்னை என்னும் படத்தின் மூலமாக வெள்ளித்திரையில் அறிமுகமாகிய விக்கிரம், கடந்த ஒன்றரை சகாப்தங்களில் வெளியான மீரா, சேது, ஜெமினி, காசி, தூள் ஆகிய படங்கள் மூலமாக அதிகமான கவனிப்பைப் பெற்றுள்ளார். சேது படத்திற்காகச் சிறந்த நடிகர் விருது கிடைக்கலாம் எனக் கருதப்பட்டது. இன்று பிதாமகன் படத்தில் விருது கிடைத்துள்ளது.

எழுபத்து மூன்றாவது அகவையில் கால்பதிக்கும் தமிழ் சினிமாவில் எம்.ஜி.ஆரும் கமல்ஹாசனும் மட்டுமே இதுவரையில் சிறந்த நடிகர் விருதுகளைப் பெற்றுள்ளார்கள். 1971 இல் ரிக்ஷாக்காரன் படத்திற்காக எம்ஜிஆருக்குச் சிறந்த நடிகர் விருது கிடைத்தது. 1983 இல் மூன்றாம் பிறை படத்திற்காகவும், 1986 இல் நாயகன் படத்திற்காகவும், 1997 இல் இந்தியன் படத்திற்காகவும் என இதுவரையில் மூன்று தடவைகள் சிறந்த நடிகர் விருது கமல்ஹாசனுக்குக் கிடைத்துள்ளது. தற்போது சிறந்த நடிகர் விருதை விக்கிரம் பெற்றுள்ளார். நடிகையரில், சில நேரங்களில் சில மனிதர்கள் படத்திற்காக 1976 இல் இலட்சுமிக்கும், பசி படத்திற்காக 1979 இல் ஷோபாவிற்கும், சிந்துபைரவி படத்திற்காக 1985 இல் சுஹாசினிக்கும், வீடு படத்திற்காக 1987 இல் அர்ச்சனா விற்கும் தேசிய விருதுகள் கிடைத்துள்ளன. இன்று விக்கிரமுக்குக் கிடைத்துள்ள விருது தமிழ்த் திரையுலகத்திற்குக் கிடைத்த விருதாகவே விதந்துரைக்கப்படுகிறது. இனி வருங்காலத்தில் தமிழ்த் திரையுலகம் புதிய சாதனைகளைப் படைக்கும் என எதிர்பார்க்கலாம்!

சென்னையில் சினிமாத் துறையுடன், மருத்துவத் துறையும் வளரும் துறையாக அடையாளப்படுகின்றது. சர்வதேசத் தரங்கட்கு இணையான தனியார் மருத்துவமனைகள், தமிழகத்தில் வியத்தகு புரட்சியை ஏற்படுத்துகின்றன. இரண்டு சகாப்தங்கட்கு முன்னர் இருதயமாற்று அறுவைச்சிகிச்சை வாய்ப்புகள் அரிதாகக் கிடைத்தன. இன்று நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. இருதயமாற்று அறுவைச் சிகிச்சைக்காக வெளிநாடுகளிலிருந்துகூட நோயாளிகள் வருகின்றார்கள். சிறந்த மருத்துவச் சேவைகள் மதுரை, கோவை உள்ளிட்ட பிறநகரங்களிலும் கிடைக்கின்றன. அத்தோடு விலைகளும் தரமானதாக அமைகின்றன. வேகமாக வளர்ச்சியடைகின்ற மரபணுவியல் தொடர் பான ஆராய்ச்சிகள் அங்கு நடைபெறுகின்றன. நவீன தொழில்நுட்பக் கருவிகள் அறிமுகமாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலங்கங்களை மாற்றுகின்ற சிகிச்சைக்குத் தேவையான பாகங்களைச் செயற்கையாக வளர்ப்பதற்கு உதவுகின்றன ஸ்டெம் செல் ஆய்வுகள் நடைபெறுகின்றன. புதிய மருந்துகள் உருவாக்கப்படுகின்றன. பரீட்சார்த்த மருந்துற்பத்திகள் அதிகரிக்கின்றன. தொழில்நுட்பத்தைப் புதுப்பித்துக் கொள்வதிலும், நிபுணத்துவத்தை வளர்த்துக் கொள்வதிலும் விடாமுனைப்புக் காணப்படுகின்றது. பல்வேறு வியாதிகட்குமான தனித்தனி மருத்துவமனைகள் உருவாகின்றன. அதிஉச்சத்தன்மையான மருத்துவச் சேவைகள் கிடைக்கின்றன. உதாரணமாக, நீரிழிவிற்கு சிகிச்சையளிப்பதற்கான தனி மருத்துவமனையில், நீரிழிவு சார்ந்த அனைத்து வியாதிகட்கும் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. நீரிழிவு நோய் ஏற்படுவதற்குச் சுமார் பத்து ஆண்டுகள் முன்னதாகவே நோயின் அறிகுறிகளை அடையாளம் காண்பதற்கான தொழில்நுட்பம் கிடைக்கின்றது.

நவீன தொழில் நுட்பத்துடன் துல்லியமாக அளிக்கப்படும் மருத்துவச்சேவைகள், மேற்குலகில் கிடைப்பதிலும் குறைவான பொருட்செலவில் சென்னையில் கிடைக்கின்றது. அதுமட்டுமன்றிச் சிகிச்சை பெறுவதற்கு மேற்குலகில் காணப்படுவதுபோன்று அதிகமான நாள்கள் காத்திருக்கவும் வேண்டியதில்லை. அதனால் அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளிலிருந்து மட்டுமன்றி, மேற்குலகிலிருந்தும்கூட சிகிச்சை பெறுவதற்கான படையெடுப்புகள் சென்னைக்கு ஏற்படுகின்றது. ஒருவகையில் சொல்வதானால் ஐம்பதாண்டுக் கால சுதந்திர வரலாற்றில், சினிமா, உயர்கல்வி, மருத்துவசேவை எனத் தமிழகம் புதிய பாதை வகுத்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலியே பயிரை மேய்கிறது

இந்தியாவில் கடந்த பல வருடங்களாகத் தமிழக, கருநாடக மாநில அரசுகளுக்கு மிகப்பெரிய சவாலாக விளங்கிய வீரப்பன், அக்டோபர் 18 இல் விசேட அதிரடிப்படையினரால் கொலை செய்யப்பட்டடுள்ளதான செய்தி மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழகம், கேரளா, கருநாடகம் ஆகிய மூன்று மாநிலங்களை ஊடறுத்துச்செல்லும் தென்னிந்தியாவின் மேற்குக்கரை, மலைத்தொகுதி இயற்கைவளம் கொழிக்கும் செழிப்பான பிரதேசமாகும். அப்பிரதேசத்திலுள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தின் சின்னம்பதியில் ஆரம்பமாகித் தருமபுரி மாவட்டத்தை ஊடறுத்துக் கருநாடக மாநிலம் வரையில் நீளுகின்ற 14,000 சதுரகிலோ மீட்டர் வனப்பகுதியே வீரப்பனின் கோட்டையாக விளங்கியது.

சுமார் அறுபது வயது நிரம்பிய வீரப்பன், 1950களின் நடுப் பகுதிகளிலிருந்து சட்ட விரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. யானைத் தந்தங்களில் ஆரம்பித்த வீரப்பனின் திருவிளையாடல்கள், சந்தனக் கட்டைகளைக் கடத்துவதில் மும்முரமாகி ஆள்கடத்தலில் முடிந்தது. நூற்றுக்கு மேற்பட்ட மனிதர்களும், ஆயிரத்துக்கு மேற்பட்ட யானைகளும் வீரப்பனால் பலி வாங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. வீரப்பனைக் கைது செய்வதற்காகத் தமிழ்நாட்டிலும் கருநாடகாவிலும் 1989ஆம் ஆண்டிலேயே சிறப்புப் படைகள் அமைக்கப்பட்டன. 1986ஆம் ஆண்டு பெங்களூரில் சார்க் மகாநாடு நடைபெற்ற வேளைகளிலேயே முதலும் கடைசியுமாக வீரப்பன் கைது செய்யப்பட்டார். அச்சந்தர்ப்பத்தில் வீரப்பன் தப்பியோடியமை தீராத கறையாகியது. அதன்பின்னர் 1993 இல் வீரப்பனைக் கைது செய்வதற்காக விசேட அதிரடிப்படை அமைக்கப்பட்டது. இந்தியாவின் வலுமிக்க எல்லைப் பாதுகாப்புப் படையும் ஒரு காலத்தில் ஈடுபடுத்தப்பட்டது. இராணுவத்தையும் ஈடுபடுத்தவேண்டும் என்னும் குரல்கள் அவ்வப்போது ஒலித்தன. ஆனால் அத்தகையதொருநிலை கடைசிவரையில் ஏற்படவில்லை. 2000 ஆம் ஆண்டில் பிரபல கன்னட நடிகர் இராஜ்குமார் கடத்தப்பட்டு, சுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100 நாள்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். 2002ஆம் ஆண்டில் கருநாடக முன்னாள் அமைச்சர் நாகப்பா கடத்தப்பட்டுப் பின்னர்க் கொலையும் செய்யப்பட்டார். இவ்வாறாக மிகப்பெரிய சவாலாக விளங்கிய வீரப்பன் விவகாரம் சாதகமான வகையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஆரம்பங்களிலிருந்தே வீரப்பன் விவகாரத்தில் இரும்புக்கரத்துடன் செயற்பட்ட ஜெயலலிதாவினுடைய ஆட்சிக்காலத்திலேயே வீரப்பன் விவகாரம் முடிவுக்கு வந்துள்ளது. அதனால் அரசியல்ரீதியான ஆதாயங்கள் ஜெயலலிதாவிற்குக் கிடைக்கலாம்! யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்பதாக, வீரப்பன் இருந்தபோதும் சர்ச்சைதான் இன்று வீரப்பன் இறந்தபோதிலும் சர்ச்சைகளுக்குக் குறைவில்லை. வீரப்பன் ஏன் கைது செய்யப்பட வில்லை? என்னும் கேள்வி பரவலாக எழுப்பப்படுகின்றது. ஏற்கெனவே முத்திரைத்தாள் விவகாரம், ஜெயலட்சுமி விவகாரம் என்பவற்றால் அரசியல், காவல்துறைகளிலுள்ள பலரினதும் வண்டவாளங்கள் சந்திக்கு வருகின்றன. அதனால் அரசுக்குத் தரும சங்கடங்கள் ஏற்படுகின்றன. அந்த வகையில் வீரப்பனை உயிருடன் கைதுசெய்தால், மேலும் பல வண்ட வாளங்கள் சந்திக்க வரலாம் என்னும் அச்சவுணர்வு காரண மாகவே வீரப்பன் கொலை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. சிகிச்சை பெறுவதற்காகக் காட்டிலிருந்து வருகின்ற வீரப்பன் தன்னுடைய முக்கிய சகாக்களையும் ஏன் உடன் அழைத்துவரவேண்டும்? என்னும் கேள்வியும் எழுகின்றது. தினை விதைத்தவன் தினை அறுப்பான்! வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்னும் இயற்கையின் நியதி வீரப்பன் விவகாரத்திலும் நிலைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் கொள்ளலாம் அல்லவா?

சனாதிபதி குமாரதுங்காவுடைய பதவிக்காலம் குறித்த சர்ச்சை மீண்டும் விஸ்வரூபமெடுக்கின்றது. சனாதிபதியின் பதவிக்காலம் பூர்த்தி யடைவதற்கு இரண்டாண்டுகள் உள்ளதாக குமாரதுங்கா தரப்பு நம்புகின்றது. ஆனால் சனாதிபதியினுடைய பதவிக்காலம் ஒரு வருடத்திலேயே பூர்த்தியடைந்துவிடுமென எதிர்க்கட்சி கூறுகின்றது. முதல்தடவையாக 1994 நவம்பரில் குமாரதுங்க பதவியேற்றார். அதற்கடுத்த சனாதிபதித் தேர்தல் 2000 ஆம் ஆண்டு திசம்பரிலேயே நடைபெற்றிருக்கவேண்டும். ஆனால் அதனை சனாதிபதி குமாரதுங்கா 1999 திசம்பரிலேயே நடத்தினார். தேர்தல்களில் வெற்றியீட்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுடனேயே புதிய பதவிக்காலத்திற்கான சத்தியப் பிரமாணத்தையும் எடுத்துக் கொண்டார். அதன் பிரகாரம் 2005 திசம்பரில் குமாரதுங்காவின் பதவிக்காலம் பூர்த்தியடையவேண்டும்.

பதவிக்காலம் குறித்து, குமாரதுங்கா தரப்பு புதியதொரு வாதத்தை முன் வைக்கின்றது. அதன்படி 1999 திசம்பரில் குமாரதுங்கா சனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட போதிலும், அதன்பின்னர் 2000 ஆம் ஆண்டில் மீண்டுமொரு தடவை இரகசியமாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதாகவும், அந்தவகையில் 2006 திசம்பரிலேயே குமாரதுங்காவின் பதவிக்காலம் பூர்த்தியடையும் என்பதாகும். அது உண்மையெனில், அவ்வாறான நடவடிக்கைக்குத் தலைமை நீதியரசரும் உடந்தையாகியிருப்பதாகவே கருதவேண்டும். அவ்வாறாயின் அரசியல் சாசனத்தின் அடிப்படைகளே கேள்விக்குட் படுத்துகின்றதல்லவா? அரசியல் சாசனத்தைப் பேணிப் பாதுகாக்கின்ற கடமையிலிருந்து தென்னிலங்கை அமைப்புகள் தவறுகின்றனவா? தம்முடைய தார்மீக அந்தஸ்தை இழக்கின்றனவா என்னும் கேள்விகள் எழுகின்றன.

அந்தவகையில் இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாகவும் கேள்விகள் எழுகின்றன. இடைக்காலத் தீர்வுத் திட்டத்தையோ அல்லது வேறு ஒரு தீர்வொன்றே ஏற்படுகின்றதெனக் கொள்வோம். அவ்வாறு ஏற்படுகின்ற தீர்வுத் திட்டமொன்றை, அரசியல்சாசனத்தை நடைமுறைப்படுத்துகின்ற சனாதிபதியோ, தலைமை நீதியரசரோ அல்லது இருவருமாகச் சேர்ந்தோ, நான்கு சுவர்கட்களுக்குள் இரகசியமாகக் கிழித்துப் போட மாட்டார்கள் என்பதற்கு யார் உத்தரவாதம்? வேலியே பயிரை மேயாது என்பதை எங்ஙனம் நம்புவது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலச்சக்கரத்தின் சுழற்சி

இன்றைய காலங்களில் சர்வதேச அரங்கில் தடம்பதிக்கும் பல நடவடிக்கைகள் ஏற்படுகின்றன. முதலில் ஆப்கானிஸ்தான், அதன் பின்னர் ஈராக் தாக்கப்பட்டது. சோவியத் யூனியனுக்குப் பிற்பட்ட காலப் பகுதியில் ஒப்பாரும் மிக்காருமற்ற தனிப்பெரும் வல்லரசாகியுள்ள அமெரிக்காவின் நடவடிக்கைகள் அச்சம்கலந்த அவதானிப்பையே ஏற்படுத்துகின்றன. 1991 இல் ஈராக்கினால் சின்னஞ்சிறிய குவைத் ஆக்கிரமிக்கப்பட்டபோது, அமெரிக்கா பாலைவனப்பரப்புகளில் புயலெனப் பாய்ந்தது. அதன்போது விட்டகுறை தொட்ட குறையைச் சீர் செய்து எண்ணெய்வளம் கொழிக்கும் பாலைவனக் காடுகளைக் கையகப் படுத்தும் அமெரிக்காவின் ஆர்வம், 2003இல் துல்லியமாக வெளிப் பட்டது. செப்டெம்பரில் ஏற்பட்ட நியுயோர்க் தாக்குதல் புதிய அத்தியாயத்தின் ஆரம்பமாகியது. அதன்பின்னர்ப் பன்னாட்டுப் பயங்கர வாதத்தை ஒழித்துவிடுகின்ற கோதாவில், அமெரிக்காவின் கொள்கைகள் எங்கெங்கும் திணிக்கப்படுகின்றன.

பாரிய அழிவுகளைத் தரவல்ல ஆயுதங்களை ஈராக் கொண்டிருப் பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. ஈராக் தாக்குதலை ஐநா அங்கீகரிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும் பிரான்சும் ஜேர்மனியும் அசைந்து கொடுக்கவில்லை! ரஷ்யா, ஜேர்மனி, பிரான்சு, கனடா உள்ளிட்ட நாடுகளின் எதிர்ப்புப் பொருட்படுத்தவில்லை! அமெரிக்கா வுடன் அவுஸ்திரேலியாவும் பிரித்தானியாவும் கூடிக்கொண்டன. ஆனால் ஈராக்கில் தலையிட்டமையால் பன்னாட்டுப் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதா? என்பது விடியலைத் தேடுகின்றது. வியட்நாம் யுத்தம் மட்டுமல்ல. அதற்கு முன்னர் ஏற்பட்ட இரண்டு உலகமகாயுத்தங்களிலும் அதிகமாக ஈராக் பாதிப்படைந்துள்ளது!

ஈராக் தாக்குதலை முன்னிறுத்திய அமெரிக்காவின் புஷ்சும், அவுஸ்திரேலியாவின் ஹவாட்டும் அபரிமிதமான தேர்தல் வெற்றிகளைப் பெற்றுள்ளனர். ஈராக் தாக்குதலை அமெரிக்கரும் அவுஸ்திரேலியர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனரா? தெரிதலும் தேர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலும் ஒருதலையாச் சொல்லும் வல்லது அமைச்சு என்பதாக புஷ் நிருவாகமும், ஹவாட் அரசும் மேற்கொண்ட முக்கியமான செயற்பாடு ஈராக் தாக்குதலாகும். அதனை அவுஸ்திரேலியர்களும் அமெரிக்கர்களும் ஏற்றுக்கொண்டிருப்பதாகவே கருதுதல் வேண்டும். புஷ்சினது இரண்டாவது பதவிக்காலமும், ஹவாட்டினது நான்காவது ஆட்சியும் சமன்செய்து சீர்தூக்கும் கோல் போல் அமைந்து, வினையகற்றித் தக்காரையும் தாழ்விலாச் செல்வத்தையும் பெருக்கி நல்லாட்சியை வழங்கும் என எதிர்பார்ப்போம்!

அண்மைக்காலங்களாகத் தமிழ்த் திரைப்படத்துறை அசாதாரண மான சுறுசுறுப்பைப் பெற்றுவருகின்றது. 1990களுக்கு முந்தைய காலப்பகுதியில் வருடந்தோறும் நூற்றுக்கு மேற்பட்ட திரைப்படங்கள் வெளியாகியிருந்தன. ஆனால் சென்ற பத்தாண்டுகளில் சின்னத்திரையில் ஏற்பட்ட அபரிமிதமான வளர்ச்சி காரணமாகத் திரைப்படத் துறையில் தேக்கம் ஏற்பட்டது. தொலைக்காட்சித் தொடர்கள் புற்றீசலாகப் பெருகின. 1980களில் பெரிதும் பேசப்பட்டு, வசூலை மட்டுமன்றி விருதுகளையும் குவித்த சிந்துபைரவியின் இரண்டாவது பாகமென விளம்பரப் படுத்தப்பட்டுத் தொடர் வெளியிடுகின்ற அளவில் சின்னத்திரை வெற்றி யடைந்திருந்தது. குறைந்த காலத்தில் அதிசயிக்கத்தக்க வெற்றிகளை ஈட்டியபோதிலும், அதனைத் தக்கவைத்துக் கொள்வதற்குத் திணறியது. கொடுமைக்காரப் பாத்திரங்கள், பழிவாங்கல் படலங்கள் எனச் சோர்வையேற்படுத்தும் சுழலில் சிக்கியது!

இரசிகர்களின் கவனத்தைச் சின்னத்திரை இழக்கத் தொடங்கியபோது திரைப்படத்துறை உஷாராகியது. பத்துவருட கால இழப்புகளை ஈடுசெய்யும் வரையில் 2003 ஆம் ஆண்டில் நூற்றுக்கு மேற்பட்ட படங்கள் வெளியாகின. அவற்றில் பிதாமகன், காதல் கொண்டேன், தூள், சாமி, காக்க காக்க... என்பன வியக்கத்தக்க வெற்றியை ஏற்படுத்தின. பிதாமகன் படத்தில் நடித்த விக்கிரமுக்கு தேசிய அளவில் சிறந்த நடிகருக்கான விருது கிடைத்தது. 2004 ஆம் ஆண்டில் கில்லி, வசூல் ராஜா எம்பிபிஎஸ், விருமாண்டி என்பன அபரிமிதமான வசூலைக் குவித்தன. கமல்ஹாசன் இயக்கிய விருமாண்டி அதிகப்படியான சர்ச்சைகளில் சிக்கியது.

ஆனாலும் படம் வெளியாகியபோது பரவலான வரவேற்பைப் பெற்றது. நூறாவது ஆண்டை நோக்கி நகர்ந்து செல்லும் தமிழ்த் திரையுலகம் புதிய தளங்களைத் தொடுவதற்கு எத்தனிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னணி நடிகர்களை வைத்த வசூலைக் குவித்துவிடுகின்ற காலகட்டம் மலையேறிவிட்டது. மூன்று வெற்றிப்படங்களை வழங்கி முன்னணியிலிருந்த தனுஷ் வழங்கிய புதுக்கோட்டையிலிருந்து சரவணன், சுள்ளான் போன்றவை வெற்றிக்கு அருகிலேனும் செல்ல வில்லை. ஆனால் குறைந்த செலவில் செழுமையான திரைக்கதையுடன் உருவாக்கப்பட்ட அழகிய தீயே ஆச்சரியப்படத்தக்க வெற்றியடைந்தது. அத்துடன் ஆட்டோகிராப், கில்லி போன்றவற்றின் வெற்றிக்கும் திரைக் கதையே முக்கியமான காரணமாகும்! வில்லனிடமிருந்து நாயகியை மீட்டு மணம் முடிக்கின்ற அரைத்த மாவையே அரைக்கும் வழமையான சமாச்சாரமாக இருந்தபோதிலும், விறுவிறுப்பான திரைக்கதை கில்லியைத் தூக்கி நிறுத்தியது.

அரசியலில் தீர்க்கமான சக்தியாக ரஜனிகாந்த் உருவாகுவதான பிரமை கடந்த பல காலங்களாகவே காணப்பட்டது. இரண்டு கழகங்கள், மூப்பனாரின் தமிழ் மாநிலக் காங்கிரசு, பாரதீய ஜனதா என ஒருசுற்று முடித்துவிட்ட நட்சத்திர நடிகர் ஏகப்பட்ட சுமையுடன் ஆரம்பித்த இடத்திற்கே வந்துள்ளார். ஆன்மீகப் பயணம் எனத் தொடங்கி, இடையில் திசைமாறி... கோட்டைக்கு வழிதேடி... ஈற்றில், கோடம் பாக்கம் திரும்பியுள்ளார். அண்மையில் திரைப்படத்துறையினர் ஜெயலலிதாவுக்குப் பாராட்டுவிழா நடத்தியபோது முதலமைச்சரை ரஜனி வானுயரப் பாராட்டினார்! அன்று, ஜெயலலிதா அவர்களுடைய ஆட்சியேற்பட்டால் தமிழகத்தை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியது என்று சொன்னார்! இன்று, தன்னுடைய மகளின் திருமணத்தை அதே ஜெயலலிதாவுடைய முன்னிலையில் நடத்தியுள்ளார்! காலச்சக்கரத்தின் வேகமான சுழற்சிக்கு யாராவது சாட்சி தேடுகின்றீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேது சமுத்திரம்

சுமார் ஒரு நூற்றாண்டுகளாகப் பேசப்படுகின்ற சேதுசமுத்திரத் திட்டம் இன்று மீண்டும் கவனிப்பைப் பெறுகின்றது. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான கடற்பிரதேசத்தினூடாகக் கப்பல்கள் செல்வதற்கு ஏதுவாக சுமார் 83 கிலோ மீட்டர் நீளமாக அமைக்கப் படவிருப்பதே சேதுசமுத்திரக் கால்வாயாகும். நேரு காலத்தில் உருவாக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள், திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முதலில் தேர்தல்களில் பங்குகொண்டு கால கட்டங்கள் என வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அதுகுறித்துப் பேசப்பட்டிருக்கின்றது. ஆனாலும் திட்டவட்டமான செயற்பாடுகளெதுவும் முன்னெடுக்கப் படவில்லை. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பாரதீய ஜனதா அரசு திட்டவட்டமான நடவடிக்கைகளை ஆரம்பித்தது. அதன் தொடர்ச்சியாகக் கடந்த செப்டெம்பரில் பல கோடி ரூபா செலவிலான சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் பூர்வாங்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மும்பாயிலிருந்து கொல்கத்தா செல்லும் கப்பல்கள் இலங்கையைச் சுற்றியே செல்கின்றன. ஆனால் சேதுசமுத்திரக் கால்வாய் உருவாகிய பின்னர் இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து கிழக்குக் கரைக்கான கப்பல் போக்குவரத்து இந்தியக் கடற்பரப்புகளூடாகவே நடைபெறலாம். அதனால் பயணத்தூரம் மட்டுமல்ல, பயண நேரமும் கணிசமாகக் குறைவடைந்து செலவினங்களும் குறைவடையும். அதுமட்டுமன்றி மேற்படி திட்டம் பன்னாட்டுக் கப்பல் போக்கு வரத்திலும் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தவல்லதாகக் கருதப் படுகின்றது. செங்கடல் மற்றும் பாரசீக வளைகுடாவிலிருந்து சீனா, ஜப்பான் உள்ளிட்ட கிழக்காசிய நாடுகளுக்கான பெட்ரோலியம், கொள்கலன் போக்குவரத்து என்பன மலாக்கா கடற்பரப்புகளூடாகவே தற்போது நடைபெறுகின்றது. சேதுசமுத்திரக் கால்வாய் உருவாகிய பின்னர்க் கிழக்காசியக் கப்பல் போக்குவரத்து இந்தியக் கடற்பரப்பு களூடாக நடைபெறுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

சேதுசமுத்திரத் திட்டம் பாதுகாப்பு ரீதியாகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. 1970களில் இந்து சமுத்திரத்திலுள்ள டியாகோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்ஸியா தீவுகளை அமெரிக்கா கையகப்படுத்திக் கொண்டபோதும், பங்களாதேஷ் யுத்தகாலத்தில் அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பல்கள் வங்காள விரிகுடாவில் பிரவேசித்தபோதும், இந்தியா மிகுந்த விசனமடைந்தது. அதன்பின்னரேயே இந்தோனேசியா, தாய்லாந்து முதல் இலங்கை வரையான நாடுகளுடன் கடலெல்லை குறித்த உடன்படிக்கைகளை இந்தியா ஏற்படுத்திக் கொண்டது. அந்த வகையில் பிராந்தியப் பாதுகாப்பிலும், சேதுசமுத்திரக் கால்வாய் ஆதாயமானதாகக் கருதப்படுகின்றது. பொருளாதார ரீதியாக மட்டுமல்லாமல், பாதுகாப்பு ரீதியாகவும் மேற்படித் திட்டம் பலனளிக்கக்கூடியதாகவே கணிக்கப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில், வடமேற்குப் பகுதிகளில் பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதற்குச் சேதுசமுத்திரக் கால்வாய் உந்துதலளிக்கலாம்! அன்றொரு காலத்தில் தமிழ்நாட்டின் கிழக்குக் கரையூடாகவும், மாதோட்டம் துறைமுகம் வாயிலாகவும், கிரேக்க-ரோமானிய சாம்ராஜ்யங்களுடன் செழிப்பான வாணிகம் நடைபெற்றது. அத்தகைய நிலை மீளவும் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.

சேதுசமுத்திரக் கால்வாய் அமைக்கப்படும்போது ஏற்படக்கூடிய எதிர்மறையான விளைவுகளும் கவனிக்கத்தக்கனவாகும். உலகிலேயே மிகவும் அரிதாகக் காணப்படும் கடல் உயிரினங்கள் பல மன்னார் வளைகுடாவில் காணப்படுகின்றன. அதனாலன்றோ ஒன்றரை சகாப்தங்களுக்கு முன்னரேயே அக்கடல் பகுதி கடல்வாழ் உயிரினங்கள் பேணப்படவேண்டிய பிரதேசமாக அறிவிக்கப்பட்டது. அதனைப் பேணுகிற பணியில் ஐக்கிய நாடுகளும் அபிவிருத்திப் பணியகமும் இணைந்துள்ளன.

இந்துசமுத்திரத்திலுள்ள மீன்வகைகளில் ஐந்தில் ஒரு பங்கு மன்னார்வளைகுடாவில் காணப்படுகின்றன. டுயகோங் எனப்படும் பாலூட்டி வகையைச்சேர்ந்த கடல்விலங்கு அங்கு மட்டுமே காணப் படுகின்றன. ஐந்துவகையான கடல் முதலைகளில், ஐந்துமே அங்குக் காணப்படுகின்றன. அரிய பல கடல்தாவரங்களும், பல்வேறுவகையான பவளங்களும் அங்குக் காணப்படுகின்றன. உலகிலேயே சங்குவிளையும் கடற்பரப்புகளில் மன்னார்வளைகுடா முக்கியமானதாகும். சேது சமுத்திரக் கால்வாய் உருவாக்கப்படும்பொழுது அங்குள்ள இயற்கை வளங்கள் எத்தகைய பாதிப்புகளுக்கு முகங்கொடுக்கப்போகின்றன? என்பது இன்று எழுகின்ற அய்யமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் பதினோரடி ஆழமாகக் காணப்படுகின்ற மன்னார் வளைகுடா மேலும் ஆழப்படுத்தப்படும்போது அங்குள்ள கடல் அமைப்பு எவ்வாறான பாதிப்பை எதிர்கொள்ளப்போகின்றது? என்பதும் கேள்வியாகின்றது. அங்கிருந்து அகற்றப்படும் மண்கழிவுகளின் அளவு செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள சேம்பரம்பாக்கம் ஏரியை மூடக் கூடியதாகும். கடல் ஆழப்படுத்தும்போது அங்குள்ள மண் அணைவுகள் பாதிக்கப்படும். அதனால் கடலரிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. வெப்பநிலை சீர்குலையும். அதனால் மழையளவு குறைவடைந்து தென்கிழக்குத் தமிழகமும் யாழ் குடாநாடும் பாதிக்கப் படும். அத்துடன் நிலத்தடிச் சமன்பாடுகளில் மாற்றம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளும் காணப்படுகின்றன. அதனால் கடல்மட்டத்திற்குக் கீழாகக் காணப்படுகின்ற யாழ்குடாநாட்டின் நன்னீர்வளம் பாதிக்கப் படும். யாழ்குடாவிற்கும் இராமேஸ்வரத்திற்கும் இடைப்பட்ட கடற் பகுதியில் காணப்படுகின்ற மியோசின் காலத்துச் சுண்ணாம்புப் பாறைகள் தகர்ந்துபோகின்ற வாய்ப்புகளும் காணப்படுகின்றன. அதனால் கடலுக்கு இருமருங்கிலுள்ள நிலப்பரப்புகள் காலப்போக்கில் காணாமல் போகலாம்! இவ்வாறாக இயற்கை வளம், பொருளாதாரம், வர்த்தகம், பாதுகாப்பு எனப் பல்வேறு விடயங்களில் அழுத்தமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய சேதுசமுத்திரக் கால்வாய் குறித்த கவனம் இன்றைய காலங்களில் கூர்மையடைந்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழியின் ரௌத்திரம்

2004 திசம்பர் 26இல் சுமத்திரா மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுப்பிரதேசத்தில் ஏற்பட்ட பூகம்பமும், அதனைத் தொடர்ந்து உருவாகிய கடற்கொந்தளிப்பும் பாரிய அனர்த்தங்களை ஏற்படுத்தி யுள்ளது. வையம் தகளியாக வார்கடலே நெய்யாக, கோடானுகோடி சூரியப்பிரகாசத்திற்கு ஈடான வலுவுடன் இந்தோனேசியா தொடங்கி சோமாலியா வரையிலென அகண்டுவிரிந்த சமுத்திரத்தின் கரை களிலெல்லாம் இயற்கையின் கோரத்தாண்டவமாடியுள்ளது.

இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு, இந்தோனேசி யாவின் சுமத்திரா தீவுகளிலிருந்து 257 கிலோமீட்டர் தொலைவில் உருவாகிய நிலநடுக்கையடுத்தே ஏற்பட்டதாகும். ரிக்டரில் 8.9 புள்ளியாகக் காணப்பட்ட நிலநடுக்கம், கடல் படுகைக்குப் பத்துக் கிலோ மீட்டர் கீழாகவே ஏற்பட்டதாகும். அங்கு நிலநடுக்கம் ஏற்படுவதற்குப் பூமியின் உள்பகுதியில் காணப்படுகின்ற இந்தோ-அவுஸ்திரேலியன் மற்றும் யூரெசியன் டெக்னிக் பிளேட்டுகளிடையே ஏற்படுகின்ற உராய்வே காரணமாகும். இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாவைத் தாங்குகின்ற டெக்டொனிக் பிளேட்டும், ஆசியாவின் பிறபகுதிகளைத் தாங்குகின்ற டெக்டொனிக் பிளேட்டும் இந்தோனேசியா பிராந்தியத் திலேயே சந்திக்கின்றன. அவ்வாறாக இரண்டு டெக்டொனிக் பிளேட்டுகள் சந்திக்கின்ற பகுதிகளிலே அவ்வப்போது உராய்வு ஏற்படுகின்றது. அத்தகைய உராய்வுகளின் வீரியம் அதிகரிக்கும்போதே அங்கு நிலநடுக்கம் உருவாகின்றது. அதன்விளைவாக நிலப்பரப்பில் அழிவுகளோ, கடற்பரப்பில் கொந்தளிப்போ ஏற்படுகின்றது.

''ஆழி எழச் சங்கும் வில்லும் எழத் திசை - வாழி எழத் தூண்டும் வாளும் எழ அண்டம்-மோழை எழ முடி பாதம் எழ அப்பன் - ஊழியெழ உலகம் கண்டவாறே'' என்கிறார் நம்மாழ்வார். காட்டுத்தீ, வெள்ளப்பெருக்கு, சூறாவளிக் காற்று என இயற்கையனர்த்தங்கள் பல்வேறு நாடுகளை அவ்வப்போது பாதிக்கின்றன. ஆனாலும் இலங்கை அவ்வாறான இயற்கை அழிவுக்கு உட்படுவது ஒப்பீட்டளவிலேயேனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவானதாகும். அந்த வகையிலும்கூடக் கடற்கொந்தளிப்பின் கொடூரம் இலங்கையை அதிகமாகப் பாதித்திருக்கின்றது. கிழக்குக் கரையோரத் தமிழர் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்பின் தாக்கத்தைக் கணிப்பது இலகுவானதல்ல!

அண்மையில் கடல் கொந்தளிப்பு உருவாகியபோது, கடல்நீர் சுமார் 10 மீட்டர் வரையில் கடலின் அடிமட்டத்திலிருந்து செங்குத்தாக மேலெழும்பிப் பல நூறு மைல்களுக்கு அப்பாலும் பரவியது. சம்பவ தினத்தன்று காலை எட்டு மணியளவில் முல்லைத்தீவுப் பிரதேசத்தை சுனாமி அலைகள் முதன்முதலில் தாக்கியது. அன்று விடுமுறைத் தினமாகையால் வீடுகளில் இருந்தவர்களே அதிகம். அதனால் உயிரிழப்புகளும் அதிகம், கடல் கொந்தளித்தபோது கிளம்பிய அலைகள் மனிதர்களைப் பந்தாடின. கட்டடங்கள், வாகனங்கள், கடற்கலங்கள், விலங்குகள் என அனைத்தையும் துவம்சம் பண்ணியது. முல்லைத் தீவிலிருந்து உட்புறமாகச் செல்லுகின்ற வீதிகளில் பெரும் பாலானவை முற்றாகச் சேதமடைந்தன. அரசாங்க அதிபருடைய அலுவலகம், பழையதபாற்கந்தோர் உள்ளிட்ட முக்கிய கட்டடத் தொகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மகாவித்தியாலயம் பாரிய அழிவுகட்கு உட்பட்டுள்ளது. கள்ளப்பாடு, இரணைப்பாலை, வட்டுவாகல், சின்னத்தங்காடு, செல்வபுரம், கரைச்சி குடியிருப்பு, மணற்குடியிருப்பு போன்ற பகுதிகள் அழிவை எதிர்கொண்டுள்ளன. 150 இலிருந்து 200 குடும்பங்கள் வரையிலிருந்த மணற்குடியிருப்பில் பலத்த சேதாரம் ஏற்பட்டுள்ளது.

யாழ்குடாநாட்டின் கிழக்குக் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்ட சேதாரங்களும் அளப்பரியதாகும். வடமராட்சி கிழக்கின் சுண்டிக்குளம் முதல் செம்பியன்பற்று வரையான கிராமங்கள் அழிவுகளுக்கு உட் பட்டுள்ளன. வடமராட்சி, பருத்தித்துறை, பொலிகண்டி, நாகர்கோயில், மணற்காடு, குடத்தனை போன்ற பகுதிகள் பாதிப்புகளையும் உயிரிழப்பு களையும் சந்தித்துள்ளன.

கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகள் திசம்பரில் ஏற்பட்ட பெருமறை, வெள்ளப்பெருக்குக் காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்தன. அதிலிருந்து மீட்சியடைவதற்கு முன்னரேயே சுனாமி கடற்கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. வாகரை, குருக்கள்மடம், பாலமுனை, நாசிவன்தீவு, பூநொச்சிமுனை, புதுமுகத்துவாரம், செட்டிப்பாளையம், பாலமீன்மடு, பாசிக்குடா, காத்தான்குடி, கல்லடி போன்ற பகுதிகள் அழிவுகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பட்டுள்ளன. சுமார் நாலாயிரம் பேரைக் கொண்டிருந்த கடற்கரைக் கிராமமான நாவலடி முழுமையாகத் தாக்கப்பட்டுள்ளது. மட்டக் களப்பிலுள்ள பெரும்பாலான வீதிகள் சேதமடைந்துள்ளன. கடற்கரை யோரப் பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் முப்பதினாயிரம் வீடுகள் முற்றாகவே சேதமடைந்துள்ளன. அத்துடன் பல கட்டடங்கள் பாதிப்படைந்துள்ளன. கடற்கொந்தளிப்பின் தாக்கங்களிலிருந்து மீட்சியடைவதற்கு முன்பாகவே, மூன்றாவது தடவையாகத் திசம்பர் 31இல் மீண்டுமொரு இயற்கையனர்த்தம் மட்டக்களப்பில் ஏற்பட்டது. மூன்று தினங்கள் தொடர்ந்து பெய்த பெருமழை காரணமாக மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மட்டக்களப்பு-வாழச்சேனை பிரதான வீதி உள்ளிட்ட பலவீதிகள் வெள்ளத்தில் மூழ்கின. 90 விழுக்காடு பிரதேசம் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாகக் கிழக்கு மாகாணம் எதிர்கொள்ளும் அவலம் அளப்பரியதாகும்.

கடல்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பத்து இலட்சத்தில் 70 விழுக்காடு வரையானவர்களுக்கு அரசினால் உரிய நிவாரணங்கள் வழங்கப்படவில்லை. உலர்உணவு வினியோகம், பணக் கொடுப்பனவுகள், அத்தியாவசிய நிவாரணங்கள் வழங்குவதில் ஆமை வேகமே காணப்படுகின்றது. நிவாரணப் பணிகளை மேற்கொள்வதன் பொருட்டு அந்நியப் படையணிகளும் களமிறங்குகின்றன. இயற்கை அனர்த்தங்களிலிருந்து மக்களை மீட்டெடுப்பதே இன்றிருக்கக்கூடிய பிரம்மாண்டமான பணியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தரவின்றி உட்புகுந்து...

அண்மையிலேற்பட்ட சுனாமி பசுபிக் சமுத்திரத்தில் பரவலாக அறியப்பட்ட ஒன்றாகும். சுனாமி என்பது துறைமுகத்தைத் தாக்குகின்ற அலை என்னும் கருத்தையுடைய ஜப்பானிய சொற்பதமாகும். இராட்சத அலைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதே சுனாமி அலையாகும். இராட்சத அலைகள், கடலின் மையப்பகுதிகளிலேயே கோரத்தாண்டவம் ஆடுகின்றன. ஆனால் சுனாமி கடற்கரையோரங்களைத் தாக்குகின்றது. ஜப்பான், இந்தோனேசியா போன்றனவே பெரும்பாலும் தாக்கப் படுகின்றன. சென்ற நூற்றாண்டில் 800 வரையான சுனாமிகள் பசுபிக் பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றில் நூற்றுக்கு மேற்பட்டவை ஜப்பானை அண்டிய கடற்பிரதேசங்களிலே ஏற்பட்டவையாகும். 1960 இல் சிலி நாட்டில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் விளைவாக, மணிக்கு 750 கிலோமீட்டர் வேகத்தில் கிளம்பிய சுனாமி ஜப்பானைத் தாக்கியது. 1881லும், அதன்பின்னர் 1941லும் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் நிலநடுக்கம் ஏற்பட்டபோது இந்து சமுத்திரத்தில் சுனாமி ஏற்பட்டது.

கடலின் அடிமட்டத்திலிருநது எழுகின்ற சுனாமி, ஆழ்கடல் பரப்புகளில் மணித்தியாலத்துக்கு சுமார் 500 மைல் வேகத்தில் பயணிக்கின்றது. அவ்வாறு ஆழ்கடலில் பயணிக்கும்போது கடல் மட்டத்திலிருந்து சுமார் ஒரு மீட்டர் மட்டுமே சுனாமியலை மேலெழும்பு கின்றது. ஆனால் கரையோரங்களை நெருங்கும்போது அதனுடைய கீழ்ப் பகுதியில் வேகம் குறைகின்றது. ஆனால் அதனுடைய மேல்பகுதியில் வேகம் அதிகரிக்கின்றது. அத்தோடு சுமார் 20 லிருந்து 30 மீட்டர் வரையில் சுனாமியலை மேலெழும்புகின்றது. அத்தகைய சந்தர்ப்பத்தில் அதனுடைய எடையும் பல மில்லியன் தொன்களாக அதிகரிக்கின்றது. பொதுவாக, 10 இலிருந்து 45 நிமிட இடைவேளையில் சுனாமியலைகள் தொடர்ச்சியாக ஏற்படுகின்றன. அவ்வாறு சுனாமியலை ஏற்படுவதற்கு முன்னர்க் கடற்கரையிலிருந்து தண்ணீர் நூற்றுக்கு மேற்பட்ட தடவைகள் வேகமாக உள்வாங்கப்படுகிறது. அதனால் கரையோரங்களில் கடலின் நிலமட்டத்தைத் தெளிவாகக் காணமுடிகின்றது. அதன் பின்னரேயே சுனாமியலை தாக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலுள்ள செஸ்மிக் அவதான நிலையங்கள் நிலநடுக்க மேற்படுவதை அறிந்துகொள்கின்றன. கடலுக்கடியில் ஒரு சென்டி மீட்டர் அளவேனும் அலைகள் கிளம்புகின்றபோது அறிந்துகொள்ளப் படுகின்றது. அவ்விரண்டு தரவுகள் மூலமாக சுனாமியலை ஏற்படப் போவதை அறிந்து கொள்ளலாம். ஆனாலும் அத்தகைய தொழில்நுட்பம் பரவலான பயன்பாட்டிலில்லை. அதனாலேயே கடந்த திசம்பரில் சுனாமியேற்படுவது குறித்து அறிந்து கொள்ளப்படவில்லை.

சமாதான நடவடிக்கைகளைத் தடைப்படுத்தும் முனைப்பு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு, சமாதான நடவடிக்கைகளை முடக்கு வதற்கு சுனாமியனர்த்தங்கள் வரப்பிரசாதமாகியுள்ளன. ஆழிப்பேரலை யேற்பட்டு ஒரு மாதம் கடந்துவிட்ட நிலையிலும், பாதிக்கப்பட்ட பகுதிகள் எதிர்கொள்கின்ற இடர்ப்பாடுகள் வார்த்தைகளுக்கு அப்பாற் பட்டதாகும். முதன்முதலில் சுனாமியலை ஏற்பட்டபோது, பெரும்படை யொன்று உட்புகுவதான தோற்றமே ஏற்பட்டது. அலையலையாகக் கரையோரங்களைத் தாண்டி உத்தரவின்றி ஊருக்குள் பிரவேசித்த கடல், திரும்பும்போது கரையிலுள்ளவர்களை அள்ளிச்சென்றது. முதலாவது அலையையடுத்து ஏற்பட்ட அலைகள், தோற்றத்தில் பாரியதாகவும் உருவத்தில் கரியதாகவும் காணப்பட்டன.

சுனாமியை மையப்படுத்தி ஜப்பானில் பல்வேறு கதைகள், கவிதைகள் காணப்படுகின்றன. அவற்றிலேயொன்று அங்குள்ள பெரிய வரொருவர் சுனாமியிலிருந்து தனது கிராமத்தைக் காப்பாற்றியதை வர்ணிக்கும் உருக்கமான கதையாகும். அப்போது அறுவடைக்காலம் முடிவடைந்திருந்தது. அறுவடை செய்யப்பட்ட கோதுமைப் பயிர்கள் மலைச்சாரல்களில் குவிக்கப்பட்டிருந்தது. அத்தகைய சந்தர்ப்பத்தில் சுனாமியின் ஆர்ப்பரிப்பு ஆரம்பமாகியது. மலையின் உயர்வான பகுதிகளிலே ஓய்வெடுத்துக் கொண்டிருந்த பெரியவர் கடலில் ஏற்படும் மாற்றங்களை அவதானித்தாராம். அதனைக் கிராமத்திற்கு உடனடி யாகவே தெரியப்படுத்த வேண்டுமென அவதியடைந்தாராம். அப்போது அப்பெரியவருக்கு ஓரெண்ணம் உதிக்கின்றது. மலைச்சாரல்களில் குவிக்கப்பட்டிருந்த கோதுமைப் பயிர்கட்குத் தீக்கிரையாவதைக் கடலோரங்களிலிருந்த மக்கள் காண்கின்றனர். தீயணைப்பதற்காக மலைக்கு ஓடுகின்றார்கள். அவ்வேளையில் சுனாமிப்பேரலைகள் கிராமத்தைத் தாக்குகின்றது. அதனால் அங்கு சுனாமியால் ஏற்பட்டிருக்கக்கூடிய உயிரிழப்புகள் தவிர்க்கப்படுகின்றது என்பது கதையாகும். அவ்வாறான சம்பவங்களும் நடைபெற்றிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனாமியால் வடகிழக்கில் ஏற்பட்ட அனர்த்தங்கள் கொடூரமான தாகும். மட்டக்களப்பில் சுமார் 60,000 குடும்பங்களும், திருகோண மலையில் சுமார் 31,000 குடும்பங்களும், வடபகுதியில் சுமார் 13,000 குடும்பங்களும், கிளிநொச்சியில் 11,000 குடும்பங்களும், முல்லைத் தீவில் சுமார் 5,000 குடும்பங்களுமாக மொத்தத்தில் வடகிழக்கில் சுமார் நான்கு இலட்சம் வரையானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். மட்டக் களப்பு, திருகோணமலை மற்றும் வடபகுதியில் தனித்தனியே சுமார் 3,000 வரையிலான உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. மட்டக்களப்பிலும் முல்லைத்தீவிலும் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். வடகிழக்கில் 3,000 இலிருந்து 4,000 வரையானவர்கள் அடையாளம் காணப்படவில்லை, மட்டக்களப்பில் மட்டுமே சுமார் 30,000 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. முல்லைத்தீவு, திருகோணமலை பகுதிகளில் ஆயிரக்கணக்கான வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. தீவுகளில் மூன்றில் இரண்டு பங்கு கடற்கரையோரம் பாதிப்படைந்து உள்ளது. அண்மைக்கால வரலாற்றில் தமிழர் தாயகப்பரப்பு எதிர் கொண்ட பாரிய அழிவு இதுவென்பதில் இருவேறு கருத்திருக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் குஞ்சுக்கு நீச்சல் பழக்குவதா?

கடந்த சில தினங்களில் அதீதமான காலநிலை மாற்றங்களை மெல்போர்ன் சந்தித்துள்ளது. செவ்வாய்க்கிழமை அதிகாலைப்பொழுதில் மெல்டனில் ஏற்பட்ட இடிமுழக்கம், ரோஸ்பட் வரையிலுமாகப் பரவி சுமார் 90 கிலோ மீட்டர் பரப்பளவில் அதிர்வுகளை ஏற்படுத்தியது. ஐந்து செஸ்மிக் அவதான நிலையங்களில் அதனுடைய வீரியம் அறிந்து கொள்ளப்பட்டது. ரிக்டரில் ஓரலகுக்குக் குறைவான அதிர்வாகவே கணிக்கப்பட்டு, மெல்போர்னில் உருவாகியது நிலநடுக்கமல்ல என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. செவ்வாய் அதிகாலை மூன்று மணியளவில் மெல்டன் பகுதியில் மின்கம்பம் ஒன்றைத் தாக்கிய மின்னல், ஒவ்வொரு மூன்று செக்கனுக்கும் ஒரு கிலோ மீட்டர் பயணிக்கத்தக்க ஒலிஅலைகளை உருவாக்கியதாகவும், அதுவே பலத்த இடிமுழக்கமாக உருவாகியதாகவும் கூறப்படுகின்றது. மின்னல் ஏற்பட்டதிலிருந்து 69 செக்கன்களில் மவுண்ட் மசிடோனிலுள்ள அவதானநிலையத்தில் அதிர்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எசென்டன், ரிச்மன்ட், பெல்கிரேவ் பகுதிகளிலுள்ள அவதான நிலையங்களும் அதிர்வுகளைப் பதிவுசெய்துள்ளன. செவ்வாய் அதிகாலை ஏற்பட்ட அதிர்வுகளை யடுத்து, குறைந்த காற்றமுத்தம் உருவாகித் தொடர்ச்சியான மழையும் ஏற்பட்டது.

நேற்றைய தினமே 1951க்குப் பின்னர்க் காணப்பட்ட மிகவும் குளிரான பெப்ரவரி நாளாகவும் கூறப்படுகின்றது. இன்று அதிகாலை 6.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில், 120 மில்லி மீட்டரளவு மழைவீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 1856ஆம் ஆண்டிற்குப் பின்னர் இதே தினத்தில் ஏற்பட்ட அதிகமான மழைவீழ்ச்சி இதுவெனவும் தெரிவிக்கப் படுகின்றது. தொடர்ச்சியாகப் பெய்த பெருமழையினால் மெல்போர்ன் பெருநகர்ப்பகுதி, கிழக்கு விக்டோரியா, ஜிலோங்க, பெலரீன் பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதோடு, ஆங்காங்கே மரங்களும் மின்கம்பங்களும் வீழ்ந்துள்ளன. அதனால் கடந்த 24 மணி நேரத்தில் எஸ்.இ.எஸ். எனப்படும் மாநிலத்தின் அவசரகாலச் சேவைகள் திணைக்களத்திடம் உதவிகோரி 2500க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பட்ட அழைப்புகள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இன்றைய தினம் மெல்பேர்ன் பெருநகர்ப்பகுதி உள்ளிட்ட பல பகுதிகளில் போக்குவரத்து முழுமையாக இயங்கமுடியாதநிலை காணப் பட்டது. மெல்பேர்னின் யாறா ஆற்றினுடைய நீர்மட்டம் அதிகரித் திருக்கிறது. விக்டோரியா மாநிலத்தின் தென்மத்திய, தென்கிழக்குப் பகுதிகளில் மழைவீழ்ச்சி அதிகளவானதாகக் காணப்பட்டது. சிட்னியிலும் பெருமழையேற்பட்டதோடு சில பகுதிகளில் கணிசமான பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளன. மாநிலத்தின் மத்திய பகுதிகளில் மணித்தியாலத்திற்கு 90 கிலோ மீட்டர் வேகத்தில் வீசிய பெருங்காற்று மரங்கள், மின்கம்பங்கள் ஆகியவற்றை வீழ்த்தியதோடு, கூரைகளையும் பெயர்த்துள்ளது. தஸ்மேனியாவிலும் தென்கிழக்கு குவின்ஸ்லாந்திலும் கூடப் பெருமழையும் அதனால் பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடல்கொந்தளிப்பையடுத்து இந்தியத் துணைக்கண்டத்தில் கவனிக்கத்தக்க அரசியல் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. தமிழ்நாட்டு அரசியலின் இருதுருவங்களான திராவிட முன்னேற்றக் கழகத்தினதும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினதும் இரண்டாம் நிலைத் தலைவர்களினது நேரடிச்சந்திப்பு புதிய அரசியல் கலாச்சாரத்தில் ஆரம்ப மாகியுள்ளது. ஒருவகையில் இரண்டு அணிகளுமே தேர்தல்களைச் சந்திப்பதற்கு இன்னும் தயாராகவில்லையென்பதையே அச்சம்பவம் காட்டுகின்றது.

மத்தியில் ஆளுகின்ற காங்கிரசு கூட்டணி ஸ்திரத்தன்மையுடன் காணப்படுகின்றது. இருந்தபோதிலும் வெவ்வேறு பிரதேசங்களில் ஏற்படக்கூடிய சட்டசபைத் தேர்தல்கள் இந்திய அரசியலில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தப்போகின்றன என்பது இன்று தொக்கிநிற்கும் கேள்வியாகும்.

இலங்கைத் தீவுகளினது பரிபாலனமும் ஆட்சியதிகாரமும் தென்னிலங்கையிடம் கிடைத்து 57 வருடங்கள் பூர்த்தியடைந்துவிட்டன. ஆனால் இனப்பிரச்சினை ஏற்பட்டதை விடுத்து வேறு எத்தகைய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பது விடைதேடும் கேள்வியாகவே யுள்ளது. கடந்த திங்கள் பொலன்னறுவை வெலிக்கந்தை நாமல்கம பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன் உள்ளிட்ட ஆறுபேர் கொல்லப் பட்டுள்ளனர். அச்சம்பவத்தின்போது படுகாயமடைந்த தமிழ்த் தேசியக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு அரியநாயகம் செவ்வாய் காலை கொழும்புத் தேசிய வைத்திய சாலையில் இறந்துள்ளார். புரிந்துணர்வு உடன்படிக்கையும் போர் நிறுத்தமும் கடைப்பிடிக்கப்படுகின்ற காலப்பகுதியில் ஏற்பட்டுள்ள முக்கியமான சம்பவமாகவே, கௌசல்யன் கொலை கருதப்படுகின்றது.

சனாதிபதி ஆட்சிமுறையை மாற்றுவதற்கான அபிப்பிராய வாக்கெடுப்புக் குறித்துப் பரவலாகப் பிரஸ்தாபிக்கப்படுகின்றது. தேசிய முக்கியத்துவமுடைய விடயத்தில் சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கான அதிகாரம் சனாதிபதியிடம் காணப்படுகின்றது. ஆனாலும் அரசியல்யாப்பின் அடியூன்றியசரத்துகளை மாற்றுவதற்கான அதிகாரம் சனாதிபதிக்கு வழங்கப்படவில்லை. சனாதிபதி ஆட்சி முறையை மாற்றுவதென்பது அரசியல்யாப்பில் அடியூன்றிய பிரிவுகளில், ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகள் சம்பந்தப்பட்டதாகும். அந்த வகையில் சனாதிபதி ஆட்சிமுறையை மாற்றுவதாயின், அதற்கான சட்ட வலுவைப் பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டுபங்கு ஆதரவுமூலம் பெறவேண்டும். அதன்பின்னரேயே சர்வசனவாக்கெடுப்பை நடத்த முடியும். இன்றுள்ள அரசியல் களநிலையில் அவ்வாறான பாராளு மன்றபலம் இரண்டு கட்சிகளுக்குமே கிடையாது. ஆனால் இலங்கை அரசியலில் எதுவும் நடைபெறலாம்! 1982இல் சர்வசன வாக்கெடுப்பு மூலமாகப் பாராளுமன்றத்தின் ஆயுள் நீடிக்கப்படவில்லையா? மீன்குஞ்சுக்கு நீச்சலும் முயல்குட்டிக்குப் பாய்ச்சலும் சொல்லியா கொடுக்கவேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுவாழ்வு தேடல்

வடகிழக்கில் மன்னார் தவிர்ந்த அனைத்து மாவட்டங்களையுமே ஆழிப்பேரலை ஏதோ ஒருவகையில் பாதித்துள்ளது. அதனால் பொதுமக்கள் மட்டுமல்லர், படையினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். வடகிழக்கிலுள்ள கடற்பரப்புகளில் பெரும்பாலானவை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளனவாகும். வடமராட்சி கிழக்கு மற்றும் நாகர்கோவிலிருந்து முல்லைத்தீவு மாவட்டக் கரையோரப் பிரதேசங்கள் வரையிலுமாகவும், கிழக்கில் திருகோணமலைத் துறைமுகத்தின் வெளிப்புறப் பிரதேசத்திலிருந்து வாகரை வரையான கடற்பிரதேசமும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளவை யாகும். ஆனாலும் விடுதலைப்புலிகளின் வளங்கள் கரையோரங்களில் பெருமளவிலாகக் காணப்படுவதில்லை, விடுதலைப்புலிகளுடைய நிலைப்பாடுகளிலிருந்து படையினரின் நிலை முற்றிலும் மாறுபட்டதாகும்.

யாழ் மாவட்டத்தின் தீவுப்பகுதிகளிலிருந்த வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர்கோவில் வரையிலும், கிழக்கில் நிலாவெளி, சீனன்குடா, திருகோணமலை துறைமுகப்பகுதிகள், வாகரையிலிருந்து அம்பாறை வரையிலெனப் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் உள்ளன. வடக்கில் காரைநகர் மற்றும் காங்கேசன் துறையிலும், கிழக்கில் திருகோணமலையிலும், தெற்கில் காலியிலும், மேற்கில் கொழும்பிலுமாகக் கடற்படை கட்டளைத் தளங்கள் அமைந்துள்ளன. அவற்றிலே கொழும்பு தவிர்ந்த ஏனைய கட்டளைத்தளங்கள், ஆழிப் பேரலை ஏற்பட்டபோது பாரிய தாக்கங்கட்கு உட்பட்டுள்ளன. படை யினரின் ஆயுதவளங்கள் மட்டுமல்ல, ஆளணிவளங்களும் பாதிக்கப் பட்டுள்ளன. காலி கட்டளைத்தளத்தின் பெரும்பகுதியைக் கடல்காவு கொண்டபோது, அங்கிருந்த அதிவேகப்பீரங்கிப் படகுகள், விசைப் படகுகள், யுத்தக்கப்பல்கள் போன்றவை அழிக்கப்பட்டன. 1996இல் கடற்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சீனத்தயாரிப்பான பராக்கிரம பாகு யுத்தக்கப்பல், காலி தக்சன கடற்படைத்தளத்தில் நிறுத்திவைக்கப் பட்டிருந்தவேளையில் தகர்க்கப்பட்டுள்ளது. கிழக்கில் நிலாவெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் மூதூர் தளங்கள் அழிந்து போயுள்ளன. மட்டக்களப்பு 23ஆவது படைப்பிரிவின் தலைமையகம் அமைந்திருந்த கல்குடா கடற்படைத் தளம் சேதமடைந்துள்ளது. அதுதவிர மாங்கேணி, களுவான்கேணி, கல்லடி முகாம்கள் முற்றாகவே அழிந்துள்ளன.

அம்பாறை மாட்டத்திலுள்ள கோமாரி, அறுகம்பை விசேட அதிரடிப்படை முகாம்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வடக்கிலுள்ள காங்கேசன் துறைப் படைத்தளத்தில், இடைநிலைத் தளபதிகள் உள்ளிட்ட பலரின் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. மாதகல், பலாலி, வல்வெட்டித் துறை, நாகர்கோவில், மணல்காடு, பருத்தித்துறை மற்றும் தொண்ட மனாறு பகுதிகளிலேயிருந்த முகாம்கள் சேதமடைந்துள்ளன. இவைதவிர கொக்கல விமானத்தள ஓடுபாதை முற்றாகவே நீரில் மூழ்கியுள்ளது. சீனன்குடா விமானப்படைத்தளம் பாதிக்கப்பட்டுள்ளது. அத்தகைய இழப்புகளையெல்லாம் விஞ்சும் வகையில், ஆளணிவளங்களும் பாரிய இழப்புகளுக்கு முகம் கொடுத்திருக்கின்றன. அந்தவகையில் ஆழிப் பேரலை படைத்தரப்பைப் பாதித்ததோடு, இராணுவத்தின் தயார் நிலையைக் கேள்விக்குட்படுத்தியுள்ளது. ஆனாலும் பூநகரி, மிருசுவில், வரணி, தென்மராட்சியில் தச்சன்தோப்பு, தளங்கிளப்பு, வலிகாமத்தில் மாதகல் ஆகிய இடங்களில் படைநிலைகள் விஸ்தரிக்கப்படுகின்றன.

சுனாமியைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகள் பிற தென்கிழக்காசிய நாடுகளிலெல்லாம் வேகமாக நடைபெறுகின்றன. ஆனால் இலங்கையில் மட்டும் புனர் நிர்மாணப் பணிகள் மிகவும் மந்தகதியிலேயே காணப்படுகின்றன. சுமார் 30,000 வரையானவர்கள் உயிரிழந்ததோடு, அரை மில்லியன் வரையானவர்கள் இடம் பெயர்ந்துள்ள நிலையிலும்கூட, மனிதாபிமான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படவில்லை. பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதில் கருத்தொற்றுமையின்மை காணப் படுகின்றது. அதுவிடயத்தில் ஆளும் கட்சியிலேகூடக் கருத்தொரு மித்தநிலை காணப்படவில்லை. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயான புனர்நிர்மாணப் பணிகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகமே பெருமளவில் மேற்கொண்டுவருகிறது.

சனாதிபதித் தேர்தல்கள் தொடர்பான சர்ச்சைகள் அரசியல் பரப்புகளைத் தெளிவற்றதாக்குகின்றது. இவ்வாண்டு இறுதியில் நடைபெறவேண்டிய சனாதிபதி தேர்தல்களை 2006 வரையில் தள்ளிப்போடுவதிலும், அதன்பின்னர் அதிகாரத்தைத் தக்கவைத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதிலும் சனாதிபதி குமாரதுங்காவின் கவனம் காணப்படுகின்றது. அத்தகைய பின்னணியிலேயே சனாதிபதி ஆட்சிமுறையை மாற்றுவது குறித்துச் சலசலப்புகள் காணப்படுகின்றன. 1994இல் சனாதிபதி ஆட்சி முறையை மாற்றுவதற்காக ஜேவிபியின் ஆதரவைப் பற்ற சனாதிபதி குமாரதுங்கா, இன்று ஆட்சியதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதில் ஜேவிபியின் ஆதரவை நாடுகின்றார். ஆனால் சனாதிபதி ஆட்சி முறையை மாற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமல்ல, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவர்களே தயாராக இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளராக விக்கிரமசிங்க அறிவிக்கப்பட்டுள்ளார். ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சனாதிபதி வேட்பாளர் தெரிவிலும் கடுமையான போட்டி காணப் படுகின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திக் கட்சி ஜேவிபி கூட்டணியில் முறுகல் அதிகரிக்கின்றது. இடைக்கால நிருவாக சபை அமைக்கப்பட்டாலோ, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டாலோ, பொதுக்கட்டமைப்பு நிறுவப்பட்டாலோ அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை விலக்கிவிடுவதாக ஜேவிபி கூறிவருகின்றது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு வழங்குகின்ற ஆதரவின் ஸ்திரத்தன்மையும் கேள்விக்கு உட்படுகின்றது. சுருங்கச்சொல்வதானால், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் தென்னிலங்கை அரசியல் கலக்கமடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்துவமான ஆற்றல்

புதுக்கோட்டையிலிருந்து சினிமாக் கனவுகளோடு சிங்காரச் சென்னையில் கால்பதித்த இளைஞனொருவன் தமிழ்த் திரையுலகில் காதல் மன்னனாகப்போவதாகக் கற்பனையேனும் பண்ணியிருக்க மாட்டான். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்று அங்கேயே வேலையில் சேர்ந்தபின்னரும்கூடச் சினிமாக்கனவு அந்த இளைஞரைத் துரத்தியது. ஜெமினி ஸ்டுடியோவில் சினிமா நடிகரைத் தெரிவு செய்யும் உதவியாளர் வேலை கிடைத்தபோது சிலிர்த்துப் போனான். சிறிது சிறிதாக நடிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன. 1947இல் வெளிவந்த மிஸ் மாலினி, தாய் உள்ளம், ஔவையார் போன்ற படங்களில் சிறு பாத்திரங்கள் கிடைத்தன. ஆனாலும் கதாநாயனாக நடிக்கும் வாய்ப்பு,

1954இல் வெளியாகிய மனம் போல் மாங்கல்யம் படத்திலேயே முதன்முதலில் கிடைத்தது. அதிலே ஏற்பட்ட அபரிமிதமான வெற்றி அந்த இளைஞனை ஜெமினி கணேசன் ஆக்கியது. அப்போது உருவாகிய ஜெமினி-சாவித்திரி ஜோடிப்பொருத்தம் தமிழ் சினிமாவின் கவனிப்பைப் பெற்றது. ஸ்ரீதர் இயக்கத்தில் வெளியாகிய கல்யாணப் பரிசு ஜெமினி கணேசனை வெற்றிப்படிகளில் ஏற்றியது. ஒருதலை முறையினரின் இளமை, வேட்கை, துள்ளல், ஆர்ப்பரிப்பு என்பவற்றின் குறியீடாக ஜெமினி கணேசன் அடையாளம் காணப்பட்டார். கம்பீரமான தோற்றம்! தீர்க்கமான பார்வை! மென்மையான குரல்! என்னும் தனித்துவமான குணாம்சங்களை ஜெமினி கணேசன் ஒருங்கே கொண்டிருந்தார். எம்ஜிஆர்-சிவாஜியெனத் தமிழ்த் திரையுலகு சுழன்று கொண்டிருந்த காலகட்டங்களிலேயே நடிப்பாற்றல் மூலமாகத் தனக்கெனத் தனியான ரசிகர் கூட்டத்தை உருவாக்கிக்கொண்டார்.

அவரதுபடங்களிலே இடம்பெற்ற பாடல்கள் பலவும் குறிப்பிட்ட தலைமுறையினரின் மனங்களில் நீங்காத நினைவுகளாகியிருக்கின்றன. காதலிலே தோல்வியுற்றான் காளையொருவன் என்னும் பாடல், கல்யாணப் பரிசின் இறுதிக்கட்டத்திலே தொடுவானத்தை நோக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெமினி கணேசன் நடந்துசெல்லும் காட்சியை இன்றும்கூட மனத் திரையில் அசைக்கின்றது. தமிழ்த் திரையுலகின் முன்னணி நட்சத்திரங்கள் ஒவ்வொருவருமே ஏதோ ஒரு வகையில் ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டிருக்கின்றார்கள். அந்த ரீதியில் காதல் மன்னனாகத் தமிழ் சினிமாவின் உச்சாணியை ஜெமினி கணேசன் தொட்டிருக்கின்றார்.

1950 இல் தொடங்கி சுமார் இருபது ஆண்டுகள் வரையில் தமிழ்த் திரையுலகின் முன்னணி நட்சத்திரங்களுள் ஒருவராக ஜொலித்தார். சாவித்திரி, சிவாஜி கணேசன், சரோஜாதேவி, பத்மினி, எஸ்.பி. முத்துராமன், வைஜெயந்திமாலா, சௌகார் ஜானகி, ஜெய்சங்கர், தேவிகா எனப் பல்வேறு நட்சத்திரங்களுடன் இணைந்து நடித்தார். ஆக்ஷன் படங்களில் நடிக்கவில்லை என்பது மட்டுமல்ல, மென்மையான உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற பாத்திரங்களிலேயே பெரும்பாலும் நடித்திருக்கின்றார். அவருடைய வசனங்கள் செம்மையானதாக விளங்கிய அதே வேளையில் காத்திரமானதாகவும் அமைந்தன. மிஸ்ஸியம்மாவில் ''வாராயோ வெண்ணிலாவே'', தேனிலவில் ''ஓஹோ எந்தன் பேபி'', பாவமன்னிப்பில் ''காலங்களில் அவள் வசந்தம்'', சுமைதாங்கியில் ''மனிதன் என்பவன் தெய்வமாகலாம்'' போன்ற பாடல்களும், அவற்றிற்குக் குரல்கொடுத்த கண்டசாலா, ஏ.எம்.ராஜா, ஸ்ரீநிவாஸ் போன்றறோரின் குரல்வளமும் ஜெமினி கணேசனுடைய பாத்திரங்கட்குச் சாகாவரம் அளித்துள்ளன.

பெண்ணின் பெருமையில் தொடங்கி வீரபாண்டிய கட்ட பொம்மன், பாசமலர், பாவமன்னிப்பு, பந்தபாசம், கப்பலோட்டிய தமிழன், சரஸ்வதி சபதம் போன்ற படங்களில் நடிப்பின் சிகரமான சிவாஜி கணேசனுடன் நடித்தார். முகராசியில் எம்.ஜி.ஆருடன் தோன்றினார். 1960 இல் கமல்ஹாசன் முதன்முதலில் நடித்த களத்தூர் கண்ணம்மாவில் தொடங்கி, 1998 இல் பாலச்சந்தர் இயக்கத்தில் உன்னால் முடியும் தம்பியிலும், 1996இல் அவ்வை சண்முகியிலுமாகப் பரவலமாகப் பேசப்பட்ட படங்களைத் தந்தார். தமிழ் சினிமாவின் முதல் ஐம்பது ஆண்டுகளில் கணிசமான செல்வாக்கைப் பக்திப்படங்கள் பெற்றிருந்தன. அத்தகைய காலங்களில் லவகுசாவில் லஷ்மணனாகவும், கந்தன் கருணையில் சிவபெருமானாகவும், வீர அபிமன்யூவில் கிருஷ்ணராகவும் நடித்துப் பக்திப்படங்களிலும் தனது ஆற்றலை வெளிப்படுத்தினார்.

அலமேலு அம்மாளை மணம் முடித்து ரேவதி, கமலா, நாராயணி, ஜெயா என நான்கு மகள்களையும், மிஸ் மாலினியில் தன்னுடன் நடித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஷ்பவல்லியுடன் ஏற்பட்ட உறவில் இந்தித் திரையுலகின் கனவுக் கன்னியாக விளங்கிய ரேகா மற்றும் ராதா என இரண்டு மகள்களையும், அதன்பின்னர்க் கல்யாணப் பரிசில் ஜோடி சேர்ந்த சாவித்திரியுடனான தொடர்பு நிஜவாழ்க்கையை எட்டிப் பார்த்தபோது விஜயா என்ற மகளும் சத்தீஷ் என்ற மகனும் பிறந்தனர். இவ்வாறாகப் பல பெண்களுடன் பழகிய ஜெமினி கணேசன், பல பெண்களுடன் பழகும் வித்தியாசமான கதாபாத்திரங்களைச் சித்திரிக்கும் நான் அவன் இல்லை என்னும் படத்தில் ஒன்பது வேடங்களில் தோன்றினார். 1962ஆம் ஆண்டில் வெளியாகிய சாவித்திரியின் நூறாவது படமாகிய கொஞ்சும் சலங்கையில் சாவித்திரி பாடகியாக நடிக்க, ஜெமினி கணேசன் நாதஸ்வர வித்துவானாக நடித்தார்.

முதன்முதலாக ஸ்ரீதர் இயக்கிய கல்யாணப் பரிசு பெற்ற வெற்றியைத் தொடர்ந்து முற்றுமுழுதாக காஷ்மீரிலேயே எடுக்கப்பட்ட தேனிலவு படத்திலும், அதனைத் தொடர்ந்து ஸ்ரீதரின் இயக்கத்தில் வெளிவந்த சுமை தாங்கி, மீண்ட சொர்க்கம் போன்ற படங்களிலும் நடித்தார். கல்கியின் பார்த்திபன் கனவு புதிய பரிமாணங்களை வெளிப் படுத்தியது. பணமா பாசமாவில் சரோஜாதேவியுடனும், இரு கோடுகளில் சௌகார் ஜானகியுடனும். 1971 இல் கங்கா கௌரியில் ஜெயலலிதாவுடனும் இணைந்து பரவலாகக் கவனிக்கப்பட்ட படங்களைத் தந்தார், பீம்சிங்கின் பாசமலர் மற்றும் பாதகாணிக்கை, ஸ்ரீதரின் கல்யாணப் பரிசு மற்றும் சுமைதாங்கி பாலச்சந்தரின் இரு கோடுகள், நான் அவன் இல்லை மற்றும் அவ்வை சண்முகி போன்றவை இருநூறுக்கு மேற்பட்ட படங்களில் நடித்த ஜெமினி கணேசன் என்னும் கலைஞனை ஆத்மார்த்தமாக வெளிப்படுத்தியது. தெளிவான உச்சரிப்புடன் கூடிய உன்னதமான நடிப்பாற்றலை கொண்டிருந்த ஜெமினி கணேசன் தமிழ் சினிமாவில் தனித்துவமான ஆற்றலைக் கொண்டிருந்தார் என்பது மிகைப்படுத்தல்ல!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியன் மேற்கிலா உதிக்கும்?

தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு நடைபெற்ற இடைத்தேர்தல்களில், பரவலான எதிர்பாாப்புகளையும் மீறி ஆளுகின்ற அண்ணா திமுக வெற்றி பெற்றுள்ளது. 2004 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களில் அண்ணா திமுக தமிழ்நாட்டிலுள்ள 39 தொகுதிகளிலும் தோல்வியடைந்தது. அன்றைய தேர்தல் முடிவுகள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணிக்கு மிகப்பெரிய வெற்றியாகியது. ஆனால் அதன்பின்னரான காலப்பகுதியில் முதலமைச்சர் ஜெயலலிதா திகைப்பூட்டும் மாற்றங்களை ஏற்படுத்தினார். நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக நலத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. மதமாற்றத் தடைச்சட்டம் போன்ற சர்ச்சைக்குரிய விஷயங்கள் பரணில் வீசியடிக்கப்பட்டன. காஞ்சிபுரம் விவகாரம், திருட்டு வீசிடி ஒழிப்பு என ஒன்றன்பின் ஒன்றான தடாலடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. இடைத்தேர்தல்கள் அறிவிக்கப்பட்டபோது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியிலிருந்து பாரதீய ஜனதா விலகிக் கொண்டது. ஆனாலும் ஜெயலலிதா கலங்கவில்லை.

இடைத்தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணி வீறுகொண்டது. மு.க. ஸ்டாலின் முன்னிலைப்படுத்தப்பட்டார். கூட்டணிக் கட்சிகளின் மாநிலத் தலைவர்கள், மத்திய அமைச்சர்கள் எனப் பெரும்படையே களமிறங்கியது. பதிலுக்கு ஜெயலிதாவும் மாநில அமைச்சர்களையும் கட்சியின் முக்கியஸ்தர்கைளையும் தேர்தல் பிரச்சாரத்தில் முழுமையாக ஈடுபடுத்தினார். ஒருவகையில் அடுத்து வரக்கூடிய சட்டமன்றத் தேர்தல்களுக்கான ஒரு முன்னோட்டமாகவே இரண்டு கட்சிகளும் இடைத்தேர்தல்களைக் கருதின. அதனால் தேர்தல் விறுவிறுப்பும் கடுமையாகியது. ஆனாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணிக் கட்சிகளுடன் ஜெயலலிதா தனியொருவராக மோதினார். இடைத் தேர்தல்களில் அபாரமான வெற்றியும் கிடைத்துள்ளது. இன்று நேற்றல்ல.. தனது ஒவ்வொரு ஆட்சிக் காலத்திலும் ஏற்படுகின்ற இடைத்தேர்தல்களில் ஜெயலலிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிபெறுகின்றார். அதன்மூலமாக ஆட்சியிலுள்ள கட்சியொன்றுக்கு இடைத்தேர்தல் வெற்றி என்பது எட்டாக்கனி என்னும் கருத் தோட்டத்தையும் தகர்த்திருக்கின்றார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையேற்பட்டுக் காலங்கள் கடந்துவிட்ட போதிலும், தமிழருடைய நியாயமான அபிலாசைகளைப் பூர்த்திசெய்யத் தக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவுமே ஏற்படவில்லை. இடைக்கால நிருவாகத்தில் ஆரம்பமாகிய இழுபறி பொதுக் கட்டமைப்பில் தொடர்கின்றது. சுனாமியேற்பட்டு ஐந்து மாதங்கள் கடந்துவிட்ட போதிலும், வடகிழக்கில் இதுவரையில் உலர்நிவாரணம் மட்டுமே வழங்கப்பட்டிருக்கின்றது. நிரந்தர வசிப்பிடங்களை அமைப்பது குறித்த பேச்சுவார்த்தையே ஆரம்பிக்கப்படவில்லை. பொதுக்கட்டமைப்பு நிறுவப்படவேண்டியதன் அவசியத்தைச் சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டது. இருந்தபோதிலும் எத்தகைய முன்னேற்றங் களும் ஏற்படவில்லை. ஆனால் பொதுக்கட்டமைப்புக் குறித்த முரணான செய்திகள் மட்டும் சரமாரியாக வெளியாகின்றன. சிலவேளைகளில் பொதுக்கட்டமைப்பு ஏற்பட்டுவிடுவதான பிரமை உருவாக்கப் படுகின்றது. மற்றைய வேளைகளில் அதற்கான சாத்தியமே இல்லை என்னும் கருத்துப் பரப்பப்படுகின்றது. அதனால் தெளிவின்மை தொடர்கின்றது.

பொதுக்கட்டமைப்பு பூதாகாரமாக்கப்பட்டிருக்கின்றது. வரை யறுக்கப்பட்ட அதிகாரங்களையும் நோக்கங்களையும் மட்டுமே கொண்ட ஓர் அமைப்பை அரசியல்மயப்படுத்தியதன் மூலமாகத் தப்பித் தவறியேனும் ஒருதுரும்பளவான நிவாரணமேனும் தமிழ்ப்பகுதி களுக்குச் செல்வது தடுக்கப்பட்டுள்ளது. பொதுக்கட்டமைப்பு அமைப்பதன் மூலமாக, அதிகாரப் பரவலாக்கத்தை அறிமுகப் படுத்துவதற்குத் திட்டமிட்ட சர்வதேச சமூகம், இன்றைய கால கட்டங்களில் தென்னிலங்கையில் உருவாகியுள்ள எதிர்ப்பலைகளைக் கண்டு திகைப்படைந்துள்ளது. முக்கிய அதிகாரங்கள் எதனையுமே கொண்டிராத அடிப்படையான ஒரு நிருவாக அமைப்பிற்கே இத்தகைய எதிர்ப்பு ஏற்படுகின்றதெனில், நியாயமான தீர்வு ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆண்டாண்டுக்காலமாக நிலவிய சந்தேகங் களல்லவா வலுவடைகின்றன. தமிழர்கட்கு நியாயமான தீர்வைச் சிங்கள தேசத்தால் வழங்கமுடியுமா என்னும் சந்தேகம் மெல்லிய கீற்றுகளாக வேனும் சர்வதேச சமூகத்திடையே ஏற்படத் தொடங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி வழங்கும் நாடுகளின் சந்திப்பு இவ்வாரத்திலே கண்டியில் நடைபெற்றுள்ளது. கடனுதவிகள், சுனாமி மீள்கட்டுமான நிதியுதவிகள் குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. நிதியுதவிக்கான அடிப்படை நிபந்தனையாக முன்வைக்கப்பட்டிருந்த தனியார் மயமாக்கலையோ பொதுக்கட்டமைப்போ பூர்த்தியடையவில்லை. தனியார் மயமாக்கலையும் புரிந்துணர்வு உடன்படிக்கையையும் தடுத்து நிறுத்துவதற்காகவே கடந்த தேர்தல்களின்போது ஜேவிபியுடன் கூட்டணி அமைத்துக்கொண்ட சனாதிபதி குமாரதுங்கா, இன்று வரையில் அகப்பட்ட எலியாகியுள்ளார். மின்சார சபையையும் பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தையும் தனியார் மயமாக்குவதையும் ஜேவிபி எதிர்க்கின்றது. பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதை ஜேவிபி, தேசப்பற்றாளர் இயக்கம், ஹெல உறுமய என்பன எதிர்க்கின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் ஐக்கிய தேசியக் கட்சியினதும் கவனமெல்லாம் அடுத்த தேர்தல்களிலேயே உள்ளன.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் தென்னிலங்கைக்குள் வழி முறைகள் குறைவாகும். ஒன்று வடகிழக்கிற்கான மீள்நிர்மாணப் பணிகளிலிருந்து முழுமையாக ஒதுங்கிக் கொள்ளவேண்டும். அவ்வாறு செய்றதால், வடகிழக்கிலுள்ளவர்கள் இலங்கை பிரஜைகளல்லர் என்பது உறுதியாகிவிடும். இல்லையெனில், இராணுவப் பலத்தினால் வட கிழக்கை முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும். அதற்கான சாத்தியக்கூறுகளும் கிடையாது. பொதுக்கட்டமைப்பிற்கே திணறுகின்ற சிங்களதேசம் நியாயமான தீர்வை வழங்கும்போது சூரியன் மேற்கில்லவா உதிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய குத்தகைக்காரர்

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான திட்டவட்டமான பேச்சுகள் எப்பொழுதெல்லாம் ஏற்படுகின்றதோ, அப்பொழுதெல்லாம் தென்னிலங்கையில் ஆயிரமாயிரம் அரசியல் சுனாமிகள் ஏற்படுகின்றன. பண்டா-செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டபோது ஒரு ஜெயவர்தனே கிளர்ந்தெழுந்தார். பின்னர் அதே ஜெயவர்தனே இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஏற்படுத்தியபோது, பிரேமதாஸா ஒரு பக்கமும் ஜேவிபி மற்றுமொரு பக்கமுமாகக் கிளர்ந்தெழுந்தனர். விக்கிரமசிங்க அரசு புரிந்துணர்வு உடன்படிக்கையை உருவாக்கியபோது, சனாதிபதி குமாரதுங்கா சிலிர்த்துக் கொண்டார். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் முன்வைக்கப்பட்டபோது, சனாதிபதி குமாரதுங்கா ஆவேசமடைந்தார். இன்று சனாதிபதி குமாரதுங்கா, பிடொம்ஸ் எனப்படும் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதான பிரமையை உருவாக்குகின்றபோதே ஜேவிபி சன்னதம் கொள்கின்றது. சாந்தமேயுருவான புத்தரின் அடிச்சுவடுகளில் நடப்பவர்களெல்லாம் மிரள்கிறார்கள்... கண்டியில்.. கொழும்பில் எனக் கிடைத்த இடங்களிலெல்லாம் சாகும்வரை உண்ணாவிரதம் என மிரட்டுகின்றனர்.

ஜேவிபி விலகினாலோ அல்லது பிடொம்ஸ் நிறுவுவதற்கு ஏதுவாகவோ பாராளுமன்றம் கலைக்கப்படலாம் அல்லது குமாரதுங்கா அரசு கவிழலாம் என்னும் ஊகங்களிடையே, ஆட்சிக்கு ஆதரவு தேடுகின்ற படலங்களும் ஆரம்பமாகியுள்ளன. பொதுத் தேர்தல் பூச்சாண்டியும் உலாவுகின்றது. தேர்தல்கள் ஏற்படலாம் என்னும் நினைப்பே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ளவர்களின் இரவுகளை இம்சையாக்குகின்றன. இவ்வருட இறுதியில் நடைபெறவேண்டிய சனாதிபதி தேர்தல்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் பார்வையைக் குறுகலாக்குகின்றது.

இலங்கை அரசியலில் ஜேவிபியினுடைய வளர்ச்சி கவனிக்கப்பட வேண்டியதாகும். 1948க்குப் பிந்தைய காலப்பகுதியில் சிங்கள-பௌத்த தேசியவாதம் எழுச்சியடைந்தது. சிங்களப்பேரினவாதம் கருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டது. சிறுபான்மையினருடைய உரிமைகள் நசுக்கப்படலாகாது என்பதனை, அன்றைய காலங்களிலிருந்த சிங்கள கம்யூனிஸவாதிகள் ஒரு கருத்தாகவேனும் நம்பினார்கள். ஆனால் 1960களுக்குப் பிந்தைய காலப்பகுதியில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. பாராளுமன்றத்தின் சுக போகங்களும், அமைச்சுப் பொறுப்புகளிலிருந்து விளைந்த டாம்பீகமும் சிங்கள கம்யூனிஸவாதிகள் பலரையும் கவ்விக்கொண்டது. அதே காலப்பகுதில் பேரினவாதம் அசைக்கமுடியாத சக்தியாகவும் உருவாகியது. அத்தகைய பின்னணியிலேயே கம்யூனிஸக் கோட்பாடு களில் நம்பிக்கை கொண்ட இளைஞர் குழாம் ஜேவிபியாக மலர்ச்சி யடைந்தது.

ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக உருவாகிய றோகண விஜேவீராவின் ஜேவிபி, தமிழருக்கு நியாயமான தீர்வு வழங்கப்பட வேண்டுமென்னும் கோட்பாட்டையேனும் நம்பியது. ஜேவிபியின் முதலாவது ஆயுதக்கிளர்ச்சி 1971இல் ஏற்பட்டது. அதனை இந்திய உதவியுடன் ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா அரசு முறியடித்தது. அதன்பின்னர் 1987இல் ஜெயவர்த்தனா அரசு இந்திய-இலங்கை உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொண்டபோதும் ஜேவிபியின் ஆயுதக்கிளர்ச்சி ஏற்பட்டது. இந்திய ஏகாதிபத்தியத்தை ஜேவிபி ஆரம்பத்திலிருந்தே எதிர்த்தது. இந்திய எதிர்ப்புக் கொள்கையில் உறுதி கொண்டிருந்தது. இத்தகைய பின்னணியில் இந்திய-இலங்கை உடன்படிக்கையை ஜேவிபி எதிர்த்தமை ஆச்சரியப்படத்தக்கதல்ல! ஒரு காலகட்டங்களில் இந்தியப் பொருள்களுக்கு எதிரான பிரச்சாரத்தை ஜேவிபி மிகக்கடுமையாக மேற்கொண்டது. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உடை, பாவனை மற்றும் உணவுப் பொருள்களிலேயும் கடுமையான எதிர்ப்பைக் கொண்டிருந்தது. பம்பாய் வெங்காயத்திற்குப் பெரிய வெங்காயம், மைசூர் பருப்பிற்குச் செம்பருப்பு என்றெல்லாம்கூடச் பெயர்மாற்றங்கள் செய்தது. ஜேவிபியின் இந்திய எதிர்ப்புக்கொள்கைக்கு விரோதமாகச் செயற் பட்டவர்கள் தண்டிக்கப்பட்டனர். சூறையாடல், தீயிடல் எனப் பல யுக்திகள் மூலமாக ஜேவிபியினுடைய கொள்கைகள் நிலைநிறுத்தப் பட்டன. இவ்வாறான வகையில் பல நூறு சிங்கள இளைஞர்களின் குருதிச்சேற்றில், இந்திய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தைப் பல ஆண்டுகளாக நடத்திய ஜேவிபி, இன்று பொதுக் கட்டமைப்பு நிறுவுவது இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறத்தலாக அமையுமென வாதாடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு சகாப்தங்களின் முன்னர் பெரேராக்களும் சில்வாக்களும் கெனமன்களும் எத்தகைய அதிகாரச்சூழலில் சிக்கிப் பொதுவுடைமைக் கோட்பாடுகளைத் தொலைத்தார்களோ... இன்று அதே சுழலில் அமர சிங்கக்களும் சில்வாக்களும் வீரவன்சக்களும் சிக்கியுள்ளனர். 1994இல் நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையை மாற்றுவதற்காக குமாரதுங்கா அரசுக்கு ஆதரவு வழங்கியது. ஆனால், பத்து வருடங் களின் பின்னரும்கூட எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை என்பது மட்டுமல்ல, அத்தகைய சனாதிபதி ஆட்சிமுறையின் பலாபலன்களையும் ஜேவிபி அனுபவிக்கின்றது. தமது தேசத்தை வெள்ளைப்புலிகளிடம் அரசு விற்பதாகக் குற்றம் சாட்டுகின்ற ஜேவிபி, அண்மையில் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டதோடு, ஜப்பானில் தேசப்பற்றாளர் இயக்கத்தின் கிளையொன்றையும் நிறுவியுள்ளது.

றோகண விஜேவீரவின் ஜேவிபி வரலாறாகிவிட்டது. இன்றைய ஜேவிபி பொதுக்கட்டமைப்பு நிறுவப்படுவதை எதிர்க்கின்றது. நியாய மான தீர்வு ஏற்படுவதைத் தடுக்கின்றது. ஆனாலும் கவனிக்கப்பட வேண்டிய சக்தியாக வளர்ச்சியடைகின்றது. பாராளுமன்ற அரசியலில் தீர்க்கமான சக்தியாகின்றது. மக்களின் நாடித்துடிப்பை உணர்ந்த தலைமைகள் ஐக்கிய தேசியக் கட்சியிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும் காணாமல்போய்ப் பல வருடங்கள் கழிந்துவிட்டன. இரண்டு கட்சிகளுமே சர்வதேச மாற்றங்களையும் யதார்த்தங்களையும் தரிசிக்கத் தொடங்குகின்றன. பேரினவாதத்திலிருந்து சற்றேனும் விலக முற்படுகின்றன. ஆனால் பேரினவாதத்தைக் குத்தகை எடுப்பதற்கு ஜேவிபி பகீரதப்பிரயத்தனங்களை மேற்கொள்கின்றது. அந்தவகையில் தென்னிலங்கையின் துடிப்புமிக்க தலைமை ஜேவிபியிடம் கைமாறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி.யின் பாய்ச்சல்

இலங்கைத் தீவுகளில் ஆண்டாண்டுக் காலமாகத் தொடருகின்ற பேரினாவாதச் செயற்பாடுகளின் வெளிப்பாடாகவே திருமலை புத்தர் சிலை விவகாரம் காணப்படுகின்றது, உன்னதமாக வாழ்விலட்சியங் களைப் போதித்துப் போகங்களைத் துறந்து, எளிமையான வாழ்வுக்கு வழிகாட்டிய ஒருவர். இன்று பேரினவாதத்தின் அடையாளமாக, ஆக்கிரமிப்பின் சின்னமாக,.. ஓரினத்தின் அழிவுக்கு வழிகோலும் சக்தியாக உருவாக்கப்பட்டுள்ளமை... மிகப்பெரிய அபத்தமாகும்! அரசாங்க நிலத்தில்... அரசாங்கத்தின் அனுமதியில்லாமல்... இரவோடிரவாகப் புத்தர்சிலையை யாரோ நிறுவியுள்ளார்கள் என்பது பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுகின்றமையாகும். அரசாங்கத்தினுடைய நம்பகத்தன்மை முற்றுமுழுதாக அசைக்கப் பட்டுள்ளது. நம்பகத்தன்மை என்பது இருந்தால்தானே என்னும் கருத்திலும் நியாயமுள்ளது. ஒன்று, வடகிழக்கில் மட்டுமன்றி, இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலும்கூட அரசாங்கத்திற்கு நிருவாகவலு இல்லாமலிருக்கவேண்டும். இல்லை, இலங்கை அரசாங்கம் என்பது சிங்கள அரசாங்கமாக மட்டுமே அமைந்துள்ளதா? என்னும் கேள்வியும் எழுகின்றது.

இன்று... நேற்றல்ல... காலங்காலமாகவே ஆக்கிரமிப்புகள் நடை பெறுகின்றன. முதலில் புத்தர் சிலையை நிறுவுவதும், அதன்பின்னர் அங்குச் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதும் பாட்டன் முப்பாட்டன் காலத்திலிருந்தல்லவா நடைபெறுகின்றன. அன்றொரு காலத்தில், தமிழர்களும் இசுலாமியர்களும் வாழ்ந்த திருமலையில், சிங்களவர்கள் வசித்தனர். இன்று சிங்களவர்கள் அங்கு வாழ்கின்றனர். பாரம்பரியத் தமிழ் நிலங்களில் பேரினவாதிகள் களம் கொள்கின்றனர். கோணேஸ்வரர் ஆலயம், ஓமந்தையிலுள்ள விநாயகர் ஆலயம் என ஆங்காங்கே புத்தர் சிலைகள் நிறுவப்படுகின்றன. அவ்வாறாகப் போதிமரத்துத் துறவியைப் பேரினவாதியாக்குவது தொடர்கின்றது.

சர்வதேச அழுத்தங்களினால் மட்டுமே முன்னெடுக்கப்படுகின்ற பொதுக்கட்டமைப்பு முயற்சிகளுக்கே எதிர்ப்பு ஏற்படுகின்றதெனில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்பிரச்சினையில் நியாயமான தீர்வு ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் எவ்வளவென்பது தெட்டத் தெளிவாகின்றது. அரை நூற்றாண்டுகளாகவே தொடருகின்ற இனப்பிரச்சினையின் மூலகாரணி யார் என்பதை அழுத்தம் திருத்தமாக அடையாளம் காட்டுவதில் மட்டுமின்றித் தமிழர்களை ஏமாற்றுவதில் வல்லவர் யார் என்பதிலும் தென்னிலங்கையில் அலாதியான போட்டி நிலவுகின்றது. பண்டா-செல்வா ஒப்பந்தம், மாவட்ட சபை, திம்பு பேச்சுவார்த்தை, இந்திய-இலங்கை ஒப்பந்தம், வடகிழக்கு இணைப்பு எனக் காலத்திற்குக்காலம் வெவ்வேறு தந்திரோபாயங்களைப் பிரயோகித்துக் காலவிரயம் செய்யப் பட்டிருக்கின்றதேயன்றி, நியாயமான தீர்வொன்றை ஏற்படுத்துவதில் ஆக்கபூர்வமான அக்கறை செலுத்தப்படவில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தினார்கள். போர்நிறுத்தம் என்றார்கள். யாழ்-கண்டி வீதியைத் திறப்பதாகச் சொன்னார்கள், பாங்கொக்கிற்கும் ஐரோப்பாவிற்கும் பறந்துதிரிந்து ஆறுசுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்கள். ஆனால் உடனடி நிவாரணத்தை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட குழுவினால்கூட எத்தகைய ஆக்கபூர்வமான செயற் பாடுகளையும் ஒப்பேற்ற முடியவில்லை. பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படவில்லை. மீள்குடியேற்றம் நடைபெறவில்லை. நியாயமாகக் கிடைத்திருக்கவேண்டிய எதுவுமே கிடைக்கவில்லை. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்த யோசனைகள் முன்வைக்கப்பட்டபோது விக்கிரமசிங்க அரசு பலிக்கடாவாக்கப்பட்டது.

அன்று விக்கிரமசிங்க அரசைப் பலியிடுவதற்கு ஒன்று கூடியவர் களிடையே இன்று கடுமையான இழுபறியேற்பட்டுள்ளது. கண்டியில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் சந்திப்பின்போது, தனது உயிரைப் பணயம் வைத்தேனும் பொதுக்கட்டமைப்பை உருவாக்கு வதாக சனாதிபதி சூளுரைத்தார். எத்துணை இழப்புகள் ஏற்பட்டாலும் பொதுக்கட்டமைப்பு ஏற்படுவதைத் தடுக்க வேண்டுமென்பதில் கங்கணம் கட்டிக் கொண்டுள்ள ஜேவிபி, இன்று குமாரதுங்கா அரசிலிருந்து விலகியுள்ளது. பிறவுயிரைத் தன்னுயிர்போல் நேசித்த புத்தர் பெருமானின் போதனைகளைக் கடைப்பிடிப்பதாகக் கூறுகின்ற பௌத்த குருமார், ஆயிரம் உயிர்களைக் கொடுத்தேனும் பொதுக்கட்டமைப்பைத் தடுக்கப்போவதாக வீராவேசம் பூண்டுள்ளார்கள்.

பொதுக் கட்டமைப்புக் குறித்த அரசினுடைய யோசனைகள் பத்திரிகைகள் ஊடாக இவ்வார ஆரம்பத்தில் வெளிக்கசிந்துள்ளன. அதன்படி ஒரு வருடகால ஆயுளைக் கொண்டதான பி-டொம்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்படும். Post-Tsunami Operational Management Structure என்னும் அமைப்பே, சுனாமி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்குத் திட்ட மிடப்படுகின்றதாகும், மாவட்டம், மாகாணம், தேசியமட்டம் என மூன்று நிலைகளுடன் பி-டொம்ஸ் வரையறுக்கப்பட்டுள்ளது. மாவட்ட மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியுறுப்பினர்கள், உள்ளூர் அரச அதிகாரிகள், அரசசார்பற்ற தொண்டு அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். மாகாண மட்டத்தில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் ஐவரும் முசுலிம் பிரதிநிதிகள் மூவரும் அரசதரப்புப் பிரதிநிதிகள் இருவருமாகப் பத்து அங்கத்தவர்கள் அடக்கப்பட்டுள்ளனர். தேசிய மட்டத்தில் விடுதலைப் புலிகள், முசுலிம்கள், அரசதரப்பு என ஒவ்வொரு தரப்பிலிருந்தும் தலா ஒரு பிரதிநிதி உள்ளடங்கியதாகத் திட்டமிடப்பட்டுள்ளது. சர்வதேச நிதியுதவிகள் இலங்கை நிறைச்சேரி யூடாகவும், மாகாண மட்டத்தில் உலக வங்கியின் பராமரிப்பிலும் கையாளப்படும் எனக் கூறப்படுகின்றது.

பொதுக்கட்டமைப்பு அறிவிக்கப்படாத நிலையிலேயே, ஜேபிவி அரசிலிருந்து விலகியுள்ளது. அதனால் சுனாமி நிவாரணம் மட்டுமல்ல. சமாதானச் சூழலும் சந்தேகத்திற்கு உட்பட்டுள்ளது. விடுதலைப் போராட்டத்தின் நியாயத்திற்கு வலுச்சேர்ப்பதன் மூலம் தமிழர் வரலாற்றில் சிங்களத்தேசம் இடம் தேடுகின்றதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னிகரற்ற தலைவரா?

இன்று தென்னிலங்கை அரசியலில் தெளிவின்மை அடிமுடி அறிய முடியாததாகக் காணப்படுகின்றது. புரிந்துணர்வு உடன்படிக்கை மூலமாக உருவாக்கப்பட்ட போர்நிறுத்தம் தொடர்கின்றது. ஆனாலும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப் படவில்லை. சுனாமி நிவாரணத்திற்கான பொதுக்கட்டமைப்பு, இனப் பிரச்சினையின் தீர்வுப்பாதையை நிருணயிக்கும் சக்தியாகியுள்ளது. பொதுக்கட்டமைப்பு நிறுவப்படவேண்டும் என்பதைச் சர்வதேச சமூகம் வலியுறுத்துகின்றது. ஆனால் பொதுக்கட்டமைப்பில் விடுதலைப்புலிகள் பங்கு கொள்வதைத் தென்னிலங்கை எதிர்க்கின்றது. கண்டியில் ஆரம்பமாகிய பௌத்ததுறவிகளின் போராட்டம் தலைநகரையும் எட்டிப் பார்த்துள்ளது. அன்றொரு காலத்தில் இனப்பிரச்சினை தொடர்பான பிரக்ஞையை மட்டுமல்ல, அதுகுறித்த தெளிவான கருத்தோட்டங்களைக் கொண்டிருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா உருவாக்கிய பண்டா-செல்வா ஒப்பந்தத்தைப் பௌத்த பேரினவாதம் தவிடுபொடி யாக்கியது. அன்றைய சந்தர்ப்பத்தில் பண்டாரநாயக்காவின் தலைமுறை திட்டவட்டமான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியது. அதனால் ஏற்பட்ட விளைவுகட்கு வரலாறு சாட்சியாகும். சுமார் அரை நூற்றாண்டு களின் பின்னர், இன்றும் அதேநிலை காணப்படுகின்றது. 1994 இல் புதிய கருதுகோள்களுடன் அரசியல்வானில் எழுச்சியடைந்த சனாதிபதி குமாரதுங்கா, பௌத்த பேரினவாதத்தின் வியூகத்தில் சிக்குவாரா? என்பது இன்றுள்ள கேள்வியாகும்.

சனாதிபதி பதவிக்காலம் குறித்த சர்ச்சை தொடருகின்றது. 2005 இல் சனாதிபதி தேர்தல்கள் நடைபெறவேண்டுமென ஒரு சாரார் கூறுகின்றனர். ஆனால் 2006லேயே சனாதிபதி தேர்தல்கள் நடைபெறு மென குமாரதுங்கா தரப்பில் கூறப்படுகின்றது. இரண்டு பெரிய கட்சி களுமே சனாதிபதி தேர்தல்களிலேயே குறியாகவுள்ளது. ராஜபக்ஸாவை சனாதிபதி வேட்பாளராக்குவதில் ஒரு சாரார் ஆர்வமாகவுள்ளனர். அதற்கு குமாரதுங்கா உடன்படுவாரா என்பது மட்டுமல்ல, அவ்வாறான நடவடிக்கை குமாரதுங்காவின் அரசியலைச் சூனியமாக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரினவாதிகளென்றாலும் பொதுக்கட்டமைப்பை வெளிப்படையாக எதிர்க்கின்றார். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமல்ல ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ளவர்களிலும் கணிசமானோரே, பொதுக் கட்டமைப்பு விடயத்தில் உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பேசுகின்றனர். ஆற்றைக் கடக்கும் வரை அண்ணன், தம்பி, ஆற்றைக் கடந்த பின்னர் நீ யாரோ நான் யாரோ எனக் கடந்த வாரத்தில் குமார துங்கா அரசிலிருந்து ஜேவிபி விலகியுள்ளது. பாராளுமன்றத் தேர்தல்கள் ஏற்படுவது இன்றுள்ள சூழ்நிலைகளில் தவிர்க்கமுடியாததாகும். ஆனால், எப்போது நடைபெறும்? என்பது மட்டுமல்ல... பொதுக்கட்டமைப்பு ஏற்படுமா? அதனை, விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்வார்களா? எப்போது சனாதிபதித் தேர்தல்கள் நடைபெறும்? சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகுமா? போர்நிறுத்தம் தொடருமா? என ஒன்றல்ல, இரண்டல்ல பல கேள்விகள் இன்றைய காலகட்டங்களில் உக்கிரமடைகின்றன.

கடந்த மார்ச்சு 26இல் திருச்சியில் மொழிப்பாதுகாப்பு மகாநாட்டில் வெளியிடப்பட்ட மூன்றாவது மொழிப்போர் அறிவிப்புப் பரவலான கவனிப்பைப் பெற்றுள்ளது. பாரம்பரியமாகத் திராவிட இயக்கங்களின் தனியுடைமையாகக் கருதப்பட்டுவந்த மொழிக்கோஷத்தைப் புதியதொரு அணி குத்தகை எடுத்துள்ளது. அதனையே திருச்சி மாநாடு பூடகமாக வெளிப்படுத்தியுள்ளது. மொழிப்பாதுகாப்பு இயக்கத்தின் உணர்வுபூர்வமான தலைமை தமிழர் தேசிய இயக்கத்தின் பழ நெடுமாறன் அவர்களிடமே காணப்படுகின்றது. இருந்தபோதிலும் மொழிப்பாதுகாப்புக் கோஷத்தின் ஜனரஞ்சகத் தலைமை பிறகட்சிகளிடமே உள்ளது. ஒருவகையில் சொல்வதானால், குறிப்பிட்ட சமூகங்களின் குரலாக அடையாளப்படுகின்ற பாட்டாளி மக்கள் கட்சியின் ராமதாஸ், விடுதலைச் சிறுத்தைகளின் திருமாவளவன், மூவேந்தர் முன்னணியின் மொழிப்பாதுகாப்புக் கோஷம் கருவியாகியுள்ளது. முதலில் திரைப்படங்களுக்குத் தமிழ்ப் பெயர் சூட்டப்பட வேண்டும் என்னும் கோரிக்கை வைக்கப்பட்டது. அதனையடுத்து அக்கோரிக்கையை வலியுறுத்திப் போராட்டம் ஆரம்பிக்கப்படுவதான சலசலப்பு ஏற்படுத்தப்பட்டது.

பதினான்கு ஆண்டுகட்கு முன்னர் ரஜனிகாந்தினது தளபதியும் கமல்ஹாசனது குணாவும் ஒரே தினத்தில் வெளியாகியது. அதன் பின்னர்க் கடந்த புதுவருட தினத்தன்று பரவலான எதிர்பார்ப்புகட்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் சந்திரமுகியும் மும்பாய் எக்ஸ்பிரசும் ஒரே நாளில் வெளியாகியுள்ளன. மொழிப் பாதுகாப்பு இயக்கத்தின் போராட்டச் சூழலில் கமல்ஹாசனின் மும்பை எக்ஸ்பிரஸ் திணர ஆரம்பித்தபோது, ஏற்கெனவே பாபா படத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் அழுத்தங்கட்கு உட்பட்டிருந்த ரஜனிகாந்த் மட்டுமல்ல. அரசியல் கனவுகளுடன் உலாவுகின்ற விஜய்காந்த் எனத் திரையுலகம் ஒன்றுதிரண்டது. ஒன்றன் பின் ஒன்றாகத் தமிழகத்திற்கான முதலமைச்சர்களை உற்பத்தி செய்கின்ற கனவுத் தொழிற்சாலையுடனான தொப்புள்கொடி உறவை உடைப்பதற்கு, ஆயிரமாயிரம் திருமாவளவன்களின் முயற்சிகள் விழலுக்கு இறைத்த நீராகவே போகலாம். ஓடுமீன் ஓட உறுமீன்வரும்வரை காத்திருக்கும் தமிழக அரசியல்வாதிகளைத் திரையுலகுக்கு எதிரான போர்க்குரல் பீதிக்குட்படுத்தியது. திரையுலகுடனான சீண்டல்கள் வாக்குகளைப் பாதிக்கும் என்னும் யதார்த்தம், திருமாவளவனது போராட்டத்தைப் பிசுபிசுக்க வைத்தது. சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராதென் பதைத் திருமாவளவனின் செயற்பாடு பறைசாற்றியது. தமிழ்ப் பெயரில் வெளியிடப்படாத சினிமாக்களைத் தமிழர்கள் புறக்கணிக்கவேண்டும் என்னும் அறிக்கையுடன் திருமாவளவனது தமிழ்த் திரையுலகுக்கு எதிரான போராட்டச் சலசலப்பு முடிவடைந்தது. திருமாவளவன்கள் தமிழகத்தின் தன்னிகரற்ற தலைவராக வேண்டுமெனில் மங்களூர் அல்லவா தமிழகம் ஆகவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிள்ளுகீரையா?

ஒரு சனநாயக நாட்டில் செய்தி ஊடகங்களின் பங்களிப்பு முக்கிய மானதாகும். ஆனால் கடந்த ஐம்பதாண்டுகளில் உலகெங்கிலுமுள்ள ஊடகங்களின் நிலைப்பாடுகளில் பாரிய மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இலங்கையில் ஆட்சிப்பீடமேறுகின்ற கட்சிகளின் செல்வாக்கு ஊடகங்கள் நெறிப்படுத்துகின்றது. அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியோ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ விதிவிலக்கல்ல! தமிழ்நாட்டில் திராவிடக் கழகங்கள் ஆட்சியிலிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி. ஊடகங்களில் அளவிடமுடியாத ஆதிக்கத்தைக் கொண்டிருக்கின்றன. கட்சிகளின் தனிப்பட்ட நிலைப்பாடுகளை வெளிக்கொணருவதற்காகவே தொலைக்காட்சி நிலையங்களும் இயங்குகின்றன. அவுஸ்திரேலியா உள்ளிட்ட பிற மேற்குல நாடுகளிலுள்ள ஊடகங்கள் திட்டவட்டமானதும் தெளிவானதுமான நடுநிலையைப் பேணுவதில்லை, அதுமட்டுமல்ல, இங்குள்ள ஊடகங்களில் சார்புத்தன்மை ஒருவகையில் நிறுவன மயமாக்கப்பட்டதாகவும் காணப்படுகின்றது.

போதைவஸ்து கடத்தலில் இந்தோனேசியாவில் தண்டனை விதிக்கப்பட்ட குவின்ஸ்லாந்து மங்கை சேப்பேல் கொர்பி விவகாரம், அவுஸ்திரேலிய ஊடகடங்களினால் மிகவும் பரபரப்பாக வெளிப் படுத்தப்பட்டது. சேப்பேல் கொர்பி குற்றமற்றவர் என்பது ஒருவகையான பிரச்சாரமாகவே முன்னெடுக்கப்பட்டது. போதைவஸ்துக் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டதிலோ அல்லது குற்றம் நிரூபணமாகித் தண்டனை வழங்கப்பட்டதிலோ சேப்பேல் கொர்பி எந்தவகையிலும் தனித்துவ மானரல்லர்! ஏனெனில் இந்தோனேசியாவில் மட்டுமே பத்துக்கு மேற்பட்ட அவுஸ்திரேலியர்கள் போதைவஸ்துக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுத் தண்டனை அனுபவித்து வருகின்றனர். சிங்கப்பூர், தாய்லாந்து போன்ற தென்கிழக்காசிய நாடுகளிலும் பல அவுஸ்திரேலியர்கள் போதைவஸ்துக் குற்றச்சாட்டுகளில் அகப் பட்டுள்ளனர். ஆக சேப்பேல் கொர்பி விவகாரம் மட்டும் ஏன் பூதாகரமாக்கப்பட்டது? ஒருவகையில் அவுஸ்திரேலிய ஊடகங்கள் உருவாக்கிய பொதுசன அபிப்பிராயமும், அதனால் ஏற்படுத்தப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தங்களும் சேப்பேல் கொர்பி விவகாரத்தில் அரசினுடைய செயற்பாடுகளை மேலோட்டமாகவேனும் உந்தித்தள்ளியது. இவ்வாறாக நாட்டு நடப்புகளை வழிநடத்தும் ஆர்வத்தில், தமது நடுநிலையை ஊடகங்கள் இழந்து வருகின்றனவா என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகின்றது.

கடந்தவாரத்தில் பொதுக்கட்டமைப்புக் குறித்த உடன்படிக்கை கைச் சாத்திடப்பட்டுள்ளது. ஆரம்பத்திலிருந்தே பொதுக்கட்டமைப்பிற்கான எதிர்ப்பைப் பேரினவாதிகள் வெளிப்படுத்தியுள்ளனர். தென்னிலங்கை யில் காணப்படும் எதிர்ப்பு எவ்வகையிலும் புதியதல்ல! ஆனால் அதனைச் சர்வதேச சமூகம் அனுபவபூர்வமாக அறிந்துகொள்ளும் வாய்ப்புப் புதியதாகும். பொதுக்கட்டமைப்பு நிறுவுவதற்கே இவ்வளவு எதிர்ப்பு ஏற்படுகின்றதெனில், இனப்பிரச்சினையில் நியாயமான தீர்வு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்த பிரக்ஞை சர்வதேச சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கவேண்டும். பரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு மூன்று வருடங்கள் உருண்டோடிவிட்டன. சமாதானப் பேச்சு வார்த்தைகள் நிறுத்தபட்டு இரண்டு வருடங்கள் கழிந்துவிட்டன. இத்தகைய பின்னணியிலேயே பொதுக்கட்டமைப்பு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. பொதுக்கட்டமைப்பு மூலமாக இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகட்கும் இடையிலான தொடர்பாடல்களை உருவாக்கலாம். அதுவே இனப்பிரச்சினைத் தீர்வுத்திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகளுக்கான ஆரம்பமாக அமையலாம் என்பதாக சர்வதேச சமூகம் கருதியது. ஆனால் அத்தகைய கணிப்பீடுகள் பொய்ப்பிக்கப் பட்டுள்ளன.

இலங்கை போன்ற நாடொன்றுக்குச் சர்வதேச நிதியுதவி மிகவும் அத்தியாவசியமானதுமாகும். 1970கள் வரையிலான சர்வதேச நிதியுதவிகள் ஒருங்கிணைக்கப்படாமல், வெவ்வேறுபட்ட நிபந்தனை களுடனேயே வழங்கப்பட்டன. பீலிக்ஸ். ஆர்.டயஸ். பண்டாரநாயக்கா, ரொனி டி மெல் போன்றோரது முயற்சிகளால் நிதியுதவி வழங்குகின்ற அமைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டன. ஒரேயிடத்தில் ஒரே வேளையில் ஒன்றாகக்கூடி ஒருமுகப்படுத்தப்பட்ட நிபந்தனைகளுடன் நிதியுதவி களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டன. அதன்பிரகாரமாக ஏற்பட்ட சந்திப்புக்கள் பெரும்பாலும் பாரிசிலேயே நடைபெற்றன. அதனால் இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளில் சந்திப்புக் காலப்போக்கில் பாரிசு மகாநாடு எனவும் அழைக்கப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகாலங்களில் மானியங்களை ஒழிப்பது, தனியார் மயமாக்கலைத் துரிதப்படுத்துவது போன்றனவற்றை வலியுறுத்தியே நிதியுதவிகள் வழங்கப்பட்டன. ஆனால் 1983க்குப் பின்னர் நிதியுதவிக்கான முக்கிய நிபந்தனையான இனப்பிரச்சினை தீர்வு முன்வைக்கப்பட்டது. அந்தவகையிலேயே அண்மையில் பொதுக்கட்டமைப்பு வலியுறுத்தப்பட்டதாகும். பாரிஸ் மகாநாட்டு வரிசையிலேயே அண்மையிலே கண்டியிலே நடைபெற்ற சந்திப்பின்போது, பொதுக் கட்டமைப்பு மையப்பொருளாகியது. ஆக, பொதுக்கட்டமைப்பில் மட்டுமன்றி, மானியங்களைக் குறைப்பது, தனியார் மயமாக்கலைத் துரிதப்படுத்துவது போன்ற அம்சங்களிலும், நிதியுதவி வழங்குகின்ற நாடுகளின் நிகழ்ச்சித் திட்டத்தின்படி செயற்படாதபட்சத்தில், நிதியுதவிகள் கிடைக்காது என்பது யதார்த்தமாகும். பன்னாட்டு நிதியுதவிகள் கிடைக்காத பட்சத்தில்... என்னும் கருத்தே அபத்தமானது.

ஏனெனில் நிதியுதவி கிடைத்தே ஆக வேண்டும். அந்தவகையிலேயே சனாதிபதி குமாரதுங்காவின் பொதுக்கட்டமைப்பு முயற்சிகள் மட்டுமல்ல, விக்கிரமசிங்காவின் ஆற்றிலொருகாலும் குளத்திலொரு காலுமான நிலைப்பாடும் கவனிக்கப்படவேண்டியதாகும். சுருங்கச் சொல்வதானால், பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படும்போது அதனுடைய பலாபலன்கள் தென்னிலங்கைக்கே கிடைக்கும். அன்று சிங்கள-முசுலிம் நெருக்கடி ஏற்பட்டபோது வெள்ளைத்துரையிடம் பேசுவதற்கும், இன்று தென்னிலங்கையின் சுபீட்சத்திற்கு வெள்ளைத் துரைக்கு உத்தரவாதமளிப்பதற்கும், தமிழர் தேவைப்படுகின்றார்கள்... ஆனால் தமிழர் கிள்ளுக்கீரையாக இருந்த காலம் மலையேறி விட்டதென்பதை எப்போது தெரிந்து கொள்ளுவார்களோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்றிக்கண் திறப்பினும்..

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இரண்டு வாரங்கள் உருண்டோடிவிட்டன. புரிந்துணர்வு உடன்படிக்கை போர் நிறுத்தத்தை ஏற்படுத்தியது. பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்குத் தூண்டுகோலாகியது. ஆனால் பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை எத்தகைய மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை. கடல்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தவிர்ந்த அனைத்திற்கும் இன்று பொதுக்கட்டமைப்பு உபயோகிக்கப்படுகின்றது. தேர்தல் பிரச்சார மேடையாக மாற்றப்படுகின்றது. பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்படுகின்ற வரையில் மௌனச்சாமியாகக் காட்சியளித்த ஐக்கிய தேசியக் கட்சி, இன்று பொதுக்கட்டமைப்பிலுள்ள குறைபாடு களை அடையாளம் காட்டுவதில் அதிகமான அக்கறை காட்டுகின்றது. பொதுக்கட்டமைப்பில் பெரும்பான்மை இனத்திற்கு உரிய பிரதி நிதித்துவம் வழங்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, முசுலிம்களுடைய உரிமைகள் உறுதிசெய்யப்படவில்லை எனவும் ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்துகின்றது.

பொதுக்கட்டமைப்பு அமைக்கப்பட்டபோது அரசிலிருந்து விலகிக் கொண்ட ஜேவிபி, பொதுக்கட்டமைப்பு நாட்டைப் பிளவுபடுத்தி விடுதலைப் புலிகட்கு சர்வதேச அங்கீகாரத்தை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறுகின்றது. பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான பிரச்சாரங்கள் பாரிய அளவில் மேற்கொள்ளப்படுகின்றன. பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பொதுக்கட்டமைப்பு விடயம் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்படுகின்ற வேளைகளில் அமளிதுமளி ஏற்படுகின்றது. பொதுக்கட்டமைப்பை ஆதரிப்பதாகக் கூறுகின்ற ஐக்கிய தேசியக்கட்சி தொடக்கம் எதிர்ப்பதாகக் கூறுகின்ற ஜேவிபி வரையில் அனைத்துத் தரப்பினரும் பொதுக்கட்டமைப்பில் சவாரி செய்யத் தொடங்கியுள்ளனர். பொதுக்கட்டமைப்பு பாதிக்கப்பட்ட பொதுசனத்திற்காக உருவாக்கப்படுவதாக யார் சொன்னார்கள்?

கடந்தவாரம் இலண்டனில் ஏற்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவம் பரவலான அவதானிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஈராக், ஆப்கானிஸ்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பல்வேறுபட்ட சூழ்நிலைகளினால் இன்றைய காலப்பகுதி மிகுந்த அழுத்தங்கட்கு உட்பட்டுள்ளது. அதனை இலண்டன் குண்டுவெடிப்பு மேலும் இறுக்கமடையச் செய்திருக்கின்றது. குண்டுவெடிப்பு ஏற்பட்ட போது ஜி8 நாடுகளின் சந்திப்பு ஸ்கொட்லாந்தில் ஆரம்பமாகவிருந்தது. அமெரிக்க, பிரான்சு, ஜேர்மனி, ரஷ்யா, ஜப்பான் உள்ளிட்ட பன்னாட்டுத் தலைவர்கள் அங்குக் கூடியிருந்தனர். அதற்கு முன்தினத்திலே 2012 ஒலிம்பிக்சை நடத்துவதற்குரிய நகரமாக இலண்டன் தெரிவாகியிருந்தது. ஆக சர்வதேசத்தின் கவனம் இலண்டனில் குவிகின்ற தருணம் கவனமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

அன்றொரு காலத்தில் சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யமாகப் பெருமைகொண்ட தேசம், இன்று தனிப்பெரும் வல்லரசான அமெரிக்காவின் கூட்டாளியாகப் பெருமை கொள்கின்ற தேசம், ஜி8 மகாநாடு, 2012 ஒலிம்பிக்ச என வெற்றிக்களிப்பில் திளைத்திருந்த வேளையில் தாக்கப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக சனசஞ்சாரமிக்க இலண்டன் போக்குவரத்துத் தாக்கப்பட்டமை நீண்டகால உளவியல் பாதிப்பிற்கு அடிகோலியுள்ளது. பொதுசனத்தின் சாதாரணமான நடமாட்டத்திற்கு அவசியமான அடிப்படைப் பாதுகாப்பிற்கே உத்தர வாதம் கிடையாது என்னும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. ஐரோப்பா விலேயே மிகப்பெரிய நகர்ப்புற ரெயில் சேவையைக் கொண்டது இலண்டனாகும். சுமார் 400 கிலோ மீட்டர் தூரத்தைக் கொண்ட இலண்டன் ரயில் சேவையில் 250க்கு மேற்பட்ட ஸ்டேசன்கள் உள்ளன. சுமார் 30 இலட்சம் மக்கள் இலண்டன் ரயில்சேவையைத் தினசரி உபயோகிக்கின்றனர். அதுதவிர, மாநகரப் பேருந்துகள், பிரிட்டிஷ் ரெயில் போன்றவை பல இலட்சம் மக்களைத் தினசரி ஏற்றிவருகின்றன. ஆக இலண்டன் போக்குவரத்தைப் பாதுகாப்பதென்பது இமாலயப் பணியாகும். ஆனாலும் வன்முறைத் தாக்குதலை, பிரித்தானியா இன்று நேற்றல்ல, பல வருடங்களாகவே எதிர்பார்த்துத் தயார்நிலையிலேயே காத்திருந்தது. வடஅயர்லாந்து கரந்தடிப்படையினரால் அத்தகைய தாக்குதல்கள் ஏற்படலாம் என ஒரு காலத்தில் கருதப்பட்டது. ஆனால் இன்று புதியதும், எதிர்பாராததுமான கோணங்களிலிருந்து ஏற்பட்டுள்ளது.

முதலில் வளைகுடா யுத்தம்! அதன்பின்னர் ஆப்கானிஸ்தான், ஈராக் எனத் தொடரான ரணகளங்கள்! பட்டினத்துப் பிள்ளையுடைய அற்புதமான கருத்தை அறிந்திருக்காவிட்டாலும் நியூட்டனின் மூன்றாவது விதியையுமா கோட்டைவிட்டார்கள்? 2001ஆம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர் 11இல் நியூயோர்க் தாக்கப்பட்டபோது அமெரிக்கா புதிய வீறுகொண்டது. அதற்குப் பிரித்தானியா நெம்புகோலாகியது. அன்றொரு காலத்தில் ஜோர்ஜ் வாஷிங்டனும் தோமஸ் ஜெவர்சனும் பிரித்தானிய மேலாதிக்கத்திற்கு எதிராக மூன்றாவது ஜோர்ஜ் மன்னன் காலத்தில் வீறுகொண்டனர். அதனால் 1776ஆம் ஆண்டு ஆடி 4இல் அமெரிக்க சுதந்திரம் பிரகடனப்படுத்தப்பட்டது. இன்று அமெரிக்காவின் புஷ்சும் பிரித்தானியாவின் பிளேயரும் சர்வதேச அபிப்பிராயத்திற்குப் புறம்பாக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். அதனால் அமெரிக்கர்களினதும் பிரித்தானியர்களினதும் சுதந்திரமான இயல்புவாழ்க்கை அசைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க-சோவியத் சமன்பாடுகள் மாற்றமடைந்த பின்னர், பெட்ரோலிய வளத்தை மையப்படுத்தி அமெரிக்க-இசுலாமிய பதற்றங்கள் வெளிப்படையாக ஏற்பட்டன. பாரிய அழிவுகளைத் தரவல்ல ஆயுதங்களை ஈராக் கொண்டிருப்பதாகக் கூறப்பட்டது. அத்தகைய ஆயுதங்களை இராணுவ வலுவைப் பிரயோகிப்பதன் மூலமே ஈராக்கிடமிருந்து களையமுடியும் என்னும் கருத்து உருவாக்கப் பட்டது. பல்வேறு நாடுகளினதும் எதிர்ப்பைப் புறந்தள்ளி, ஈராக்கில் அமெரிக்கா களமிறங்கியது. ஒப்பாரும் மிக்காருமற்ற வல்லரசுடன் தோளோடு தோள்சேர்ந்துகொள்வதில், பிரித்தானியாவும் அவுஸ்திரேலியாவும் புளகாங்கிதமடைந்தன. ஸ்பெயினில், இலண்டனில் ஏற்படுகின்ற அசம்பாவிதங்கள் மேற்குலக ஐம்பாவான்களில் நடவடிக்கைகளைச் சந்திக்கு இழுக்கின்றன. நெற்றிக்கண் திறப்பினும் தன் வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும் என்பதே யதார்த்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிவரவுக் குளறுபடிகள்

அண்மைக்கால அவுஸ்திரேலியப் பாராளுமன்ற வரலாற்றில் 2005 ஆடி முக்கியமானதாகும். ஏனெனில், ஆடி முதலாம் திகதியன்றே பாராளுமன்றத்தின் செனட் சபையில் ஆளும் லிபரல்-நேஷனல் கூட்டணி பெரும்பான்மை பலத்தைப் பெற்றுள்ளது. ரெல்ஸ்டார் தொலை பேசிச் சேவைக் கம்பெனியைத் தனியார் மயமாக்குவது, புதிய தொழிற் கொள்கைகளை அமுலாக்குவது போன்ற விடயங்களில், ஆட்சியிலுள்ள கட்சியின் சித்தாந்தத்திற்கு ஏற்புடைய செயல்திட்டங்களை முன்னெடுப் பதற்குச் சாதகமாகப் பாராளுமன்றப் பலம் கிடைத்துள்ளது. லிபரல் கட்சியுடன் கூட்டணி வைத்துள்ள நேஷனல் கட்சியில் தலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. டெமோகிரட் கட்சியின் பாராளுமன்றப் பலம் பாரிய சரிவை எதிர்கொள்கின்றது. ஒன்றன்பின் ஒன்றான தேர்தல் தோல்விகளைத் தழுவியதோடு மட்டுமல்லாமல், கட்சித்தலைவர் களையும் மாற்றிக்கொண்ட லேபர் கட்சி உட்கட்சிப் பூசல்களில் திணறுகின்றது. இத்தகைய பின்னணியில் செனட் சபையில் அரசிற்குக் கிடைக்கக்கூடிய பாராளுமன்றப்பலம் வரப்பிரசாதமாக அமைகின்றது.

குடிவரவுத் தடுப்புமுகாம் கொள்கையாகட்டும், புதிய தொழிற் கொள்கையாகட்டும் ஹவாட் அரசினுடைய செயற்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதென்பது கல்லில் நார் உரிப்பதற்குச் சமானமா கின்றது. புதிய தொழிற்கொள்கைகட்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்வகையில், சுமார் ஒரு இலட்சம் மக்கள் கலந்துகொண்ட மிகப்பெரிய பேரணி யொன்று மெல்போர்னில் நடைபெற்றுள்ளது. அத்தகைய பேரணிகள் நாடெங்கிலும் நடைபெறுகின்றன. புதிய தொழிற்கொள்கைகள் ஊழியர் கட்குச் சாதகமானதல்லல என்னும் கருத்துப் பரவலாகக் காணப் படுகின்றது. வேலையிலிருந்து ஆள்களை நீக்குவதைப் புதிய தொழிற் கொள்கைகள் இலகுவாக்குவதாகத் தொழிற்சங்கங்கள் குற்றஞ்சுமத்து கின்றன. ஆனால் புதிய தொழிற்கொள்கைகள் பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்தக்கூடியவையாக ஹவாட் அரசு கூறுகின்றது. அத்தோடு பாராளுமன்றப்பலத்தை, அரசியல் கண்ணியத்துடனேயே பயன்படுத்தப் போவதாகப் பிரதமர் உறுதியளித்துள்ளார். சுருங்கச் சொல்வதானால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்கொள்கைகளில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் அச்சம்கலந்து அவதானிப்பையே ஏற்படுத்துகின்றன.

அவுஸ்திரேலியக் குடிவரவுத் துறையின் நம்பகத் தன்மை, முன்னெப்போதிலுமே ஏற்பட்டிராத வகையில் தற்போது அசைக்கப் பட்டுள்ளது. குடிவரவுத்துறையில் ஏற்பட்ட இரண்டு குளறுபடிகளை ஆராய்வதற்காக அவுஸ்திரேலியாவின் முன்னாள் போலிஸ் கமிஷனர் மிக் பாமர் தலைமையிலான விசாரணை அமைக்கப்பட்டிருந்தது. அதனுடைய அறிக்கை கடந்த வாரத்தில் வெளியாகியபோது, அதுகாறும் குடிவரவுத்துறை மீது பரவலாகச் சுமத்தப்பட்ட பல்வேறு குற்றச் சாட்டுகளும் நியாயத்தன்மையுடன் கைகோப்பதான தோற்றம் ஏற்படுகின்றது. சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதான நம்பிக்கையைக் குடிவரவுத்துறை ஏற்படுத்தவில்லை. அவுஸ்திரேலியாவின் குடிவரவுத் தடுப்புமுகாம் கொள்கை கடுமையான கண்டனத்திற்கு உட்பட்டதாகும். 2001 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல்கட்கு முன்னர் உருவாகிய ரம்பா கப்பல் விவகாரம், ஹவாட் அரசின் நிலைப்பாடுகளைத் தெட்டத் தெளிவாக அடையாளப்படுத்தியது. ஆனாலும் அரசின் விசாரணைக் குழுவொன்றே, அரச துறையொன்றின் நம்பகத்தன்மையைக் கேள்விக்கு உட்படுத்துவது கவனிக்கத்தக்கதாகும்.

அண்மையில் வெளியாகிய விவியன் அல்வாரஸ், கொர்னொலிய ராவு விவகாரங்கள் குடிவரவுத் துறையின் நம்பகத்தன்மையை அசைத்து உள்ளது. பிலிப்பைன்சைப் பூர்வீகமாகக் கொண்ட அவுஸ்திரேலியப் பிரஜையான விவியன் அல்வாரசு, சட்டவிரோதக் குடியேற்றவாசி என்னும் சந்தேகத்தின்பேரில் 2001இல் நாட்டிலிருந்து வெளியேற்றப் பட்டார். ஜேர்மனியைப் பூர்வீகமாகக் கொண்ட அவுஸ்திரேலிய நிரந்தர வதிவிட அந்தஸ்தையுடைய 38 வயது நிரம்பிய கொர்னொலிய ராவு, சட்டவிரோதக் குடியேற்றவாசி என்னும் சந்தேகத்தின்பேரில் பத்து மாதங்கள் தடுத்துவைக்கப்பட்டார். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோன்று, குடிவரவுத் துறையின் நடவடிக்கைகளை இவ்விரண்டு சம்பவங்களும் அடையாளப்படுத்துகின்றன. ஆனாலும் ஆச்சரியத்தையோ அதிர்ச்சியையோ ஏற்படுத்தவில்லை. ஏனெனில் இத்தகைய குற்றச்சாட்டுகள் பலகாலமாகவே காணப்படுகின்றனவாகும். அல்வாரசு-ராவு விவகாரத்தில் இரண்டு அவுஸ்திரேலிய பிரஜைகளின் அடிப்படை உரிமை நிராகரிக்கப்பட்டிருக்கின்றது. அதிலும் உடல், மனோரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களைக் குடிவரவுத் துறை நடத்திய பாங்கு விசனத்தையே ஏற்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்று பிறிதொருவருக்குமே ஏற்படவில்லையென்றோ, இனிமேலும் ஏற்படாதென்றோ திட்டவட்டமாகக் கூறமுடியாது. அத்தகைய பின்னணியிலேயே பாமர் அறிக்கை கவனிக்கத்தக்கதாகும். மிக அதிகமான காலத்தைத் தடுப்புமுகாமொன்றிலே கழித்த பீட்டர் கசீம் விடுதலையாகியுள்ளார். சிட்னிப் பாடசாலையொன்றிலிருந்து தடுப்பு முகாமிற்குக் கொண்டுசெல்லபட்ட 11 வயதும் 6 வயதுமுடைய சிறுவனும் சிறுமியும் பல மாதங்களின் பின்னர் விடுதலையாகியுள்ளனர். இவ்வாறான சம்பவங்கள் ஆங்காங்கே... அவ்வப்போது நடைபெறும் சம்பவங்களல்ல! என்பது தெளிவாகின்றது.

குடிவரவுத் துறையில் காணப்படுகின்ற மெத்தனப்போக்கு மட்டுமல்ல... அதனுடைய கோணலான பார்வையுமே குடிவரவுக் குளறுபடிகளுக்கான காரணமெனக் கொள்ளலாம். ரம்பா விவகாரத்தின் பின்னர் எல்லைப் பாதுகாப்பு பூதாகாரமாக்கப்பட்டது. குடிவரவில் அதீதமான கடும்போக்கு ஏற்படுவதற்குப் பரந்துபட்ட பொதுசன ஆதரவும் காரணமாகியது. அதிலே அரசினுடைய செயற்பாடுகட்கு மட்டுமல்ல. குடிவரவுத் துறையின் கடுமையான நடவடிக்கைகளுக்கான ஆதாரத்தையும் வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்பராக் கனவுகள்

புரிந்துணர்வு உடன்படிக்கை உருவாகிய பின்னர்ப் பல சந்தர்ப்பங்களில் சிக்கல் ஏற்பட்டிருக்கின்றன. அவ்வப்போது கடுமை யான முறுகல்களும் ஏற்பட்டிருக்கின்றன. அதனால் போர்நிறுத்தமும் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றது. ஆனாலும் அண்மைக்காலங்களில் உருவாகியமை போன்ற அதீதமான அச்சமும் தெளிவின்மையும் முன்னெப்போதிலுமே ஏற்படவில்லை. ஒருவகையில் புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் போர் நிறுத்தத்திலும் புதியதொரு காலகட்டம் ஆரம்பமாகியுள்ளதாகவே கருதமுடிகின்றது. ஆங்காங்கே அவ்வப்போது ஏற்படுகின்ற வன்முறைச் சம்பவங்களும் அரசினுடைய நிலைப் பாடுகளும், 1970க்கும் 1980க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் காணப் பட்ட சூழ்நிலைகளை நினைவூட்டுகின்றன. மூன்று ஆண்டுகட்கு முன்னர்ப் புரிந்துணர்வு உடன்படிக்கையேற்பட்டது. அதனையடுத்து ஆறுசுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்றன. ஆனாலும் எத்தகைய மாறுதல்களும் ஏற்படவில்லை. சமாதானச் செயற்பாடுகளில் நம்பிக்கையீனம் ஏற்பட்டது. அதனால் சமாதானப் பேச்சுவார்த்தை களிலிருந்து தற்காலிகமாக விலகுவதாக 2003 ஏப்பிரலில் விடுதலைப் புலிகள் அறிவித்தனர். அதன்பின்னர் 2003 ஆடியில் இடைக்கால நிருவாகம் குறித்த யோசனைகளை விக்கிரமசிங்க அரசு முன்வைத்தது. அதேயாண்டு நவம்பரில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை விடுதலைப் புலிகள் முன்வைத்தனர். அதன்பின்னர் சமாதான முன்னரங்கில் எத்தகைய மாற்றங்களும் ஏற்படவில்லை.

ஆழிப்பேரலை ஏற்பட்டபோது இருதரப்பிலேயும் ஒருவகையான நெகிழ்வுத்தன்மை உருவாகியது. அதனால் உருவாகியிருக்கக்கூடிய தமிழ்-சிங்கள-இசுலாமிய தொடர்பாடல்களைச் சிதைத்துச் சின்னபின்ன மாக்கியதில் பேரினவாதம் பெருமையடைந்தது. அதனுடைய வெளிப் பாடாகவே பொதுக்கட்டமைப்பு யோசனைகளைத் தென்னிலங்கை நிராகரித்தமையைக் கருதமுடிகின்றது. இருந்தபோதிலும், பொதுக்கட்ட மைப்பு மூலமாக சமாதானம் தொடர்பான பரிவர்த்தனைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பமாகலாமெனச் சர்வதேச சமூகம் கருதியது. அதனாலேயே பொதுக்கட்டமைப்பு நிறுவப்படவேண்டுமென்பது சர்வதேச சமூகத்தினால் வலியுறுத்தப்பட்டது. பொதுக்கட்டமைப்பு மூலமாகவே நிதியுதவிகள் வழங்கப்படலாமென்னும் நிலை உருவாக்கப்பட்டது.

அதனாலேயே பிடொம்ஸ் கைச்சாத்திடப்பட்டது. புரிந்துணர்வு உடன்படிக்கையில் உயர்நிலைத் தலைவர்கள் கைச்சாத்திட்டனர். அதுவே நம்பகத்தன்மைக்கு அத்திவாரமாகியது. ஆனால் பிடொம்ஸ் அத்தகைய நம்பிக்கைகளை ஏற்படுத்தவில்லை, அன்று பண்டா-செல்வா ஒப்பந்தத் திற்குக் காவி வஸ்திரம் முட்டுக்கட்டையாகிறது. இன்று காவியுடன் சிவப்பும் கைகோத்துள்ளது. பொதுக்கட்டமைப்பு முடக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றப் பலத்தை மட்டுமே கொண்டிருந்த விக்கிரமசிங்காவினால் புரிந்துணர்வு உடன்படிக்கையை உருவாக்கமுடிந்தது. ஆனால் நிறை வேற்று அதிகாரத்தையுடைய குமாரதுங்காவினால் அடிப்படையான நிருவாகக் கட்டமைப்பையே உருவாக்க முடியவில்லை. குழந்தை யையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுகின்ற கலை அவர்களின் பரம்பரைச் சொத்தல்லவா?

பொதுக்கட்டமைப்பிலே முழுப் பூசணியைச் சோற்றில் மறைக்கின்ற வேடிக்கையும் உள்ளது. விடியவிடிய இராமாயணம்... விடிந்தபின்னர் இராமருக்கும் சீதைக்கும் உள்ள உறவை அறியாததுபோல... இதுவரையில் பொதுக்கட்டமைப்பிற்காக ஒற்றைக்காலில் கங்கணம் கட்டிய அமெரிக்காவும் பிரித்தானியாவும், இன்று தமது நிதியுதவியைப் பொதுக்கட்டமைப்பிற்கு நேரடியாக வழங்கமுடியாது என்கின்றன. பொதுக்கட்டமைப்பு ஏற்படும்போது, அதிலே விடுதலைப்புலிகள் முக்கிய தரப்பாக இருப்பார்கள் என்பதை அமெரிக்காவும் பிரித்தானி யாவும் அறிந்திருக்கவில்லையா?

அவுஸ்திரேலியாவிலுள்ள ஆறு மாநிலங்களில் ஒன்றான, கேந்திர முக்கியத்துவமுடைய நியூ சவுத்வேல்ஸ் மாநிலத்தை ஆட்சிசெய்கின்ற லேபர்கட்சியின் முதலமைச்சர் பொப் கார், தன்னுடைய பதவியிலிருந்து ஓய்வுபெறுவதாக நேற்றைய தினம் அறிவித்துள்ளார். ரயில் தொழிலாளி யின் மகனாகப் பிறந்து, பத்திரிகையாளராக வாழ்க்கையை ஆரம் பித்தவர். ஆரம்பகாலங்களில் அவுஸ்திரேலியத் தேசிய அரசியலில் பங்குகொள்ளும் ஆர்வத்தைக் கொண்டிருந்தவர். அவுஸ்திரேலியாவின் வெளிநாட்டமைச்சராகும் கனவுகளைச் சுமந்தவர். ஆனாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983லிருந்து லேபர் கட்சியின் நெருக்குதல்களினால், நியூ சவுத்வேல்சு மாநில அரசியலில் ஈடுபட்டவர். எதிர்க்கட்சியிலிருந்தபோது 1988 இல் கட்சியின் மாநிலத் தலைவராகத் தெரிவாகியவர். நியூ சவுத்வேல்சில் லேபர்கட்சியை ஆட்சிப் பீடமேற்றுவதற்காக அயராது உழைத்தவர். அதன் பலனாக 1995இல் நியூ சவுத்வேல்சு தேர்தல்களில் லேபர் கட்சி வெற்றிபெற்றபோது, முதலமைச்சர் பொறுப்பையேற்றவர். பன்னாட்டரங்கில் போற்றப்படுகின்ற வகையில், ஒலிம்பிக்சு போட்டி களை 2000 ஆம் ஆண்டில் சிட்னியில் நடத்தியவர். சுமார் 285 பில்லியன்டொலர் வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கொண்ட ஒரு மாநிலத்தை, தொடர்ந்து மூன்று தேர்தல்களில் வெற்றி பெற்று தலைமையேற்றவர். நியூ சவுத்வேல்ஸ் மாநிலத்தை நீண்டகாலம் இடைவிடாது தலைமையேற்றவர் என்பதோடு மட்டுமல்லாமல், மிக அதிகமான காலத்திற்கு அவுஸ்திரேலியா மாநிலமொன்றை இடை விடாது தலைமையேற்ற பெருமையையும் கொண்டவர். பொப் காரினது கன்பரா கனவு மெய்படப்போகின்றதா என்னும் அய்யம் பல மட்டங்களிலிருந்து எழுவதைக் காணமுடிகின்றது.

அவுஸ்திரேலியப் பொருளாதாரத்தின் 35 விழுக்காடு ஆதிக்கத்தைக் கொண்ட நியூ சவுத் வேல்சை இடைவிடாது பத்து வருடங்கள் ஆண்டவர்! தேசிய அளவில் மதிக்கப்பட்ட ஒரு மாநிலத் தலைவராக ஜொலித்தவர்! புகழின் உச்சாணியில் தமது 57ஆவது வயதிலே ஓய்வு பெறுகின்றவர்! கன்பராக் கனவுகளை முற்றிலுமாகத் தொலைத்துவிட்டிருப்பாரா என்பது தவிர்க்கமுடியாத கேள்வியாகவே காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்காரு மண்ணின் மைந்தர்கள்

இற்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு கடல் மட்டத்திலிருந்து அதிக உயரமற்ற மிகவும் குளிரான பிரதேசமாக அவுஸ்திரேலியா காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது. தெற்கேயுள்ள தாஸ்மேனியாவும் வடக்கேயுள்ள பப்புவா நியூகினியாவும் கூட பூகோள ரீதியாக அவுஸ்திரேலியா பெருநிலப்பரப்புடன் இணைந்திருந்ததாம். அதனால் ஆசியக் கண்டத்துக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையேயான கடல்தூரம் குறைவானதாகவும் காணப்பட்டிருக்கின்றது. அவுஸ்திரேலியாவில் வாழ்ந்தவர்கள் பூர்வீகக் குடிகள் என்றும், சுமார் நாற்பதாயிரம் ஆண்டுகளாக அவர்கள் அங்கு வாழ்ந்ததாகவும் கூறப்படுகின்றது. அண்மையில் நியூ சவுத்வேல்சில் உள்ள முங்கோ ஏரிக்கரையோரம் கண்டெடுக்கப்பட்ட எலும்புத் துண்டங்களை அறிவியல் ரீதியாகப் பரிசோதனை செய்தபோது அவை இருபதாயிரம் ஆண்டுகட்கு முந்தியவை எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வகையினதாகக் கங்காரு மண்ணிற்கும் பூர்வீகக் குடிகட்கும் இடையேயான பன்னெடுங்காலப் பிணைப்பு நிறுவப்பட்டு வருகின்றது.

## குடியமைவு :

கங்காரு பூமியெங்கும் பூர்வீகக்குடிகள் குழுக்களாக ஆங்காங்கே வாழ்ந்தனர். பல்வேறுபட்ட மொழிகளைப் பேசினர். சீரிய சமூகக் கட்டமைப்புகளை கொண்டிருந்தனர். இயற்கையோடு இரண்டறக் கலந்த வாழ்வு! வனவிலங்குகள் இலை கொடி தாவரங்கள் என்பன உணவாகின. தகமைக்கும் உடல்வலிமைக்கும் ஏற்ப வேலைப் பங்கீடுகள் இருந்தன. நிலபுலன்களின் பூகோள அமைப்பு மற்றும் தட்பவெப்ப நிலைகட்கு ஏற்ப வாழ்வை அமைத்துக் கொண்டனர். கடற்கரையோரங்களில் வாழ்ந்தவர்கள் கடல்சார்ந்த தொழில், உணவுப் பாங்குகள், பழக்க வழக்கங்கள் எனவும் சமாந்திரம் மலைப்பாங்கான பிரதேசம் என வாழ்ந்தவர்கள் அச்சூழ்நிலைகட்கேற்பவும் வாழ்வை அமைத்துக் கொண்டனர். அவர்களுடைய சமூகத்தில் சடங்குகளும் சம்பிரதாயங் களும் கைக்கொள்ளப்பட்டன. முதியவர்களின் வழிகாட்டுதலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிப்படுத்துதலும் கிடைத்தன. அவர்கள் வாழ்வோடு இயைந்த தனித்துவமான குணாம்சம் கனவியம் (Dreaming) என்பதாகும். இஃது ஒரு வகையில் மதம் சார்ந்த தன்மையே!

இஸ்லாம், இந்து, கிறித்துவம், பௌத்தம் என்பது போன்றதே கனவியம் ஆகும், அன்றொருகால் புனிதர்கள் என்போர் (great creatures) தட்டையான சாம்பல்நிறப் பூமிப்பிரதேசத்திலிருந்து எழுந்து உணவு தேடப்போனார்கள் என்பதும் அவ்வாறான பயணத்தின்போதே மண்ணில் மலைகளையும் சமாந்திரங்களையும் நதிகளையும் இன்னோரன்ன இயற்கைச் செல்வங்களையும் உருவாக்கினார்கள் என்பதும் அப்புனிதர்களே தமது முன்னோர்கள் என்பதுவும் கனவியத்தின் மைய நம்பிக்கையாகும். கனவியம் என்பது கதைகள், ஓவியங்கள், கவிதைகள் என்பன வாயிலாகத் தலைமுறைகளைத் தாண்டுகின்றது.

## அந்நியர் வருகை :

தளபதி ஜேம்ஸ் குக் கடலணி 1770 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவை வந்தடைந்தபோது பூர்வீகக் குடிகள் வாழ்வு கேள்விக்குட்படுத்தப்பட்டது. அன்றையகாலப் பகுதியில் சுமார் மூன்று இலட்சம் பூர்வீகக்குடி மக்கள் அறுநூறு வரையிலான குழுக்களாக வாழ்ந்தனர். அவர்களிடையே சுமார் இருநூறு வரையிலான மொழிகள் அல்லது மொழி வழக்கும் இருந்ததாகக் கூறப்படுகின்றது. அந்நியர்கள் 1788இல் பெருமளவில் வந்திறங்கியபோது பூர்வீகக்குடிகள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். 1795ஆம் ஆண்டிலிருந்து தமது நிலப்பரப்பைப் பாதுகாக்கக் கடுமையான சமர்களை நடத்தினார்கள். பல உயிர்களைப் பறிகொடுத்தார்கள். அபிமன்யுவைப் போன்று பாண்டவர்களும் உண்டு. 1928 ஆம் ஆண்டிலேயே வடகுறுநிலத்திலுள்ள (Northern Territory) கொனிஸ்டோனில் (Coniston Station) அதிகளவிலான பூர்வீகக்குடிகள் ஒட்டுமொத்தமாகப் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதுவே கடைசியாகப் பதிவுசெய்யப்பட்ட அத்தகைய துயரச்சம்பவமாகவும் கூறப்படுகின்றது. சமர்களினாலும் புதியவர்களுடைய வருகையோடு கூடிய நோய்கள் எனப்பட்ட காரணிகளாலும் பூர்வீகக் குடிகளில் எண்ணிக்கை குறையத் தொடங்கியது.

புதியவர்களுடையதும் பூர்வீகக்குடிகளுடையதும் வாழ்வு முறைமைகளில் பாரிய மாறுபாடுகள் இருந்தன. பூர்வீகக் குடிகளைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது வாழ்வுப்பணிக்கு உள்வாங்கிவிடவேண்டும் என்ற முனைப்பு புதியவர்களிடத்தில் மேலோங்கியிருந்தது. அதற்கான செயல்முறைகள் வலிமையுடன் முடுக்கிவிடப்பட்டன. அவர்களின் நிலபுலன்களைச் சுவீகாரம் செய்துகொள்ளும் செயற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப் பட்டன. பூர்வீகக் குடிகளை அவர்களுடைய நிலபுலங்களிலிருந்து பெயர்த்த தேவாலய வளாக தளங்கள், ஒதுக்கப்பட்ட பிரதேசங்கள் **(Reserves)** என்னும் குறிக்கப்பட்ட பரப்புகளில் குடியமர்த்தும் செயற் பாடுகள் முன்னகர்த்தப்பட்டன. ஒப்பீட்டுரீதியாக அதிகப்படியான பூர்வீகக்குடிகள் வடகுறுநிலத்திலும் குயின்சிலாந்து மாநிலத்திலும் வாழ்ந்தனர். ஆனாலும் அவர்கள் வாழ்வதற்கான முதலாவது ஒதுக்கப் பட்ட பிரதேசம் விக்டோரியாவில் 1858 இல் அமைக்கப்பட்டது. குழந்தைகள் பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டனர். அங்கீகரிக்கப்பட்ட ஐரோப்பிய மதநெறிமுறைகளினுள் பூர்வீகக் குடிகளை உள்வாங்கிடத் தீவிரமுனைப்புக் காட்டப்பட்டது. பூர்வீகக் குடிகள் நலன்பேணும் சபைகள் விக்டோரியாவில் 1869 இலும் நியூ சவுத் வேல்ஸில் 1883 இலும் மேற்கு அவுஸ்திரேலியாவில் 1886 இலும் குயின்சிலாந்தில் 1897 இலும் நிறுவப்பட்டன.

## ஆட்சி முறை :

1900ஆம் ஆண்டு ஆடித் திங்கள் ஒன்பதாம் நாள் பிரித்தானியப் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு 1901ஆம் ஆண்டு தைத்திங்கள் முதலாம் நாள் அமுலாகப்பட்ட அரசியல்யாப்பானது தனித்து இயங்கிய காலனிகளை அவுஸ்திரேலிய சமஷ்டி அரசமைப்பின் கீழ்க் கொணர்ந்தது. ஆனால் அஃது பூர்வீகக்குடிகளை முழுமையாக உள்வாங்கிக் கொள்ளவில்லை! அவர்களுக்குக் குடியுரிமை வழங்கப்படவில்லை, மக்கள் தொகை கணிப்பீடுகளில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை, அரசின் சமூகநலத்திட்டங்களினால் பயன்பெற முடியவில்லை என்பதாகிய இன்னோரன்ன இழப்புகளைச் சந்திக்க நேர்ந்தது.

## பிரக்ஞையும் எழுச்சியும்...

ஒட்டுமொத்தமான பூர்வீகக்குடிகளின் வாழ்வியல் அவலங்கள் குறித்த பிரக்ஞை பரவலாக ஏற்படத் தொடங்கியது. நிலபுலன்களை மீட்டெடுப்பதற்கான போராட்டங்கள் ஆங்காங்கே முன்னெடுக்கப் பட்டன. 1932 இல் அவுஸ்திரேலியப் பூர்வீகக் குடியினர் லீக் **(Australian Aboriginal League)** விக்டோரியாவில் அமைக்கப்பட்டது. 1937 இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வீகக் குடியினர் முன்னேற்றச் சங்கம் நியூ சவுத் வேல்சில் உருவாகியது. உரிமைக் குரல்கள் உரத்து ஒலிக்க ஆரம்பித்தது. 1965 இல் வடகுறுநிலத்தின் வேவ் ஹில் ஸ்டேசனில் **(WaveHill Station)** குருஞ்சி **(Gurindji)** மக்களுடைய வேலைநிறுத்தம் நடைபெற்றது. சம்பளப் போராட்டமாக ஆரம்பித்து நிலங்களை மீளக்கையளிக்கக் கோருவதாக உருப்பெற்றது. 1971 இல் யொலுங்கு **(Yolngu)** மக்களுடைய நபால்கோவுக்கு **(Nabalco)** எதிரான எழுச்சி ஏற்பட்டது யொலுங்கு மக்கள் வழக்குத் தொடுத்தார்கள். பூர்வீகக் குடிகள் நிலங்களின் சொந்தக் காரர்களாக இருந்திருக்கலாம். ஆனால் 1770 இல் தளபதி ஜேம்ஸ் குக் பிரித்தானிய அரசரின் பெயரால் அவுஸ்திரேலி யாவைக் கைப்பற்றிய போது பூர்வீகக்குடிகள் தமதுநிலம் மீதான பூர்வீக உரித்தை இழந்து விட்டதாக நீதிமன்றம் தீர்ப்பளித்தது. குருஞ்சியும் யொலுங்கும் பூர்வீகக் குடியினரின் நிலஉரிமைப் போராட்டத்தின் மைற்கல் நிகழ்வுகளாகும்.

## காய் கனியாகி...

1967இல் அரசியல்யாப்பில் இரண்டு திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டன. அதன்பிரகாரம் அதுகாறும் வடகுறுநிலம் மற்றும் அவுஸ்திரேலியத் தலைநகர் குறுநிலம் ஆகியனவற்றில் வாழ்ந்த பூர்வீகக்குடிகள் மீதான சட்டவாக்கும் அதிகாரத்தை மட்டுமே கொண்டிருந்த சமஷ்டி அரசு அவுஸ்திரேலியா முழுவதிலும் வாழ்ந்த அனைத்துப் பூர்வீகக்குடிகள் மீதானசட்டமாக்கும் அதிகாரத்தைப் பெற்றது. இரண்டாவதாக மக்கள் தொகை கணிப்பீடுகளில் பூர்வீகக் குடிகள் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான சரத்தும் இடம்பெற்றது. அவுஸ்திரேலியப் பிரசைகளாகப் பூர்வீகக் குடிகள் பூர்வாங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தம் பதிக்கும் நிகழ்வாகும்.

## வானத்துக்குக் கையசைத்தபோது...

1972இல் கன்பரா பாராளுமன்ற வளாகத்தில் உரிமைப்போராட்டச் செயற்பாடாக முன்னெடுக்கப்பட்ட கூடாரத் தூதுவராலய **(Tent Embassy)** நிகழ்விலேயே பூர்வீகக் குடிகளில் கொடி அறிமுகப்படுத்தப்பட்டது. கொடியின் குறுக்குவெட்டாக மேல் அரைப்பகுதியில் மக்களைக் குறியீடுபடுத்திக் கறுப்புநிறமும், கீழ் அரைப்பகுதியில் மண்ணைக் குறியீடுபடுத்திச் சிவப்புநிறமும், மையப்பகுதியில் சூரியனைக் குறியீடு படுத்தி மஞ்சள்நிற வட்டமும் உள்ளது. கொடியானது உணர்வுகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பாடாக எழுச்சியின் அடையாளமாக வானத்துக்குக் கையசைத்தபோது அதுவே புதிய நிலைகளில் ஆரம்பமாகியது.

## புதியதோர் உலகம்...

காலவோட்டத்தில் பூர்வீகக் குடிகள் மற்றும் அவர்களுடைய உரிமைகள், அவை தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் என்பன அவுஸ்திரேலியப் பொதுச்சமூக அமைவின் பேசுபடு பொருளாகியது. பூர்வீகக்குடிகள் விடயம், அவர்தம் நில உரிமைகள் என்பனவற்றை முன்னிலைப்படுத்திய விட்லம் (Whitlam) தலைமையிலான தொழிற்கட்சி இருபத்து மூன்றுவருடங்களின் பின்னர் 1972 இல் ஆட்சிப்பீடமேறியது. நிலஉரிமை விடயத்தில் விட்லம் அரசு முனைந்து செயற்பட அடுத்து வந்த மல்கம் பிஃரேசர் (Malcolm Fraser) அரசு நிலஉரிமைச் சட்டத்தை (Land Rights (NT) ACT) அறிமுகப்படுத்தியது. தெற்கு அவுஸ்திரேலிய (South Australia) மாநிலம் முன்மாதிரியாகச் செயற்பட்டு பிட்ஜட்ஜன்ஜரா (Pitjatjantjara) மக்களுடைய நிலத்தை மீளக்கையளித்தது. பிற மாநிலங்களும் குறுநிலங்களும் அத்தகைய செயற்பாடுகளை முன்னெடுத்தன. நபால்கோவுக்கு எதிரான யொலுங்கு மக்களுடைய வழக்கின் 1971 ஆம் ஆண்டுத் தீர்ப்பு மறுபரிசீலனைக்கு உட்பட்டது. மபோ (Mabo Case) வழக்கின் தீர்ப்பு 1922 இல் வெளியானபோது அஃது பூர்வீகக்குடிகளின் நிலஉரிமையை வரையறுத்தது. 1993 இல் பூர்வீக நில உரிமச் சட்டம் (Native Title Act) உருவாகியது. இதன் கீழ் இதுகாறும் பல நிலங்கள் மீதான பூர்வீக உரித்துக் கோரப்பட்டுள்ளது.

காவலில் தடுத்துவைக்கப்படும்போது இறந்த பூர்வீகக்குடியினர் மற்றும் அவர்களின் அதிகமான கைதுகள் என்பவற்றை விசாரணை செய்ய இராஜ்ய ஆணையம் (Royal Commission) 1987 இல் அமைக்கப்பட்டது.

பூர்வீகக்குடி குழந்தைகளை அவர்களுடைய பெற்றோரிடமிருந்து பிரித்த செயற்பாடுகளை விசாரிக்க 1995இல் ஆணையம் அமைக்கப் பட்டு அதனுடைய தீர்ப்பு ''திருடப்பட்ட தலைமுறைகள்'' (Stolen Generations) வெளியாகியுள்ளது.

1973 இல் தேசிய பூர்வீகக்குடி ஆலோசனை (National Aborginal Consultative Committee) கமிட்டியும் அதனுடைய இடத்தில் 1977இல் தேசியப் பூர்வீகக்குடி மகாநாடும் (National Aboriginal Conference) பின்னர் 1990இல் பூர்வீகக்குடி மற்றும் ரோறஸ் ஸ்ரெயிட் ஐலண்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணையமும் (Aboriginal and Torres Strait Islander Commission) அமைக்கப்பட்டது. இவை பூர்வீகக் குடியினர் அலுவல்களில் அரசுக்கு ஆலோசனையும் அனுசரணையும் வழங்குகின்றன.

முடிவுரை பூர்வீகக் குடிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிகட்குப் பரிகாரம் செய்யவேண்டுமென்பதில் பரந்துபட்ட அவுஸ்திரேலியச் சமூகம் உறுதி கொண்டுள்ள பாங்கு தெரிகின்றது. முன்னோர்கள் வாழ்ந்த வாழ்வுமுறை பழங்கதையாகிப் போய் வருடங்கள் பல ஓடிவிட்டன! இயற்கையுடனிருந்த தொடர்பில் மண்ணுடனிருந்த மனமகிழ் உறவில் ஏகப்பட்ட விரிசல்கள் ஏற்பட்டுவிட்டன! இருப்பினும், நிலபுலன்களைத் தக்கவைத்துக்கொள்ள எடுத்த முயற்சிகள் ''பாட்டன் போட்ட விதை, பேரன் உண்ணுகின்ற கனி'' என்பதாக ஈடேறுகின்றன. நம்பிக்கைக்கு நாற்றுமேடை அமைக்கப்படுகின்றது! மலர்கள் மகிழ்வுடன் மலரும் காலத்திற்கான காத்திருப்புகள் ஆரம்பித்துவிட்டனவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய புலங்களில் சவால்

கீழைத்தேய கலாச்சாரத்தின் ஆணிவேராகக் கருதப்படுவது வாழ்வு முறையாகும். அந்த வாழ்வு முறையின் மையமாகக் கருதப்படுவது குடும்பமாகும். அதிலும் குறிப்பாகத் தமிழர்களுடைய வாழ்வு பற்றிய கோட்பாடுகள் அலாதியானவை. அதிலே குடும்பம் என்னும் அலகினுடைய பங்களிப்பும் கணிசமானதாகும். அதிலும் குடும்பக் கட்டமைப்பு என்பது தமிழர்களுடைய வாழ்வின் அச்சாணியாகவே கருதப்படுகின்றது.

தமிழரசு வாழ்வியல் இல்லறத்தை மேன்மையானதாகப் போற்றுகின்றது. இல்லறமல்லது நல்லறமன்று என்பதாக அறிவுறுத்திய தமிழ் ஆன்றோர்கள் இல்லறத்தை மிகச்சிறந்த அறமாகவே வலியுறுத்தி யுள்ளார்கள். ஒரு ஆணும் பெண்ணும் திருமணத்தில் இணைகின்றபோது புதிய வாழ்வு உருவாகின்றது. அதனைத் தமிழ்ச் சமூகம் அறம் என வகுத்தது. திருமணம் என்பது இருநபர்கள் இணைந்துவாழும் வாழ்க்கை என்பது பல்வேறுபட்ட சமூகங்களிலும் நிலவுகின்ற கருத்தியலாகும். ஆனால், திருமணம் என்பது இருநபர்கள் இணைந்து வாழுகின்ற வாழ்க்கை மட்டுமல்ல, இரண்டு குடும்பங்களிடையேயான இணைப்பாகத் தமிழ்ச் சமூகம் மேன்மைப்படுத்துகின்றது. ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து வாழுகின்ற வாழ்வுக்கு ஆதாரமாகத் திகழ்பவர்கள் ஆண்-பெண் இருவரினதும் பெற்றவர், உற்றவர், அயலவர் என விரிகின்றது. அதன் நீட்சியாகப் பரந்துபட்ட சமூகம் தன்னுடைய ஆதாரத்தை வழங்குகின்றது. திருமணத்தின் பின்னர்க் கணவன் மனைவியுடைய வீட்டுக்குச் சென்று வாழ்வதையோ, அல்லது மனைவி கணவனுடைய வீட்டுக்குச் சென்று வாழ்வதையோ, வெவ்வேறு தமிழர் பிராந்தியங்களில் வழமையாகக் கொண்டுள்ளார்கள். ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து சுயாதீனமான வகையில் ஒரு குடும்பம் அமைப்பதற்கான ஆதாரங்களை வழங்குகின்ற பாரம்பரியமான சமூக அமைவு, சிலவகைகளில் அதற்கு ஊறுவிளைவிப்பதையும் காணலாம்.

நிகழ்காலம் இன்றைய காலகட்டங்களில் முன்னெப்போதிலுமே ஏற்பட்டிராத அளவுகளில் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு புலம்பெயர்ந்து வாழ்கின்ற முதலாவது தலைமுறையினர் மிகப்பெரிய அடையாளச் சிக்கலை எதிர்கொள்கின்றனர். அதனால், இல்வாழ்க்கையின் அத்திவாரமாகக் கருதப்படுகின்ற குடும்பக் கட்டமைப்புப் பல்வேறு வகைகளில் அச்சுறுத்தலுக்கு உட்படுகின்றது.

பெற்றோர்கள் இளையவர்களின் இல்வாழ்க்கைக்கு ஆதாரமளிக்க வேண்டிய பாரிய பொறுப்பைக் கொண்டிருக்கக்கூடிய பெற்றோர்களே அதற்கு ஊறுவிளைவிக்க முற்படுகின்றனர். இளையவர்களுடைய வாழ்வை வளப்படுத்துவதற்குப் பதிலாக வாழ்க்கை வசதிகள் நிறைந்த சூழலில் தமது அலாதியான தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்கே பெரியவர்கள் முற்படுகின்றார்கள். பாகுபாடற்றவகையில் நீதி நியாயத்திற்குக் கட்டுப்பட்டுச் செயற்படவேண்டும் என்னும் கோட் பாட்டில் பெற்றவர்கள் நம்பிக்கை இழந்து வருகின்றார்கள். பாரபட்சமற்ற வகைகளில் இளைய குடும்பங்கள் வழிநடத்தப்படவேண்டும் என்னும் கருத்தோட்டத்தைப் புலம்பெயர்ந்துவாழும் முதல் தலைமுறையினரின் புலம்பெயராமல் வாழுகின்ற பெற்றோர்களே கடைப்பிடிக்கத் தவறுகின்றார்கள். குடும்ப அங்கத்தவர்களிடையே கலந்தாலோசித்து முக்கியமான செயற்பாடுகளையேனும் முன்னெடுக்கவேண்டும் என்னும் நடைமுறை அருகிவருகின்றது. ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' எனத் தமிழர் பண்பாடு போற்றுகின்றது. ஆனாலும், இன்றைய காலங்களில் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வங்களாகி இளைய குடும்பங்களை வழிநடத்துகின்றார்களா? என்னும் கேள்வி பரவலாக எழுகின்றது. டாலர்கள், யூரோக்கள் என்னும் இன்னோரன்ன அன்னியச் செலாவணிகளும் வெளிநாட்டுப் பயணங்களும் முன்னறி தெய்வங்களுடைய விலையைப் பல சந்தர்ப்பங்களிலே நிர்ணயம் செய்துவிடுகின்றன. தெய்வம் என்னும் பதத்தின் இலக்கணத்தைப் பூசல்நாயனாருடைய சரிதம் திட்டவட்டமாக அறியத்தருகின்றது. அந்தவகையில் ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்னும் கோட்பாட்டிற்கு இன்றைய பெற்றோர்களில் பலர் பொருத்தமானவர்களா என்ற கேள்வி எழுகின்றது. அதுவே தமிழ்க் குடும்பக்கட்டமைப்பு எதிர்கொள்கிற மிகப்பெரிய சவாலாகக் காணமுடிகின்றது.

விருந்தோம்பல் தமிழருடைய பண்பாடுகளில் பெரிதும் வியந்து போற்றப்படுவது விருந்தோம்பலாகும். அதிலும் உபசரிப்பது என்பது தமிழர்களால் காலம்காலமாகப் போற்றப்படுகின்ற பாரம்பரியமாகும். ''இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் - விருந்தோம்பி, வேளாண்மை செய்தற்பொருட்டே'' என்பதைத் தமிழ்மறை தந்த வள்ளுவப் பெருந்தகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டவட்டமாக வலியுறுத்துகிறார். ஒரு சமூகத்தினுடைய பாரம்பரியம் பண்பாடு பழக்கவழக்கங்கள் என்பவற்றைப் பேணுவதற்கு இல்வாழ்க்கையும், இல்வாழ்க்கையின் அடித்தளமான குடும்பக் கட்டமைப்பினதும் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது. ஆனால், இன்றைய காலகட்டங்களில் புலம்பெயர்களன்களில் வாழும் தமிழர் களிடையே விருந்தோம்பல் பண்பாடு அருகி வருகின்றது. இல்லத்துக்கு வருவோரை எதிர்கொண்டழைத்து வரவேற்று விருந்தோம்புதல் குறைந்து காணப்படுகின்றது. உபசாரம் என்பது அறவே விலக்கப் படுகின்றது.

மனப்பாங்குகள் தமிழ்க் குடும்பங்களில் கூட்டுமனப்பான்மை அருகிவருகின்றமையைக் காணமுடிகின்றது. தன்னிச்சையான செயற் பாட்டுப் பாங்குகளும் அதிகரித்து வருகின்றன. அவற்றினுடைய பிரதி பலிப்பாகக் கூட்டுணர்வு, புரிந்துணர்வு, நேசம் உள்ளிட்ட குணாம்சங்கள் அருகிவருகின்றன. அதனால் குடும்ப அங்கத்தவர்களிடையேயான ஒட்டுதல்கள் குறைகின்றன. ஒருவேளை உணவையேனும் குடும்பத் திலுள்ள அனைவரும் ஒன்றாக அமர்ந்து அருந்துவது அரிதாகி வருகின்றது. இதனால் குடும்பங்களிலுள்ள ஒவ்வொருவரும் மற்றவரிட மிருந்து விலகிச் செல்கின்ற தன்மை காணப்படுகின்றது. பொதுவான அல்லது தனிப்பட்ட நிகழ்ச்சிகளிலே ஒன்றுகூடுகின்ற பல குடும்பங்கள் அத்தகைய சந்தர்ப்பங்களிலேகூட ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் என வெவ்வேறு குழுமங்களாகிவிடுகின்றனர். வெவ்வேறு குடும்பத்தினுடைய அங்கத்தவர்களை ஒன்றிணைப்பதற்காக ஏற்படும் ஒன்றுகூடல்கள், அவர்களிடையேயான இடைவெளியையே அதிகப் படுத்துகின்றன. கூட்டுமனப்பாங்கை வளர்க்க வேண்டிய சந்தர்ப்பங் களிலே எதிர்மறையான விளைவுகளே ஏற்படுகின்றன. பாரம்பரியமாகப் பாட்டன் முதல் பேரன் வரை ஒன்றுகூடி வாழ்ந்து வளம்பெற்ற தமிழ்ச் சமூகக் கட்டமைப்பு புலம்பெயர்களனில் எதிர்கொள்கின்ற மற்றுமொரு சவாலாகவே இதனைக் கருதமுடிகின்றது.

அடையாளச் சிக்கல் புலம்பெயர்ந்தகளன்களில் தமிழர்கள் எதிர்கொள்கின்ற மிகப்பெரிய போராட்டம் அடையாளம் குறித்ததாகும். பாரம்பரியம், பண்பாடு, இலட்சியங்கள், கோட்பாடுகள், நம்பிக்கைகள், ஆன்மீகம், பழக்கவழக்கம் என்பவையே ஒவ்வொரு இனத்தவருக்கும் தனித்துவமான அடையாளத்தை வழங்குகின்றன. அந்தவகையில் அடையாளம் என்பது ஒவ்வொருவருக்கும் அவசியமானது மட்டுமல்ல இயல்பானதும் கூட. அதுவே ஒவ்வொருவருடைய வாழ்வுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டியாக அமைவதாகும். புலம்பெயர்களன்களில் தமிழர் களிடையே காணப்படுகின்ற அடையாளம் குறித்த தெளிவின்மை தமிழ்க்குடும்பக் கட்டமைப்பைப் பாதுகாத்துக் கொள்வதிலும்கூட ஒரு சவாலாகின்றது.

எதிர்காலம் தமிழ்க்குடும்பக் கட்டமைப்பு இனி வருங்காலத்தில் எத்தகைய பாதிப்புகளை எதிர்கொள்ளப்போகின்றன என்பதற்கு இன்றையகாலகட்டங்களில் காணப்படுகின்ற நிலைப்பாடுகள் அச்சம் கலந்து பார்வையை ஏற்படுத்துகின்றன. மூத்த தலைமுறையினரே நீதிநியாயத்திற்குக் கட்டுப்பட்டு வாழ மறுக்கின்ற சூழல் விசனத்தையே ஏற்படுத்துகின்றது. ஒவ்வொரு செயலுக்கும் எதிர்விளைவு உண்டு என்னும் பாரம்பரியமான சிந்தனைகளில் நம்பிக்கை தளர்கின்றது. அத்தகைய நம்பிக்கைகள் கலைந்து, இப்படித்தான் வாழவேண்டும் என்னும் இலட்சியமின்மை மேலோங்கி, எப்படியும் வாழலாம் என்னும் அலங்கோல வாழ்வின் அத்திவாரங்கள் மேலெழும்ப முனைகின்ற சூழலில் ஆயிரமாயிரம் சுனாமிகள் எதிர்காலக் கனவுகளைத் தகர்க்க எத்தனிக்கின்றன.

முடிவு புலம்பெயர்ந்தகளனில் தமிழ்க்குடும்பக் கட்டமைப்பைப் பாரம்பரியமான வகையில் பேணிக்கொள்வது நடைமுறை சாத்தியமல்ல! இருந்தபோதிலும், தமிழ்ச் சமூகம் காலங்காலமாகப் பேணிப் பாதுகாத்துப் போற்றி வளர்த்து வாழ்ந்த வளர்ந்த பண்பு களையும் குணாம்சங்களையும் பேணிப் பாதுகாத்துக் கொள்வதன் மூலமாகத் தமிழ்க் குடும்பக் கட்டமைப்பைத் தக்கவைத்துக்கொள்ளலாம் என்பதை மட்டுமே அறுதியிட்டுக் கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ உலைக்களத்தில் பழுத்த இரும்பின் மீது ஓயாது விழும் சம்மட்டியினால் ஒளித் திவலைகள் மின்னல்களாகத் தெறித்து விழுவதைப் போல கனலும் மனத்தின் கருத்துத் தெறிப்புகளாக இந்தக் கட்டுரைகள் நம் முன் மின்னலிடுகின்றன. நாளும் புதுமை புரியும் போக்கினுக்கு ஆட்படுத்திக் கொள்ளும் ஆர்வமும் ஆற்றலும் கொண்டவராக நண்பர் சிற்சபேசன் மிளிர்வதை இத் தொகுப்பில் கண்டு மகிழ்ந்தேன். அரசியல் பேசும் கலைகளும் ஒப்பந்தம் என்ற பெயரில் வீசிய வலைகளும் அவலவிடிவு தெரியாத நிலைகளும் மக்களைச் சூழ்த்திருப்பதைக் கட்டுரைகளில் வரையும் ஆசிரியரின் அன்புணர்வும் அறமனமும் பண்பும் பயனுமாகத் தெறித்து விழுவதை வாழ்த்துகிறேன். - முனைவர் ஒளவை நடராஜன்.

❖ இலங்கைப் பிரச்சினையால் நியூசிலாந்தில் குடியேறிப் போராடி வரும் சிற்சபேசன், இந்தச் சூழ்நிலையிலும் தாய் மண்ணையும், மறக்காமல் காட்டும் ஈடுபாட்டின் அற்புதத் தொகுப்பே இந்நூல். பூகோள எல்லைகள் கடந்த ஆர்வத்தில் தமிழக - இந்திய அரசியல் பற்றியும் நிறையச் சிந்தித்திருக்கிறார். உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் உணர்வால் ஒன்றுபட்டவர்கள் என்கிற இவரின் சிந்தனையை அனைவரும் உணர இந்த வரலாற்றுப் பதிவுகள் உதவும் என்பது உறுதி

- பத்திரிகையாளர் லேனா தமிழ்வாணன்.

❖ புலம் பெயர்ந்தாலும் தாய்மண்ணின் வளம் அவாவும் பண்பும், பிறமொழிப் புலமை கைவரப்பெற்ற போதும் தாய்மொழிப் பற்று வீறு கொண்டு நிற்கும் மாண்பும், தன்துறை வேறானபோதும் மனித வாழ்வின் தூய்மையும் உயர்வும் நாடி நிற்கும் பரந்த சிறந்த நெஞ்சம் ஒருங்கே பெற்ற சிற்சபேசன், கல்வியால் பொறியியலாளன், தொழிலால் ஆள்வினையியல் விற்பன்னன், சிந்தனையால், எழுத்தால், சொல்லால் தமிழன், எங்கெங்கோ நடக்கும் மனித அவலங்களை, அழிவுகளை, ஓலங்களை நினைத்து உருகும் தமிழ் நெஞ்சன்.

- க. சிவராமலிங்கம், யாழ் இந்து கல்லூரி

❖ தெளிவும் எளிமையும் சேர்ந்த தமிழில் பல்துறைகள் தொடர்பாக எழுதப்பட்ட கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன. ஆழ்ந்து சிந்திப்பதற்கான தகவல்களை ஆதாரங்களோடு தந்திருக்கிறார். பல்துறைத் தகவல்களோடு யாரும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்கதாக இக்கட்டுரைகள் எழுதப் பெற்றுள்ளன.

- உடுவை எஸ் தில்லைராஜா.

❖ தமிழ்ச் சாதி எங்கிருந்தாலும் அவர்களைப் பற்றிக் கவலைப்படவும் அவர்கள் வாழ்வின் ஏற்றத்தாழ்வின் மாற்றங்களை அவதானிக்கவும் சிற்சபேசனுக்குச் சாத்தியப்பட்டிருப்பது பாரம்பரியக் கொடை எனலாம். இந்நூலைப் படிக்கையில், ஒரு மனிதாபிமானியின் கவலை தோய்ந்த சமுதாய அக்கறையுடனான 'நாட்குறிப்பை'ப் படிப்பது போன்ற அனுபவம் கிட்டியது. இனிய சொல்லாட்சியும், வார்த்தைப் பிரயோகமும், இனிய தமிழ்நடையும் வாசிப்பைச் சுகமாக்குகின்றன. தாய்மண்ணை விட்டுப் பரதேசத்தில் வாழ்ந்தாலும், உள்ளமும் உயிரும் ஈழத்திலேயே என்பது போலப் பேச்சு, மூச்சு, எழுத்து அனைத்தும் இருக்கும் என்பதை இளம் சிந்தனையாளர் சிற்சபேசன் காட்டி எம்மைச் சிலிர்ப்படை வைத்திருக்கிறார்.

- வே. சபாநாயகம், தமிழ்நாடு.

உலகத் தமிழர் பதிப்பகம்–9444111951

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org